காலாண்டிதழ் ரூ.20

செப்டம்பர் - நவம்பர் 2001

SASI/MDU/01

ராஜ்மஹால்
வெங்கலக்கடைத் தெரு, மதுரை-1.
போன்-622647

தொட்டுத் தொடரும் ஒரு பட்டுப் பாரம்பரியம்

அகம்
புறம்

காலாண்டிதழ்

இதழ் 1

செப்டம்பர் - நவம்பர் 2001

தனி இதழ்: ரூ. 20

கருணா மருத்துவமனை
1, டி.எஸ்.பி. நகர்
புறவழிச்சாலை
மதுரை-10.
தொலைபேசி எண்: 0452-780560.
E-Mail: Karuna@md4.vsnl.net.in

பதிப்பாசிரியர்
கருணாமகேந்திரன்
ஆசிரியர்
க.செல்லப்பாண்டியன்

ஒளிஅச்சுக்கோப்பு
சிசில்ஸ் காலரி
கோரிப்பாளையம்
மதுரை-2.

தனிச் சுற்றுக்கு மட்டும்

இதழ் குறித்து உங்களுடன்.........

தமிழ் வாசக வெளியில் இன்னுமொரு பத்திரிக்கைக்கான தேவை இருப்பதான உள்ளுணர்வின் உந்துதலின் விளைவே இன்று அகம் புறம்.

பத்திரிக்கையின் நோக்கம் குறித்த கொள்கைப் பிரகடனங்கள் செயல்தளத்தில் வெளிப்பட வேண்டுமென்பதே சரியெனப்படுகிறது.

எனவே அகம் புறம் ஒவ்வொரு இதழும் அதை நோக்கிய பயணமாகவே இருக்கும்.

வாழ்வுரிமை எனும் போது அது மரம், மலை, மண், பிரபஞ்சம் என்ற சகல ஜீவராசிகளுக்குமானது என்பதை மனங்கொண்டே ஆய்வுச் செயல்பாடுகளைக் கட்டமைக்க வேண்டியுள்ளது.

மூச்சு முட்டுமளவு இந்தப் பாராளுமன்ற அரசியல் வெளியில் நின்று கொண்டு என் கரம் கறை படியவில்லை என்ற ஆனந்தக் கொண்டாட்டத்தை ரசிக்க முடியவில்லை.

கல்வி, கருத்துருவ அமைப்புகள்கூட கலாச்சாரவெளியுடனே பின்னிப்பிணைந்துள்ளதால் மெல்ல மெல்ல உள்ளும் வெளியும் பயணிக்க ஆசை.

அறிவுலகமும், வாசகர்களும் இணையும்போது அந்தப் பயணம் எளிதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

காலாண்டிதழாக வரும்.

இதழின் செழுமையைக் கூட்ட உங்கள் பங்களிப்பையும் வேண்டி.......

அன்புடன்
பதிப்பாசிரியர்

Published by Thiru. R. Rajaram from Karuna Hospital, 1 DSP. Nagar, By Pass Road, Madurai 10. Printed at Yessaar Offset Printers ,1 E, Velayutham Road, Sivakasi.

பொருளடக்கம்

குண அரூபங்களை
உடல்பிம்பங்களாக்கிய கூத்தன் 3

அரசியல்

நடந்தது......... எல்லாம் சட்டப்படி 41

துண்டிக்கப்பட்ட தலையும் செல்போனும் 46

ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் 48

தேவை... ஒரு பிணம் அடிக்கும் சுடுகாட்டுத்தடி 53



புனைவு

திறந்தவிழிகளோடு தூங்கும் ஸ்திரீகள் - கோணங்கி 5

பிலாத்தியின் சாற்று - அறிவழகன் 20

கனவுகளின் தனிமை - ச.முருகபூபதி 23

சூழலியல்

மலையைக் கிள்ளி...... மணல் மேடாக்குங்கள் 34

ஞானநெருப்பு 36

டிசம்பர் 2000 38

நீ சிரஞ்சீவியா 38

ஜூலை 2001 39

"மனக்"குகை மனிதர்களின் மரணம் 40

மதிப்புரை - கோணங்கியின் பாழி சா. தேவதாஸ் 28

வண்ணங்கள் குறித்து......... ஓவியர்களுடன் உரையாடல் 15

கவிதைகள்

நகுலன்

மழை 19
மறை
கேள்வி 19

ஹவி

சாம்பல் ராகம் 32

தேவதச்சன் 14

சங்கரராமசுப்பிரமணியன்

எறும்புகளிடம் அலைவுரும் அரசன் 22

நடுஇரவில் கரைந்து அழும் பூனைகளுக்கு 27

வரைபடத்தில் விட்டுச் சென்ற சிறகு 31

குண அரூபங்களை உடல்பிம்பங்களாக்கிய கூத்தன்

சிவாஜி கணேசன் என்ற வி.சி கணேசன் என்னும் அபூர்வ மனிதன் மறைந்து விட்டார். அஞ்சலிகள் செலுத்தியாயிற்று, இனி ஆண்டுதோறும் வரும் நினைவு நாட்களில் சம்பிரதாயமாக சில வார்த்தைகள் உதிர்க்கப்படும், பிறகு தவிர்க்கவியலாத மறதி நோய் அந்த மாபெரும் கலைஞனை தனக்கு இரையாக்கி விடுமா? வாழும் நாளிலேயே முழுமையான அங்கிகாரம் மறுக்கப்பட்ட அந்த மனிதனின் சாதனைகள் குறித்த வெளிப்படையான, மனச் சார்பற்ற மதிப்பீடுகள் இனியாவது சாத்தியமாகுமா? சராசரி மற்றும் பாமரம் என்றும் வகைப்படுத்தப்படும் சினிமாப் பார்வையாளர்களின் மனங்களில் வேறெந்த நடிகனும் ஏற்படுத்த முடியாத பாதிப்பைச் சாத்தியமாக்கிய அவரது நடிப்புப் பணி ஏனோ தீவிர, கலாப்பூர்வ சினிமா ஆர்வலர்கள் என்று தங்களை வகைப்படுத்திக் கொண்டவர்களை ஈர்க்க அல்லது ஈர்த்ததாக ஒப்புக் கொள்ள வைக்க முடியவில்லை. இந்தவித அறிவு ஜீவிகளின் இரவல் பெற்ற கருத்தியலே இந்த நிலைப்பாட்டிற்கு காரணமெனப்படுகிறது. மேற்கிலிருந்தோ அல்லது அவரவர்க்கு ஆதர்சமான பிரதேசங்களிலிருந்தோ கருத்தியல் கடன் பெறுவதென்பது குற்றமில்லையென்றேபடுகிறது. ஆனாலும் அக்கருத்தியலை அகவயப்படுத்தி சற்று தளம் நகர்த்தி தமிழ்ச் சூழலுக்கான கருதுகோள்களாக மாற்றிக் கொள்வதில் தமிழ் அறிவுலக வெளி சற்று தடுமாறுகிறதோ என்ற சந்தேகம் எழாமலில்லை.

ஐம்பது ஆண்டு கால சினிமா அனுபவத்திற்கு / பங்களிப்புக்கு சொந்தக்காரரான சிவாஜி கணேசன் எளிமையான மொழியில் அனுபவங்களை மட்டும் பேசும் மனிதராக ஆகிப் போனது கூட, தீவிர சினிமா பார்வையாளர்களுக்கு அவரது பங்களிப்பு குறித்த அக்கறையின்மையை உருவாக்கிவிட்டதோ என்றுகூட தோன்றுகிறது. அவரும் அகவயப்படுத்தப்படாத கருத்தியல்களை ஆங்காங்கே உதிர்த்து தனது சொல்லாடலை கட்டமைத்திருப்பாரானால் இந்த அவலம் நேர்ந்திராதோ என்னவோ? 'தரையில கால் பாவினாதான் மொகத்துல பாவம் வரும்' என்று எங்கோ பேச்சினூடாக சொன்ன சிவாஜி கணேசன் துணைக்கு ஸ்டெனிஸ்லாவுஸ்கி அல்லது குரோட்டோவுஸ்கி போன்றோரின் பெயரை உதிர்த்திருந்தால் இவர்களின் கவனம் அவரின்பால் ஈர்க்கப்பட்டிருக்கும் என்றே தோன்றுகிறது.

வெகு ஜன சினிமாவில் தங்களை முழுமையாக நிறுவிக் கொண்டிருந்த / நிறுவிக் கொண்டிருக்கும் இந்திய நடிகர்கள் குறிப்பாகத் தென்னிந்திய நடிகர்கள் சிவாஜியின் நடிப்புப் பாணியில் தங்களது கட்டமைவு நிகழ்ந்ததை வெளிப்படையாக பதிவுசெய்யும் போது, அதன் தீவிர தளங்களில் முனைந்து செயல்படுவதாகக் கூறிக்கொள்ளும் இன்ன பிறர்க்கு அவரது நடிப்புப்பாணி குறித்த தங்களது, மனச்சார்பற்ற, தெளிந்த ஆய்வு முடிவாக 'மிகை நடிப்பு' என்று மட்டும் பதிவு செய்யவேண்டிய நிர்பந்தம் எங்கிருந்து வந்தது. மரபுசார்ந்த கலை வெளிப்பாடுகளான தெருக்கூத்து, யக்ஷகானம், தெய்யம் போன்ற நாடக மரபுகளின் வீச்சை உணர்ந்து அவற்றின்பாற்பட்டு தங்களது செயல்பாடுகளை கட்டமைத்துக் கொணடவர்களும், அவ்வடிவங்களிலிருந்த மிகையின் கலாப்பூர்வ சாத்தியங்களை புரிந்து கொண்டதாலேயே அதன் மீது பிரீதி கொண்டதாக கூறுபவர்களும், அக்கலை வெளியின் நீட்சியாகப் பரிணமித்த சிவாஜியின் நடிப்புமீது ஒவ்வாமை கொள்ளக்காரணமென்ன? மேற்கத்திய கருத்தியலாளர்களின் வழிப்பட்டு இந்த மரபுரீதியான கலை வடிவங்களின்பால் ஈர்க்கப்பட்டதுதான் காரணமெனப்படுகிறது.

நடிப்பு குறித்த தங்களது அளவுகோள்களை மேற்கத்திய சினிமாவிலிருந்து எடுத்துக் கொண்ட இவர்கள், கலாச்சார ரீதியான தள வேறுபாடுகளை மனங்கொள்ளத்தவறிவிட்டார்கள் என்றே படுகிறது. மரணத்தைக்கூட அரற்றி, குமுறி அழும் விஷயமாக கொள்ளாத சமூகங்களின் வெளிப்பாட்டு மனம்தான் அழுது அரற்றும், உருண்டு புரளும் தமிழ்க்கலாச்சார மனத்தின் பதிவான சிவாஜியின் நடிப்பை மிகை என்கிறதோ? அழுது புலம்புவதை நாகரீகமற்ற செயலாக எண்ணும் மேதாவிலாசம்தான் இந்த 'மிகை' என்னும் முத்திரைக்குக் காரணமாயிருந்திருக்குமென படுகிறது. அளவான, அலட்டிக் கொள்ளாத நடிப்பு என்பதே அபத்தம் என்றேபடுகிறது. உணர்வுகளின் வெளிப்பாட்டு அளவும், அலட்டலும் அந்தந்த கதாபாத்திரங்களே நிர்ணயிக்கக் கூடியதாகத்தான் இருக்கும். நிதானமான கதாபாத்திரங்களை மட்டுமே கொண்டிருக்கும் சினிமா அலுப்பூட்டுவதாக இருக்கக்கூடும். ஒரு நிகழ்வை அதன் உக்கிரம் முழுமையாக வெளிப்படும்படி காட்சியமைக்கும் திரைக்கதை ஆசிரியரும், இயக்குநரும் அதை நடிக்கப்போகும் நடிகனின் நடிப்புத்திறனை கணக்கில் கொண்டே செயல்படுகிறார்கள். அந்தக் காட்சியின் கனம் அறிந்து அதன் தேவைக்கேற்ப நடிப்பைக் கட்டமைக்கவியலாத நடிகன் களத்தில்

இருக்கும்போதுதான் நிகழ்வின் சூழல், நேர்ந்த கணம், களத்தில் இருக்கும் பிற பாத்திரங்கள், கேமரா கோணம், பிண்ணணி இசை, ஆகியவற்றின் மூலமாக அந்தக் காட்சியினை கட்டமைக்க வேண்டியதாகும். காட்சியின் கனத்தை அகவயப்படுத்திக் கொண்ட நடிகனால்தான் அந்தக் காட்சியின் பிற பரிமாணங்களையும் சேர்த்து வெளிக்கொணரவியலும் என்றே தோன்றுகிறது.

மேடையில் ஒளிபரவி அரங்கில் இருள் படர்ந்ததும் பார்வையாளர்கள் தனியன்களாகி விடுகின்றனர்; அந்தக் கணத்தில் உணர்வுமயமான நடிகனின் நடிப்பில் கட்டுண்ட பார்வையாளர்கள் நாடகத்தினை சீர்தூக்கிப் பார்க்கும் திறமிழந்து விடுகின்றனர்; எனவே 'தூரப்படுத்துதல்' என்ற உத்தியின் மூலம் பார்வையாளர்களை அந்த ஆட்படுத்தலிலிருந்து விலக்கிச் சிந்திக்க வைக்க வேண்டுமென்பார் ஸ்டெனிஸ்லாவுஸ்கி என்ற ரஷ்ய நாடகவியலாளர். "கை வீசம்மா! கைவீசு! கடைக்குப் போகலாம் கைவீசு" என்று, பாசமலர் திரைப்படத்தின் உச்சக்கட்டக் காட்சியில், திரையரங்கையே கேவி அழ வைத்த சிவாஜி கணேசனின் தரத்திலான நடிப்புத்தானே அந்த நாடகவிளலாளரின் மேற்சொன்ன கருத்தியலுக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். மொன்னையான கருத்தியல் கவர்ச்சியில் நிகழ்த்தப்படும் தட்டையான நடிப்பிலா பார்வையாளன் ஆட்பட்டு விடுவான்.

முப்பரிமாணமுள்ள நடிகனின் உடல் மொழியே (Body Language) நாடக ஆக்கத்திற்கு முழு வீச்சைத் தரும் என்று முன்வைத்தார் குரோட்டோவுஸ்கி என்ற போலந்து நாட்டு நாடகவியலாளர். நமது பாரம்பரிய நாடக வடிவங்களான தெருக்கூத்து போன்றவற்றின் அடவு, உடையமைப்பு, ஆடுகளம் ஆகியவற்றின் சிறப்பு குறித்து முன்வைத்தவரும் இவரே. 'தரையில கால் பாவணும்' என முன் வைத்த சிவாஜியின் கருதுகோளும் ஏறத்தாழ இதே அடிப்படையில் தரையில் அழுத்திக் காலுன்றி அடவு கட்டும் கூத்தனிடமிருந்தன்றி வேறெங்கிருந்து பெறப்பட்டிருக்கக்கூடும்.

பொதுவாக கடந்த ஐம்பது ஆண்டுகளில் இந்த வெளியில் உருவான எந்த நடிகனும் சிவாஜி கணேசனின் சாயலைத் தவிர்க்கவியலாது என்பார்கள். இதன் அர்த்தம் அவரின் நடிப்பைக் கண்டுணர்ந்து ஆட்பட்டார்கள் என்பது மட்டுமல்ல, இந்த அக உள நடிகன் தன்போக்கில் வாழ்ந்து காட்டிய பாத்திரங்களின் பரப்பு இந்தச் சமூக வெளியின் அனைத்துத் தரப்பையும் உள்ளடக்கியதாயிருந்ததும் கூடவாகும். இன்னும் குறிப்பாகச் சொல்லுவதானால் ஒவ்வொரு பாத்திரத்துக்குமான அசைவுகளை, நடையைத் தீர்மானித்து அதன் இயல்பு கெடாமல் செய்நேர்த்தியுடன் முன்வைத்தது இவரன்றி வேறொருவரில்லை. இன்று பராசக்தி திரைப்படம் பார்க்கும் ஒவ்வொவரும் வியப்பது இது இவரின் முதல் படமா என்றுதான். பாவமன்னிப்பு திரைப்படத்தில் கண்பார்வை இழத்தலை படிநிலையில் வெளிப்படுத்தும் நடிப்பு உத்தி இவர்களின் 'மிகையில்' உள்ளடங்கியதுதானா? இன்றும் ஒவ்வொரு நாடகமேடை நடிகனும், அன்பு படத்தின் Othello நாடக ஒத்திகைக் காட்சியில் போர்வை போர்த்தி மெழுகுவர்த்தியுடன் வரும் காட்சி பதிவை மனதிலிருந்து விலக்கவியலாமல் போவதென்னவோ உண்மை, இன்னும் அழுத்தமாகச் சொல்வதானால் தெய்வமகன் படத்தில் தான் ஏற்று நடித்த மூன்று பாத்திரங்களும் சத்திக்கும் காட்சியில் ஒவ்வொரு பாத்திரத்துக்குமான தனித்துவத்தை பாவங்களில் காட்டிய நடிப்பின்றி வேறெந்த நடிப்பு இனி வரும் நடிகர்களுக்கான நடிப்புப்பயிற்சியாக மாறக்கூடும்?

பொதுவாகவே தமிழ்ச்சினிமாகுறித்த காத்திரமான ஆய்வுகள் இன்னும் நிகழவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. அதிலும் குறிப்பாக நடிப்பு என்பது குறித்த ஆய்வுகள் இன்னும் துவங்கப்படவேயில்லையோ என்ற அச்சம் ஏழாமலில்லை. உபசாரமாக 'நடிப்பின் இலக்கணம்' என்று அடைமொழி போட்டு சிவாஜி கணேசனை அழைத்துவிட்டால் முடிந்து விட்டதாக எண்ணவியலவில்லை. அவரது பன்முக நடிப்பின் 'சில பரிமாணங்கள்' அவரைச் சுற்றியிருந்த சினிமா வியாபாரிகளின் பங்களிப்பு என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதானாக வேண்டும். துவக்கத்திலும் முடிவிலுமன்றி இடைப்பட்ட ஆறேழு ஆண்டுகளில் சிவாஜிக்கு கதை சொல்லுதல் என்பது பற்றிய வேடிக்கையான செய்திகள் சினிமா வட்டாரங்களில் பிரசித்தம். பெரிதான பரிட்சார்த்தங்களுக்கு வாய்ப்பளிக்காத சினிமாச்சூழலில் அதன் சாத்தியங்களுக்குட்பட்ட அத்தனை பாத்திரங்களையும் செய்து முடித்திருந்த இந்நடிகனுக்கு தீனி போடவியலாத பம்மாத்து படைப்பாளிகள் அவரின் இளக்கமான மனச்சார்புடைய விஷயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, காட்சியமைத்து, படத்தைச் சுருட்டி வியாபாரம் செய்த அவலமும் நிகழ்ந்தது உண்மைதான். இந்த ஆபத்திலிருந்து அவரை மீட்டெடுத்தது, சிறிது கால இடைவெளிக்கு பிறகு வெளிவந்த முதல் மரியாதை, தேவர்மகன், பசும்பொன், படையப்பா போன்ற சினிமாக்கள் எனலாம். குறிப்பாக இத்திரைப்படங்கள் சிவாஜி என்னும் Box Office நடிகனை மனதில் கொள்ளாது அதன் படைப்பாளிகளின் போக்கிலேயே தயாரிக்கப்பட்டது கவனத்தில் கொள்ளத்தக்கது. கமல்ஹாசன் மற்றும் ரஜினிகாந்த் ஆகியோருக்கு சிவாஜிகணேசனை தங்களது 'ஆதர்ச தகப்பனாக' காட்டிக் கொள்ளும் அவசியத்தை உருவாக்கியது அந்த நடிகனின் நடிப்பு ஆளுமையின் வியாபகம் என்றே தோன்றுகிறது.

இந்த நடிப்புலக ஜாம்பவானுக்கு, பட்டங்களுக்கும், பதவிகளுக்கும் பஞ்சமில்லைதான். ஆனாலும் இந்திய அரசின் அங்கீகாரமான சிறந்த நடிகருக்கான 'பாரத்' பட்டம் கடைசிவரை வழங்கப்படவில்லை. இது பட்டம் கிடைக்கவில்லை என்ற அங்கலாய்ப்பு சார்ந்ததல்ல. மாறாக, தன் நடிப்புத்திறனால் மக்களின் ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெற்ற இம் மாநடிகன், அரசின் சில்லறை அரசியல்களால், கலை குறித்த அக்கறையின்மைகளால் புறந்தள்ளப்பட்டது ஒரு குறியீடாகவே காணப்படுகிறது. சிவாஜி எனும் மாமனிதனைக் கொண்டாடி 'பாரத ரத்னா' வழங்குவதைவிட காலத்தின் நினைவடுக்குகளில் பதிந்துள்ள சுவடுகளை ஆய்வுக்குட்படுத்தி தொகுத்துக் கொள்வதுதான் இந்த முகந்திருப்பலுக்கான பதிலியாக இருக்குமெனப்படுகிறது.

-கருணாமகேந்திரன்

★★★

திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள்

கோணங்கி

கரும்புத் தோட்டத்திலே திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள் ஒருவர் மேல் ஒருவர் சாய்ந்து தோகையோடு கை வளைத்து விம்மியழுங்குரல் கேட்டிருந்த காற்றில் இணைந்தே நடந்தார்கள் தாக்கெம்போ பூர்வகுடிகளுடன். தனுஷ்கோடி கரையை அடைய பாடல் கொண்டுபோன பீலிநீர் கோலியப் பெண் நரம்பிலும் ஒளிர்ந்தது. உதிரம் ஏறிய கண்களில் வறண்ட காற்று நீரை உறிஞ்சிச் சுழிந்தது. பொக்குப் பாறைகளிடையே செம்மண் கூடு கட்டிய மண்கடந்தை சிறிய கண்ணாடி இறகுகள் விரித்ததிர்ந்த எரிமலைத் தீவில் சிலைகள் அசையும். பாலினேஷிய டோங்கா தீவுகளின் ரத்தம் மெலனேஷியரோடு கலந்து தீராத கலவியில் எரிந்த பாறை வீடுகளிடையே பிளவுபட்ட பூர்வகுடிகள் மேற்கில் லாங்டோகாவரை ஊறியது. விட்டிலெவுத் தீவில் இறக்கி விடப்பட்ட இந்திய அடிமைகள் விலங்குகள் இன்றித் திரிந்தார்கள் வெள்ளையர் வரைந்த கரும்புத் தோட்ட வரைபடத்தில். தானே பிளவுண்ட இருநூற்றி நாற்பது பொடித் தீவுக்கூட்டங்களில் வடிந்த பாறைக் குழம்பில் கருநிறமான பூர்வகுடிக் கடவுளர்கள் எரிந்த மலைச் சாம்பலில் பூசிய முகத்துடன் வெள்ளையரை எதிர்கொண்டார்கள். லெவுகா, ஓவலாத் தீவுகளில் அமைந்த கரும்புத்தோட்டம் மலை அடிவாரங்களில் பட்சிகளால் ஒலி பொடிந்து வந்த பகலைக் கொடுக்கும். ஆயிரத்து எண்ணூற்றிஒன்றில் சேதமடைந்த கப்பலில் நாவுலிவோ படையுடன் இருந்த சந்தன மர வணிகன் சார்லஸ் சேவேஜ் என்பவனை காப்பாற்றினான். மோப்பம் பிடித்த கடல் பயணத்தில் மரங்களை வெட்டுமாறு விதிக்கப்பட்ட மெலனேஷிய ரத்தம் கொதித்து கொலை செய்யப்பட்டான் சார்லஸ் சேவேஜ். அவனோடு சந்தன வேட்டையும் ஓரமாக ஒதுங்கிவிட்டிருக்கும். பசிபிக் கடலின் உள்ளே இனிப்பான தீவுகள் இருப்பதைக் கண்டுகொண்டான் வெள்ளையன். சிறு சிறு தீவாக மீனுடல் கொண்ட பூர்வர்களை வலைவீசிப் பிடித்து ஒவ்வொரு தீவாக தன் கால்களை வைத்து விக்டோரியாவின் காதுகளில் இங்கே மூழ்கி எடுத்த மௌத்திகங்களை சூட்டினான் கடல் கடந்த பயணத்தில். கருப்பு அடிமைகளும் அவர்களுக்கருகே வளைந்து குறுகி இருக்க எரிமலைகளை அவமதித்தார்கள். அங்கே லாவோ தீவுவரை இலையுதிரும் சந்தன விருட்சங்கள் இருட்டிலிருந்தன கடல் ஆழத்தில். கொள்ளை நோயால் மாண்ட கப்பல்தான் லியோனிதாஸ். கரிய பாய்விரித்து மூடிக்கிடந்த உடல்களுக்குள் ஓடிக்கொண்டிருந்த உயிரின் கனவு மட்டும் தனுஷ்கோடி பட்டினத் துறையில் சாவின் வசீகரத்தால் அழைத்தது ஜனங்களை.



தொன்மையான பாறைகள் இருக்கும் டோங்கா தீவுகளில் மிகப் பழைய கபாலங்களாய் கிடந்த இனங்களின் எலும்புகளில் நரபலியும் மனித மாமிச வேட்கையும் கொண்ட வட்டப்புறை கொண்ட ஈமவனம் இருக்கும். படகில் கடந்து வந்த விக்டோரிய தொல்லியலான் புரூஸ்டர் "கிங் ஆப் கேனிபல் ஐஸ்லஸ்" நூலை வேறொரு காலத்தில் இருந்து எழுதித் திரிந்தான் நரபலிக்காட்டில். அங்கு பௌர்ணமி இரவில் பூமியிலுள்ள தங்கரேகைகள் கொண்ட நரமாமிசம் உண்ணும் அரசி எல்லாத் தீவாந்திரங்களுக்கும் அரசியாய் வீற்றிருந்தாள். அவளருகே புரூஸ்டர் மண்டியிட்டு விக்டோரியாவின் முத்திரைகளைக் காட்டி தனக்கு உயிர்ப்பிச்சை கேட்டான். மெலனேஷியரும், பாலினேஷியரும் நாய் மாமிசம் தின்னுமாறு அவனிடம் நீட்ட புரூஸ்டர் ரத்த வாந்தி எடுத்தான் தீவுகள் அதிர.

கரும்பைக் குடைந்து அடுத்த பாடலை வெள்ளைநிறக் கவி ஒருவன் தனக்கெதிராகப் பாடிய வேளை நரமாமிச அரசி அவனுக்கு வழிவிட்டாள். துன்பக் கேணியிலே பெண்கள் அழுத சொல் ஆங்கிலத்தில் இல்லை. ரோமன் தமிழில் மைக்ரோனேஷிய விரல் நுனியில் தீவு தீவாந்திரப் பள்ளிக்கூடங்களில் சிறுமியர் இமைமேல் தைத்தார்கள் ரோமன் வடிவத்தை. மயங்கிக் குணங்கும் துளைவழி ஒழுகும் பாடலை பொடிப் பறவைகள் எடுத்துப்போய் இன்னும் கட்டி முடியாத கூட்டில் வேறொரு புதர்களிடையே ஊட்டி ஒலித்தன குஞ்சுகளின் மெல்லிசை. வெளியெங்கும் மிதந்து போன மண் கடந்தையின் சுழல் வழியில் உருகும் தொலைவான ஸ்திரீயின் பாடல் பிஜித் தீவில் கரையும். அருகே யாருமில்லை. எரிந்த மலைகள் மூடிய தீவுக் கூட்டங்களின் பிளவில் வெள்ளியாய் நெளிந்து செல்லும் கடல். கடந்தையுடன் கோலியப்பெண் சுற்றுகிறாள். நீர் வாய்க்காலில் அவர்கள் நிழல் அசையும். முதன் முதலாக வந்த லியோனிதாஸ் கப்பல் நிழல் நீரில் கரைகிறது. தண்ணீரின் மோனத்தில் மறைந்த ஸ்திரீகளின் உரு சிலையென உருகும் சாவின் கப்பலில்.

தொகையிலிருந்து பிரிந்து போன வலிமையான பறவை கூட்டத்தோடு பறக்காது. தனிமை குடித்த சூனியத்தில் வெகுதூரம் மிதந்து வெளியை அலகிலிட்டு விசில் ஒலிக்கும் துக்கம். கரும்புத்தோட்டத்தில் மறைந்திருக்கும் அதன் தற்காலிகக் கூடு. அது விரைவில் வெளியேறி விடும். சருகுகளின் புலம்பல் ஒலியில் விடுபட்ட சொற்தொடர் காற்றில் அலையும். யாராக இருக்கும். யாரும் இல்லாத தீவில் மணல் மடித்துக் கொண்டிருக்கும் காற்றில் உருவமில்லாதவர்கள் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். வடிவத்துக்குள் இல்லாத அசைவில்

சொல் பீடித்த ஒருவன் அந்நிய நிலத்தில் கால்வைக்கிறான். விரல்களைப் பற்றி இழுக்கும் துயர நிழல்கள் விட்டுப்போன கோடுகளில் புதைக்கிறான் சொல்லின் தழலை. ரோமன் தமிழில் பூட்டிய காலனிய பூட்டு ஊளையிடும். அது கோடுகளில் ஏறி ஆடும் கரும்புத்தோட்டத்தின் ஒடிந்த சோகையில் புலம்பும் காலனிய நிழலாட்டம். தாறுமாறாய் கோடுகள் வந்த கலப்பு மொழித் திசையில் ஸ்திரீகள் மறைந்திருக்கக் கூடும். காற்றில் நெளிந்த கூந்தல் மேலேறி கரும்பில் சிக்கி கீச்சிடுகிறது. பறவைக் காலில் சுருட்டிய கேசச் சுருள் கூடுகளுக்கான வலைப்பின்னல். நிலவில் ஒளியோடும் கேச இழை தொட்டால் மின்னல் மறையும் கரிய வனம். சுருள் கொள்ளும் கேச இழைகளின் அசைவு ராவிருட்டில் கேட்டிருக்கும். விடிவதற்கு முன் இருட்டு மெல்ல சுருங்கி ஸ்திரீகளின் சிகலிகையில் மறையும்.

தொகுதியாய் பறக்கும் பட்சிகள் தனிமையாய் செல்லும் பறவையைத் தாக்குவதில்லை. உயரத்தில் இருந்து அதன் நிழல் கரும்பின் ஊடே கும்புகும்பாய் சுற்றும் ஸ்திரீகளின் மேல் தொட்டு ஒலிக்கும் அலகு ஓசை. ஆனால் அதைத் தொலை தூர ஊரில் பார்த்த சுபாவம் மாறவில்லை. குழந்தை அதன் சரியும் இறகை எடுத்துக் கொண்டது.

நீரில் இணைந்த திறந்த விழிகளோடு துயிலும் ஸ்திரீகளின் நிழல் மெலிந்த ஸ்தனங்களுடன். கரும்பின் சுவைதான் மெல்ல உயிர் குடிக்கும் வேணாத வெயிலில் வருத்தும் தீராதவேலை. வெளியில் தெரியாமல் துக்கித்த ஸ்திரீகள் முகத்தில் ஓடிய கரும்பின் சோகை. மலையிலிருந்து வந்த விட்டிலெவுப் பெண்ணும் அங்கிருந்தாள். நாகரீகம் இல்லாதவள் எனப்படும் அவளை 'ஜங்கிலி' என்ற வார்த்தையால் அழைத்தார்கள். அவள் முகம் கருத்திருந்தது. சாம்பல் பூசிய ஜங்கிலி கைகளில் மலைகளில் அடர்ந்த மூலிகை வாசம். கையில் எடுத்துக் கொள்ளும் சிசு குணங்கிய வெயிலின் மயக்கம். கர்ப்ப ஸ்திரீகள் கரும்பில் ஊன்றி நிற்கிறார்கள் மடி துருத்தி. காற்றின் வெறுமையான வீறிடல் கேட்டு தனுஷ்கோடி நிலம் தொட்டது அவளையும். கொஞ்சமாக சேர்த்து வைத்த சோளத்தில் இரு நாழி இருந்தது. மஞ்சணை பதினாலு வயதில் தீவு கடந்தவள். அவளுக்குத் துணை புருஷனென ஆயிற்று. பிஞ்சு மார்பில் கொதித்துப் பொங்கிய பாலில் கன்னியின் பார்வை பட்ட புருஷன் அகப்பட்டுக் கொண்டான். நித்தம் அவள் குளித்து மெழுகி எரிமலை முனகும் திசையில் பலிக்கடவுளை நோக்கினாள். ராவிருட்டில் புருஷன் வந்து தீப்பாறைக்குள் மறைகிறாள் மஞ்சணை. இயற்கை நியதி கொண்ட லெவுகா தீவாதிகள் எரிமலை குளிர்ந்த சாம்பல் பாறைகளில் மறைத்திருக்கக் கூடும். பிள்ளைகளை தோளிலே தொட்டிலிட்டு குரங்குகளின் மூச்சில் துயில வைத்தாள் ஜங்கிலியாள். வெஸ்லியன் மிஷன்மார் சுர மண்டலத்தை தீவுகளில் அலையவிட்டு ஊசிக்கோபுரம் அமைக்கவந்தார்கள் கப்பலில். கடல் பயணிகள் குறிப்புகளின் வரைபடம் சுருண்டு கொள்ள நாடோடிகளும் மாலுமிகளும் தீவுக்குத் தீவு பாறைகளின் விநோத வடிவத்தில் மயங்கினார்கள். சுண்ணாம்புப் பாறைகள் இருந்த கீழ் பகுதியில் வெப்பக்காடு. பிஜியின் சந்தன வியாபாரிகள் மேற்கே ஏற்றிச் சென்ற கப்பலில் வெள்ளையனும் வந்தான்.

தொங்கா அரசன் ஜார்ஜ் துப்போவ் சிதறிக்கிடக்கும் தீவுகளின் இடைவெளியில் விஜயம் செய்த நாளில் பூர்வகுடிகளின் வில்லையும் மீன் ஆயுதங்களையும் கண்டு பயந்தான். கரிய கழிகளை ஊன்றி சற்றே தாமதித்தான் அரசன். பூர்வகுடியோடு தனக்கான மூதாவின் தொடர்பை புராணத்தில் வரும் அகப்பாடலில் நடித்துக் காட்டினான் கழைக்கூத்தாடிகளால். தாக்கம்போ பெண்ணின் உடலில் மெலனேஷிய பாலினேஷிய ரத்தமும் வேரும் கலந்த சடங்குகளின் துடி கொண்ட சல்லரிச் சிறுபறை கொட்டி அரசன் துப்போவின் இளமையை வர்ணித்தாள் முதலில். வேறுபட்ட இனங்கள் தங்களுக்குள் ரத்தம் ஏறிய கழிகளால் சிலம்பமாடி அரசனை விருந்துக்கு அழைத்தார்கள். காட்டெருமை மீது படுத்திருந்த பூர்வகுடிக் குடும்பன் தொங்கா அரசனை மயிற் பிஞ்சத்தால் தொட்டு ஆசனத்தில் அமரச் சொல்லி சைகை செய்தான். அந்த பொக்குப் பாறைகளில் ஆயிரக்கணக்கான குழிவுகளில் தீட்டப்பட்டிருந்த வானரர்களின் உருவத்தில் சாம்பல் செடிகளிடையே ஸ்திரீகள் எட்டிப் பார்த்தார்கள். சித்திரமும் நேரடி உருவமும் ஒரே வகை மணல் முகமூடிகளை அணிந்திருந்ததைப் பார்த்தான்.

அவனுக்காக எருதுத் தோலில் வரையப்பட்ட தீவுகளின் மந்திரச்சடங்கில் உள்ள நரபலிக்கடவுளரின் மறைவிடங்கள் தீட்டப்பட்டிருந்தன ஒவ்வொரு தீவாந்திரத்திலும். மெலெனேஷியரின் கால்களும் பாலினேஷிய ஆதிரத்தமும் கலந்த மூங்கிலாலான இஸ்ரூத் எனும் கருவியை எருமையிலிருந்தவாறே வாசித்தான் குடும்பன். ரத்தம் கலந்த பூர்வ இசை நுரைத்து தொங்கா அரசனை வெகுகாலத்திற்கு புத்தி இழக்கச் செய்யுமாறு கரைத்தது முகுளத்தை. ஆனாலும் வந்தவனின் ஆகிருதியில் அதே இஸ்ரூத்தை வாசிக்கும் பழக்கம் இருக்கவேண்டும். அதை குடும்பனிடத்தில் வாங்கி எரிமலைகள் புலம்புவதை இசைத்தான் தொங்கா அரசன். அவ்வேளை மலைப்புடவுகளில் பதுங்கியிருந்த பலிக்கடவுள் நிர்வாணமான பலியைக் கேட்கும் கணம் பிறந்தது. வலிமையான எருதுகளை பலியிட்டார்கள் முதலில். தாக்கம்போ இளவரசி உடலில் பச்சை குத்தப்பட்டு மீன் ராசிகள் நகர்ந்தன. அவளின் கண்களில் பதுங்கிய மகரத்தை வாசித்தான் நாயனகாரன். கருவிகள் எல்லாம் மனிதத் தொடை எலும்புகளால் துளையிடப்பட்ட பிராண வாத்தியம். நரம்புகள் ஈர்த்த உதிர நிறத்திலான பாறைகளின் தனிமையை வாசித்தாள் இளவரசி. அவள் மெல்ல அடியெடுத்து வந்து இலைகள் மூடிய தன் பிஞ்சு மார்பைத் திறந்து பூர்வ உணர்வு பொங்கும் நுரையுடன் தொங்கா அரசனின் முகத்தில் கட்டிக்கிடந்த முலைப்பாலை பீச்சியடித்தாள். அதன் சூட்டிலேயே கர்பத்திலிருக்கும் சிசுவானான் அரசன். பல உதிர் காலங்களுக்கு நீளக்கூடிய கனவு கண்டான். அதில் விட்டு வந்த நிலங்களின் வாதையை அடைந்தான். சர்வ வல்லமையும் அதிகாரமும் கலைந்த பழங்குடிப் பூச்சியாய் வனத்தை நோக்கி ஓடினான் அரசன். அவன் பின்னே வந்தவர்களும் கண்ணுக்குள் விரிந்த தொல்படிவ நிலத்தோற்றத்தில் நீந்திச் சென்றார்கள். ரத்தத்தை மொழியாக மாற்றும் ஆற்றல் இசைக்குள் இருப்பதை செதுக்கப்பட்ட சிலை எழுத்துகள் பார்த்தன. இருட்டித் திரிந்த கருப்புப் பெண் ஜங்கிலி வெள்ளையரின் கரும்புத் தோட்டத்திலே அடித்தூரில் புதைந்து கிடந்த சூலைப் பாம்புகளுக்கு ஸ்தனங்களைச் சுரந்து பால் வார்த்தாள். அவை வாலில் விசும்பி வந்து முலையோரம் திரித்த நாவு நீட்டி அருந்தின ஓசை குழந்தையின் உச்சிதமாய் கேட்டது. தூக்கி நிமிர்ந்த தாக்கெம்போ ஸ்தனங்களின் ஒளியில் சூலைப்பாம்புகள் பணிந்து கால் சுற்றி மெல்ல ஊர்ந்த கரும்புத்தோட்டம்.

திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகளைத் தொடர்ந்து புறைவீடுகளின் கல்மாடத்தில் சுடரின் பின்னே படமெடுத்து விளக்கிடம் வாதாடியது சூலைப்பாம்பு. முழுகாமல் இருந்தாள் பம்பை. வளையல்கள் கொடுத்து மஞ்சள் பூசி காலில் கம்பளிக்கயிறு கட்டிய பின்னும் கரும்புத்தோட்டத்தில் வேலை செய்தாள். பம்பை பெருமூச்சு

விட்டு ஆதாளைக் கூப்பிட்டாள். கோலியப்பெண் வந்து பேறுகால நாள் நெருங்கி விட்டதை உணர்ந்து காப்புக் கட்டினாள் செடிதளைகளில். தாக்கம்போ பழங்குடியிடம் சொல்லப் போனான் கொண்டிக்காரன். அங்கிருந்த ஜங்கிலி ஸ்திரீகள் மலை முழுவதும் போய் மூலிகை தேடிக்கொண்டுவந்து கல்புறை வீட்டில் பம்பையைச் சுற்றி செடிவைத்து கைகள் பிணைந்து பாடினார்கள் பாறைகளுக்கிடையே. பாலினேஷிய ரத்தத்தில் ஊறிய சுருள் வைத்த பாடல் அவளைக் காக்கக் கூடும்.

காட்டுத் தழைகளுடன் மருத்துவச்சி சாம்பல்பூசி வந்தாள் புறைக்குள்ளே. மண்பல்லாவில் மஞ்சள் நீர் எடுத்து பம்பையைக் குடிக்கச் சொல்லிக் கொடுத்தாள். சுற்றிலும் பொக்குப்பாறைகள் சுற்றிக் கொள்ள வட்டமான கற்கூடுகளுக்குள் சென்றார்கள். அங்கே கல்லில் பிளவுண்டிருந்த எரிமலை வாயிலில் உதிரம் கண்டு திலதமிட்டு பம்பையை செடிமேல் படுக்க வைத்தாள். சுற்றிலும் பெண்களின் ஈரமுகம். கூந்தல் நெருக்கத்தில் குனிந்திருக்கிறார்கள். வெளியில் நடமாடிய காற்றில் கரும்புத் தாளின் புலம்பல். இருட்டு மெல்ல கரைந்து துக்கத்திலிருந்து பிறப்புக்கு இடம் மாறி வெப்பமும் திணறலுமான கரு இடம். சிசு குணங்கும் வீறிடல், மையிருட்டு பிளந்து தழல் எரிந்த இரவு துடைகள் துடிக்கப் பிறந்த சிசு சுடர்ந்தது தகதகத்து.

சுற்றி வில்லுடன் ஆதி மகளிர் குலவை ஓசை, நெருப்பு உள்ளே பச்சையாக எரியும் கண்களில் தீவின் அகம். மீன் எலும்புகளை ஊதியவாறு அர்த்த ஜாமத்தில் மரங்களிடையே போகிறார்கள் ஜங்கிலிகள். கல்லால விருட்சத்தில் சங்கும், உப்புக் கிண்ணியும் வைத்துத் திருப்பக் கூடும். கடலில் விரல் வைக்கவும் வழிகாட்டி மீன்கள் வந்து தொடும். கல்வாசலில் வளைந்திருக்கும் பம்பை ராவிருட்டில் தனியே நடந்தாள், சுவா துறைமுகத்தில் கண்ணங்கரிய லியோனிதாஸ் கப்பலில் வெளிப்பட்ட நீராவியிலிருந்து லாந்தருடன் வந்த கீழை தேச மாலுமிகளுடன் கடற்காற்றில் உரையாடினாள். கப்பல் திரும்ப சில வாரம் செல்லும் என்றான் மாலுமி. அவனைக் கூட்டி வந்து பம்பை ஈன்ற வாசலைக் காட்டினாள் பள்ளக்குளுமாயி. காட்டில் வெளிப்பட்ட மாயி அருவம் பார்த்து வெள்ளையன் வாளுடன் வந்தான் குதிரையில். அவனுக்கு எதிராக தாக்கம்போவில் அம்புகளை அகராதிப்படி எடுத்து நட்டி வைத்தான். இந்தக் களத்தில் கரும்புத் தோட்ட இந்தியரும் சேர்ந்திருந்தார்கள் அவர்களுடன். ஆண்கள் யாரென்பதை லாந்தரைத் தூக்கிப் பார்த்த சிப்பாயை மீன் முள்ளால் குத்தி வீழ்த்தினான் லெவுகா ஒருவன். வெள்ளையன் குதிரைகூட காலை நகர்த்தவில்லை. இருபக்கமும் சம பலம் இருந்தது. முற்றுகைக்கு நேரம் குறித்தான் குடும்பன். அவர்களைச் சூழ்ந்த இருட்டில் வெள்ளையருக்கு எதிரான ஆவிகள் அசைவதைப் பார்த்தான் சந்தன வியாபாரி. சில அடிமைகளை விலைக்கு வாங்கவும் வாசனைத் தைலம் சேர்க்கும் பூக்களைத் தேடியும் அங்கு வந்த வெள்ளை அதிகாரி. அவனிடம் வாசனை வழியாக மனிதனை உணரும் பழக்கமிருந்தது. எதிரிகளின் வாசனையிலிருந்து தன் துரதிருஷ்டத்தை முன்னுணர்ந்தான்.

பூக்களின் விதிகளை அறிந்த மலைஜாதிகள் உலகையே வாசனைகளால் பிரித்து வைத்திருந்தார்கள். ஒவ்வொரு தீவுக்கும் வேறு வேறு வாசனைகள் இருப்பதைக் கொண்டே இருநூற்று நாற்பது நிலத்துண்டுகளைக் கொண்டு இணைத்தார்கள் தேசமெனும் வாசனைகள் கலந்த அடையாளத்தை. லாவோக்களின் தலைவனான மாஃபோவுக்கு இது தெரியும். அவனே மிஷன்மார்களுக்கு அலாதியான தீவுகளை திறந்து விட்டவன். பூக்களின் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. பூர்வர்களின் நாசியால் நில வேறுபாடுகளை அளக்கும் மன மாற்றங்களை எழுத ஒரு வெள்ளை நிற மருத்துவனும் திரிந்து கொண்டிருந்தான் தீவாந்திரத்தில். சர்தார்களும் கொலம்பர்களும் ஸ்திரீகளைக் கீழே தள்ளி மார்புமேல் குத்தினார்கள். நான்கு புருஷர்களுக்கு மத்தியில் ஒரு ஸ்திரீ வந்தாள். கரும்புக்கு உப்பு எரு இட்டாள். பூமியை உப்பாக்கினாள் கண்களால் அந்த அர்காதிஸி கொள்ளைநோய் கப்பலான லியோனிதாஸில் கிளம்பிவந்தார்கள் தனுஷ்கோடிவரை. பிஜியின் வளமைகூறி ஏமாற்றி பஞ்சத்தில் வறண்ட ஜனத்தின் ஊர்ஊராய் நயமாக ஏய்த்து ஸ்திரீகளையே கும்பு கும்பாய் கூட்டிப்போனான் அர்காதிஸி. அவன்மீது சாவின் நிழல் ஆடியது. ஒரு சிலிங் நாணயம் உருண்டு அதன் மீதே ஜீவிதத்தை வடித்தார்கள் ஸ்திரீகள். தீமிதிக்கும் கால்கள். செனாய் வாஸித்த நாவிதனும் முகமூடி அணிந்த ஸ்திரீயும் புருஷனும் திரௌபதியும் அக்னி. கரகம் எடுத்து தீ மூண்டு எரிந்தது அங்கே.

சாகும் வரை கரும்புத்தோட்டத்தில் விடப்பட்ட திறந்த விழிகளுடன் தூங்கும் ஸ்திரீகளிடம் பூர்வீகர் கலந்து விடுகிறார்கள். குறுக்கே இருந்த எல்லைகள் கரைந்து விடும். தங்களுக்குள் முகபாவத்தில் உரையாடி ஒன்றுபடும் இரவு அவர்களிடமிருக்கும். ஒவ்வொரு பிறப்புக்கும் ஒரு வெள்ளையனை பலிகொண்டது பூர்வகுடிக் கடவுள். அவர்கள் இரவோடு கலைந்து போயினர் கல் வாசல்களை விட்டு. மறுநாள் வெள்ளை அதிகாரி கோபித்துக் கொள்வானோ என்ற பயத்தில் வயிற்றில் பிள்ளைகளைச் சுமந்தவாறு குனிந்து பயிரிடம் உரையாடினார்கள். திறந்த விழிகளோடு துயிலும் ஸ்திரீகள் வாய் பேசாதிருக்கும் நீரூற்று. நரம்புகள் வழியே ஊறிய நதி மெல்ல ஸ்திரீகளின் உடல்வழி பாய்ந்து சலனமானது கால்கை துடிக்க. அதன் அடியில் தங்கிய மகளிர் ஊரிலிருந்து கொண்டு வந்த வழக்குகளைப் பகிர்ந்த சொல் கொடுத்துப்போகிறார்கள் கூலி வேலைக்கு. ஆயிரத்தி எண்ணூற்றி எழுபத்தி ஒன்பதில் தனுஷ்கோடி முனையிலிருந்து புறப்பட்ட கப்பல் இங்கு வந்து சேர வாரக் கணக்கில் கடல் நோய்க்கு ஆட்பட்டார்கள். அவர்கள் வந்த லியோனிதாஸ் கப்பல் கொள்ளைநோயில் மடிந்த உடல்களுடன் அலை மோதிய சுவா துறையில் தெற்கே நின்றது. கடலின் நீர்வாகைப் பார்த்து அடிமைகள் வியந்தார்கள் முதலில். போகப் போக எல்லா நிலங்களும் ஒரே பயிரின் நிறமாற்றமடையும் பச்சைப் பாலைவனமாகியது.

ஏனோ சில தீவுகளில் பூக்களை வதைக்கும் வாசனைகளின் சோதனைச் சாலை உருவானது. மிருகங்களையும் விட்டுவைக்கவில்லை. காட்டுச் செடிகளே அவர்களை விட்டுத் தப்பி வேலிக்கு அப்பால் இருந்தன கூட்டமாய். லெவுக்காவில் தூரதேச வணிகர்கள் காத்திருக்கிறார்கள் மிஷன்மாரோடு. பின்னிப் பிணைந்த பிள்ளைகளை மிஷன்மாரோடு அனுப்பாமல் முதுகில் சுமந்து கொண்டே வியர்வையில் நனைந்த சூரியனைத் தொடுகிறாள் ஆவலுடன். துன்பக் கேணியிலே திறந்த விழிகளோடு ஸ்திரீகள் நிழல் விழுந்தது. நீந்திக்கரைசேர முடியாத கடல் வெளிதூரம். எங்கும் உப்புத் தாளாய் படபடத்து வந்தது கடல். காய்ந்து உலர்ந்த உவர்தாளை மடித்து வீசிய காகித நுரை பொங்கிய லெவுங்கா தீவு. வெள்ளையன் தோளை ஒடித்தான் மேற்கிலிருந்து. இருட்டில் தலை திருப்பி தூக்கத்தில் ஏதோ முனகினார்கள் ஆயினும் துன்பக்கேணியில் விழித்துக் கொள்ளவில்லை.

தோளில் துவளும் பையனின் தலையை ஒரு கையில் அணைத்தவாறு மற்றொரு கையால் தோகை விரித்திருந்தார்கள். நிழல் பட சருகு புலம்புதல் தீராமல் கேட்டுத்துயிலும் அவள் உடல் படர்ந்த செடிமறைவில் நெளிந்து கழுத்தைச் சுற்றி முத்தமிட்ட பச்சைப் பாம்பு மணல் பூவில் சுவாசித்து திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகளின் வாசனை கொண்டு பிதிர் ஓலை எடுத்து தனக்குள் சொற்கள் சிதறும் பைத்தியத்தில் கோடுகளும் புள்ளிகளுமாக விஷம் ஏறிய கதைபோடும் பாம்பு நுழைந்த கரும்புத்தோட்டம். பள்ளக்குளு மாயி முகத்தைப் பார்த்தாள். பம்பையின் இணைந்த புருவங்களில் வேர்வை கோர்த்திருந்தது. காட்டுக்குள் அலைபடும் தினைக்கதிரென வாலாட்டும் அணில் அவள் ஸ்தனங்களில் பதுங்கியது. பால் கசியும் கருந்துளையில் சுருள் சுருளான பச்சைக் கொடி படர்ந்த காய்கள். நைந்த புடவைக்குள் மெலிந்திருந்தாள் பிள்ளை பெற்ற பம்பை. வேறு நிலம் தேடி ஸ்திரீகள் இரவில் அலையக்கூடும். தனிமையில் நீலமடையும் கண் தெரியாத தீவு மணல் வெளியில் சந்தடி அடங்கியதுமே வழித்துக் கொண்ட நாடோடி விளக்குகளை கடலில் ஏற்றினார்கள் திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள். கரும்பின் ஒளிக்குள் சுமைகளை ஏந்தியவாறு மேலேறி வந்து கொண்டிருந்தார்கள் கரைக்கு.

நீர் வழியிலேயே இடைமறித்து தங்குவது சாத்தியம்தான். அவர்கள் வெகுநேரம் நடந்தாலும் பிள்ளைகள் சிணுங்கின பால் கேட்டு. செடி மறைவில் முலைக் காய்களின் ஊமையான ஊற்று மெல்லச் சுரந்த கீழ்காட்டு மடுச்சுவை இலை நுரையுடன் மண்ணும் பிசினும் கலந்தபால் தெறித்தது தீவில். ஒரு துளி சீம்பால் உருண்டு கடல்மேல் நிற்கிறது. வெண்பனியென ரத்தம் உருமாறிய நீர்மை அதுவே தப்பிச் செல்லும் பால் வெளி. 'நீர் கண்ணாடிகள் உடையும் முனையில் தனுஷ்கோடி' என கீச்சிட்டார்கள் ஸ்திரீகள். கல்தெரு வெறிச்சோடி இருண்டு கிடந்தது. திடீரென இருளில் ஒரு வீட்டின் கதவு திறக்கும். வாயிலருகே உருவங்கள் நிற்கும் போது வில்பிடியில் மோகாவேசத்தில் தொனிக்கும் சேர்க்கையில் தீவுகளுக்கே ஆன கலவியின் வெண்ணிறத் தெருவில் நடந்து அவர்கள் தழலில் உருகினார்கள். பெண் விழிகள் இருளிலும் பளபளத்தது நீலத்தில். அவள் மீண்டும் புறைக்குள் செல்லவேண்டியதாயிற்று. அங்கேயாருமில்லை. பாறைக்குள் வெளிச்சம் எங்கிருந்து வரக்கூடும். கைகள் நகரும் கலவியின் ஒளி, நரம்பு நாரில் ஓடியது. அவள் தோள் மேல் வைத்த தலையின் வெப்பத்தை உணர்ந்தாள். அவள் அசைவிலிருந்த பாறைக்குள் சாம்பல் சுவை மிக்க இரவு. அவனோ லேசாயிருந்தான் எடையற்று. இருவரும் காற்றில் மிதப்பதான இருட்டில் உருவற்றவர்களாய் வாசல் கடந்து வெளியேறினர். வெண்ணிற அடிவானம் நீர் ஏறியிலிருந்தது. விடிவதற்கான கடலின் நிறம் மாறுதலடைய ஈயநிற விண்ணில் தெரிந்த வெள்ளி தொட்டாள் பம்பை. அகலமான தீவாதிகள் முகம் அவளுக்கு நெருங்கியிருந்தது. சிறுத்தையைப் போலபுறையில் படுத்து அசையாதுகிடந்தாள் பம்பை. அவன் மேல் சீற்றத்தை வெளிக்காட்டிக்கொள்ளாமலிருந்தாள். அவனோ தன் கொடி வில்லை எடுத்து ராவிருட்டில் பாறையின் மேல் தாவி மறைந்தான்.

பம்பையின் பின்னே சிறுமிமெல்ல வந்து கொண்டிருந்தாள். அவளை அணைத்து, 'போக வேண்டிய வீட்டை சீக்கிரம் அடையணும் கண்ணே' என்றாள் அம்மா. மற்றவர்களுடன் பேச எவ்வளவோ இருந்தது. அவர்கள் மேலே செல்லச் செல்ல சுற்றியிருந்த கரும்புத்தோட்டம் வேறு வேறு இடத்தில் விரட்டியது. அதனுள்ளிருந்த அச்சந்தரக் கூடிய ஆவிகள் வெள்ளை நிற சீனி விரல்களை அசைத்து உள்ளே அழைத்தன ஸ்திரீகளை. சீனிநிற விரல்கள் கொண்ட வெள்ளையன் நிழல் ஓடிக் கொண்டே வியாபித்தது. தீய சக்திகளைக் கண்டு மிரண்ட ஸ்திரீகள் இரும்புத் துண்டுகளை கையிலேந்தி விடுபட்டார்கள் பயத்திலிருந்து. ஐங்கிலியன் மார்பு மீது முகம் வைத்து அழுதாள் வடுவச்சி. அவனுடன் கல்யாணமாகியிருந்த நாட்கள் மறைந்தும் விடவில்லை ஏக்கம். சங்கனின் மற்றொறு மனைவியானாள். அப்புறம் சிதறிய வருஷங்களில் களைமாறிப் போனாள் வடுவச்சி. விடிந்தால் ஆள் அருவம் தெரிந்து விடும். கரும்பின் நிழல் விழாத தீவை நோக்கி வெளியேறினாள் வடுவச்சி. அவளோடு பூச்சாள் கூட வந்தாள். அங்கே முள் காடுகளில் திரிந்தார்கள். கரையோரம் உப்பேறிய மீனவர்களைக் கண்ட வேளை அவர்களுக்கு நாணல் வேய்ந்த குடிலில் அடைக்கலம் கிடைத்தது. நாணல் காட்டுக்குள் தனியே போய் அழுதாள் வடுவச்சி. பூச்சாள் மீனவர்களில் ஒருத்தியாகி விடக்கூடும். இற்று உருக்குலைந்த உடலை நீரில் கண்டாள். அவளுக்கே பயமாக இருந்தது முகம்.

விஷமே ஒளி தோயும் நீலத்தில் நீரும் கலந்த சாற்றுப் படகுகளின் கொடியவேதனை கொண்ட திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள் கடந்து வந்த நிலவனாந்திரங்களின் அடியில் குவிந்துள்ள சருகுகளின் ஓசையை கூடவே கொண்டு செல்லக் கூடும். துயர நீட்சியில் காய்ந்த தோகையிலான குடிசை நெடுந்தூரம் சரசரத்த காலனி எந்திரங்களின் கருமசகு பூசிய நிழல்கள் அவளைத் தொட்டால் கனவுகளில் அசையும் கோர உருவங்கள் கரும்பு வெட்டிய கணுவில்தாள் புலம்பும். கவை பிடித்த தூரில் குருத்து விடும் ஓசை. இப்போதும் கூடவே ஆடும் உருவற்ற மிருகங்கள் நுகர்ந்த உடல்சாயும் கைவிரித்த சாயல். கித்தான் கப்பலில் வந்த அந்நியர்கள் பூர்வகுடிகளின் கல் வீடுகளை மூடினார்கள். வில் ஈட்டியில் சுற்றிக் கொண்ட சூலைப் பாம்புகளை வழிபட்டு கூட்டங் கூட்டமாய் வெளியேறிப் போன நிறக் குருடர்களான வனாந்திரர்கள் கடலில் மறைந்திருக்கும் ஓவலாவின் கபாலங்களைத் தழுவி முறையிட்டார்கள். தட்டையான தாடையில் கடல்பாசி கக்கும் கபாலத்தின் கண்களில் உதிர்ந்த உப்புக் கல்லை எடுத்து வேறொரு விட்டிலெவு தீவுக்குள் குடியேறினார்கள். நீரூற்றுகளின் தனிமையில் குளிர்ந்து கிடந்த விட்டிலெவு ஆவியை அங்கேயே விட்டுச் செல்லக்கூடும். வந்தேறிகளான தென்னாட்டவர் கன்னிகளை கூடவே முறை வைத்து விதை வித்தில் மறைந்து எடுத்துவரக்கூடும். மறைந்த கன்னியின் கபாலவாசலில் அலைபடும் கூந்தல் கருங்கப்பலில் கொள்ளை நோயில் மாண்ட சிறுபெண்ணின் கூந்தல்தான். புதைக்கப்பட்ட பின்னும் உயிருடன் வளர்வது. அவளது கபால வாசல் மொழியின் கருவறையாயிற்று அங்கே. ஈமப்பேழையில் வளரும் கூந்தல்தான் பயணத்தின் நெடுங்கதையாயிருந்தது.

பூர்வர்களின் ஒப்புதலின்றியே வெள்ளையன் சங்கிலி வைத்து நில அளவை செய்து கற்கள் நாட்டி எல்லாமே ஒரே வகைப் பயிருக்கான பாலையானது. காட்டு வடிவிலிருந்த தீவுகளின் அகப் பரப்பில் பாலை வந்து சேர்த்தது. பழைய கன்னியின் கபாலவாசலில் உறுமியதுகடல். தங்கக் கொடியோடும் மலையேற்றத்தில் சர்வேயர்கள் கொடி நட்டி கருவிகளால் சோதனை செய்து கொண்டிருந்தார்கள் தீவுகளில். குலக்கபாலங்களில் மூலிகை அகராதி



உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. விக்டோரியாவின் கப்பல் பாறையில் மோதிச் சிதறியது. அவர்களின் கடவுளரைப் பகைக்க முடியாத வெள்ளையர் கூட்டமாக இறக்கிய அடிமைகளைக் கொண்டு வடிவமைத்த கரும்புத் தோட்டத்திலே ஸ்திரீகள் தண்டை அணிந்த ஓசையுடன் கால்வைத்தார்கள். கைகள் சாய்ந்தன பச்சைத் தோகையாய். மேல் மார்பு திறந்த கருத்த பெண்கள் கும்ப முலைகளில் எப்போதும் பிள்ளைகள் பால் உறிஞ்சிய ஓசை கேட்டது செடி மறைவில். மணலின் தொலைவை நோக்கி திரும்பக் காத்திருக்கும் பேதலித்த பெண்களோடு கருப்பரும் இருந்தார்கள். தப்பிச் சென்றவன் வட்டச்சுழியில் திரும்பி வந்தான் அதே துறைக்கு. விடுபடமுடியவில்லை இங்கிருந்து.

சேல் மீன்களோடு கப்பலின் கீழறையில் தப்பிவந்த ஸ்திரீகள் தனுஷ்கோடி கரையை ஆவலாய் நோக்கினர் கடலிடத்தில். உலந்த காற்றின் ஓலம். மாயங்காட்டியது அலை. மாலுமிகளின் இயல்பு அவர்களை கரை சேர்க்கக் கூடும். கொண்டு வந்த பரங்கி நோயும் எலும்புருக்கிய பேதலிப்பும் பெரியம்மை விட்டுச் சென்ற முகத் தழும்புகளுடன் பிள்ளைகளை முதுகில் சுமந்தவாறு எலும்பு துருத்திய உடலை கரும்பாலையில் பிழிந்தாள். காலனியத் தலையறுத்து தப்பிவந்த ஸ்திரீகள் தனுஷ்கோடித் துறையில் இறங்கிய இரவில் உப்புவீடுகளின் வாசலில் அகதிகள் பலரும் சிங்க தேசத்திலிருந்து எல்லாம் இழந்து வந்திருந்தார்கள். ரயிலில் கொண்டுபோய் மண்டபம் முகாமில் அடைத்தார்கள் அகதிகளை. இவர்களை முகம் முகமாய் பார்த்து அழுதார்கள். எதையோ முகத்தில் தேடக்கூடும். கண்களின் ஓரத்தில் தொலை தூரக் கடலின் வறண்ட புலம்பல் இருக்கும்.

பூட்டிய கதவுகள் அருகே பிள்ளைகளைக் காட்டி நிலாச்சோறு கேட்கிறார்கள் திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள். கசங்கிய உப்பில் உலர்ந்த ஸ்திரீகளைக் கண்டதும் தானே திறந்த கதவு வழியே போய் மீன் சிறல் பறவைகள் கூட்டமாய் சத்தமிட்டு வெளியேறின தெருமேல். பச்சைப்பெண் நீந்தி வந்து சிறுவர்களின் விரலைத் தொட்டு பாசி விழி சுற்றி மந்திர ஒளியில் அழைத்துச் சென்றாள் தனுஷ்கோடியில்.

மொடா வயிறும் கடல் வாடையும் பிசுபிசுத்த பனங்காய் தலையும் குச்சிக் கால்களில் நிற்கும் சிறுவர்கள் கலைத்த பயணத்தில் வெம்பிக் கருத்த முகத்துடன் குவளை ஏந்திச் செல்லும் மீன் பாதை. மயக்கத்தில் ஆழ்ந்த கண்களில் பசி ஏக்கம் தாண்டிய தீவுகளின் வெளி. வறண்ட உதடுகளில் துடித்தது கடல். அகதிகளுக்கு அது தெரிந்திருக்கும். தலை மன்னாரில் அதே கரிய நிறக் கப்பல் இறங்கிச் சென்ற நாடோடிகள் கந்தல் பொட்டணத்துடன் உள்பிரதேச பனைகளை நோக்கிப் போனதை பார்த்ததாகச் சொன்னார்கள். இங்கு சிலர்தான் இறங்கி இருக்கக்கூடும். சேர்ந்திருந்த கைகள் நழுவி திரும்பத் தொடப் போவதில்லை தீவுகளை. அந்த உப்பு வீடுகள் பிள்ளைகளைத் தொட்டு மணல் மேடுகளின் தூரத்தில் நெளியும் சூனியத்திலிருந்த தண்ணீர் ஊற்றில் வளையர் சிணுங்கும் கடலின் ஓசையை கேட்டாள் மஞ்சணை. அவள் தங்கச்சிமடத்திலிருந்த தூரத்து உறவினரின் அடையாளம் சொன்னாள் பம்பையிடம்.

குருசடி அருகே சிப்பிசங்குகளின் அதிசய உயிரில் பதுங்கி இருந்த தாழ்ந்த விரிகுடாவில் கிழ சாத்துகாணி அவர்களைப் பார்த்து வலையைப் பின்னுவதில் மூழ்கி இருந்தான். மணல் மேட்டில் ஏறிய கடல் கீழே சரிந்து கிடந்தது அலையற்று. வேம்ப ஸ்திரீகள் அந்தப் பக்கம் போவதற்கு காவலரின் பார்வையிலிருந்து தப்ப வேண்டும்.

உப்புச் பாறைகளில் குடைந்த புறை வீடுகளில் பதுங்கிக்கிடந்த திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள் ஒவ்வொருவராய் கூடி விளக்கிடம் வாதாடி ராவிருட்டில் வெளியேறி வந்தவேளை அந்த விளக்குகளை இருட்டிலே விட்டுவந்தார்கள். வழியில் உப்பை விதைத்து வஞ்சகர் தொடராமலிருக்க வளைந்து போனது பாதை. சாத்துகாணி கந்தல் குடிசைக்குள் மீன்கறியும் கருவாடும் இருந்தது. வந்தவர்கள் பொத்தலான சாத்துகாணியின் குடிசையில் அசைவற்றுக் கிடந்தார்கள் துயிலில். மயக்கமான சில இரவு பகல் போய் தொங்கிக் கொண்டிருந்த இருள் கூடவே வரக் கூடும். எதையும் எடுத்துக் கொள்ளாமல் கொஞ்சம் உணவு மட்டும் அவர்களிடமிருந்தது. தொலைந்துபோன விடுகதைகள் சில மரங்களின் இலைகள் கோர்த்த ஞாபகங்கள் மற்றும் கண்ணீர் அற்ற திறந்த விழிகளோடு தூங்கும் வெறுமையும் அவர்களிடமிருந்தது.

திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள் தொலைந்துவிட்ட கூந்தல் இழையாக கதை ஒன்று சுருண்டு தண்டையில் சுற்றிக் கொண்டு தொடர்ந்தது. தீவாதிகள் கொடுத்த எலும்புகளை பம்பை கொண்டு வந்துவிட்டாள். அதில் இசையை வரவழைக்கும் துவாரங்கள் ஐந்து இருந்தன. அதை வாங்கிப் பார்த்த பழைய சாத்துகாணி தனியாகப் போய் தனுஷ்கோடியில் இருந்த நாடோடியிடம் காட்டினான். அலைந்து திரிபவனே அதை வைத்திருக்கக்கூடும். அவனுக்கு அது வழித்துணையாகலாம். அந்த பொக்குப் பாறைகளில் குடைந்த புறைவீடு ஓலமிட்டது தனிமையில். கால்கள் நடமாடிய இடத்தில் எத்தனையோ பின்னிக்கொண்ட மனம் தொலைந்து கிடக்கும் கூழாங்கல்லைப் போல. அதை யாரும் திருப்பிப் பார்க்கவில்லை. கை நழுவிய இடத்தின் வெறுமையிலிருந்து வசீகர மோகம் சூழ்கிறது. கலவி கொண்ட பாறைகள் உயிர் பெற்ற யாளிகளாய் கர்ஜித்தன

திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகளிடம். மஞ்சணை அங்கு திரும்பிப் போகவே அரிச்சல் பட்டாள். ரத்தத்தில் கலந்த மண்பாம்புகள் சீறிவந்து காலைத் தொட்டு முத்தமிட அவற்றின் மேல் கால்படாமல் குனிந்து அதன் ஜீவனிலுள்ள இயற்கை சுபாவத்தில் மருகிப் புறப்பட்டார்கள் ஸ்திரீகள். தூர இருந்து திரும்பிப் பார்த்த பிள்ளைகளைப் பார்த்து கூவியது சாதாரண பூச்சிகளும் பறவைகளும். மூத்த ஸ்திரீயான பம்பை சிலைபோல் நின்று விட்டாள். அவளைக் கூட்டிவர எல்லோரும் கைஎடுக்க வேண்டியதாயிற்று. பிரிவு நாளில் வந்த இரவு பூர்வகுடி ஆவிகள் ஊமை ஊற்றின் குளிர்ச்சியிலிருந்து வழிமறித்து கேவினார்கள் திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகளின் கூந்தல் மறைத்த ஸ்தனங்களில் ஆவிச் சேர்ந்து கொண்டன. உவர் நிலத்தில் இருந்த பனைகளைப் பற்றி விவரித்தாள் மூத்த பம்பை.

அந்தப் பாறைகளின் வெப்பத்தினால் இணங்கிய கலவிக்குள் சுடர்கிற ஸ்திரீகள் உடல் உருகிக் கொடுத்த கரும்புத் தோட்ட விளக்குகள் உள்ளே செல்லும். சருகின் தொனி எப்போதும் வளைந்து விளக்கின் பின்பக்கம் கேட்டது. கூட்டமாய் அவர்கள் இமைகளை மூடி கைகளை மேலே உயர்த்தி கூந்தலுக்குள் நுழைத்த விரல்களால் கேசம் அவிழ்த்தார்கள். பூச்சிகள் ஊர்ந்து வரக் குலவை ஒலி கேட்டு உப்புக்குத்திகளால் பயிர்களின் அருகே புருஷர்கள் பாடுவிழுந்து கிடக்கக் கூடும். நெருப்பு இன்னும் பாறைகளுக்குள் கொடியோடிக் கிடக்கும். அதன் வெப்பம் சிலவேளை குளிரக் கூடியது. அவர்களிடையே மௌத்திகம் தேடியலையும் நாடோடி கூடவே இருந்தான். அயர்ந்து தூங்கும் பிள்ளைகளின் சாயலில் அவனும் கிடந்தான் கல்புறையில். அவன் ஒருவனே சாம்பல் நிற செனாயுடன் வந்த நாவிதன். அவனிடம் சங்கும் இருந்தது. கரும்புத்தோடத்திலே சஞ்சலத்தில் மறைந்து கொண்டிருப்பவர் மெல்ல கரைந்து சேரும் சாம்பல் மேட்டில் வட்டமான துவாரமுள்ள கல் வீடுகளுக்குள் பம்பையின் வாக்கில் மறையக் கூடும். சாம்பல் வனத்தில் நாவிதன் ஊதிய சங்கிலிருந்து கற்கால அருவங்கள் குமிழ்ந்த ஆழத்தில் பம்பை துக்கம் கொண்டாள். சாம்பல் மேட்டில் அமைதியாக அவள் மயங்கிக் கிடந்ததை நாவிதன் பார்த்தான். இல்லாமல் இருப்பவரோடு பம்பை வாழ விரும்பினாள். சாம்பல் கப்பல் வீடுகளினிடையே புகைவிரித்து நடமாடியது இரவில். அவளுக்குக் கேட்கும் படியான கொள்ளைநோயில் மடிந்தவர்களுக்கு சடங்கு செய்யும் லெவுகா வாசிகள் அவளை கூட்டிப் போனார்கள் மலைக்கு. திரும்பவும் அங்கு தோன்றினாள்.

திரள் திரளாய் வானம் சாம்பல் உதிர்ந்த இரவில் பம்பை வந்து எல்லோரையும் கூட்டிக் கொண்டு கிளம்பினாள். முதுகில் சுமந்த பிள்ளைகளோடு கரிய நிறக் கப்பலில் ஏறினார்கள் கூட்டமாய். சிலரைத்தான் மாலுமிகள் கூட்டி வந்தார்கள். பெரும்பாலான புருஷர்களும் ஸ்திரீகளும் பம்பையின் தடத்தில் பின்னோக்கிப் போய் சாம்பல் வனத்தில் மறையக் கூடும். பம்பை வரப்பு மேல் கூட்டிப் போன மையிருட்டில் உருவம் தெரியவில்லை. ரத்தத்தை உறிஞ்சும் கும்பனிப் படை லாங்டோகாவில் இருந்தது. அவை ரோந்துவர நடு இரவு சரிய வேண்டும். அதற்குள் கப்பலை ஈர்த்த ஆவிகளை பம்பை சாம்பலால் வணங்கினாள். மெல்ல பேசும் கும்பனியார் சந்தேகக் கண்களுக்குள் ஓரமாய் நழுவி வெளியேறினர். அந்த தீவாந்திரத்தில் கிடந்த பூர்வகுடி எலும்பு ஒன்றை காவலுக்கு எடுத்துப் போகிறாள் பம்பை. சிறிய மஞ்சள் பாரித்த எலும்பை கைரேகை அழுந்தப் பிடித்து விட்டு வந்த பனையூரின் ஓலைக் கன்னிமாரின் கண்தாளத்தில் சொருகினாள். அவ்வூரின் பனைகளை நினைத்து சீலை நனைய அழுதாள் மஞ்சணை. எப்படியும் தாயாதிகள் வெப்பக் காட்டில் குடியழிந்து போன வீட்டு மண் புறையில் குயில் விளக்கு கூவிச் சுடரும். அலையுடன் இருள் தத்தளித்துச் சென்ற கடல் கப்பலை ஈர்த்தது. கருமையான தீவுகள் பின் விலகி வெள்ளிநார் போல சூன்யமான பாதை. கடல் வழி ஓலம் சுழன்று வெகுதூர வலிய பயணம் செய்தார்கள்.

தன்னூர் காணும் ஆவலில் பதினேழு பேர் மாலுமிகள் இருந்த அறையில் பதுங்கி அவர்களில் ஏழு ஸ்திரீகளும் இரு புருஷர்களும் எட்டுக் குழந்தைகளும் தீவிலிருந்து கிளம்பியது. பல தீவுகளில் இருந்த தென்னாட்டு அடிமைகள் கரும்புத் தோட்டத்திலே பாலை காணக்கூடும். அவர்கள் போகவும் சங்கன் மரங்களில் மறைந்தான். அடுத்த கப்பலில் அவன் தப்பக்கூடும். வந்த அந்நியர்கள் கூடவே தனுஷ்கோடி வரை சூதுடன் நோக்கிய பார்வை கடலில் கிடந்தது. சந்தேகத்தில் தொடரும் அந்நியர் கண்கள் எப்போதும் அருகில் நழுவிச் செல்லும். இரவிரவாய் கடந்த கடல் வெளி. வயிற்றுப் பிள்ளையோடு உடைந்த குரலில் பாடினாள் கல் இழந்த கம்மல் அணிந்த மஞ்சணை. கைப்பிள்ளை அழும்போதெல்லாம் சூழ்ந்த துயரம் இருட்டும் கரும்புத் தோட்டத்திலே உரசும் தோகையின் வெளிச்சம். பொக்குப் பாறைகளிடையே புடவுகளில் விட்டுவந்த மற்றவர்கள் கிடந்தார்கள்.

உஷ்ணமான நாளில் காற்றில் உப்புத்தாளாய் படபடத்தது தனுஷ்கோடி. அவமானமாகப் பேசிய காவலரிடமிருந்து தப்பிய ஸ்திரீகள் போட் மெயிலுக்காகக் காத்திருக்கிறார்கள். ரயில் வராத நாட்களில் நெடிய அமைதி நிலவியது. தண்டவாளங்களை மூடும் மணல் வாரிக் காற்றில் எல்லாமே மூடிவிடும். இரு புருஷர்களும் கேங்க் கூலிகளுடன் மணல் வாரப் போனார்கள் சில நாள். செம்பட்டைக் கண்களில் ஓடும் ரேகைகளில் கண்டிருந்த தீவுகளின் வெளிபுலர்ந்து கூடவே வரும். மணலில் யாரோ விட்டுச் சென்ற சொற்தொடர் காற்றில் எழுந்து அசைந்தது. அவர்களுக்குப் பரிச்சயமான பாடலாக இருக்கும். அதன் தொனி தாகத்தின் அடியிலிருந்து கரும்புத் தோட்டத்தின் உள்ளிருந்து தேய்ந்தது. ஐங்கிலி மெல்ல படகில் ஏறிவருவதாக அவளுக்குத் தோன்றும். கூடவந்த மஞ்சணை செங்கூந்தலுடன் கடல் உப்பின் வேட்கையுடனிருந்தாள். அவர்களுக்குக் கூடவேதான் ராட்டினக்காரி இருந்தாள். நாடோடி விளக்குகளை கடலில் ஏற்றியது அவள்தான். வேதனைகளின் ஸர்ப்பம் சீறிச் செல்லும் கிளையில் மயில் பீலி எடுத்து அக்கி வந்த சிறுவனை மணலில் படுக்க வைத்து முதுகில் செம்மண் கோலமிட்டு மந்திரித்து அனுப்பினாள் அங்கே. அந்த மயில் பீலி தனுஷ்கோடி மேல் வளைந்து நிறம் பலவான தேசங்களின் முகச் சாயலுடன் அசைந்தது. பீலிக்கண் நோக்க உள்ளே சாற்றுக்காக கரையில் காத்திருந்த வணிகர்கள் கரும்புத் தோட்ட அடிமைகளை இருட் கூட்டமாய் காணக்கூடும். கருத்த லியோனிதாஸ் கப்பல் கொள்ளை வேகத்தில் சாவு வேகத்தில் கப்பல் வேகமாய் போய் பளிங்கில் ஓடியது. அதை ஸ்திரீகள் பார்க்கும்போது கடந்து வந்த தூரங்களில் நடந்த கொடுமையில் கூந்தல் அறுத்து சுற்றி முறுக்கி ரத்தம் பிழிந்த பரங்கிகளின் உடலை நடுக்கடலில் வீசினார்கள். கருத்த காப்பிரிகளின் உதவியுடன் ஸ்திரீகள் கடந்து வந்திருக்கக் கூடும். சர்ப்பம் கிளைவிடும் பாதையில் சீறிச் செல்லும் சாற்றுக் கப்பலில் திரவிய வாசனை. குழந்தைகளுக்குக் குறுக்காக சுரண்டிக் கொடியுடன் கதைவாகில் நரி விருத்தம். தப்பி வந்த பம்பை எடுத்து வைத்த பாதத்தில் நரியின் தடம் ஆவலாய் காத்திருக்கக்கூடும். நரியின் கருப்பையின் வாய்திறந்து பாயும் சொல் கண்ணால் பாராத ஒன்றுதான்.

ஜன்னலுக்கு கீழே உருகும் சொற்களில் துயரம் வீசிய காற்று. கரும்பின் தோகை முளைத்த கைகளின் நிழல் அசையும் ஜன்னலுக்கு அடியில் குவிந்திருக்கும் சருகுகளின் புலம்பல். கசியும் மகளிர் வீசிய கடல் வாசனைமிக்க ஓலைகள் கண்ணுக்குள் வராத கண்ணாடியில் சொற்களஞ்சியம் ரகஸியமாய் விலகிச் சேரும் நிலவு வெளி நகரம். நெடுந்தொலைவு கடக்கும்சொல் உதிரம் பிரசவிப்பவள் ஓலமிடும் அரிச்சல் முனை கர்ப்பக் கருக்கில் கசிகிறது தென் சொல் அலசும் கடல். வாயில் கசியும் கடல்பாசியுடன் பம்பை சிசுவைச்சூடி தனுஷ்கோடிப் பெண்கள் உப்புப் பெட்டிகளில் அள்ளிய வெள்ளி முளைத்த கரும்பின் துயரம். கையிலேந்தி வீசினாள் உப்பு ஏறிய விரல் ரேகையோடும் நகருக்குள் உருகும் சொல் பூட்டிக் கிடக்கிறது. ஆட்கள் அற்ற தெருக்களில் உவர் காற்று. ஈரத்தில் துரு ஏறிய சாற்று நங்கூரம்.

தெரு மூலையில் பின்னே தப்பிவந்த சங்கிலி குள்ள உருவத்துடன் உடல் மேல்பூசிய ஏடுகளை காற்றில் திரும்பி வாஸிக்கிறான். வீடுகளின் தோற்றத்தில் மாறக்கூடிய உறவை தன்னோடு கொண்ட சாம்பல் நகரம். சந்து வழியே தப்பிய நிழல்கள் நாயின் குரைப்பிலிருந்து வெளி வருகின்றன. மெல்ல நடந்து கரையோரம் நீர் வரும் விளிம்பில் முகம் பார்த்து அலைமேல் செல்லும் கரிய நாவாய். குமுறும் மயிலிறகு கண்காட்டிச் செல்லும் திசைவழி நிறங்கள் ஓடும் சாற்று. தொடரும் உருவற்ற நாய் மெல்லிய குரைப்பில் கூடவே வருவதான தனுஷ்கோடி நகரம்.

சாத்துக்காணிகள் போனதெருவில் கடல்பாதைவழியே உப்பங்காற்று வீசியது. முன்னே நிலவு நொறுங்கிய மணல் வெளிச்சம் ஆழ்ந்து எரிந்து கொண்டிருந்தது. பம்பை வந்த சாற்றுக் கப்பலில் இறங்கி வேறு திசையில் நடந்தாள். காலைச் சூரியனின் வியர்வை அவள் மேல் படர்ந்து கவ்விய வெப்பத்தில் சிவந்தாள். நெற்றியின் அடியில் உலர்ந்த காற்று. அரிச்ச முனையில் படிந்த ஆவிகள் கால்களைக் கவ்வி இழுக்க அடுக்கிய மணல் வாய் திறந்த ஓலம். இருகடல் கூடும் முனையில் இருந்து பாதம் படாமல் நடந்து திரியும் சிறுமியின் மணல் முகத்தில் முத்தமிட்டாள் பம்பை. “எங்கிருந்து வருகிறாய் மகளே” சிறுவிழிகளை மெதுவாக மூடிக்கொண்டாள். மறுபடி திறந்து ‘எனக்குத் தெரியாது. வந்த கடல் அதோ போய்க்கொண்டிருக்கிறது. அலைகள் படாத கடலுக்குள் அந்த கரும்புத் தோட்டத்திலே. அங்கே உருமாறிக் கொண்டேயிருக்கும் ஊர். உப்புத்தாளில் படபடக்கும் தீவுகள் இருப்பது உனக்குத் தெரியாதா’ என்றாள். அவள் கண்களில் பதுங்கிய மணியில் கடல் மரகதம் கற்களாய் உருண்டு இலைகளின் தழலுடன் எரிந்து கொண்டிருக்கும்.

ராத்திரி பூராவும் முனகிக் கொண்டிருந்த கடல் கிழவன் சாத்துகாணி படகில் போய் தொலைவில் இருக்கக் கூடும். அந்தக் கிழவன் பேசும் சிப்பிகளை அள்ளித் திரும்பலாம். அதிக தூரத்தில் செல்லும் சாம்பல் கப்பலில் தனித்திருக்கிறாள் பம்பை. மௌத்திகங்கள் சூழ வருகிறான் இரவில். சதா புலம்புவது அவன்தான். நீர் உரு கொண்ட கிழவன் உடல் எங்கும் அலைகளின் நிறம். அவன் மீது பட்சிகள் கால்பதித்த தடம். புல்வளர்த்த முகம். நீந்தும் கண்களின் செம்பட்டை நிறத்தை உடைய சிறுவர்கள் கடலில் இருக்கிறார்கள். அழிவற்ற சிறுவர்களின் நீச்சலில் கடல் ராசிகள் உறவு கொள்ளும். கிட்ட வந்து தொடும் மீன் ஒவ்வொரு ராத்திரியும் பம்பையைக் கண்டது. ‘இப்போது போய்விட்டு பிறகு வா’ என்றாள் பம்பை. மீன் முள் சேகரிக்கும் அவளுக்கு உப்பினால் கட்டப்பட்ட வீடு இருந்தது அங்கே. அருகே செல்லச் செல்ல ரஸநாளங்களில் ஓடும் குழந்தையின் விசித்திரங்கள் கொண்ட சிப்பிகள் அவளிடமிருந்தன. மெல்ல அவற்றை எடுத்து வைத்து நகர்த்தினாள். கோடுகள் சித்திரமாகும் கூடுகளில் ஏறிய காற்று இழையாய் ஓசையிட விசில் பரவும் தனுஷ்கோடியில் இசைவயப்பட்ட கடல் ராசிகளின் மறு உலகம் இருக்கக் கூடும். அங்கே தனிமையில் திரிந்த சிறுமி குனிந்து மீன் முள்ளை எடுத்து பம்பையிடம் கொடுத்தாள்.

வாலில் தினைக்கதிர் ஆடும் அணில் பாலத்தின் வழியாக தனுஷ்கோடி வந்த அகதிகள் போனபின் கூந்தலுடன் வந்த ஸ்திரீகள் ரயிலுக்காகக் காத்திருக்கிறார்கள். தனுஷ்கோடியின் கீழ்புறத்தில் உப்புப் பாளங்களால் கட்டப்பட்ட வெண்ணிற வீடுகள். அவற்றில் சில வெறுமையான இருப்பில் ஈர்த்தன அவர்களை. தெருவின் கோடியில் வேறொரு பாலத்தின் வளைந்த கூடாரங்களில் உலர்ந்த நிழல். குரங்குப் பாலத்துக்கு மறுபுறம் ராமேஸ்வரம் கோபுரம் வெயிலில் அலையும். கடல் கொண்ட சிதைவுகளை யாராலும் மூட முடியவில்லை. தொடுவான விளிம்பில் உறைந்த நீர் புயல் தெறித்த சொற்தொடர்களுடன். கலங்கரை வெண்ணிற உப்புக் கற்களால் விளிம்புகள் வளைந்து சுற்றிவரும் ஒளியில் சாம்பல் தீட்டிய சித்திரங்களை தூரத்திலிருந்தே பார்க்கக் கூடும். தனுஷ்கோடியின் உயரே கடல் சங்கினால் கோபுரம் பதித்தாள் பம்பை. அவள் உள்ளே கடல் உயிர்களின் ஓங்காரம்.

ரயில் நிலையத்தில் இரும்புக் கிராதிகள் கருப்பு நிறத்தில் நிழல் காட்டிய பாதையில் யாரோ நடந்து திரிகிறார்கள் சதாவும். வெப்பம் விழுங்கும் செடிகள் அங்கே முணுமுணுத்தன. அவை கருத்து மூச்சுவிடும் வேளை கீழே எறும்புகள் மணலில் போகின்றன வரிசையில். கொஞ்சம் உரையாடக் கூட செடியிடம் வார்த்தையில்லை. கடலில் ததும்பிய நீர் நீலத்தில் மூழ்கியது. துறைமுக அறைகளில் தங்குவதற்காக பலரும் காத்திருக்கக்கூடும். காவலர்கள் ஸ்திரீகளைத் தொடரும் இரவு. திருப்பி அனுப்புவதற்காண கப்பல் வர சில வாரங்கள் ஆகும். அடுத்து நடப்பதை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என எண்ணினர்ள் பம்பை. ஸ்திரீகள் உப்பு வீடுகளைத் தீண்டக் கூடும். வேப்ப இலைகளைக் கையிலேந்தி வீசினாள் பம்பை. வாயில் கசியும் கடல்பாசி. புயல் எழுப்பிய நுரைகள் இன்னும் மறையவில்லை.

பெருமூச்சு விடும் கடலின் விதிமேல் கோரைப்புல் வளைந்து சோர்வுடன் தலை தொங்க ஏக காலத்தில் வரும் அலையைத் தொட்டது. வளையர்கள் ஸ்திரீகளின் மார்மீது முகம் புதைக்கும் கடந்த ஆவிகள் வீசிய காற்று. சில வேளை நண்டுகள் வரைந்த கோடுகளைத் தொட்ட நீர் ததும்பியது. பம்பை முழங்கைக்கு மேல் இரு கரங்களாலும் துடுப்பு வீசும் வளையன் ஆழ்ந்த கடலில் மறைகிறான். மீன்பாடுகளுக்காக தொலைதூர இரவுகளில் விரிந்த வலை திரும்பும். புரிந்து கொள்ளக் கடினமான காலம் சுழிந்தது அங்கே. எனினும் வந்த ஸ்திரீகள் வளையரோடு காத்திருக்கிறார்கள். ஒரு வேளை போர்பற்றிய செய்திகளுடன் நிராயுதபாணிகள் நீந்தி வருகிறார்கள் கரைக்கு. மீனின் சொல் அவர்களுக்குப் புரிந்தது.

தனக்குள் சொற்களைச் சிதறும் மீனின் பித்த நிலையில் அலைந்தாள் பம்பை. மீன் முள்ளை சேகரிக்கும் அவள் வீடு வரை செல்ல விரும்பினார்கள் ஸ்திரீகள். அங்கே சுறா முள்ளுடன் கூடிய இருப்பிடம். உடைந்த மரத் தோணிகளில் வடிவமைத்த அவர்கள் சாற்று வீடு. தென் பிரதேசவாசிகள் எங்கு திரும்பக் கூடும். அரக்குக் கண்கள்

குழம்பியிருந்தன. அவர்களில் இரு புருஷர்கள் கடலுக்குப் போகிறார்கள். மீன் உலகம் தீராமல் இருந்தது. நெற்றியை சுருக்கி கண்களை இடுக்கியவாறு வெயிலில் போகிறார்கள். சிறு பறவையின் சப்தத்தில் நடுங்கிய தனுஷ்கோடி புயலுக்குப்பின் குழந்தையின் சுபாவத்தை அடைந்திருக்கும். அதன் மணல் வீடுகள் இடிந்து திரும்பவும் நண்டுகளின் கீறலில் நீர் ஏறிய தெருவெங்கும் காலடிகள். சிறுமி ஒருத்தி ஸ்டேசனைக் கடந்து மறைகிறாள் பாடியவாறு. அது மஞ்சணையை ஈர்த்தது. நடைபாதையில் பரவியிருந்த கருங்கற் பலகைகள் மீது அவள் கால்பட்டதும் வெப்பமாக இருந்தது. மணல் தெருவுக்குள் கடந்து கொண்டிருந்த வீடுகளின் கதவில் நின்று மனிதரைக் கூவினாள். அவர்கள் யாரும் வருவதாக இல்லை. வெறுமையான சந்துகளில் மறைந்திருந்தவர்களின் குரல் சுழன்றது. பம்பை சிறுமியுடன் வெளியேறினாள். தூக்கத்தில் ஏதோ முனகினாள். அவளை ஒரு கையால் அணைத்தவாறு சந்துகளில் கேட்ட ஓசையிடம் பதுங்கிய கடலைப் பார்த்தாள். நகரம் வெறிச்சோடி இருண்டு கிடந்தது. முடிவற்ற மணல் பரப்பில் நடந்தாள். அப்பால் இருந்த கடலில் ஆழ்ந்த மௌனம் அவள் மனதைத் தொட்டு ஏதோ சொல்லக் கூடும். திரும்பினால் கண்ணுக்கு அப்பாலிருந்த நீலத்தில் மெல்ல அசையும் கரும்புத் தோட்டத்தின் முணுமுணுப்பு.

தனுஷ்கோடியில் வீடுகள் பாழில் வெள்ளையாகி உப்புத்தாளாய் காய்ந்து சடசடத்து அசைந்தது. உலர்ந்த தெருக்களிலிருந்த உருவங்கள் அவளை அழைத்தன. கிட்டப்போனால் இருட்டின் தொடு உணர்வில் மறைந்து கொள்ளும் நகரம். வெளியுருக் கொண்ட வெளிச்சத்தை கரைத்து அதில் மூச்சுவிட்டு நின்றாள். மணல் நகர்வில் விழித்துக் கொண்ட சிறுமி 'அம்மா என்னைக் கீழே விடு' என்றாள். குளிர்ந்த காற்றில் அவளை மணலில் கிடத்தினாள். உடல் கொதித்தது. சேலையில் வெப்பம் பரவி அவளை பயமுறுத்தியது. ரயில் நிலையத்தில் கிடந்த வெறுமையான பெஞ்சுகளில் வாதையில் சில உருவங்கள் நிற்பதும் நடப்பதுமாக தனிமையை நீளச் செய்யும் பிளாட்பாரத் தூணில் சாய்ந்திருக்கும் திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள். அங்கே தனியாக அமர்ந்திருந்த அசைவற்ற ஒரு உருவம் அவளைத் திரும்பிப் பார்த்தது. யாராக இருக்குமென்று தெரியவில்லை. இவ்வளவான சத்தத்துடன் மணலை உருட்டிச் செல்லும் காற்று. வெள்ளையான தரையில் எல்லா இலைகளும் பழுத்து உதிர்ந்து கொப்புகளில் சூன்யத்தின் குச்சிகள் ஒளிர்கின்றன. அவற்றில் அசையாத சில பறவைகளில் இரவு பதுங்கியிருக்கும். குழந்தையுடன் தனித்து ஒதுங்கி வேறு பெஞ்சியில் அமர்ந்தாள். ஸ்டேஷன் விளக்குகளில் மஞ்சள் கசியும் இருட்டு வாடியிருந்தது.

'எங்கே உலவிக் கொண்டிருக்கிறோம் அம்மா' என்றாள் சிறுமி. 'ஆம்...... கடந்து வந்த ஊரை இன்னுடம் நாம் கடந்து கொண்டிருக்கிறோம்' 'கால் வலிக்கிறதே அம்மா' 'நிழல் அற்ற தூரம் வரை மரங்களின் சாயல். கொஞ்சம் பொறுத்துக்கொள் செல்லமே. தனுஷ்கோடி நம்மை மறைக்கக்கூடும்' என்றாள் பம்பை..

இரு வாயில்கள் கொண்ட தனுஷ்கோடி முற்றம் ஒன்றினுள் புகுந்து அவர்கள் வேறொரு தெருவை அடைந்தார்கள். அங்கே ராமேஸ்வரத்திலிருந்து வரும் வெளுத்த ரயில். வெண்நீலக் கடலுக்குள் அரக்கு ரயில் கரி எஞ்சின் புகைமூட்டத்துடன் வெளிப்பட்டது. பயணிகளற்ற இருக்கைகளில் வெறுமை கொண்ட ஒளி நீல நிறத்திலிருந்த கடல் கோடில் சிலர் இறங்கிப் போகிறார்கள். தெருவில் ஆள் நடமாட்டம் தொடங்கியிருந்தது. குதிரை வண்டி ஒன்று தூக்கத்துடன் சுமை நிறைந்த அந்நியனை இழுத்துச் செல்லும் கடல் வீதி.

ஸ்திரீகள் பாம்பன் பாலத்தில் குறுக்கே நுழைந்த கப்பலில் வந்ததாக நீந்தும் வளையர்கள் சொன்னார்கள். மீன் அவளை இருளில் தொடக் கூடும். விழிகளைச் சுழற்றி வந்த மீனில் தீவின் வரைபடம். கடல் நாய்கள் அவளைத் துரத்திக் கொண்டிருந்தன விடாமல். அவற்றின் வாயைக் கட்டி விட்டிருந்தாள். குரைப்பதை நிறுத்தியிருந்த நாய்களைக் கூட்டிக் கொண்டு அரிச்ச முனையில் நடக்கக் கூடும். கடலின் ஓலம் கூடியவேளை கட்டவிழ்ந்த நாயின் ஊளை நீருக்குள் சுழல்கிறது. மெல்லிய இழைகளாகப் பிரியும் நாயின் ஓசையில் துக்கமடைந்த புட்கள் உறக்கத்திலிருந்து விழித்து கடல்விளிம்பைத் தொட்டு தனுஷ்கோடியில் மறையுழ். மணலின் மேல் பரப்பில் உறைந்திருந்த மீன் எலும்பு மெல்ல கரைகிற ஓசை. மூடிய இருப்புப்பாதை மிக அருகில் மணல் குன்றின் மறுபக்கம் தான் இருந்தது. சக்கரங்கள் உரசி மணல் நெறியும் ஒலி மிகத் தெளிவாகக் கேட்டது. சதுக்க பூதத்தின் இரு கைகளாகத் தூக்கும் பாம்பன் பாலம். அதன் துளையில் கப்பலிலிருந்து வெளிப்பட்டாள் பம்பை. அரக்கனின் கைகளை மெல்ல மூடிக்கொண்டிருக்கும் பாம்பன் பாலம் கிடுகிடுத்தது. மணல் மேடு சரிந்து பாதைகளை மூடும் காற்று. உப்பு நீர் ஓடைகளைக் கடந்து ஸ்திரீகள் உப்பு மிதிக்கப் போயினர் கூலிக்கு.

ஆயினும் பாதங்கள் பதித்த மணல் வெண்மையில் கரும்பனைகளின் நிழல் ஊர்ந்தது. மணலிலிருந்து விண்ணுக்கு ஏறும் சாம்பல் அமைதியில் ஆழ்ந்த திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகளின் தனிமை. சூரியனைக் கடந்து ரயில் வரும் திசையில் கலைக்க முடியாத தோற்றங் கொண்ட நகரம் மெல்ல அழியும் அரவம் கேட்டது. கருங்கரைகள் படிந்த இருட்டில் போன ரயில் எப்போது வரக்கூடும். நடு நடுவே பார்வை செலுத்தியவாறு அந்தச் சிறுமி காணாமல்போன ரயிலுக்காகக் காத்திருந்தாள். மரப்பிடிகள் கொண்ட ரயில் பெட்டியில் அவளைப் பார்த்தார்கள். மணல் ஏறி இருளடைந்த வீடுகளுக்கிடையே திரளாக எழுந்த நீரில் அவள் வெளியே செல்ல வேண்டியதாயிற்று. சிறுமியின் கையைப் பிடித்துக் கொண்டாள். இருவரும் நீருடல் கொண்டு வெளியேறினார்கள். தனுஷ்கோடியில் இருட்டு. அகதிகள் வந்த லாஞ்சியை சூழ்ந்து விளக்குடன் வரும் காவலர்கள். தெருவழியே நடந்தார்கள். காவலரிடமிருந்து அவள் தப்பவேண்டும். தூங்கி வழியும் சிறுமியை தூக்கிக் கொண்டு ஓடினாள் பம்பை. எங்கும் வெறுமை கொண்ட தெருக்களில் இல்லாதவர்கள் இருப்பதில் என்ன நடமாட்டம் நிழலாடுகிறது. சூன்யத்தில் அடர்ந்து செல்லும் சாயைகள். வேறு யாருமில்லை. மணல் மீது கோடு வரையும் நட்சத்திரங்களில் சற்றே இடைவெளிகளில் இருக்கிறது காலம். கண்ணாடி இலைகளில் சுருண்ட கடல் பார்த்தது அவளை. தெரு ஓரங்களில் நீர் வடிந்த வடுக்களில் சாயல் கொள்ளும் சூன்யத்திலிருந்து உருவங்கள் அசைந்து வீடுகளுக்குள் பதுங்குகின்றன. வெறிச்சோடிய தனுஷ்கோடி இருளில் ஒரு வீட்டின் கதவு திறந்தது. வாயிலருகே கடல்பசுவின் செதில்கள் பளிச்சிடும். அங்கே வேசை ஒருத்தி தனியே வசிக்கிறாள். கிழிந்த வலைகள் மூடி பின்னலிடப்பட்ட வலைக்குள் மீனுருக்கொண்ட பச்சை நிறமான வேசை அவள் கடலில் போகக்கூடும். மோகப்புயல் வீசும் கடல் அவளை ஈர்க்கிறது. மண்மேடுகளில் மாறிக் கொண்டே இருக்கும் இருப்பில் சிரிக்கிறாள்.

சிறுமியின் தோள் மீது வைத்த அவள் விரல் மீன் கண்களுடன் இருந்தன. வாடியிருந்தும் உயிருடன் ஸ்பரிசிக்கும் விரல்களில் கடலின் பிரவாகம் செல்லக்கூடும். அவள் மீன் ரத்தத்துடன் உரையாடிக் கொண்டிருந்தாள். சிறுமியை எழுப்புவதற்கு உப்பு விரல்களால் அவள் கழுத்தில் துவளும் கேசத்தை தழுவியது காற்று.

கேசத்தின் மணமும் நீல மீனின் வார்த்தையும் கொண்ட சிறுமியை, 'தூங்காதே கண்ணே' என்றாள் பம்பை. 'களைப்பாக இருக்கிறதம்மா. இந்த மீன் உலர்வதற்குள் என்னை கடலில் விடு அம்மா' என்றாள் சிறுமி. மீனை ஒரு கையால் அணைத்தவாறு மற்றொரு கையில் பம்பை முகத்தில் ஓடும் உணர்வுகளைத் தொட்டு நகர்த்தினாள். மணலில் ஓடும் அச்சத்தில் படகுகளுக்கிடையே அகதிகள் எட்டிப்பார்த்தார்கள். அவர்களிடம் எந்த தஸ்தாவேஜும் இல்லை. காவலர்கள் விளக்கு நகர்கிறது தரையில். சீற்றத்துடன் வந்த கப்பல் தொலைவே நிற்கிறது. அதிலிருந்து மயிலிறகின் நிறங்களைக் கொண்டு யாரோஅழைக்கிறார்கள். திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள் முதுகில் பிள்ளைகளை சுமந்து கொண்டு போனார்கள் கப்பலுக்கு. தனுஷ்கோடியின் இருண்ட ஊற்றுகளில் பொங்கிய உணர்வுகளைத் தேடி வந்தவர்கள் திரும்பக் கூடும். கடலின் முடிவில் நீலத்தில் மூழ்கிய அவர்களின் இருப்பிடம். அதுவரை மணலில் நடப்பவர்களாயினர் காவலர்களிடமிருந்து தப்பி. சிறுமியின் முகத்தில் கரும்புருவங்கள் வசீகரமாயிருப்பதால் அவளை திரும்பத் திரும்ப கூப்பிட்டாள் பம்பை. மீன் உதடுகளால் துப்பிய நீரில் பாசி உதிர்ந்தது. எப்போதும் நீரை அசைபோட்டாள் மீனுடன். உலர்ந்த மீனுடல் கொண்ட சாம்பல் ஸ்திரீகள் இருகடல் தொடும்போது நகரில் அலைந்து திரிந்தார்கள்.

சாவைக் குறித்த வசீகரம் மணல் ஏறிய மேடுகளில் சூன்ய விளிம்பில் அசைந்தது. சுற்றி அலைந்தாள் பம்பை. கால்களை நிறுத்த முடியவில்லை அவளால். கரை ஏற முடியாது இனி, பதைப்புடன் கால்கள் தப்பிச் சென்ற மணல் மேடுகளுக்கிடையே மெல்லக் கரைகிறாள் தன்னைத் தொலைத்துக் கொள்ள. ரத்தமேறிய முகத்தில் கருமையோடிய அச்சம். தூக்க மயக்கத்தில் முதுகில் சுமையுடன் வந்த பிள்ளைகளின் நிழல் அவளைத் தொட்டது. காவலரின் விசில் அருகே கேட்கிறது. வாயில் பக்கம் தள்ளிய கதவுக்குள் சேர்ந்து வெளியேறினாள். குதிரை லாடம் அணிந்த காவலன் மிதித்த விரல்களில் ரத்தம் சுவறிற்று. மணல் ஏறிய ரத்தம் உதிர்ந்த துகளை திரும்பிப் பார்த்தாள். முதிர்ந்த மீன்காரி கூடையுடன் கதவுப்பக்கம் அமர்ந்திருந்தாள். கைகள் நடுங்கின அவளுக்கு 'எங்கே போகிறாய்' என்றாள் மீன்காரி. காதில் படாதது போல திரும்பினாள் பம்பை. அவளுக்குத் தெரிந்தவர்கள் என்று யாருமில்லாதபோது தெரியாதவர்களிடம் தனியாளாய் இருந்தாள். விழிகளைச் சுவரில் பதித்து திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள் தொடர்கிறார்கள் அவளை. அடையாளம் தெரியாத மணல் தடங்கள் வைத்து கடலோரம் போகிறாள். கூடவே நரும் நண்டுகளின் கோடு நிறுத்தியது அவளை. தெரிந்த லிபியாக இருக்கும். குழந்தையின் சிறுவிரல்கள் பதிந்திருந்தது நீர் ஓரம். அடுத்த எட்டில் கடல். உள்ளே சிறுமி இருக்கக்கூடும். வெம்மையான கடல் பரப்பில் தனிமையில் என்ன செய்து கொண்டிருக்கிறாள். கிட்டப் போனால் எட்டத்தில் அவள் கால் பதிவு பறவையுடன் விரல் பட்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அலையின் பக்கம் நெருங்கி அரிச்ச முனை நோக்கி ஈர்க்கும் நீரின் மாயத்தை அவள் நெருங்கிக் கொண்டிருந்தாள். கூடவே வரும் சிறுமியின் கால் தடம். ஆங்காரம் சுழன்று நுரை ஏறும் துக்கத்தில் மனித அலறல். சாம்பல் நிறக் கப்பல் குறுக்கே பாம்பனைக் கடக்கும் வேளை அதிசயம் பற்றிக் கொள்ளும். அந்தப் பாலத்தைக் கடக்கும் எல்லோரும் புராதன நீருக்குள் பயணமாகக் கூடும். செங்குத்தான கிராதிகளில் ஓடும் அதிர்வு கூடவே வரும் விதியின் ஓசை.

புள்ளி உடைய சுறா எலும்பில் மீன் கதை தனிமையில் ஊர்ந்து ஒளி தோயும் நீருடன் தூங்கும் படகில் கொடிய வேதனையாகச் சூழ்கிறது. பாலத்தின் மறுமுனையிலிருந்து தன்னந்தனியாக அலையும் திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகள் வரைந்த தீவு. அவர்கள் தலை எப்போதும் செம்பட்டையும் உப்பின் கோரை நிறத்திலும் கடல் நெடித்தது. ஏனோ மணல் மேடுகளில் கப்பலை மூடிய கடல்கோளின் அடையாளம் இருந்தது. பதினாறு தீவுக்கூட்டத்தில் இந்தப் பகுதிக்குள் நுழைவது கால்களுக்கு ஏதோ புலப்பட்டிருக்க வேண்டும். மணலைத் தேய்த்து நுகர்ந்தார்கள் ஸ்திரீகள், அரிச்ச முனையில் ஓடும் சாவின் வசீகர ஈர்ப்பைப் பற்றி கனவு கண்டாள். அங்கே சென்று மெல்ல நகரக் கவ்வும் மீனவர் ஆவிகள் நீருக்குள் இழுத்தது அவர்களை.

கடல் கூடி அரிக்கும் மணல் வடிவில் அமைந்த தனுஷ்கோடியில் குடியேறி அழிந்து மீண்டும் திரள் திரளாய் மீன் பார்த்து மறைகிறார்கள் பளிங்கில். ஓடிவந்தவர்களின் பெரிய பாதங்களில் கீறியிருந்த மீன் ஒன்று நீந்தியது. உப்பினால் உலர்ந்து சரியும் வீடுகள் மெல்ல உதிர காற்றில் ஊர்ந்து அரிக்கும் கடைசி முனை. மணல் குமிழில் தளிர்க்கும் உயிர்களின் வடிவம் மாறிக்கொண்டிருந்தது. இரவு நேரத்தில் இரு கடலின் புணர்பாகம் சிருஷ்டியின் ஸ்தூல அழிவு. கூம்பு மணல் ஏற்றம். ஊசிக் கூடுகளில் பதுங்கி குழி உடலிகளாகிய ஸ்திரீகள் கருவில் கோடு நடுங்கும் ஒரு மணல் தனிமைதான் தனுஷ்கோடி.

திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகளின் சாட்சியிட்ட ஒப்பந்த ஓலைமுறி கடலில் மிதக்கிறது. இவ்வேளை பாம்பனின் கூர்ந்த சிதைவுகள் இன்னும் தொலைவு வரை நீளும். சாம்பல் நிறக் கப்பல் குறுக்கே பாம்பனைக் கடக்கும் வேளை கரும்புடன் வந்த அர்காதிஸிகள் ரயிலில் கொண்டுபோன மணலில் ஸ்திரீகள் கீறிய சங்கதி மெல்ல அழிய வெளியேறுகிறார்கள். மணலின் மேற்பரப்பில் வெண்ணிறப் பயணம் சலனமடையும். சாற்று ஓசை அதில் மடிக்கப்பட்ட மணலைக் கடந்து போன திறந்த விழிகளோடு தூங்கும் ஸ்திரீகளின் இடது பெருவிரலில் கருமை பூசி உப்புத் தாளில் பதிவு செய்து முத்திரையிட்டான் விதேச அதிகாரி. கொலம்பர்களும் சர்தாரி ஆவிகளாய் அலையும் கொள்ளைநோய் கப்பல் இருட்டிக்கொண்டிருந்தது கடல்முனையில். லியோனிதாஸ் நுரையீரலில் நீராவி புகை மண்டிய தனுஷ்கோடி மேடுகளுக்கு மிக அருகில் மூடிய இருப்புப் பாதையை வெளிவிடும் காற்றின் ஓசையுடன் ரயில் சக்கரங்கள் உரசி மணல் நெறியும் ஒலி மிகத் தெளிவாகக் கேட்டது.

'கரும்புத் தோட்டத்திலே' பாரதிக்கும்
அதிலிருந்த 'துன்பக் கேணியில்'
இன்று தவிக்கும் புதுமைப் பித்தனுக்கும்

தேவதச்சன் கவிதைகள்

நாளை
வந்து விடுவாள்
ஒழுங்கற்று இருக்கிறது என் அறை
தலைவாரி, நான், திருத்தமாய் இருந்தால்
மகிழ்வாள்
எதையும் தொலைக்காமல் இருந்தாலும்
நிறைய ஆடைகள், கால்குலேட்டர்,
கண்ணாடி உட்பட
எங்கேதான் போகிறதோ, தெரியவில்லை
நாளை வந்து விடுவாள்
லட்டர் போட வில்லை
தொலை பேசியில் பேசவில்லை
விடுதித் தோழிகளின்
வீடு விபரம் ஏன்தெரியவில்லை,
எரிச்சலடைவாள்
நாளை அம்மா வந்துவிடுவாள்
அசதியோடு
கசங்கிய சேலையோடு
முதுமை உண்ணும் முகத்தோடு
சிறுபருவத்தில்
வீட்டில் நான் விட்டுவந்த
பட்டுப்பூச்சியின்
முதுகில் ஏறி.

மழைத்துளி போல் தெருவில் நுழைகிறேன்
தெருவில் ரெண்டு பக்கமும் வீடுகள்
கண்கள் மட்டும் கேட்கும் நிசப்தம்.
தெருவில் இரு பக்கமும் வீடுகள்
மழைத்துளிக்குள், ஆழ
மூழ்கிய படி.......
மழைத்துளியை உறிஞ்சியபடி
முன்னும் பின்னும்
எண்ணிறந்த நூற்றாண்டு
கறைந்தபின்னும் -
இப்பொழுதுதான் உலகிற்கு
வந்தவளின், இடது
உடலில் -
நனையாமலும் அணையாமலும்
எரிந்து கொண்டிருக்கிறது
பொய்க்கோல் தீ

ஓவியர்களுடன் ஒரு உரையாடல்.



திருநாராயணன்

ஓவியத்தில் எல்லையில்லா பகுத்தறிவின்பாற்படாமை (Irrationality) சாத்தியம்தான். அதுவே அதன் ஆதாரசுருதியும் கூட என்று முன்வைக்கும் ஓவியர் திருநாராயணன் அடிப்படையில் பொறியியலாளர். மத்திய அரசுப் பணியை துறந்துவிட்டு தன் கூட்டிற்குள் வண்ணங்கள் குறித்த ஆய்வு சார்ந்த ஓவியப் பரிசோதனைகளில் ஈடுபட்டிருக்கும் இவர் தன் ஓவியங்களை காட்சிக்கூடங்களுக்கு அனுப்பும் / காட்சியாக வைக்கும் எண்ணமற்றவராகவே இருக்கிறார். நவீன Synthetic வண்ணங்களின் எல்லையற்ற சாத்தியங்களை ஏற்றுக்கொள்ளும் இவர் நேற்றைய பச்சிலைச் சாறுகளின் பச்சைகள், செம்மண்ணில் ஒளிந்திருந்து விகசித்த சிலிக்கான்களின் இழப்பு ஆகியன குறித்த அக்கறை கொண்டவராகவே இருக்கிறார்.

பாபு: வண்ண வரையறை என்பது ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் ஒவ்வொன்றாக இருக்கிறது. நம் வசதிக்காக சுருக்கிச் சொல்வதானால், நம் கலாச்சாரத்தில் கருப்புக்கு ஒரு குணம் வெள்ளைக்கு ஒரு குணம் என்பது போன்ற விஷயம் வைக்கப்படுகிறது. இப்ப பள்ளிக்கூடங்களில் ஒரு வண்ண வரையறை இருக்கிறது. மலைகளுக்கு பிரவுன், கடலுக்கு நீலம் அப்படியென்று. - அந்த நீலம் என்பது அவர்கள் கொடுக்கும் நீலத்திற்கு ஒத்தே இருக்கவில்லை என்று வைத்துக் கொண்டாலும் அது ஒரு குறியீட்டளவிலான கலர் மாதிரி இருக்கிறது. இப்படி ஒரு வண்ண வரையறை இருக்க, அதில் ஓவியனுக்கு ஒரு தனித்துவமான வண்ண வரையறை வருகிறதே அது எப்படி? இந்தக் கலாச்சாரத்துடன் சேர்ந்து செய்யவேண்டுமா? அல்லது வான்கோ மாதிரி மீறுவதுதான் சரியா? மஞ்சள் என்பது அவர்களுடைய வெப்பமண்டல வண்ண வரையறை இல்லாத போது ஏன் அப்படி ஒரு அதிர்வான மஞ்சள் வைக்கிறார். இதெல்லாம் வண்ண வரையறையில் எப்படி வருகிறது என்பது பற்றிப் பேசுவோம்.

திரு: நீங்கள் படைப்பில் ஈடுபடும்போது நம் கலாச்சாரம் போன்ற எவற்றிலும் உங்களை ஆட்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. முழுமையாக ஆழ்ந்து செய்யப்படும் போது எந்த அளவிலான பகுத்தறிவின்பாற் படாமையும் அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான். அதாவது இருக்கும் வரையறைகளை ஒத்துப் பார்க்கும் போது அதை பகுத்தறிவின்பாற் படாமை என்கிறோம்.

பாபு: எப்படி வான்கோவுக்கு அதை மீற வேண்டும் என்ற உந்துதல் வந்தது?

திரு: பலவும் அதை நிர்ணயம் செய்கிறது. குறிப்பாக தனிமனித வாழ்க்கை அப்படியான ஒன்றாக இருக்கிறது. லியனார்டோ டாவின்சிக்கு அவனது பிறப்பு பிரச்சினையான ஒன்றாக இருந்தது. இப்படி நிறைய ஓவியர்களுக்கு ஆகியுள்ளது. வான்கோவின் ஓவியங்களில் ஒருவிதமான இருண்டதன்மை உள்ளது. அது அவனுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் பிரதிபலிப்பாக இருந்தது. நமக்கு அது Cosmic ஆகப் படும்பொழுது அவன் துடித்தான் சோகத்தில். நமக்கு அந்த பயங்கர அமைதி ரசனைக்குரியதாக இருக்கிறது. அவனது துடிப்பைத் தாங்க முடியாமல் படைக்கும்போது அவனால் படைப்பினுள் அமைதியை வெளிப்படுத்த முடிந்தது. அவனுடைய கலாச்சாரம் மீறிய வண்ணம் குறித்து இப்படித்தான் கூற வேண்டியதிருக்கிறது. நமது கலாச்சாரத்தில் விவசாயக்குடும்பங்களில், பிறந்ததிலிருந்து இறக்கும் வரை, முன் அனுமானிக்கப்பட்டபடியே வாழ்க்கை அமைந்திருந்தது. அப்படிப் பலநூறு வருடங்கள் வந்தால்தான் அந்த சலனமின்மையிலிருந்து சிற்பிகளும், ஓவியர்களும் உருவாவார்கள். அதாவது ஒரு கிறிஸ்து உருவாவதற்கு முன்னால் இருபத்தியொரு பிறவிகளில் அதற்கான உருவாக்கச் செயல்பாடு நிகழ்கிறதாம். அந்தச் சந்ததியின் பெற்றோர் கொஞ்சம் கொஞ்சமாக உயர் நிலைக்குப் போய் கடைசியில்தான் கிறிஸ்து உருவாக்கம் நிகழ்ந்ததாம். அதே மாதிரி மாமல்லபுரத்தை ஒரு சிற்பி உருவாக்குகிறான் என்றால் அவனுடைய மூதாதையர்கள் பத்துப்பதினைந்து தலைமுறைகள், அந்த சமூகத்தில் எந்த ஒரு சலனமுமில்லாமல் ஒரே மாதிரியாக வாழ்ந்திருக்க வேண்டும். சலனம் வந்தால் அதற்கான வெளிப்பாட்டைத் தேடுமல்லவா? இந்தப்போக்கு எப்போது உடைகிறது என்றால் தொழில்புரட்சிக்குப் பின்னால்தான். அதன்பின் வாழ்க்கை முறை முன் அனுமானிக்கவியலாததாக மாறிவிட்டது. அதற்கு முன் தச்சனாகப் பிறந்தவன் தச்சனாகவே இறப்பான். அரசனாகப் பிறந்தவனுக்கும் அதேவிதம்தான். வாழ்க்கை கிட்டத்தட்ட அனுமானிக்க முடிந்த ஒன்றாக, அமைதியானதாக இருந்தது. ஒரு போர் வீரனுக்குக் கூட இந்த அமைதி இருந்தது. இன்றைக்கு ஒரு பட்டாளத்துக்காரன் ஊருக்குத் திரும்பி ஒரு தொழில் ஆரம்பித்து அமைதி காணலாம் என்று எண்ணும்போதே அங்கு அமைதியின்மை வந்துவிடுகிறது. எல்லாம் இயந்திரங்கள் என்று வந்ததல்லவா? அதுதான் ஆரம்பம். அதுதான் வான்கோவின் காலம். அதற்கு முன்பும் சலனங்கள் இருந்ததென்றால் அவை தனிமனித சோகங்களின்பாற் பட்டவை. திடீரென மனைவியின் இறப்பு, குழந்தையின் மரணம், இந்த மாதிரியான அனுபவங்கள் சார்ந்தது. Rubens க்கு இது நேர்ந்தது. Titian க்கும் இது நடந்தது. Rembrandt க்குகோ வறுமை. பயங்கரமான வறுமை.



பாபு:

நவீன ஓவிய அரங்கில் நன்கு அறியப்பட்ட இளைஞரான இவர் வண்ணங்கள் மற்றும் இருபொருட்களின் சாத்தியங்களைத் தொடர்ந்து பரீட்சித்து வருபவராகவே இருக்கிறார். தவிரவும் பின்னைய நவீனத்துவ கருத்தியலின் பாற்பட்டுதான் செயல்படும் ஓவிய வெளியிலும் 'தளை விடுப்பு' க்கான குரலையும், ஓவியங்களையும் பதிவு செய்த வண்ணமிருக்கிறார்.

கேள்வி: இந்த வண்ணங்களின் உறவு குறித்து ஒரு சந்தேகம் ஒவ்வொரு காலத்திற்கும் ஒரு வண்ணத் தேர்வு இருந்திருக்கும். சமண முனிவர்களின் ஓவியங்கள் மூலிகைகள் போன்ற இயற்கை வண்ணங்கள். உங்கள் முன் இப்போது தேர்வுக்காக பலதரப்பட்ட வண்ணங்கள் உள்ளன. இவ்வாறு கைவரப்பெறும் வண்ணங்களே அவற்றுக்கான வரையறைகளைத் தீர்மானிக்குமா?

திரு: ஆமாம். அது ஒரு முக்கியமான காரணிதான்.

கேள்வி: இவன் ஒரு ஸ்கூலில் தன்னை அடைத்துக் கொள்கிறான். அதாவது அரூப பள்ளி, செவ்வியல் மரபுபள்ளி, அல்லது பின்னைய நவீனத்துவம் என்பது போன்றவைகளில், இது போல ஒரு சிந்தனைமுறைக்கு ஆட்பட்டுவிட்டால் ஒரு நூறு சிறைவந்து விடுகிறது. விளைவாக அந்த ஸ்கூல் உங்களது வண்ணத்தேர்வையும் நிர்ணயிக்கிறது.

திரு: நீங்கள் சொல்வது ரொம்ப சரி. வான்கோ பயன்படுத்திய Chrome Yellow, Titian, Rembrandt போடும்போது இல்லை. அப்ப Lead Tin Yellow தான் இருந்தது. மஞ்சள் காவி இருந்தது. அதில்கூட கொஞ்சம் வெள்ளை கலந்து கொண்டார்கள். அந்த கலர் ரொம்ப இனிமையாக இருந்தது. உலகம் முழுவதும் அதுதான். Vermilion Red இல்லை. Vermilion Red-ஐக் கண்டுபிடித்து விட்டார்கள் 14-ம் நூற்றாண்டில். ஆனால் அதிகம் பயன்படுத்தவில்லை. சிவப்பு காவிதான் பயன்படுத்தினார்கள். அது கண்களுக்கு குளுமையாக இருந்தது. 18ம் நூற்றாண்டின் கண்டுபிடிப்பான வேதிப்பொருட்களின் வரவு பெரிதும் பாதித்தது.

பாபு: மறுமலர்ச்சி கால ஓவியங்களில் Ultra Marine Blue எல்லோருமே பயன்படுத்தியிருக்கிறார்கள். உண்மையில் அந்த நீலம் என்னவென்றால், ஆப்கானிஸ்தானத்திலிருந்து நிறமிகளைக் (Pigment) கொண்டு வந்து அவற்றை அரைத்துப் பயன்படுத்தினார்கள்.

திரு: நம்மது சாயங்கள்தான். குகைஓவியங்களில் இருக்கிறதல்லவா. அதாவது அஜந்தா, எல்லோரா போன்றவற்றில் உள்ள நீலம் பச்சிலைதான். பச்சிலை சுண்ணாம்புப் பவுடருடன் சேர்த்துப் பிழிந்தால் அது நீலமாகி விடுகிறது. அதை அப்படியே பயன்படுத்தியிருக்கிறார்கள். அல்லது அந்தத் தண்ணீரை சுதையில் போடும்போது அது பச்சையாகத் தெரிகிறது.

பாபு: அதுதான் ஒளி ஊடுருவாத்தன்மை கூட கம்மியாக இருக்கிறது.

திரு: ஆமாம். அதற்கு முன்னால், கருப்பையும், வெள்ளையையும் கலந்தால் ஒரு நீலம் கிடைத்தது. அந்த நீலம் தான் Ultra Marine Blue வருவதற்குமுன் பயன்படுத்தினார்கள்.

கேள்வி: உங்கள் சொந்த அனுபவங்கள் பற்றி; வண்ணங்களுக்கும் உங்களுக்குமான உறவுநிலை குறித்து; நீங்கள் அந்த சிறைக்குள் இருக்கிறீர்களா இல்லையா என்பது பற்றி.

திரு: ஒவ்வொருவருக்கும் ஒரு சிறைக்குள் இருந்தால் அமைதியாகத்தான் இருக்கும். அந்த கருத்தில் பார்த்தால் எனக்கு Classic - களுக்குள்தான் அமைதிகிடைக்கிறது. அந்த பிரவுன், அந்த மஞ்சள், அதாவது அந்த மந்தமான வண்ணங்கள் அதில்தான் அமைதி. பிச்சைக்காரன் என்றால் அவன் ஓங்காரமாகக் கத்துவதை இப்பவுள்ள ஓவியன் போடுகிறான். அந்த காலத்தில் பிச்சைக்காரன் அரையிருட்டில் இருக்கிறான். எனக்கு அதுதான் பிடித்திருக்கிறது. இப்படிப் போட்டால் என்னைப் பாதிக்கிறது. ஆனால் நவீன ஓவியங்கள் எனும்போது நான் இவைகளைப் பயன்படுத்துகிறேன். உள்ளடக்கமும் வெளிப்பாட்டு முறையும் மாறுகிறது. ஆனால் அதைப் பயன்படுத்தும் போதும் மிகவும் பளீரென்று இல்லாமல் பார்த்துக் கொள்கிறேன். 18-ம் நூற்றாண்டின் இம்பிரஷனிஸ்ட் ஓவியர்களுக்கு இருந்தது மாதிரியான வண்ணங்கள் குறித்த அறிதல் நமது ஓவியர்களுக்கு இன்னும் இல்லை என்றுதான் சொல்வேன். அந்தக் காலத்தில் இம்பிரஷனிஸ்ட் ஓவியங்கள் எளிதாகப் போட்ட மாதிரி தெரிகிறது. ஆனால் உண்மையில் பத்து தடவை அழித்து அழித்துப் போட்டார்களாம். ஒரு ஓவியத்தில் வெள்ளை எவ்வளவு இருக்கணும், நீலம் எவ்வளவு இருக்கணும், நீலத்தின் எவ்வளவு பகுதி ஒளி ஊடுருவக்கூடியதாக இருக்கணும் என்றெல்லாம் ரொம்பவும் மெனக் கெட்டுதான் செய்திருக்கிறார்கள்.

கேள்வி: வண்ணங்கள் குறித்த அறிதல் என்றால் என்ன?

திரு: அந்தக் காலத்தில் கிடைக்கப்பெற்ற வண்ணங்களை அளவாகப் பயன்படுத்தியதால் அந்த ஓவியங்களில் ஒரு ஒத்திசைவு இருந்தது. இப்ப வண்ணங்களின் எல்லையற்ற தன்மை ஒரு பிரச்சினையாகிறது. அதைத் தேர்வு செய்யும் நுண்ணுணர்வு கைவரப் பெற வேண்டுமென்றால், ஓவியனின் வாழ்க்கை தனிமையாக இருக்க வேண்டும். வண்ணங்களின் வரிசை நீண்டதாக இருந்தாலும், இதற்கு இவ்வளவுதான், இந்த ரீதியில்தான் என்ற தேர்வு மனம் வேண்டும்.

பாபு: ஒரு படம். என்ன இது இப்படி அழுக்காக இருக்கிறது அல்லது ஏன் இவ்வளவு வெளிச்சமாக இருக்கிறது என்பதைச் சொல்வது எது? இப்படி ஒரு வேறுபாட்டைக்கொண்டு வருகின்ற கலாச்சாரத்தில் பத்தில் ஐந்து அல்லது ஆறுபேர் ஒரே விதமாகச் சொல்கிறார்களே அது எப்படி?

திரு: இதற்கு எங்க தலைமுறையில் எளிதாகப் பதில் கிடைக்கிறது. 8-ம் வகுப்பு படிக்கும்வரை அரிக்கன் விளக்குதான். அந்த விளக்கில்தான் எல்லாவற்றையும் பார்த்தோம். எங்கள் பார்வையே அரையிருட்டுக்குப் பழகியிருந்தது. அதனால் Rembrandt ஓவியங்கள், அரையிருட்டு ஓவியங்கள் பார்க்கும்பொழுது எங்களுக்கு வித்தியாசமாகத் தெரியவில்லை. நன்றாக இருக்கிறது. ஆனால் பிறக்கும்போதே பளீரென்ற ஒளியைப் பார்த்த இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கு அவை அழுக்கானவையாகத் தோன்றுகின்றன. இவர்கள் பிறக்கும் போதே பளீரென்ற ஒளியைப் பார்த்தவர்கள். இவர்கள் கண்களின் பாவைகள் அதேவிதமாக நிரந்தரமாக அமைந்து விட்டன. ஆனால் எங்களுக்கோ இருட்டில் தேடித்தேடி, பார்த்துப் பார்த்து போக வேண்டிய நிர்பந்தம். அதனால் எங்களது உள்ளுணர்வுகள் எந்த நேரத்திலும் தயார்நிலையிலேயே இருந்தன. எனவே. ஓவியங்கள் ரொம்ப தெளிவற்றதாக இருந்ததென்றால், உள்ளுணர்வு அதில் சொல்லப்படாதவற்றை பூர்த்திசெய்து கொள்கிறது. இப்போதோ உள்ளுணர்வின் தேவையை வேண்டாத நேரிடையான வெளிப்படுவதில்லை எதிர் பார்க்கிறார்கள். இன்றைய ஒளியமைப்பு முறை (Illumination Pattern), இவர்கள் வாழ்க்கையைச் சார்ந்ததுதான்.

கேள்வி: புலனறிவை மட்டுமே மையமாக வைத்து வருகின்ற படைப்புகளுக்கும், புலனறிவின்துணை மிகக் கம்மியாகவும் அல்லது அந்த சூழலே புலனறிவைத் தாண்டிய வேறொன்றாகவும் இருக்கும் நிலையில் கிடைக்கக் கூடிய படைப்பு, அந்த படைப்புக்கு உறுதுணையாக இருக்கக் கூடிய வண்ணங்கள்,

அவையெல்லாம் வேறு. அப்படியானால் வாழ்வு அனுபவமும், புலன் அனுபவமும் எங்கேயோ ஒரு புள்ளியில் இணைந்து வரக்கூடுமா?

திரு: வரணும்.

கேள்வி: அப்படி வரக்கூடியது வேறு. இது முழுக்க முழுக்க வெளிச்சம். வெளிச்சம் சார்ந்த ஒன்று. இரண்டும் வேறு அப்படியா?

திரு: வேறுதான். உள்ளுக்குள் தேவைப்படுவதை புலனறிவால் வென்றெடுக்கத்தான் பார்ப்பான். நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கும் சிலசமயம். உள்ளே நாம் எதிர்பார்க்கிற மஞ்சள் வேறு. வேறு மஞ்சள் போட்டுவிட்டோம். ஆனால் திருப்தியில்லை.

கேள்வி: அழுக்காயிருக்கு என்று சொல்வது ஒரு தேர்வு மனம். அது கலாச்சாரம் சார்ந்தது. எண்ணப்போக்கு சார்ந்தது என்று பார்ப்பதா? அல்லது அந்தப் படங்களே உள்ளபடியே அழுக்காயிருக்கிறதா? அல்லது அதுதான் செவ்வியல் மரபு என்பதா?

திரு: நீங்க நினைக்கிற மாதிரி அவை வேண்டுமென்றே அழுக்காக்கப்படவில்லை. அந்த நாட்களில் இன்றளவிற்கு சுத்தமான தூரிகைகள் கிடைக்கவில்லை. இருந்த கட்டையை வைத்துத்தான் வண்ணம் தீட்டினார்கள். Rubens ஓவியத்தை நீங்கள் மிக அருகில் வைத்துப் பார்த்தால் கண்றாவியாக இருக்கும் அங்கு Elysee Palace-ல் ஒரு இருட்டில், கல்லில் நாம் பக்கத்தில் போக முடியாத தூரத்திலிருந்து தீப்பந்தங்களின் ஒளியில் பார்க்கும் பொழுது ஒரு பிரம்மாண்டம்தான். மைக்கேல் ஏஞ்சலோ, லியனார்டோ டாவின்சி ஆகியோரின் ஓவியங்களைக் கூட வெயிலில் வைத்துப்பார்த்தால் சரியாக இருக்காது. அந்தவித ஒளியமைப்புடன் அந்தவித இடைவெளியில்தான் அதைப்பார்க்க வேண்டும்.

பாபு: என்ன சொல்கிறார்களென்றால், இப்ப கோயா போன்றவர்கள் எல்லாம் ஒரு அழுத்தமற்ற (Subdued) கலர் வரவேண்டுமென்பதற்காக வெள்ளைக் கேன்வாசில் கருப்பு பிரைமர் அடிக்கிறார்கள்.

திரு: அதை வந்து கோயா எந்த வெளிச்சத்தில் படைத்தாரோ, அதே வெளிச்சத்தில் வைத்துப் பார்ப்பதுதான் சரி. செவ்வியல் மரபு ஓவியர்களின் கடைசி காலத்தில் வந்த David, Gerricault போன்றவர்கள் North Light Studio வில் எப்படி வைத்து ஓவியம் தீட்டினார்களோ அதே விதமாக North Light-ல் தான் எங்களது ஓவியத்தை வைக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். இதற்கு இசைந்து சில அரசர்கள் அவர்களது அரண்மனையின் ஜன்னல்களை அதற்கேற்றாற்போல் மாற்றியமைத்து Portraits போன்றவற்றை வைக்க முயன்றிருக்கிறார்கள்.

பாபு: வீட்டில் அம்மாகூட ஒரு சட்டை எடுத்துச் சென்றால், 'என்ன கலர் கண்ண மூடிக்கிட்டிருக்கு' என்பார்கள். அப்படியானால் அவர்கள் உணர்வில் கலர் என்றால் என்ன? அவர்களைப் பொருத்தவரை ஒரு கலரில் வெள்ளை சேர்த்து உருவாக்கும் சாயை (Shade) எதையும் ஏற்றுக்கொள்வதில்லை. அடர் நிறங்களில்தான் விருப்பம் இருக்கிறது. ஒரு கலரை வைத்து இவன் இந்த மதத்தைச் சார்ந்தவன் எனும் போது மத ரீதியாகக் கூட ஒரு வண்ண வரையறை இருப்தாகக் கருதப்படுகிறது.

வீட்டில் அம்மாகூட ஒரு சட்டை எடுத்துச் சென்றால், 'என்ன கலர் கண்ண மூடிக்கிட்டிருக்கு' என்பார்கள்.

கேள்வி: ஒரு ஓவியனின் வண்ணத் தேர்வு இரண்டு விதங்களில் நிகழ்வதாகத் தெரிகிறது. ஒன்று வண்ணங்களின் சாத்தியங்களை பரீட்சித்துப்பார்க்கும் போக்கு. மற்றொன்று, எடுத்துக்கொண்ட விஷய கனம் கருதிய தேர்வு. சரியா?

திரு: ஓவியத்தின் ஒத்திசைவுதான் அதைத் தீர்மானிக்கும். உதாரணமாக, சிவனுக்கு நீலம் என்று சொல்கிறோம். விஷ்ணுவுக்கும் நீலம்தான். ஆனால் நம் குனக ஓவியங்களில் எல்லாம் வெள்ளையாகப் போடப்பட்டிருக்கிறார்கள். அந்த வெள்ளையில் ஒரு ஓரத்தில் சிவன் வந்தால், அங்கே நீலம் கொடுத்து விடுவது. ஒட்டுமொத்தமான ஒத்திசைவைத்தான் ஓவியன் பார்க்கிறான். கருவிற்கும் கொஞ்சம் இடம் உண்டு. எரிகிற தீயை கருப்பு வண்ணத்தில் காட்ட முடியாது. அதை சிவப்பாகத்தான் காட்டுகிறான்.

பாபு: ஆலகால விஷத்தை விழுங்கிய பிறகு நீலமாவதை நீங்கள் மாற்றமுடியாது.

திரு: அந்த இடத்தில் நீலத்தை வைக்கும்போது பிற பகுதிகளை மாறுதலுக்கு உட்படுத்துகிறான். ஒத்திசைவு என்பதே ஒரு தொடர் நிகழ்வின் விளைவாகத்தான். ஒருவருக்கு நீலத்தில் ஆரம்பிக்கிற தென்றால், என் கை Yellow Ochre ஐத்தான் தொடுகிறது. அது நடுவானநிறம். அதிலிருந்து மேலேயும் போகலாம், கீழேயும் போகலாம். மிக ஆழ்ந்த அமைதியான வண்ணம், செவ்வியல் மரபு ஓவியங்களில் Napples Yellow. மஞ்சள் காவியில் கொஞ்சம் வெள்ளை கலந்தால் ஒரு கலர் வரும். அது அந்த காலத்து மஞ்சள். நம்ம தஞ்சாவூர் Tempora Paintings ல் ராணிகளின் முகங்கள் எல்லாம் ஐவரி. ஐவரி எனக்கு மிகுந்த அமைதியை உருவாக்குகிறது. பெர்சியன் நீலத்தை Titian உபயோகித்திருக்கிறார். மேலே லேசாக பிரவுன் சாயை அடித்து - அந்த நீலத்துடன் மேல் அழுத்தம் (Over Action) - மற்றதெல்லாம் செவ்வியல் மரபு வண்ணங்கள். நீலம் மட்டும்தான் உண்மையான கலர்மாதிரி. அதை அழுத்தமற்று பண்ணிவிடுகிறார்கள். அப்படிப்பண்ணாமல் இந்த காலத்தில் வார்னிஷ் அதை பிரவுனிஷ் ஆக்கியதும் நன்றாக இருக்கிறது. அந்தக் காலத்தில் பிரவுன் கொஞ்சம் இடறி இருக்கிறது. தூய பச்சை, மற்றும் மஞ்சள் வண்ணம் அந்தக் காலத்தில் கிடையாது. சிவப்பு அடித்து விட்டு அதற்கு மேலே பிரவுனை மேற்பரப்பில் பளபளப்பாக்கி விடுகிறான். இப்போது கூட உள் அரங்கு வடிவமைப்பில் இரண்டு வகையான வரையறைகள் இருக்கின்றன. ஒன்று ஜப்பானின் பிரவுன். மற்றொன்று மேற்கத்திய நீலம் மற்றும் பளீரென்ற வண்ணங்கள். ஜப்பானிய வரையறையில் மஞ்சளை அடிப்படையாக வைத்துக்கொண்டு கொஞ்சம் அடர் நீலம் மற்றும் பிரவுன் சாயைக்கு போகிறார்கள். மஞ்சளை இன்னும் கொஞ்சம் வெள்ளையாக்குவான். Yellow Ochre is the most gentlemanly colour. அந்த கலரை நினைக்கும்போது அமைதியான அப்பா முகம் நினைவுக்கு வருகிறது. அம்மாவின் மடி ஞாபகத்திற்கு வருகிறது. கர்ப்பத்திற்கு உள்ளேயுள்ள அமைதி ஞாபகத்திற்கு வருகிறது. இந்த அண்டத்தைத் தாண்டிப்போக தடையாக வானின் நீலம் திரைபோல இருப்பதாக நான் உணர்கிறேன். இதை கிழித்தால் என்ன தெரியும்? அந்த ஐவரி கலர். ஏனென்றால் அதற்கு முடிவு இருக்கிற மாதிரி தெரிகிறது. தாத்தாத்திரி சொன்னார், 'The eternal and endless space always in a static conscious state' பௌதீக

எல்லைகளுக்கு Endless, என்றார். காலத்தின் எல்லையற்ற தன்மைக்கு eternal என்கிறார். அதை கலராக உருவகப் படுத்தும்போது அந்த Tint ஐத்தான் (Yellow Ochre + White = Napples Yellow) பார்க்க முடிகிறது. மஞ்சள் முழு வீச்சில் இல்லாத வெள்ளை கலந்த அந்த Tint ஐவரி, அதுதான் எல்லையற்றதாகத் தோன்றுகிறது. நீலம்தான் நிறையப் பேரை ஆட்படுத்தியிருக்கிறது. அந்தக் காலத்தில் நீலத்தை அரசர்கள்தான் பயன்படுத்த வேண்டும் என்ற வரையறை இருந்தது. அதற்குப் பேரே ராயல் நீலம். வெளியை, நிரந்தரத்தை சுட்டுவதற்கு நீலத்தைத்தான் சொல்வார்கள். ஏனென்றால் வானம் நீலம் என்பதால், வழக்கமாகப் பார்த்து எல்லையில்லாப் பிரபஞ்ச வெளி நீல வண்ணத்தில்தான் இருந்திருக்கிறது. ஆனால் என் உள்ளுணர்வுக்கு எல்லையற்றதாகத்தெரிவது Yellow Ochre Tint தான்.

ஒரு இடத்தில் பளீரென்ற வண்ணங்கள் எல்லாவற்றையும் வைத்து விடுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக இருட்டட்டும். விளக்கே போடாதீர்கள். 6, 6 1/2, 6 3/4 பிறகு ஐந்தைந்து நிமிடங்களில் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். நீலம், பச்சை எல்லாம் சட்டென்று காணாமல் போய்விடும். மஞ்சள்தான் கடைசியில் மறையும். வெளிச்சமற்ற நிலையில் அந்த சிவப்பு பிரவுனை கண்ணாலேயே பார்க்க முடியாது. அப்படியாகிற மாதிரி ஒரு உணர்வு இருக்கும். ஏன் தூங்கும்போது விளக்கை அணைக்க நினைக்கிறோம். விளக்கு எரிந்தால் அமைதி கிடைப்பதில்லை. வெளிச்சம் சிந்தனையைத் தூண்டுகிறது. தலைவலிக்கிறது. படபடப்பாகிறது. ஆனால் வெளிச்சம் இல்லாமலிருந்தால் அசைவற்று அமைதியாக இருப்பது போன்ற மாயத்தோற்றம் உருவாகியிருக்கிறது. இருட்டின் குறியீடான பிரவுன் அமைதியைக் குறிப்பதுபோல் தோன்றுகிறது.

> *“அந்த கலரை நினைக்கும்போது அமைதியான அப்பா முகம் நினைவுக்கு வருகிறது. அம்மாவின் மடி ஞாபகத்திற்கு வருகிறது. கர்ப்பத்திற்கு உள்ளேயுள்ள அமைதி ஞாபகத்திற்கு வருகிறது”. இந்த அண்டத்தைத் தாண்டிப்போக தடையாக வானின் நீலம் திரைபோல இருப்பதாக நான் உணர்கிறேன். இதை கிழித்தால் என்ன தெரியும்? அந்த ஐவரி கலர்.*

பாபு: பின்னைய நவீனத்துவம் வந்தபிறகு பழைய சிவப்பு, மஞ்சள் போன்றவற்றை அப்படியே வைக்கிறார்கள் பழைமையை நோக்கிப் போக வேண்டும் என்ற திட்டத்தில். இதற்கான எதிர்வினை என்ன?

திரு: அந்தக் காலத்திலே மண்வண்ண பிரவுன் உபயோகப்படுத்தும்போது இப்ப விற்கிற சிவப்பு ஆக்ஸைடு அளவிற்கு சுத்தப்படுத்தி பிரிக்க முடியவில்லை. மண்வண்ண பிரவுன் என்பது உண்மையில் இரும்பு ஆக்ஸைடு. அதோடு சீமைச் சுண்ணாம்பு பவுடர் கலந்திருக்கிறது. களிமண் என்றால் சிலிக்கான் இருக்கும். எனவே சிலிக்கான் சேர்ந்திருந்திருக்கிறது. எல்லாவற்றோடும் சிவப்பு ஆக்ஸைடு கலந்துவிட்டால் வெளியில் பார்க்கும்போது சிகப்பு பவுடராக இருக்கும். அதை Eggtempora விலோ, எண்ணை வண்ண ஓவியத்திலோ அடிக்கும்போது சிலிக்கான் நுண் துகள்களும் (Molecules) சீமைச் சுண்ணாம்பு பவுடர் நுண்துகள்களும் இருந்து கொண்டு அதற்கு ஒரு ஒளி ஊடுருவக்கூடிய தன்மையும், ஆழமும் கிடைக்கும். அந்த சிவப்பை இப்ப சிவப்பு ஆக்ஸைடைவிட சிவப்பு காவிகட்டியை பவுடராக்கி உபயோகித்தால் நன்றாக இருக்கும். மிகவும் தூய்மைப்படுத்தப்பட்ட வண்ணங்களில் நுண்துகள்கள் எல்லாம் நெருங்கியிருப்பதால் சொல்ல முடியாமல், பிடிக்கவில்லை என்கிறோம். வண்ணமற்ற, ஒளி ஊடுருவக்கூடிய நிறமியை அதோடு சேர்க்கவேண்டும். லேக் கலர் என்னவென்றால் மரச் சாயம், பச்சிலைச் சாயங்கள். இதைப் பிழிந்தால் மஞ்சளாக வரும். நீலம் வரும். சிவப்பு வரும். எண்ணை வண்ணத்தில் கலப்பதற்கு நிறமிகள் பவுடராக இருக்கவேண்டும். அதற்கு நிறமற்ற நிறமிகள் (Neutral Pigment) என்று ஒன்று வேண்டும். அதாவது சீமைச் சுண்ணாம்பு பவுடர். அதில் ஆளிவிதை எண்ணெய் (Linseed Oil) கலந்தால் ஒளி ஊடுருவக்கூடியதாக இருக்கும். துத்த ஆக்ஸைடு அல்லது ஈயப்பவுடரைக் கலந்தால் வெள்ளையாக, ஒருமாதிரி ஒளிஊடுருவ முடியாததாக இருக்கும். சீமைச் சுண்ணாம்பு பவுடரில் அந்த மஞ்சள் சாயத்தைப் பிழிந்து காயவைக்க வேண்டும். மஞ்சள் பவுடராகி விடும். இதை ஆளிவிதை எண்ணெயில் கலந்ததும் மஞ்சள் கலர் கிடைக்கும். அலுமினிய் ஹைட்டிராக்ஸைடு தான் லேக் கலர் சாயங்களில் இன்னும் ஒளி ஊடுருவக்கூடியதாக இருக்கும். அந்த சாயங்களில் இன்னும் ஆளிவிதை எண்ணெய்யை கலந்தால் கண்ணாடி மாதிரியே இருக்கும். அது இயற்கையாகவே பூமியில் கலந்திருக்கிறது. சுத்திகரிக்கப்படாமல் இருந்தால்தான் ஆழம் கிடைக்கிறது. இப்ப மிகவும் சுத்திகரித்து விட்டார்கள்.

கேள்வி: அப்ப இந்த சுத்திகரித்த வண்ணங்கள் மூலமாக நீங்கள் இழந்ததாகச் சொல்கிற விஷயங்களை பிடிக்க முடியாதல்லவா?

திரு: முடியாது. நான் கேமல் வண்ணங்கள் வாங்குவதைவிட மிகவும் மலிவானது என்று இரும்புக் கடையில் சிவப்பு ஆக்ஸைடு வாங்கி இரண்டு வருடம் பயன்படுத்தினேன். அது அதிகமான திறன் கொண்டதாகயிருந்ததால், ரோட்டிலே கிடந்த செம்மண்ணைக் கொண்டு வந்து அலசி அலசிப் பவுடராக்கினால் அது நன்றாக இருந்தது. ஏனென்றால் அதில் சிலிக்கான் எல்லாம் இருக்கிறது.

பாபு: இது ஒரு அரசியல் ரீதியான விஷயமாகவும் இருக்கிறது. ராயல் நீலம் போன்றவையின் வருகையை ஒரு ஆக்கிரமிப்பாகவே பார்க்கலாம். இந்த வகையில்தான் ஒளிமிளிரும் (Flourescent) வண்ணங்கள் எல்லாம் வருகிறது. ஒரு வண்ணத்திற்கு இருக்கும் குணாம்சத்தைக் காலிபண்ணிவிட்டு அந்த வண்ணத்தைப் பயன்படுத்துவது சரியல்ல. ராயல் நீலம் வின் வருகையில் அடர்சிகப்பு, மஞ்சள் போன்றவை அமுக்கப்பட்டதாகவே எண்ணுகிறார்கள், அவற்றையெல்லாம் திரும்பக் கொண்டுவர வேண்டும் என்கிறார்கள்.

திரு: அவரவர் தேவைக்கேற்ப வைத்துக் கொள்வதுதான் சரியென்றுபடுகிறது. இந்த நடவடிக்கைகள் மீதான கட்டுப்பாடு நம்மிடம் இல்லை. அதை நிர்ணயம் செய்யும் சக்திகள் வியாபாரிகளாகவும், வெளிநாட்டு நிறுவனங்களாகவும் இருக்கின்றார்கள். நாம் கண்ணை மூடிக்கொண்டு கலரில்லாத ஒரு நிலையில் இருந்தால்தான் எந்தக்கலர் நமக்குப் பிடிக்கிறதென்று சுய நிர்ணயம் செய்ய முடியும்.

கேள்வி

எங்கிருந்தோ வந்தோம்
எங்கேயோ செல்கின்றோம்
என்னென்னவோ செய்கின்றோம்;

"நேற்றிரவு,
இன்றுபிற்பகல்,
நாளைப்பொழுது;" என்று சிலர்,

"ஆணா? அவனா?
பெண்ணா, அவளா?" என்று சிலர்.

"இருதிணையும் ஒரு உயிருமாகி
காலவட்டத்தில் சுழன்று,

இருபாலாகி
இணைவிழைச்சில் சிக்கி,
மனமெனும் மாயை தூண்ட
மரகதப் பச்சைதேடி
வரைந்த கோடு தாண்டாமல்
தானே தானாகித் திரிந்தால்,
மானே புகலுண்டோ?" என்று சிலர்.

- நகுலன்



மழை

வானில் கருமை பரவிப் படர
ஒரு துளி விசி
சிறு தூற்றல் சிதறி
இடி கொட்டி
மின்னலடித்து
இருள் குளித்து
மேலிருந்து கீழ்பாயும்
மாரிச் சீயம்;
மாரிச் சீயம்
அடி பெயர,
பச்சை இலை
ஈர மின்னல்
உறை கிழித்து
வீசும்;
பலமலர் புதுநிறம்
ஆடி வழிகாட்டும்;
மேனி மிளிர
மிருக ராசி முன்செல்லும்;
உடல் கூசி உள்ளம் துரத்த
வீடு நாடி நடுங்கிச் செல்வர்
தனிமனிதர்.

- நகுலன்

பிலாத்தியின் சாற்று

அறிவழகன்

சன்னஞ்சன்னமாய் மேலமலை ஆழம் காண செவலுடம்பாள் இறங்கும் வேளை, கரும்பச்சை இருள் நீர் பறவை அலகில் காயமாகியது. இறகடி இருள் பரவ கருமந்திகளின் தாரை கிளைமோதிப் போனது. வலைவாழ் உயிர்கள் இலையொளியில் இரைதேடுகிறது. மரங்களின் ரேகை அழிய வனத்தங்கலுக்கு பூட்டு, வில், அம்பு சகிதமாய்வந்த மச்சினனும் மயிலவனும் மிருகத்தாரை காண களைப்பில் அள்ளிய சரங்கை நீர்பருகி முகம் ஒற்றி ஒலிமடிந்த இலை அமர்ந்து காலாட்டுத் தம்புரான் எல்லையில் கஞ்சாப் புகை வணங்கி காவலமர்த்தி கண்ணயர்ந்தனர். இருள் உடைக்கும் பூவின் தேன் நிற வண்டு தேடிப்போன வழி காதில் விழுந்தது கரைய தூங்கினர் பறக்கும் அணில் உள்ள மருதடிப்பத்தி வனத்துள். எட்டிப்பார்த்த கடுவாயின் கண்ணொளியில் கலைய, அவ்வனத்தில் பெரிய இறகுக் கைகளுடன் நிறம்மாற்றி நிறம்மாற்றி பொதிகையடிப்பத்தி சென்று நீலஒளியாய் மாறி இரவில் பறந்து கொண்டிருந்தது. இதை, கோழிக்கால் மரங்கள் காட்டை அது கலைத்ததினால் உண்டான விபரீதம் என பேசிக்கொண்டிருந்தது இவர்களின் காதில் துணுக்காய் விழுந்தது. குரங்குகளின் மூச்சில் படிந்த சிறுகுழந்தைகளின் தூக்கம் கோழாய் வடிய நடமாடியது. அந்த நீலஒளி தாரையில்லா வனத்தில் கண்ணிமை கீறிய போது பறவைகளின் இலைச்சருகாக மாறி மெல்லொலி இருட்டில் மிருகங்களின் தாரையும், எச்சமும் விதைகள் புகுந்து கிடக்கும். நேரம் ஆக ஆக பறவைகளின் அலகு தீட்டும் ஒலி, கால்நகங்கள் கொப்பில் உரசியது, செவலுடம்பாள் கீழ்க்காயல் பார்த்த வேளை, பயணமாயினர் பொதிகையடிப்பத்தி. தாரை அழிந்து போன இடங்களில் சிறு தாவர தேன் பருகியது குலவிகள். அதன் ரீங்கார ஒலி மிதிபடாமல் அடியெடுத்து கரும் இலையானர். உச்சி விரிந்த வேளையில், நா வறள தண்ணி தேடிய போது சுனையில்லா வனமாகியது. நங்கிலி மரம் இவர்களின் உஷ்ண மூச்சறிந்து தனது கனிபறித்து காதில் வைத்து கேட்கச் சொன்னது. "கள்ளிகளை வெட்டியெறிந்து, மழைவேண்டும் தவளையாய் கூக்குரலிடு........" என்ற போது அரிவாள் வீச்சில் கள்ளிச்சாறு தரையோடியது. கால் மடித்து வான்நோக்கி ரெட்டைத் தேரைகளாயினர். அப்போது கை உறுவிய அம்பில் கிளம்பிய நீர்ச்சாரைகள் பூர்வகுடிகளின் நதியானது. காணியின் சடங்கு நதி உருளைக் கற்களில் மொடு மொடு ஒலியெழுப்பி பானைஉடைப்பான் மரம் சுற்றி ஓடுகிறது. இதன் நீர்ச்சுழியில் எப்போதும் கல் மிதந்து கொண்டேயிருக்கும். மரப்பெண் நங்கிலி சொல்ல மச்சினனும் - மயிலவனும் கண்டெடுத்த நீர்ப்பதில்கள் அகத்தியனின் கெண்டிக்குள் பரணியாகிப் போனது. தாமிரக் கெண்டிக்குள் பரணியாகிப்போன கதை கேட்டு வனமூதாள் தன் தலையறுத்து குலவையிட்டே கீழ்க்காயல் ஓடிப்போனாள்.

செதிலுடம்புக் காணியின் ஈனக்குரல் கேட்டு அலறிப்போன வெற்றிலை காவியேறிய பற்களின் இடுக்குளில் காரஇலை சவைத்து துப்பித்துப்பி பித்தம் ஏற சாற்றுகிறான். சாற்றச் சாற்ற துளிர்க்கும் உமிழ்நீரில் நாயின் நாவால் செதில் வனத்தானின் கல்லுடலை நக்கியே கரைக்கிறான் மையிருள் வேளையில் இருளை அலையும் இலைகளாய். பதுக்க ஓசை நேரத்தில் செதிலுடலை பாட்டில் அள்ளி புதைத்தான் ஆவக்கள் மரத்தடியில், நட்டநடுநிசி நேரம் ஒலியொடுங்கிய போது உயிரைச் சொட்டுச் சொட்டாய் சுண்டுவிரலில் எடுத்து பூர்வகுடிகளின் கல் கலயத்தில் வைத்து, கலயத்தை பானை உடைப்பான் மரப் பொந்துகளில் வைத்தான் மரப்பட்டையால் மூடி. உயிரொளி இலைகளின் நுணியில் பதுங்கியபோது பிலாத்தி மையிருள் மிருகமாய் வனமோடினான். தாரை பதியா வேக மந்திரமுனுப்பில், உயிர் கலையத்தை புலிநகக் காவல் வைத்து புதுஉடல் செய்ய பேயாறு, சேப்பாறு, வறட்டையாறு, மயிலாறு, பாம்பாறு, காரையாறு பயணமானான், காற்றுடல் கொண்டு. மிருகங்களின் காலடி மேவாத, தீங்குகளின் சூரைபடியா, பறவைகளின் எச்சம் படியா மண் தெள்ளி எடுத்து வந்தான். மணலில் ஓடாத நீர் எடுத்து குரவலைகளால் குழைத்து பிசுப்பாக்கி மருதவெள்ளக் காளியின் சூல் முடைந்தான். புலிநகக் காவல் நீக்கி பானைஉடைப்பான் மரப்பொந்து கல்கலையம் எடுத்துவந்து உயிரொளியை காளியின் நாசி வழியே பூவரசு இலை ஊற்றினான். மெதுவாய் அவள் சூல் புடவு தடவி ஈன்பாடின வேளை செதில் கலைந்த உருவெடுத்தான் முண்டன்காணி. "கூடு கழன்ற வனத்தான், நீ ஏழு நாட்கள் நீர்ச்சாரை தீண்டாமல் பார்த்துக் கொள். இல்லையெனில் உன் உடல் ஒணந்து போவும்" என்று வாக்கு கூறி சாவுகளை வனம் கடத்த பாடிப்போனான். அப்போது நெல்லில் குறி பார்த்துக் கொண்டிருந்த மருத்தமச்சியின் சுளகொளியில், மண் நுகர்ந்த கனி மறுபடியும் காம்பு அடைந்தது கண்டு முகம் சுருக்கி "நாவால் கல்லுடலை நக்கியே கரைத்ததினால் அவளது ஆயுளில் சில சூரிய ஓலைகள் காணாமல் போகும்" என இளச்சிகளிடம் குறிபாடினாள். அதனை பசும் தளிர் கை மடக்கி அமர்ந்து கேட்டனர் இளச்சிகள்.



காடத்தியின் விழிகொத்திப்போன இருளடைந்த வனங்களில் மணலறியா இலையோடும் ஆறுகள், ஒளிமேயும் மரங்கள், வழுக்கேறிய பாறைகள் என குடிகொள்ளும் வனதேவதைகள் வனப்பூச்சிகளை காவல் செய்தும், சூரவாசைகள் நெருங்காமலும் காத்துக் கொள்ளும்,

வருடம் கடக்கும் நாளொன்றில் வனப்பூச்சிகளின் படையல் வாங்கும் வாதைகள் காட்டு விளைச்சல் வேண்டியே நிற்கும். மூக்கு முறியா நெல்கொண்டு ஒற்றைப்படை எண்ணில் கார்த்திகை மாதமாக நாள் குறித்தான் குள்ளப்பிலாத்தி. குடிகள் திரண்ட வெட்டவெளிகளில் சாற்றுப்பாடும் பிலாத்திமார் வாழைப்பந்தல் பரணமைத்து சுருள் வாழை இலைகளில் காட்டு வருக்கம் படைத்து, மூங்கில் நாழிகள் வைத்து குந்திரிகப் புகை போட்டனர். பிலாத்திமார் கொக்கறை உரசலில் அடங்காட்டு ஆயன் இறங்கி ஓலைக்குறி போட்டான். அடங்கா உக்கிர ஆட்டத்தில் கால்சிக்கிய தூசிகள் சடைசடையாய் படரப்போனது. குள்ளப்பிலாத்தியின் ஓலைக்குறி கேட்க புள்ளிமேவிய பனிப்பூனைகள், வால்தூக்கி அலையும் அணில்கள், வரையுடல் கடுவாக்கள், கொலை மேயும் கருமந்திகள், தளிர்மான்கள் என ஒவ்வொன்றாய் மென் தடை ஓசையுடன் மரப்பட்டை உடலுரசி மறைந்தது. அப்போது கால்மயிர் மேவிய தூசியுடன் நீர்ச்சுழியாய் ரத்த நரம் பேறிய கண்விரித்து நாமடித்து தூரக்குரல் சொன்னான், "பாராட்டுக்காரன் வந்துட்டான், வனம் பூரா பாதையாவப் போவுது, கம்பிவேலி விரியப் போவுது, இனி நம்ம வாதயூ வத்தப் போவுது, பாதையூ தப்பப் போவுது......" என்று மூச்சுவாங்கி மூச்சுவாங்கி சொல்லி முடிப்பதற்குள் கொடுவாளாய் இறங்கி தைத்தது மின்னல் பூர்வகுடி மண்ணில். இதை கெட்ட சகுனமாய் தொல்நினைவுகளில் உணர்ந்துகொண்ட குள்ளப் பிலாத்தி, இடை உறங்கிப் போன துருவேறிய கத்தியால் வெற்றிலைக் கரைபடிந்த தன் செந்நாவறுத்து உதிரம் சொட்டச் சொட்ட கொலை மோதிப் போன தாரையோடி சில்லொலி பாறை இடுக்கில் மறைந்தான் ஆதிகுடி சாவாய் மாறி.

சமவெளி மனிதக்காலடி படியா வனங்களில் வாழ்ந்த போது ஆவக் கள்ளும், கஞ்சாவும், மிருகம் அடித்துப் போட்ட கறிகளில் முடி முளைத்துப் போன புழுமேய்வதை ஓட்ட நீரில் அலசி உண்டதையும் கதைகளில் சொல்லிக்கொன்டே தன் கழுத்தில் கிடந்த கயக்கல்லையின் பூர்வீக இடம் சொல்லிக் கொண்டிருந்தாள், பூமாலைக்காணி மணற் கோடுகீறியே. வனம் காக்க வந்ததாக சொல்லிக்கொண்டே மைவாள் அநியர்கள் தாவரம் நசித்து நடந்துவர மரப்பட்டைகளில் அடையும் பூச்சி விரட்டி உளிபதித்து எண்ணிட்டுப் போணார். மறுநாள் வந்து, வனம் வெளியேற்றச் சொன்னார்கள் பூர்வகுடிகளை மைவாள் அநியர்கள். கேட்டுத் துடித்த பூமாலைக் காணி தும்பியாய் மாறி பட்டமரத்தின் பட்டையுறைந்து அலறிப்போனாள், "நாஞ்செத்தா மிருகோ திங்கூ, மிருகோ செத்தா நாந்திம்பே இதக் கேக்க நீ யாருடா தூம? என் பூர்வ குடி அழிச்சா வனோ நாதியத்துப் போவூ........" குள்ளப்பிலாத்தி கார்த்திகைக் கொடுதி நாளில் சொல்லி நாவறுத்ததுபோல வாதைகளும் வத்திப் போனதாக குடிகளில் பேசிக்கொள்வதை பூமாலைக்காணியின் பேத்தி கிழங்குக் கொடி தேடியவாறு கூட்டப்புறா மரத்திடம் பேசிக் கொண்டிருந்தாள். அதனை இமை கீறி கேட்டவாறு இருந்த மூங்கக்குட்டி, "பண்டு, பயமணி முட்டயிட்ட காலத்து ஆளு நீங்க, பயமணி முட்டயிட்ட காலத்து ஆளுக மத்தவங்க. ஒரு நா மந்திரம் படிக்க ஏழுபேர் பொறந்து வருவாங்க, பூர்வீக வனமெல்லா தேடி வரூ. அன்னக்கி வத்திப்போன வாதயூ தப்பிப்போன பாதயூ திரும்ப வரூ. குள்ளப்பிலாத்தியூ திரும்ப வருவா......" என சொன்னது. இதை பூமாலை பேத்தி பானை உடைப்பான் மரத்து காய்களில் பிடித்து தாயம் உருட்டி கதை சொல்லிக் கொண்டிருந்தாள் விருத்தம் போட்டு.

வனம் காக்க வந்ததாக சொல்லிக்கொண்டே மைவாள் அநியர்கள் தாவரம் நசித்து நடந்துவர மரப்பட்டைகளில் அடையும் பூச்சி விரட்டி உளிபதித்து எண்ணிட்டுப் போணார். மறுநாள் வந்து, வனம் வெளியேற்றச் சொன்னார்கள் பூர்வகுடிகளை மைவாள் அநியர்கள். கேட்டுத் துடித்த பூமாலைக் காணி தும்பியாய் மாறி பட்டமரத்தின் பட்டையுறைந்து அலறிப்போனாள், "நாஞ்செத்தா மிருகோ திங்கூ, மிருகோ செத்தா நாந்திம்பே இதக் கேக்க நீ யாருடா தூம? என் பூர்வ குடி அழிச்சா வனோ நாதியத்துப் போவூ........".

விரித்த இறகு படபடக்க இரைவாங்கும் பழமணி பறவையின் கண்ணடைப்பில் சலனமொடுங்கிப் போனது இஞ்சிக்குழி வனம். கரும் இலை படர்ந்த வனத்தில் காணிக்காரிகளின் அம்புவிரல் படிந்த மண்கோட்டை காண்டாவிளக்கில் ஆடியது. வடமேற்கு மூலையில் வாழையிலை விரித்து வெற்றிலைமேல் ஒன்னேகால் ரூபாயாக ஏழு காணிக்கையிட்டு, அனல்விழி மரங்களில் குந்திரிகம் இட்டு புகைமூட்ட மண்கோட்டை நெடிந்தது. பொருக்குமண் மெழுகளில் உருவான ஓலைச்சித்திரம் கிடத்தினர் காலாட்டுத்தம்புரானின் வமிசவேர்களில் விழுந்து ரோகமுடிச்சுக் காரனை. மண்கோட்டை விளிம்பில் ஊர்ந்த நீரிலை காண்டா விளக்கில் உருவம் அலைத்தது பொருக்குமண் சுவர்களில். சுவர்களில் ஒட்டிப்போன உடல்கள் முகட்டில் ஒன்றுகூடி அபூர்வ பாறைக்குடிகளின் கோடு ஆனது. பிலாத்திமார் குந்திரிக புகையில் பதியச் செடியாகி, கொளுஞ்சி உடலெடுத்து கொக்கறை உரச மண்கோட்டை மண்கோட்டை மனிதர்கள் தாவரமாகிப் போனர். மண்கோட்டை காண்டா விளக்கு இருளை சுருட்டி சுருட்டி ஒளி நடுவில் வைத்து கரிந்து போக கருமேனி பிலாத்திமார் கொக்கறை உரசி பதம் பார்த்தனர் சாற்றுப்பாடிட, மண்கோட்டை முகடுகளில் தானிய முடிச்சு காட்டுவிதைப்புக்கு அலையெழுப்பும் வெளவாலாய் கிடந்தது. பிலாத்தியின் முன் குறும்பலகை செங்குறிஞ்சியால் இட்டனர். உக்கிர உருவெடுத்து வாக்கு பொங்கும் வேளையில் மண்உரல் இடித்து சொல்லவே. பலகைதட்டிச் சொல்லும் மந்திர வாக்குகள் கேட்க அரணைகள் அழைத்து வரும் சாவுகளை. வனங்களில் ஒளி சுண்டிப்போக மண்கோட்டை அடங்கிய ரோகமுடிச்சுக்காரனை தேரைகளின் காரஇசை படிந்த கொக்கறை தேய்த்து கை உரமேறிய பிலாத்தி கொதவலைகளில் விழுங்கி விழுங்கி ஒலியெடுத்து நாவால் இலைச்சாறை மென்று நீட்டி வண்ணம் தீட்டினான், விட்டு விட்டுப் படர்ந்த காட்டின் நிறங்களை, ஒழுவும் ரணநீர் பாறையச் சாவால் பாம்பு விரல் குழைத்து சிறுத்தை உடலான போது, நிலாவும் சிறுத்தையும் பாலில் அலைந்து கொண்டிருந்தன தாவரவெளிச்சம் எங்கும். நிலவின் முகம்பட்டா இருட்டு சிதறியது. சிறிதுநேரத்தில் ஆயிரம் கால்கொண்ட பறவையாய் மாறியவேளை அதன் துணுக்கொலி கேட்டது. இருட்டு மீண்டும் நீரென ஓடிக்குமைந்தது. கரும்பாறைகளின் புதர்தேடி அழைத்தது சாவுகளை பிணிதேகம் நோக்கி அந்தரவலை சிலந்திகள். கூன் உடம்புடன்,

பிளந்த உதட்டு பல்வரிசை முக காற்றில் அலக்கழியும் ஆவாரஞ் செடியாய் மாறிய பிலாத்தி தொண்டை நார் விம்ம விம்ம, சித்திர வியர்வை நாசி படர்ந்த தெளிந்த நதியில் சாவுகள் இறங்கிய வனமாய் மாறி மண்பறை அதிர குறி போட்டான். கொக்கறையின் பொறி கிளம்பும் இரம்பப்பற்கள் சுவைத்திட்ட ரணவோடைகள் பொருக்குமண் ஓவியம் சொட்டியது. நத்தையின் விரைவாய் மறைந்த பிசுக்கைப் பூக்களை காற்றின் வாதைகள் பூர்வகுடிகளின் சதையழித்த தேகம் மறைந்தது. தூரமாய் மருதடிப் பத்திகளில் ஒலித்துப் போன வனதேவதையின் முதுகுரலில் அவலம் பிறந்த கதை கேட்டு அடையப் போனது சாவுகள் பறவையொலியில்.

இலைகளில் உரையும் ஆவிகள் காடுகளில் சலசலதுக் கொண்டேயிருக்கும் ஒளியிறங்கா வனமாய் மாறி ஒற்றைத் தாரைகளில் சிறுதாவரம் மிதியாமல் போன பூர்வகாணிப் பெண்ணின் சூல் செல்ல துடித்துக் கொண்டிருக்கும் தனிரிலை ஆவிகள். சூல் புடவு கண்டுணர்ந்த மருத்தமச்சி, சூலியின் அடிவயிற்றில் உள்ளங்கை பதித்தே பாலறிவாள். சூலியின் அடிவயிற்றில் நாசி பதித்து சூல் மணம் கொண்டே தாவரக் கொடிகளை அரவச் சருகு மிதிபடாமல் கரும்பாண்டியம்மாளின் கால்வழிகளைக் காண்பவள். சூல் நிறை மூதாளின் சுவாசவேர் வழி சென்று மாதுள விதைகளில் பதுங்கும் கெட்ட ஆவிகளை கனவு பார்த்து ஈனல் பாடி கெட்டுவாள். பச்சையிருளில் நிறைசூலி வானமர் செல்வியை செடியுடை நீக்கி வியர்வையொருங்க சக்கராயி உருவாய் சில்லொலி குகைகளில் இருத்தி, மூங்கில் போத்தல்களில் எள்ளுச் சாரெடுத்து ரேகை தடம் வழி சங்கில் ஊற்றிவிட்டால். மாதுள விதை ஒடுங்கிய ஆவிகள் எள்ளுச்சாற்றை முலைக்காம்பில் நீர்க்கனியாக்கி பாம்புவிரலால் தேகமெங்கும் சல்லிவேராய் படர்கிறது. வலைவேர் ஆகிப்போனதை பனைக் கோடாக சாவு வணங்கி தரைக்கால் ஊன்றி உச்சித் தலையிறக்கி வாக்கெடுத்தாள் மருத்தமச்சி. தொண்டை வற்ற பாடிய மந்திரப்பாடலில் ஆவிகள் ஓடிமறையும் இடங்களே புதர்வனங்கள், சுழிப்பாறைகள், நீரிருட்டுகள். மருத்தமச்சியின் மந்திர ஒலிப்பில் உண்டான எச்சில் தெரிப்பில் தேனிற உடலில் உண்டான புள்ளிகள் வனமிருமாய் அலைவுறும் சிறுத்தைகளின் பல் எடுத்து முலைப்பாலில் உரசிக் கொடுத்து காணிச்சிசுவின் பயம் போக்குவாள். வற்றிப் போன முலைகளுக்கு விஷமேறிய காட்டுவிதைகளின் நச்சுமுறித்து திண்ணத் தரும் போது உடலை பால்கொடிபின்னிக் கொள்ளும். வலிமேவிய மூட்டுகளுக்கு சாணப்பாறையில் உலர்ந்து கிடக்கும் விதைமூடிய பறவையின் எச்சமெடுத்து ஒளிபடா இருளில் மசித்து பாம்பின் நஞ்சு சேர்த்து வாடாமர இலை கொண்டு சிலந்தி உருவரைந்து மூச்சூதுவாள். பூமாலைப் பேத்தியின் சோவி கவுத்தலில் விருத்தம் பார்த்து கதைகேட்ட காய்கள் சன்னஞ்சன்னமாய் ஒளி சுண்டிப்போன வாதை உறையும் தாயவனமாய் போனது, மொட்டை நாக்கின் உஷ்ண ஒலியும், ஈனும் ஏழு சூலிகளின் அரவமும் கேட்க ஆரம்பித்தது, சாற்று ஒலியாய்.

எறும்புகளிடம் அலைவுறும் அரசன்



இறந்து போன காலத்தை
தழுவி உறங்கு
உன் வெறுமையை
தன் வெறுமையால் நிரப்பி
நகர் முழுக்க அலையும்
பாலிதீன் பைகள்
உன்னை எங்கு அழைக்கிறது
அவள் விட்டுச் சென்ற காலுறையின் ஸ்பரிசம்
என் பாயிலுறையும் எறும்புகள் அறியும்
நான் அரசன் என்பதை
ஜனனத்தில் என் சிரம் தொட்ட
தாதியின் கைவிரல் தடங்களை முடிதுழாவிப் பார்க்கிறேன்
இடைகள் மாறி அமர்ந்து
முத்தங்கள் அலுப்பேற்படுத்த
தந்தையின் தமக்கையரோடும்.
மூதாதையரோடும்
குழந்தைகளின் காலம் ஒரு நாள் இருந்தது.

- சங்கர ராமசுப்பிரமணியன்

கனவுகளின் தனிமை

- ச. முருகபூபதி

கார்த்திகை மாத மழை இரவில் பூக்காரத் தெருவின் யுவதிகள் மண்கிண்ணத்தில் ஏற்றிய சுடரை உஷ்ண எண்ணைய்க்குள் நனைத்துக்கொண்டிருந்தபோது நாய்கள் ஊளையிட வருகிறாள் நாடகக்காரி ஜானகி; நாய்களின் ஊளை கூடிக்கொண்டிருக்க பூட்டிய வீட்டின் வாசல்படிகளில் நிகழ்விற்கான பனையோலைகள் வைத்துவிட்டுப் போகிறாள் - போனபின்பும் அவளைத் தேடிய கருப்பு நாய் தெருவின் திருப்பமெங்கும் ஊளையிட்டு மணலுக்குள் புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. நாய்களின் நேசத்தின் தனிமையைத் தேற்ற யார் வரக்கூடும். பூக்காரத்தெருவின் கடைசியில் பிரியும் நெசவாளர் தெருவில் தக்ளி ஒலிக்க நூல் பந்தை உருட்டியபடி ஜானகியைத் தேடுகிறாள் ஸ்திரீபார்ட் பக்கிரியம்மாள். "ஜானகி....... கண்ணாடியைத் தேடிப்போனவளே! கண்ணாடியைப் பார்க்க முடியாதே..... அழிக்க முடியாதே! சூதகநாளில் தேடுகிறேனடி உன் கண்ணாடியை!" ஸ்திரீபார்ட் பக்கிரியம்மாளிடம் நூல் பந்தை வாங்கிச் சென்ற குழந்தைகள் மூடிய கதவுகளின் தாழ்பாள்களில் நூலைக் கட்டிக்கட்டி வேறு தெருக்களில் நீண்ட நூலின் மறுமுனையில் வெற்றுத் தீப்பட்டி கட்டி அதனுள் உதடு குவித்து ஜானகி....... ஜானகி...... கண்ணாடியுடன் வந்து விட்டாளா ஜானகி....... ஒன்....... ட்டு........ த்ரீ....... போர்....... பைவ்...... ஜானகி......." என குழந்தையின் சப்தம் கேட்ட கருப்பு நாய் மூச்சிரைக்க தெருவெங்கும் ஓடிக்கொண்டிருந்தது. சாமமௌனத்தில் உறங்கிக் கொண்டிருந்த தெருவை நாடக சீன்செட், உடைகளை ஏற்றி வந்த கூண்டு வண்டியில் வெற்றிலைக்கரை ஒழுக மரவாளுடன் இறங்குகிறாள் வயோதிக நடிகை பாலாமணி; மரவாளை தரையில் குத்திக் கீறிக்குத்தி மடியில் முடித்திருந்த விதைகளைத்தூவி அரிக்கேன் விளக்குடன் பாடுகிறாள்.

"ஆலத்தி தீபம் அறிவை மாதர் தாங்கி வர
கன்னியர்கள் ஆடிவரக் கணிகைமார் பாடிவர
வட்டக் குடைபிடிக்க வாள் வீரர் கைபிடிக்க
பட்டுக் கொடை பிடிக்க பல விருது தான் பிடிக்க
பற்பல வாத்தியங்கள் பறவை போல் சத்தமிட"



பாடல் வரிகளை முனங்கியபடி வண்டிக்குள்ளிருந்து கண்ணாடிச் சட்டகத்தை கீழே இறக்கி சட்டகத்திற்குள் நுழைந்தபோது உள்ளே நூல் பந்து உருண்டோடியது. எதிரே கருப்பு நாய் கிழவியை மோர்ந்து பார்த்து வாலையாட்டி பாதங்களை நக்கி முனகியது. நாயின் முகத்தில் தன் முகம் பதித்து இருவரும் நெடுந்தூரம் நடந்து விடிகாலையின் பனிக்குள் தெருமுங்க சேவல்கள் கூவி பனி மூட்டத்துக்குள் ஓடிய நாயைத் தொடர்ந்து நுழைய அவள் மடியிலிருந்து நூல் பந்து விழுந்து ஓடியது. பனி மூட்டத்தில் நடமாடும் உருக்கள் ஒருபோதும் தெரிவதில்லை. "ஜானகி" என்றவுடன் வாயிலிருந்து வெற்றிலைச்சாறு ஒழுகி ஒப்பனையிட்ட கோமாளி அதை துடைத்து மறைந்தான். "நடிப்பின் புலம்பல் மரவாளில் வழிந்து என் வார்த்தைகளின் துக்கம் உனக்கு கேட்கிறதா?" என்றபோது, தொலைவில் மாடு கத்திக்கொண்டிருந்தது. ஊருக்கு வெளியில் மாட்டு வண்டியில் சலங்கை குலுங்கிக் கொண்டிருந்தது.

நீண்ட சாக்கு போர்த்திய கருப்பு நிறச்சிறுமி எதிர்நிற்க குனிந்து சிறுமியின் முகத்தில் கைபதித்து முத்தமிடுகிறாள் வயோதிக நடிகை பாலாமணி. "ஜானகியை பார்த்தாயா என் அன்புச் செல்லமே" என்றபோது சிரித்த சிறுமி "வாயிலில் காத்திருக்கும் கூண்டு வண்டியைச் சுற்றும் குரலிடம் போகிறேன்" எனக் கூறி மறைந்து சிரிக்கின்றது சிறுமியின் முகம். கண்ணீரின் ரேகை இறங்கிய கருங்கல்லை மார்புக்குள் பதித்து "அலையும் ரோக நடிகை புஷ்பலீலாவைக் கண்டாயா? நிலவெளியெங்கும் கல்லைத் தேய்த்து துயரம் துடைக்கும் ஜானகியைக் கண்டால் நாயின் ஊளைக்குள் அலைகிறேன் என்று சொல்" எனச் சொன்ன பாலாமணிக்கு பார்வை மங்க நாயென ஊளையிட மறுகுரல் தந்தது தூரத்திலிருக்கும் கருப்பு நாய். அவள் கண்ணை மூடித்திறந்தபோது எதிரே காற்று குறைந்த பந்துகள் சிலதுடன் விசும்பி நிற்கும் மற்றொரு கோமாளியின் முகத்தில் பாலாமணியின் விரல்கள் பட்டவுடன் பந்துகளை மாற்றி மாற்றி பிடித்தபடி குதித்தோடுகிறான். அவன் போன திசையில் நூல் பந்து உருண்டு கொண்டிருந்தது.

பாலாமணியைக் கடந்து போகும் எருமை மேல் மூன்று சண்டைச்சேவல்கள் திசைகளை வெறித்துக்கொண்டிருக்க நாயின் உளை கேட்டுக் கொண்டே இருந்தது. மரவாளை உடலில் உரசி 'ஜானகி' என்றவுடன்

பெண்ணின் ஊளை மறுபதிலாக வந்தது. "வன நடிப்பின் விரிந்த காட்டுப் பெண்ணின் கேஸ ஈரம் தீண்டி கண்ணீரின் உதிரம் தருவேன் மனம் கரையுமட்டில் பார்வைகொள் என் ஜானகி" என்று சொல்லி பாடலுடன் கோடுகள் கீற வெற்றிடத்தில் குதித்து ஓடும் கோமாளி வெற்றிடத்தில் கடக்கும் கழைக்கூத்தாடிப் பெண்களிடம் கொடுத்துப் போகிறான் உயிரை. எதிரே கருப்பு நாய் பாலாமணியை மோப்பமிட்டு வாலாட்ட "பிறப்பு இறப்பின் பார்வையற்ற உலகில் நிழல் தேடி அலைகிறாயா?" எனக்கேட்க ஊளையுடன் ஓடுகிறது. ஊளையொலியைத் தொடர்ந்து ரயிலின் சப்தம் கேட்கிறது. நூல் பந்து உருண்டோடி ஆட்களற்ற ரயில் நிலையத்தில் விழுந்து சுற்றுகிறது.

கூட்டமற்ற ரயில் நிலையத்தில் ஒப்பனை கலைத்த நடிகர்கள் தடைசெய்யப்பட்ட "பாஞ்சாலங்குறிச்சி யுத்தம்" நாடக நிகழ்வின் நோட்டீஸை ரயில் பெட்டிகளில் பரபரப்புடன் ஒட்டிமுடித்து ஒருவருக்கொருவர் ஊளையிட்டு கடந்துபோகும் ரயிலுக்குள் நோட்டீஸை அள்ளி வீசி ஓடுகிறார்கள். பிளாட்பாரத்தில் காவலர்களின் விசிலொலி வேகம்கொள்ள ஸ்டேஷன் பரபரப்படைகிறது. அவர்கள் மறைந்த திசை நோக்கி லாடமிட்ட பூட்ஸ்கால்கள் நடமாடிக்கொண்டிருந்தன. பிரிட்டிஷ் தடயவியல் போலீஸ் அதிகாரி G.T.H. பிராக்கன் காவலர்கள் சூடி ஒட்டப்பட்டிருந்த நோட்டீஸில் பதித்திருந்த ரேகைகளை சோதனையிட்டான். அதே நொடியில் கடைசி பிளாட்பாரத்தில் கிளம்பத் தயாராக இருக்கும் தனுஷ்கோடி மெயிலில் யாசக வேடமிட்டு ரயில் பெட்டிகளின் கழிவறைக் கதவுகளில் அதே நோட்டீஸ் ஒட்டி தடைசெய்யப்பட்ட நாடகப் பாடல்களை பாடி யாசகம் செய்கிறாள் ஜானகி.

"அண்டம் கிடுகிடுங்க லண்டன் நடுநடுங்க
அஹிம்சைப் போர் தொடுத்தான் காந்திமகான்"

பாடல் ஒலி பிளாட்பாரத்தில் அலைவுற ஊதிய விசிலுடன் ஜானகியைத் தேடுகிறார்கள் பிரிட்டிஷ்காவலர்கள். ரயில் கிளம்ப கடைசிப் பெட்டியிலிருந்து பனைநார்ப்பெட்டியில் ரிப்பன் சுருள்கள் சுமந்து பயணிகளிடம் ரிப்பன் கொடுத்து மறு ரயிலுக்குள் ரிப்பன்கள் பறக்க பயணமாகிறாள். சிப்பிப்பாறை குத்துக்காது நாய்க்குட்டியுடன் பேசியபடி ரயிலுக்குள் பயணமாகும் மதுரகவியை ரிப்பன் கொத்துகள் ஏந்தி அவர் விரல்களை ஜானகி தொட்டபோது "இசையில் கழுவிய நடிப்பின் மூச்சோடு அலைபவளே! என் எலும்புச் செதில்களுக்குள் புலம்பி நகரும் ரயிலுனுள் இளைப்பாறுதலற்று அலைகிறேன்". இருவரும் சட்டென தூரத்தில் ஓடும் விருட்சங்களைப் பார்த்து தலைகுனிய "கண்டாயா நாவை அறுத்த நடிகனை?" என்றபோது நிலப்பரப்பில் நீண்ட பாலத்தை கடந்தது ரயில். பாலத்திற்கு கீழே நாயின் ஊளை கேட்டு ரயில் பெட்டியின் அழுக்கு துடைத்து ஊர்ந்து வரும் கூத்து நடிகன். தன் கிழிந்த கோட்டுக்குள்ளிருந்த நூல்பந்தை கொடுத்து மதுரகவியின் மடியிலிருக்கும் நாயின் கண்ணில் முத்தமிட்டு ஈரத்துணியால் ரயிலின் அழுக்கு துடைத்து நகர்ந்து போகிறான்.

மலைக்குகையைக் கடந்து அத்துவான மழையின் தூறல்களுக்குள் நனைந்து நகர்ந்தது ரயில். மலை நகரின் ஸ்டேஷனில் ரயில் நின்றபோது காகங்களென குடைகள் நகர்ந்து கொண்டிருக்க ஒப்பனையிட்ட பஃபூன்கள் நால்வர் பெட்டி பெட்டியாக யாரையோ தேடி அலைகிறார்கள் கண்ணாடியுடன். ஜானகியை போலீஸ்தேடுவதாக அரசாங்க அறிவிப்பு நோட்டீஸ் ஸ்டேஷன் சுவர்களில் ஒட்டப்பட்டு நனைந்திருந்தது. ரயில் கிளம்ப உள்ளிருந்து கூத்து நடிகன்.

"எந்தமான் நீ தேடுகின்றமான் - அம்மானிடத்திலுண்டு
இந்தமான் கண்ணில் சிக்காதமான்
மானிட வடிவாய் வந்தமான்
இந்தமான் நீதிமான் ஜாதிமானாகி வாசல் விட்டு.....
சொந்தமான் வந்து துரத்தும் இந்நேரம்"

எனப் பாடல் வரிகள் ஒலிக்க பஃபூன்கள் குடையினுள் பதிந்திருந்த சித்திர மான் உருவைத் தடவிக் கொடுத்தபடி வள்ளி...... வள்ளி..... யென நகரும் ரயில் பெட்டியில் முத்தமிட்டபடி ஒருவருக்குள் ஒருவர் மோதி விழுந்து பிளாட்பாரத்தில் ஓடுகிறார்கள். காற்று மழையின் வேகத்தில் குடைகள் மானென துள்ளியோட பஃபூன்கள் தம் ஈரஉடலோடு கைகோர்த்து குடைபோன திசைபார்த்து

கொக்கு பறக்குதடி பாப்பா
அதை கோபமின்றி கூப்பிடடி பாப்பா
நம்மைக் காக்க வந்த கொக்கு
பலிபாவமுடைய கொக்கு

பாடலொலி ஸ்டேஷனின் நிசப்தத்தை களைக்க விசிலொலியின் அபாயத்திற்குள் காவலர்களின் பூட்ஸ் ஒலி நெருங்கி பஃபூன்களை வட்டமிட்டு கைதுசெய்து பிளாட்பாரத்திலிருந்து சிறைக்குள் தள்ளுகிறது.

ஆர்மீனியன் சர்ச் தெருவின் தென் கடைசியிலிருக்கும் ஸ்டேஷனில் நின்ற ரயிலிலிருந்து நாடகப்படுதாவை இறக்கி காலுன்றி இறங்குகிறாள் முதுநடிகை பாலாமணி. தெருவில் யாரும் நடக்கக்கூடாதென உத்தரவு. தூரச்சந்தின் திருப்பத்தில் கருப்பு நாய் மறைய சர்ச் மணியோசை அதிர்ந்து நாடகப் படுதாவை சுற்றுகிறாள். படுதாவிற்குள் இருக்கும் தடைசெய்யப்பட்ட பிரதிகளுக்குள் ஜானகியின் விசிறி இறகுகளை வைத்திருந்தாள். கருப்பு எறும்புகள் படுதாவில் நடமாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து சிரித்தபடி, "நீ பயணம் போகும் பாதையில் அவள் தடமிருக்கும். அத்தடத்தில் கோலமிட்டு வா........" என மணியோசையின் திசையில் முறைத்து நாடகப் படுதாவை இழுத்துப் போடுகிறாள். சர்ச்வாசலில் குழலூதும் பார்வையற்ற யாசகனின் முன் அவிழ்ந்து கிடக்கும் தடைசெய்யப்பட்ட பிரதிகள்.

உள்ளே ஒருவர் இல்லாவிட்டாலும் சுவர்களில் ஓடும் ஜானகியின் பிரதி எரிந்து கொண்டிருக்கும் வசனத்துடன் மேல் அறையின் வெண்காக்கைகள் சடசடப்பதான உணர்வு. தெருவில் கடக்கும் கூண்டு வண்டியில் பாலமணி. வண்டியிலிருந்து இறங்கி சாவிக்கொத்துடன் ஒவ்வொரு அறைக்கதவாகத் தட்டி அலைகிறாள். எல்லா அறைகளிலும் பாடல்கள் முணுமுணுக்க அறைகளுக்குள் திறக்கும் பிரதிகள் கசியும் இசை ஜன்னலுக்கு வெளியே அலைகிறது. தெருவில் நாய் ஊளையிட சாவித்துவாரத்தில் கண்பதித்தபோது சுடர்கள் அசைய அறையின் சுவர்கள்

கறைந்து கொண்டிருந்தது. ஜானகி... ஜானகி என ஒவ்வொரு அறைக்கதவாகத் தட்டி அலைகிறாள். தூரத்தில் பூட்ஸ் கால்கள் ஓட கூண்டு வண்டிக்குள்ளிருந்து நாடகபடுதா இழுத்து வந்து பிரித்து ஒவ்வொரு அறை வாசலிலும் தடைசெய்யப்பட்ட பிரதிவைத்து சாவித்துவாரத்திற்குள் மூச்சு திணித்து போகிறாள். அவள் பின்னே கருப்பு நாய் எட்டிப்பார்க்கிறது. அறைகளுக்குள் கூசும் சுடரொளியில் நடமாடும் நிழல்களின் நடிப்பை யார் அறியக் கூடும். மறுபடி மறுபடி சாவித்துவாரத்தில் கண்பதிக்க பாசிபடர்ந்த தூண்களில் உதிரும் சுதை சிற்பங்கள் முனகும் ஒலி அறைகளில் கேட்கிறது.

தெருவில் கூண்டு வண்டி நகரும் சத்தம் உள்ளே ஜானகி ஏந்திய சிறுமியும் ரிப்பன்கள் வீசி பயணமாகிறார்கள். வெளியேறும் பஃபூன்கள் நால்வரைப் பின் தொடர்ந்து போகிறாள் சாம்பல் நிற நடிகை. உள்ளே பாலாமணியின் ஊளை நீண்டுகொண்டிருந்தது. ஒவ்வொருவரும் தெருவின் வெவ்வேறு திருப்பங்களில் மறைய வளையல்கள் நிரம்ப அணிந்த நடிகன் உள்ளே நுழைய தோல் வாத்திய அதிர்வில் சுவர்களிலிருந்து தண்ணீர் வழிந்து தெருவில் ஊர்ந்து கொண்டிருந்தது. நகரும் தண்ணீரில் முகம் பார்க்கும் சாம்பல் நிறப்பிரதிகள். நாகப் பிரதிகளுடன் எஸ். வி. தாஸை கைது செய்து ஜீப்பில் ஏற்றினர் பிரிட்டிஷ் காவலர்கள். ஜீப்கள் மறைந்த பின்பும் ஆர்மீனியன் சர்ச் தெருவிற்குள் பார்வையாளர்கள் வருவதும் அலைவதும் அதிகரித்துக் கொண்டிருக்க மனிதர்களின் நடமாட்டம் குறைந்து காகங்கள் மிதந்து கொண்டிருந்தன.

சர்ச்தெருவின் டிராம் வண்டிகளில் பயணம் செய்து கொண்டிருந்த பஃபூன்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நாடகக்காரி ஜானகியின் கடிதங்களும் மதுரகவியின் கடிதங்களும் பிரிட்டிஷ் போலீஸ் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டு சிறை வைக்கப்பட்டன.

சிறைவைக்கப்பட்ட கடிதங்கள்

7 - 7 - 1927

ஜானகியிடமிருந்து............

நம்பிக்கைகள் தரவே கரையும் வெளியின் தேகத்தோடு பித்தம் கொண்டு அலைகிறேன்.
என் பைத்தியப் பாதைகளின் பயங்களை போக இலைகளை சுமந்து வருகிறேன்.
உருவை இழக்க ஒளியின் இருளுக்குள் ஒளிந்து ஒளிந்து நடிக்கிறேன்.
இடைவெளியின் மௌனமே நடிப்பு, பயமே அதன் மொழி, வேதனை அதன் உயிர்.
என் சூதகநாளின் வேதனை கரைக்க உன் பலஹீனங்களின் கலையை ஞாபப்படுத்திக்கொள்கிறேன்.
நீங்கள் தியாகமும் துறவும் இணைந்த முழுமை.

இப்படிக்கு
உங்கள் ஸ்வாசத்தின் ஈரம்
- ஜானகி
(துரத்தும் கண்காணிப்பில் ஒத்திகை) இரவு

11-07-1928

என் நேசருக்கு,

கனிகளும் தாவரங்களும் பெருகுகின்ற வயல் வெளிகளில் கூத்தாடிகள் குலவையிட ஊரெங்கும் நாய்களின் ஊளை. கூண்டு வண்டியின் சத்தம் என் சிறை இரவை நிரப்பிக் கொண்டிருக்கிறது.

.... உங்கள்
ஜானகி.

17-09-1929

நேசத்தின் பிரியருக்கு,

பனை நொங்குக் குழியறைகளில் உதடுபதித்து உங்கள் பெயரைக் கூவுகிறேன்.

மேடையின் உடல் அழுத்தத்தில் உணர்வுகள் மோனம் கொள்ள அமீதக் கொடி வதனப்பிறை சூடி அலைந்த அரங்கின் அராகநிறம் இமைக்க ஈர்மலரோடு உங்களை சந்தித்தேன். இல்லை. சந்திக்கவில்லை. தேக வெளியில் துளிர்க்கும் தங்கத்தாவரங்களை உங்கள் நரம்புகள் குளிர பதிப்பேன்.

நாம் ஒன்றாய் நிகழ்த்திய கூத்தின் மாமேனியர்கள் வடு முகங்களோடு நம்மை முத்தமிட்டது ஞாபகமிருக்கிறதா? ....வாருது கூந்தலோடு கனவுகளில் அலைகிறேன்.

கனவில் உங்களுக்கான பாடலை எழுதினேன்.

உங்கள் மூச்சின் இசையொலி
ஜானகி.

15-03-1930

போகிப் பண்டிகை நாளின் கனவில் எழுதும் திராணியின்றி பேனாவை திறந்து திறந்து மூடுகிறேன். ஹிருதயம் சருகென நொறுங்கிவிடுமோ என்ற பயம். இந்தக் கடிதம் எழுதுவதில் துணிந்தே விட்டேன். என்னை

நீ மன்னிக்கத்தான் வேண்டும். என் கடிதங்களையெல்லாம் ஒரு குழந்தையின் ஏக்கங்களைப் போல் எடுத்துக்கொள்பவள்தான் நீ. என்னிடமிருந்து நீ விலகி விடுவாயோ என்று விசும்புகிறேன். உன்னிடம் எதையும் மறைக்கும் மனம் எனக்கில்லை. என்றுமே நேசத்திடம் பைத்தியம் கொண்டவர்கள்தான் நாம். சரி கனவைச் சொல்கிறேன் கேள்.

கற்கள் பதிந்த தெருப்பாதை வீடோ மாளிகையோ தெரியவில்லை. உன்னைப்பார்க்க பழைய கண்ணாடியோடு நான் வருகிறேன். அங்கே காகங்கள் பறக்க அகன்ற நெத்தியுடன் உன்னோடு ஒருவர். உங்கள் இருவர் கரங்களும் மரவேறனப் பிணைந்திருந்தது. இருவரும் என்னைக்கண்டு சிரித்து விலகி விலகி.... நானோ வெகுதூரத்திலிந்து சப்த்தமாகப் பேசுகிறேன். மூடப்பட்ட நிறைய ஜன்னல்கள் கொண்ட அறையில் நீயற்ற என் இருப்பைத் தாங்காமல் கண்ணாடியை இறுக அணைத்தபடி வட்டமிடுகிறேன். கதவு தட்டப்பட்டு காவலர்கள் என்னைக் கைதுசெய்து படுக்கையிலிருந்தே இழுத்துப் போகிறார்கள். இப்டியொரு கனவு எனக்கு நேரவேண்டாமென்றே இரவின் கரங்களில் சிரம்பதித்தேன். உனக்குத் தெரியும்தானே, கனவின் மீது தீராபித்து கொண்டவன் நானென்பது.

என் புலம்பலுக்காக இக்கடிதத்தை உன்கண்களில் வைத்து என்னை மன்னித்துவிடு.

18-03-1930

நேசத்தின்........

(காவலர்களிடமிருந்து பிரிக்கப்பட்ட உங்கள் கடிதம் இவ்விரவே எனக்கு வந்தது. உடன் எழுதுகிறேன்)

நேசம் ரூபற்றது, என்றும் புற உலகில் சஞ்சரிப்பதில்லைதானே. நெருங்கினால் மறைந்து விடும் நிறமற்ற உருவம்தான் அது.

பயமும் தனிமையும் வேதனையும் கொண்ட தீண்டப்படாத கனியது. நம் நேசத்தை எப்படி வேண்டுமானாலும் பார்த்துக்கொள்ளும் உரிமை கனவுகளுக்கு மட்டுமே உண்டு. கனவை வேண்டாமென்று சொல்லாதீர்கள். கனவுதான் இப்பிரபஞ்ச உயிர். உங்கள் ஞாபகத்தில் பலமடையும் என் நடிப்புடல் கனவுகளிலேயே அலைவுறுகிறது. அடுத்து வரும் உங்கள் கனவுகளில் உருவமற்று அலைந்து கொண்டிருப்பேன்.

பின்குறிப்பு:

வேலூர் சிறையில்தான் புயற்காற்று தாஸ் இருப்பதாக கேள்விப்பட்டேன். கண்டால் என் அன்பின் ஞாபகச்சுடரைத்தாருங்கள். சிறையதிகாரிகளின் சொற்படி அடுத்தவாரம் நான் விடுதலையாகலாம்.

தங்கள் அன்பு

ஜானகி

29-03-1930

நேசருக்கு;

நேற்று மாலை என் சக பெண் கைதிகள் எனக்கு ஒப்பனையிட்டு மானைத்தேடியலையும் வன வள்ளியின் பாடலோடு நடிக்கச் செய்தனர். உங்களது 'வெள்ளை கொக்கு பறக்குது' பாடல்வரிகளை கோரஸாக அவர்கள் பாடியதும் சிறையதிகாரிகளால் மிரட்டப்பட்டு தண்டனைக்காலம் அதிகரிக்கப்பட்டது. தொடர்ந்து சோதனையிடப்பட்டுக் கொண்டிருக்கிறோம். சிறைக்குள் விழும் ஜன்னல் கம்பிகளின் நிழல்களுக்கிடையிலான ஒளிவெளியைப்பார்த்து காத்திருக்கிறோம். இருந்தும் உங்கள் நேசத்தின் துன்பத்தை நினைத்து நினைத்து உயிர்ப்படைகிறேன். நாளை என்னை கரூர் சிறைக்கு மாற்றப்போவதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சந்திப்பில் பலமடையாத நம் காதலுக்காக பிரார்த்தனை செய்கிறேன்.

உங்கள்

ஜானகி.

என் பித்து மனமே;

அன்று இரவு நீ கைது செய்யப்பட்டபோது உன் ஞாபகங்கள் கசிய புத்தகங்களின் தேகபக்கங்களுக்குள் இறகு இறகாய் வைக்க ஒருபோதும் புத்தகங்கள் மூடுவதில்லை. துக்கம் என் நரம்புகளில் நடமாடியபோது கண்மூடியே ஏற்றுகிறேன் சுடரை. இம் மழைநாளில் என் விரல்களில் நீர்த்துளிகள் தாளமிட உனக்கான கடிதத்தை நான் மரிக்கும் வரை எழுதிக்கொண்டிருப்பேன் என்ற நம்பிக்கை. நம் நேசத்தின் வலிமையை இயற்கை உணரவேண்டுமென்பதற்காக நாவையறுத்த நடிகனின் பாடலை உதிரம் வெப்பம் கொள்ள இரவுகளெங்கும் பாடியலைகிறேன். நாம் கடைசியாக ஒத்திகை செய்த பெயரிடப்படாத அந்நாடகத்தின் நாயகன் தன் நேசத்தின் சோகத்தை தனிமையை அவள் உணர வேண்டுமென்பதற்காக வெளிப்படுத்தும் தைரியமின்றி குருடர்கள் வாசித்த இசையின் சீதவலைகளை பரிசாகத்தருகிறான். பின் அவளைச் சந்திக்கும் தைரியமின்றி படைப்பின் மாற்றமென மரணத்தைத் தழுவுகிறேன். நம்முள் எதுவும் ஸ்தூலமற்றுக்கொண்டிருக்கிறது. பார்த்தாயா என் மனதை? நாட்களின் பாதையில் என் பயங்களை தனிமையின் பிறழ்வுகளைத்தேற்ற எவருமின்றி எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறேன்.

நாளை பாணபுரத்து வீரன் நாடக விஷயமாக கோர்ட்டில் விசாரனை.

உனக்காக வேம்புத் தோட்டங்களுக்குள் அலைந்து கொண்டிருக்கிறேன்.

உன் பைத்தியமனம்

மதுரகவி.

நடுஇரவில் கரைந்து அழும் பூனைகளுக்கு

தூக்கம் தொலைந்த இந்த நள்ளிரவிலும்
குழந்தைகள் போல் மனம் கசந்து கரைய
இன்றும் வந்துவிட்டீர்களா நண்பர்களே
கடவுள் கைவிட்ட மனிதர்கள் கூடும்
மதுக் கூடத்திற்கு இன்றும் நான்
போய் இருந்தேன்
கோப்பைகளுக்குள் கவிழ்ந்தது கருப்பு நிற திரவம்
உறக்கத்தை கனவு காண்பவர்களின்
முகங்களாய்
கோப்பைகளின் எதிரே அமர்ந்திருந்தோம்
பெருமரம் உதிர்த்த மழைத்துளியென
தாபத்துடன் பருகினோம்
புலன்கள் கிளர்ச்சியுற
மதுக்கூடத்தை இழுக்கத்தொடங்கினோம்
எங்கள் ஊரின் நதிக்கரைக்கு

0 0 0

குழந்தையின் கரைதல் என உங்கள்
அலறலில் உணரத் தொடங்குகிறேன்
அவர்கள் இருப்பிடங்களுக்கு போய்விட்டனர்
தூக்கம் நிறைந்த வீடுகளிலும்
தூக்கமற்று வெளிச்சத்தில் மூச்சு முட்டும்
அறைகள் மீதும்
அலைந்து கொண்டிருக்கிறீர்கள்
முதல் வாய் கசப்பாகத்தான் இருந்தது
அது எப்போதும் அப்படியே தான்
இருக்கிறது நண்பர்களே
இன்றும் வெளிச்சத்தில் பளபளத்து
நடனமிடும் ஆல இலைகளை கண்டேன்
அச்செடியின் வேர்கள் பெயர்த்திருக்கும்
சிதில வீட்டை நீங்களும் அறிவீர்கள்

0 0 0

"பகலுக்கு விரையும் சாலைகளை மூடுங்கள்"
குற்றவுணர்வை பெருக்கும் பகல்
மாபெரும் வாதைக் கூடமெனக் கண்டோம்
இனி பகல்கள் வரப்போவதில்லையென
இறுமாந்திருந்தோம்

0 0 0

நகரின் மீது மேகத்திற்கு சற்றுக்
கீழே
முளைத்திருக்கும் நீண்ட, அழகிய சவப்பெட்டியை
இன்று நான் பார்த்தேன்
இன்னும் அது என் ஜன்னலிலிருந்து தெரிய தொடங்கவில்லை

- சங்கர ராமசுப்பிரமணியன்



கோணங்கியின் பாழி

..... சா. தேவதாஸ் .....

மோனத்தில் பிறந்து மோனத்தை விளக்க முற்பட்டு மோனத்தில் ஆழ்ந்து விடுவதாயிருக்கிறது எழுத்து. சேகரமான விஷயஞானத்தை பகிர்ந்துகொள்ள விழையும்போது, அது பொருத்தமற்றதாகிவிடுகிறது. அறிவு முற்காலத்ததாகிவிட, அறிதல் மட்டும் நிகழ்காலத்திற்குரியதாகிறது. சம்பவங்களின் நினைவு எழுத்தாக்கப்படும்போது வார்த்தைகளே எஞ்சுகின்றன.

வார்த்தைகளுக்குள் ஒன்றுமில்லை என்று கண்டு கொள்ளும் கோணங்கி வார்த்தைகளுடன் கதை, கதைப் பின்னல், பாத்திரங்கள் என எல்லாவற்றையும் நிராகரித்து விடுகிறார். பகுத்தறிவின் அலசலுக்கு வேலை இல்லை. பிரக்ஞைப் பரப்பில் உண்டாகும் சலனங்கள், பின் அடிமனம், நனவிலி மனம் என்ற அடுக்குகளில் கசிவு கொண்டபின் மீண்டும் அவற்றை நனவிலி. அடிமனம் பிரக்ஞை தளம் என்று கொண்டு வந்து எழுதுவதில் நிறைவின்மை.

உள்ளுணர்வுப் பரப்பில் உணர்ந்த மாத்திரத்தில் எழுத்தாக்கும் முயற்சியே கோணங்கியின் எழுத்து. இது, வார்த்தைக்கு முந்தைய, மொழிக்கு முந்தைய உணர்தலைக் கையகப்படுத்தும் முயற்சியாகும், சரித்திரங்களின் பாரங்களை தூக்கி எறிந்துவிட்டு ஆதிவாழ்வின் பொலிவை, மலர்ச்சியை, விகசிப்பை தொற்றிக் கொள்ளச் செய்திடும் பயணமாகும், தத்துவங்களின் துணையின்றி வாழ்க்கையின் பன்முகத்தண்மையை ஊள்வாங்கும் துடிப்பாகும், இவ்வகையில் மறந்து போனவற்றையும் மறைந்து போனவற்றையும் மீட்டெடுப்பதாகும். எல்லா ஜீவராசிகளினதும் மங்கிப்போன குணரூபங்களை ஒளிரச் செய்வதாகும்.

“உள்ளுணர்வுப் பரப்பில் உணர்ந்த மாத்திரத்தில் எழூத்தாக்கும் முயற்சியே கோணங்கியின் எழூத்து. இது, வார்த்தைக்கு முந்தைய, மொழிக்கு முந்தைய உணர்தலைக் கையகப்படுத்தும் முயற்சியாகும், சரித்திரங்களின் பாரங்களை தூக்கி எறிந்துவிட்டு ஆதிவாழ்வின் பொலிவை, மலர்ச்சியை, விகசிப்பை தொற்றிக் கொள்ளச் செய்திடும் பயணமாகும், தத்துவங்களின் துணையின்றி வாழ்க்கையின் பன்முகத்தண்மையை ஊள்வாங்கும் துடிப்பாகும்”,

தட்டையாகிவிட்ட மொழி வேகமும் வீறும் கொண்டிருந்த காலகட்டத்திற்குப் போக விரும்புகிறார். எங்கே சொற்கள் நெகிழ்ச்சியும் ஆழமும் பரவசமும் கொண்டதாயிருப்பதை கண்டு கொண்டு அந்த மொழியிலேயே, அக்கிளர்ச்சி நிலையிலேயே எழுதுகிறார்.

‘பாழி’ என்பது குகையினை மட்டுமே குறிக்கின்ற சொல்லாகிவிட்டது. ஆனால் திருமந்திரத்தில், அருணகிரியார் பாடலில், குணங்குடியார் பாடல்களில் அதன் பல்வேறு ஆட்சிகளை அறியமுடிகிறது, ‘அழிவு’ என்பதையும் குறிக்கின்ற இச்சொல், அதன் நீட்சியாக ‘வெறுமை’ யினைக் குறிக்க, வெறுமை அதன் சாயல்கொண்ட ஆகாயத்தைத் தொட்டுப்பின் ‘பிரகிருதி’யை விளக்கி அதன் அம்சமான ‘ஆன்மா’வையும் உணர்த்திவிடுகிறது. நேர் எதிரானதைக் குறிக்கும் பொருளையும் ஒரு சொல் எப்படிப் பெறுகிறது? நேர் எதிரானதையும் தனதாக்கிக் கொள்கின்ற ஆதிக் கருத்தாக்கப் பண்பிலிருந்து பெற்றிருக்க வேண்டும். ஒளியின் இன்னொரு அம்சமே இருள், நன்மையின் மறு பக்கமே தீமை என்பதுபோல. இப்பாழியின் உயிரம்சமாக பாழி எனும் மங்கையை உருவாக்கி விடுகிறார் கோணங்கி, இது போலவே ‘தானியாள்’ என்பவளும். விதிஷா என்னும் நகர் / நதிகூட பெண்ணாகிவிடுகிறது. ‘சூஃபியா’ கூட இடம் பெறுகின்றாள்.

கர்நாடக இசை தமிழிசையாக இருந்த காலகட்டத்தில் அதன் உச்சங்களைத் தொட்டவர்களுள் ஒருவரான தனம்மாளின் வீணையிலிருந்து பிரபஞ்சகானம் இசைக்கப்பட்டது, விளாத்திகுளம் சுவாமிகள் என்பவர் பனங்காட்டுப் பெருநரியாக உலவியது, கமலவேணியின் உத்வேகத்தில் பாஸ்கரதாஸ் விகசிப்படைந்தது, காரணாம்பட்டு நாவிதனின் முகவீணை அளித்த அதிர்வுகள் முதலானவை முன்வைக்கப்படுகின்றன நாவலில்.

பார்வையிழந்த பிநோதிபிகாரி முகர்ஜியின் அகவிழிப்பார்வையில் அஜந்தா சித்திரங்கள் பதிவாகியிருந்தமையும், அருகரின் இருவிழிகளாக பனிவரகும் அக்னி வரகும் அமைந்திருந்தமையும் படிமங்களாக உருக்கொண்டு கவிதையின் அதிர்வுகளை ஊட்டிவிடுகின்றன, தாசியின் உடலாகியிருந்த திண்டிமகவியான அருணகிரி, அருணகிரியாகப் பாடிய பாடல்கள் நினைவூட்டப்படுகின்றன.

பார்வைப்பரப்பில் நிலவியல்காட்சிகளை உள்வாங்கி, அவற்றை அரூபமானதாக்கிவிடாமல் பருப்பொருள் நிலையில் ரத்தமும் சதையும் கொண்டதாக உணர்த்துவதுதான் கோணங்கி எழுத்திலுள்ள சிக்கலாகவும் பல்மாகவும் இருக்கிறது. தாவரங்களில் ஊர்ந்து செல்லும் எறும்புகளுக்கு அதிசய உலகமே விரிந்து கிடக்கின்றது.

“.............தோகை விரித்த பச்சை சிறகுடன் பால்ஊறும் கிளைகளில் கடித்து முத்தமிடும் எறும்புகளின் சீதள ஏடுதிறந்து வாசனை அலை, உலர் நிலத்தாவரங்களில் சருகு மூடிய கனிகளில் பனிவூட்டிய மேல்தொலியை கடிக்கின்றன செவ்வெறும்புகள். கதைத்திரட்சியில் சாம்பல் ருசியுடன் உலர்கனி. செடிக்குள் ஏறி ஒவ்வொரு கிளைகொப்பில் இலையடியில் தலைகீழாக ஊர்ந்து கடித்தவடு, வலியுடன் பருவம் துவங்கியிருக்கும். உற்கிளைகளில் ஏறிய மண்நீர் நிறங்களாகக் கனியும். விதைமணி வட்டமானபால் பாதையில் தத்தளிக்கிறது. உள்ளே துயிலும் மணிஉயிர்

கருவாகச் சுழிந்த அரும்பில் சூரியனைத் தாங்கிநிற்கும் அழுத்தம்" பக்கம் (312)

பழங்களின் நிறங்களாலும் மணங்களாலும் பரவசப்பட்டு பாடும் எறும்பின் பாடல், விதைகளுக்குள் பரவுவதும், நிலம் அதிர்வதும் என்றவாறு ஒரு நுண்ணுலகம் விரிவு கொள்கிறது.

அலங்காரங்கள் இல்லாது, வேடங்கள் இல்லாது இருக்கும் மொழியே பிரபஞ்ச ரகசியங்களைத் தெரிவிக்கும். இவ்வகையில் திக்குகளை ஆடையாக உடுத்திருந்த சமணரும் இந்த ரகசியங்களைத் தெரிவிப்பவராகின்றனர். அவர்தம் ஆற்றல் நிகண்டுகளில் மொழியின் சூட்சுமங்களாய் பதிவாக உள்ளன என்பது கோணங்கியின் பார்வை. இந்த இடத்தில் 'பால்யா' உருக்கொள்கிறாள்.

"தத்துவங்கள் சித்தாந்தங்கள் இல்லாத, சம்பவங்கள் கதைகள் இல்லாத, பருப்பொருள் சார்ந்த உலகின் சாயைகள் கூட இல்லாத உலகில் பயணிப்பது சவால்மிக்கதாகும். எண்ணப்போக்குகளையும் உதறிவிட்டால் எப்படி இருக்கும்? எண்ணக் கலவையாகவே ஒருவர் தன்னை எண்ணிக் கொள்ளும் பட்சத்தில், எண்ணங்களைப் போக்கிவிட்டால் இருப்பது என்ன?"

"..........அசையாத நீர்ப்பரப்பின்மேல் மொழியின் நிர்வாணத்தில் ராகதுவேஷமற்ற மொழித் தொகுப்பாக அலையற்று மிதந்து கொண்டிருப்பதை பார்த்தாள் பால்யா. உடையில்லாதவர்களால் எழுதப்பட உருவற்ற நிகண்டுகள் நீந்திவருகின்றன மேலே. தண்ணீரின் முதிய உருவாக கேசலோச்சனஞ் செய்தவர் பளிங்குப்படிமமாய் தோன்றிய நூலுடன் மயிற்பஞ்சத்துடன் நிர்வாணநீர் அசைந்து மௌனமானது அந்தரவெளியில். கொஞ்சதூரம் அவ்வழியே விளக்குடன் போகிறார்கள். அவளை ஊடுருவிநின்ற நிர்கந்தர் தன் விரல் நுனியிலுள்ள சொல்லை இறவாத குயில்விளக்கின் திறந்த தலையில் சிறுதானியமாக ஊட்டுகிறார். அண்ணாந்து வாய் திறந்த ஒளி சுடர்ந்து பால் என விம்மி உள்ளே குயிலின் தொண்டைக்குள் இறங்கி செல்ல அடியாழங்களில் பதுங்கிய இருளில் பதிந்து ஒளிக்கும் பால் எனும் சொல் சுழன்று........... கூட கூட...... வெனக் குயின்றது புறங்களில் அதிர்ந்து, ஏனோ இவ்விரவின் தனிமை சப்தமற்று நிற்கிறது பாலின் ஆழத்தில். ஒளிக்கோடுகளில் பால் முணுமுணுப்பதும் அருகில் அழைப்பதுமாக சமிக்ஞை கொண்டது குயில் விளக்கில்". (பக். 375-76)

தத்துவங்கள் சித்தாந்தங்கள் இல்லாத, சம்பவங்கள் கதைகள் இல்லாத, பருப்பொருள் சார்ந்த உலகின் சாயைகள் கூட இல்லாத உலகில் பயணிப்பது சவால்மிக்கதாகும். எண்ணப்போக்குகளையும் உதறிவிட்டால் எப்படி இருக்கும்? எண்ணக் கலவையாகவே ஒருவர் தன்னை எண்ணிக் கொள்ளும் பட்சத்தில், எண்ணங்களைப் போக்கிவிட்டால் இருப்பது என்ன?

".........யாருமில்லை, உங்களுடையது என நீங்கள் அடையாளங் கண்டுகொள்ளக் கூடியதான ஆளுமை இழந்துபடுமே என்று அஞ்சுகிறீர்கள். இதன் காரணமாகவே பீதிகொள்கிறீர்கள்". ①

இந்நிலையில் பத்தன் அனுபூதியாளனாக முடியும். சித்தன் தன்னைப் பிரும்மமாக உணரமுடியும். இவ்விரண்டுமல்லாத பாழியும், பால்யாவும், தான்யாளும், தாவரங்களுடன் மிருகங்களுடன் மற்றுமுள்ள ஜீவராசிகளிடமெல்லாம் கருணையுடன் உரையாடுகின்றனர், நெகிழ்ச்சி கொள்கின்றனர், அருவியின் வீழ்ச்சியை, நதியின் பாய்ச்சலை, கடலின் சீற்றத்தை, எரிமலையின் வெடிப்பை, இடியின் முழக்கத்தை, மழையின் வர்ஷிப்பை உணருகின்றனர்.

"..........சிதிலங்கள், இறந்தவர்களின் சாந்நித்யம் இருப்பவர்களின் மிரட்டல் - இவையெல்லாம் பின்தங்க அவன் எல்லைகளைக் கடந்து கொண்டிருந்தான்" ② என்பதான பயணத்தில் ஈடுபடுகின்றனர், படைப்பும் பிறப்பும் தானியத்தில் கருக்கொள்கின்றன.

பட்சியின் அலகில் இருக்கும் தானியம், உள்நாக்கு ஈரம்பட்டு துளிர்த்து நிலப்பரப்பாய் விரிந்து ரெக்கைகளுடன் பறக்கிறது மட்டுமல்ல 'தானியமே அறிவின் உச்ச எல்ல' யாயும் உள்ளது. 'நட்சத்திரங்களின் ஆங்கார'மாயும் இருக்கிறது. 'விதைத்த முதல் தானியம் கண்ணீராக இருக்கக் கூடும்'.

"பெருந்தாயின் கூழாங்கல் முலைகளின் எரிமலைவாய் திறந்து உயிர்களின் அருவி கீழ் பாய்கிறது. பால் ஊறும் பருவத் தாவரங்கலுக்கான தானியங்களை உதிர்வுகொள்ளும் முலைப்பாதை. அவை சிலீமுகம் தூக்கிய வாலமங்கை மென்மறு வளர்ந்து எரிமலை அனைந்து போனவாய் உள் நுழைந்த மீன் சுருதிகள் படைபடையாய் சுழன்று உள்ளேறுகின்றன தீராமல்" (பக். 341)

தாயின் உயிர்ச்சாரத்திற்கும் தாவரங்களின் உயிர்ச்சாரத்திற்குமிடையே இணைவு கண்டதுடன் அமையாமல், சொல்லுக்கும் விரிவடைகிறது.

"முடிவற்ற குணங்களாக மாறிய பால் காகிதத்தில் விழுந்து மறையும். அதை விரல் நுனிக்கு நகர்த்தி பலபொருளின் அர்த்தத்தை விரிக்கும் ஒரு சொல்லின் செதில்களின் நூறுவகைத் தொனி ஒலி பால் எனும் உச்சரிப்பில் மிகப்பல விருட்சங்களின் கிளைகளுக்குள் ஊறும்பால் ஒடிந்த இலையில் பால் வெண்நிலவாய் ஒளிகசிய பாழியின் ரஸ நாளங்களைத்திறந்து விருட்சமாய் கிளைத்தது ஒரு சொல்" (பக். 350)

'தானியத்துளிள்ளிருந்த பெண்ணுரு தாவர மனிதனோடு கூடி கலவியில் பெருகிய கனிமரங்களின் பாதை தோன்றும்' (பக். 34)

'சூரிய வெளிக்குள் அலைவுறும் வார்த்தை ஒன்றின் முடிவற்ற துயரம்தான் தானியம்' (பக். 56)

இசைபெருக்கெடுத்தோடச் செய்ததோடு திசைவழி காட்டியவராயும் தாசியர் இருந்ததைப் பார்க்க முடிகிறது.

சங்கிலி என்னும் தாசியின் தாபத்தில் விரிவு கொண்டதே சுந்தரர் தேவாரம். ரிஷபருக்கு வாழ்க்கை நிலையாமையைச் சுட்டிக்காட்டியவள் தாசி நிலஞ்சநா,

பனிலிங்கம் உருவாகி உருகுவதை அமர்நாத்தில் கண்டு அதிசயிக்க,

ஆதிநாதரின் நந்தி கரைவதான படிமத்தை கோணங்கி உருவாக்குகிறார்.

"பனிக்குள் ஆதிநாதரின் நந்தி கரைந்து உருகியவாறே இருக்கும். உயிர்களின் திவ்ய தொனி பேச்சலலாத் தொனி உயிர் தொனி சுருதி பஞ்சமி. குகைவாசத்தில் திகம்பரமுனி பனிப்பாறையாகி சிறு சிறு வண்டுகளால் காற்றின் அழுத்தத்தில் மணலாகி நொறுங்கி துகள் ஒன்றாய் மிதந்து வெண்வெளியில் பறந்து கொண்டிருக்கிறார் அடிப்புள்ளியை நோக்கி, பனிமணலாய் உருகிக் கோர்த்த துகள்கூடி விசும்பி மேல் எழுந்து மிதக்கும் பனித்தீவம்". (பக். 409)

"மொழியே கரையும் பனி உயிர்தான் நிர்கந்தருக்கு" (பக். 411)

".........நிறங்களின் குறியீடுகள் வாசனைகளின் எல்லையில் முடிந்து வாசனைகள் துடைக்கப்பட்ட வெண் வெளியில் திகம்பரப்பூ தத்தளித்துக் கொண்டிருக்கிறது பிரபஞ்சத்துவமாய். ஆன்மாவின் திகம்பர மலைகளின் வடிவம் சூன்யத்தின் வரைகோடுகளுக்குள் ஒரு தனித்த நாணர்களுக்குள் பூமியின் நிறம் கலக்கும் வெண்பனி உருகும் திகம்பரப்பூ" (பக். 437)

இந்த இடத்தில் பௌத்தம் குறிக்கும் சூன்ய நிலை குறித்த சொல்லாடலை "பாணபட்டன் தன் வரலாறி"லிருந்து எடுத்துக்காட்டலாம்.

"எந்தப்பொருளுக்கு இருப்பு என்பது இல்லையோ, இல்லாமலும் இல்லையோ, அதற்குப் பாழ்மை என்றேன் பெயரிட்டார்? உண்டு என்பதும் இல்லையென்பதும் இரண்டும் இல்லை. இந்த இரண்டுக்கும் குறைபாடில்லை...... பாழ்மை, பற்றுக் கோடின்மை, முழுத்துறவுநிலை உள்ளத்துக்காட்சியில் உறையும் கருத்து வடிவங்களாம். அப்பொருளை விளக்கமாகச் சொல்லாதது மொழியின் குறைபாடே, அறிவுறுத்த வழக்கில் எடுத்துக் கொண்ட சொல் மட்டும்தான் இவையாவும். நீ வெறும் சொற்பொருளில் இறங்காதே; சூழ்ந்து நினைப்பாயாக...." ③

மரபினையும் வரலாற்றையும் மறுவாசிப்புக்கு உட்படுத்தும் இடங்கள் உள்ளன. ஆனால் இதில் சில சிக்கல்கள் சேர்ந்து விடுகின்றன.

"பீலிவெந்துயர் பிண்டியும் தண்டும் பாவும் குடையும் வெந்து மண்பூசிய சமண உவர்மண் பட்டினத்தில் கழுவேற்றினர். பொறியிலிச் சமணர் அத்தனை பேரும் ஆவிவெந்து யந்திரம் வெந்து மந்திரம் வெந்து கைப்பீலி வெந்தது. நெஞ்சில் பீதி கொண்ட வாது கொண்டு பொருள் அசோகு வெந்தது, திக்குகளில் மண்டியதீ அருகுநின்ற சமணர் மேலும் பட்டது". (பக். 332)

'உலக விளிம்புகளில் அகதிகள் ஏற்றிய தீ எரிந்து கொண்டிருக்கும் இவ்வேளை', என்று ஈழத்தமிழர் அகதிகளாய் அல்லாடுவதை உணர்ந்த வரும்போது இலங்கை வரலாற்றுக்குள் வாசிப்பைச் செய்கிறார். நிறுவனமாகிவிட்ட மகாவம்ச பௌத்த குருமாரின் பாத்திரத்தை கண்டு கொள்ளும் கோணங்கி இராமாயண காலத்திற்குள் போகும்போது, 'இசை உள்ளவரை ராவணன் சமநிலை தவறவில்லை' என்கிறார். ஆரியர் - திராவிடர் முரண்பாட்டினை ஒருவர் மீது இன்னொருவர் கொள்ளும் மேலாதிக்கத்தினை உணர்ந்த இத்தகைய வாசிப்புமுறை பொருத்தமானதில்லை.

என்று சமணர் கழுவேற்றத்தை தீவிரமானதொரு தளத்தில் விவரிப்பதில் சிக்கவில்லை.

சாலமோனின் யூதமரபும் யாதவ சர்ப்பயாகமும் சமண பார்சுவரின் நாகமும் அருகருகே வந்து விடுவதில் பிரச்னை எழுகிறது. ஒன்றிலிருந்து மற்றதைப் பிரித்துக்காட்டுவதான, ஒன்றிற்குரிய தனிக் குணரூபத்தை அடையாளங்காட்டாததான தன்மை வந்து விடுகிறது, இது ஜைன மரபு, இது இந்துக்களின் புராணம், இது பௌத்த விசாரம் என்ற பேதமின்றி சகல கூறுகளையும் ஒன்றினைத்துப் பௌத்தமாகக் காணுகின்ற அயோத்திதாஸ் பண்டிதரின் போக்கும் இப்படித்தான் இருக்கிறது.

மாலிக்காபூரைக் குறிப்பிட வந்தவர், டெல்லி சுல்தானின் அந்தப்புரத்தில் அடிமை அலியாய் வாங்கப்பட்டு அப்படியே ஆக்கப்பட்டு விட, அவனது முக நிறத்தில் ஓடும் ஸ்திரீகள் அலிகளாக்கப்பட்டுவிடும் குரூரத்தைக் குறிப்பிடுகிறார். மாலிக்காபூரின் கலாச்சாரக் கொள்ளையினைச் சொல்லவந்தவர், வேறு விஷயத்திற்குள் ஆழ்ந்து மறுவாசிப்புச் செய்யாமல் திசைமாறி விடுகிறார், மாலிக்காபூரின் நடவடிக்கைகளுக்கான நியாயப்பாடாக மாற்றிவிடுகின்றார்.

"பாழிச்சுவர்கள் பயந்து அதிர தாவரப் பெண்ணுடல் உருவங்களை மாற்றி பொண்டுகரின் வேட்கை பெருக்கெடுக்கும் காமத்தீயில் இசை மீனின் உமிழும் நெருப்பைச் சுடர் நரம்புகளாக்கி இசைத்த பெருவனப்புலால் புலவுநாற்றம் வீச மாக்கூத்தன் உயரம்வரை குதித்தாடும் சுடலை ஆட்டத்தில் புலனுக்கெட்டாத நறுமணம் நாய்க்குட்டிகளை ஏந்திய பொண்டுகர்களுக்கு எட்டியது கலவியாய். பாழி மதில்கள் உருகும் கலவியல் பொண்டுகர்கள் ஏந்திய முழவு தகுந்தகுமென அறற்றி பற்கள் உரசி வெட்டிய நாக்கில் கூத்தின் உதிரம் சொட்ட ஒருதுளி நெருப்பில் வெறித்தது பாழி" (பக். 112)

என்று பிறிதோரிடத்தில் அலிகளின் அக உலகம் பேசப்படும். அதனுடன் இணைவு கொண்டதாக மாலிக்காபூரின் அக உலகை விவரித்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

'உலக விளிம்புகளில் அகதிகள் ஏற்றிய தீ எரிந்து கொண்டிருக்கும் இவ்வேளை', என்று ஈழத்தமிழர் அகதிகளாய் அல்லாடுவதை உணர்ந்த வரும்போது இலங்கை வரலாற்றுக்குள் வாசிப்பைச் செய்கிறார்.

நிறுவனமாகிவிட்ட மகாவம்ச பௌத்த குருமாரின் பாத்திரத்தை கண்டு கொள்ளும் கோணங்கி இராமாயண காலத்திற்குள் போகும்போது, 'இசை உள்ளவரை ராவணன் சமநிலை தவறவில்லை' என்கிறார். ஆரியர் - திராவிடர் முரண்பாட்டினை ஒருவர் மீது இன்னொருவர் கொள்ளும் மேலாதிக்கத்தினை உணர்ந்த இத்தகைய வாசிப்புமுறை பொருத்தமானதில்லை. இது அரசியல் வாசிப்பு, பண்பாட்டுவாசிப்பு சார்ந்த விஷயம், இங்கு கூரான வாதங்கள், விமர்சனங்கள், குறிப்புகளே துணைபுரியும்.

தாடகை எனும் பறவை ரெக்கைகளில் அபிதர் புகமுடியும். ஆனால் இசையின் இழப்பு, அரசியல் விபத்துக்கும் இழப்புக்கும் காரணமாகிவிட முடியாது. அதுபோலவே பிராமியே முதுமொழியின் ஆதிவடிவம் என்பதும் சர்ச்சைக்குரிய வாதமாகும். "வேள்விகளில் சாம்பலான ரிஷபம் கொம்புகளுடன் எழுகிறது. நிலைகுத்தும் கொம்புகளில் காலமற்ற ரிஷபத்துடன் வருகிறான் திராவிட ரிஷபன்" (பக். 345) என்பது போன்ற இடங்களில்தான் மறுவாசிப்பு கச்சிதமாய் இருக்கிறது.

"உருகும் உதிரம் மெல்ல உருமாறி உப்பாகிப் படிகிறது உவர் வீதிகளில், கடல் பாலூட்டிகள் விலங்குகள் பட்சிகள் எங்கிருந்தோ வரும் உயிர்த்தாகத்தில் சமண் மேனியின் துகில் விலகிய விரல்களில் நாவினால் ஸ்பரிசித்த ஒரு துளி உவர்ப்பு பிரபஞ்சம் நடுங்கிய துக்கம்" (பக். 346) என்னும்போது காவியத் தன்மையிலான வீச்சே கிடைத்து விடுகிறது.

டாட்டில் கழுதைமீது காமோஸ்டாவோ பயணிப்பதும் துப்பாக்கிக் குறவனும் தோட்டா மூக்கனும் வருவதுமான கதையிழை அங்கங்கே சேர்க்கப் பட்டிருக்கிறது. ஆனால் காமோஸ்டாவோவின் பார்வையில் எடுத்துரைப்பது நிறைவேறவில்லை. காமோஸ் என்றும் டாவோ என்றும் இரு நபர்களாகப் பிரிந்து கதை சொல்பவன் குருடனாகவும் கேட்பவன் ரோகியாகவும் சொல்வனத்துக்குள் உரையாடுவதைத் தொட்டுக்காட்டுகிறார். அப்படியே தொடரமுடியவில்லை, உரையாடல் தொடர்ந்திருந்தால் வாசகன் நெருங்கி வந்து வாசிப்பதும் பேசுவதும் இயல்பாயிருந்திருக்கும்.

மொழிரீதியாகவும் எழுத்துரீதியாகவும் ஆன்மீகப்பண்பாட்டு மரபு ரீதியாகவும் புதிய அனுகுமுறைகளை துணிச்சலுடன் மேற்கொள்ளும் கோணங்கி பகடையிடமும் தச்சரிடமும் வண்ணாரிடமும் தனக்கான ஆதாரங்களைக் கண்டு கொள்வது ருசிகரமானது.

"..........மிருகத் தொலி உலர்த்தி லிபிகளை வரையும் ரஸவாதியான கிராமத்துப் பகடையும் தச்சுவேலைக்காரரும் சேங்கொட்டையில் ஊக்கால் குத்தி மை எடுத்து குலக்குறிபோடும் வண்ணாரும் நவீனக்கதைகளின் மொழியை தைத்துக் கொண்டிருக்கிறார்கள்......" ④

'சூல்விட்டு வெளிவரமுடியாது இனி', என்று கூறவந்தது ஏன்?

".........மிகவும் அரிதான சமயங்களில் வனத்தில் நடந்து செல்கிறீர்கள். வெளிச்சம் நிழல் கோடுகளில் அசையும் தனிமையில் இருப்பின் அடிப்படையில் விசாரிக்கப்படுகிறீர்கள் பூக்களால், உங்கள் ஜனன வாசனையைப் பிரித்து வெளிர் நீர்மையில் ஒரு வெண் துகளென வாடும் பூவின் கணத்தில் இருளின் துளியாக பயமூட்டுகிறது மெல்லியபூ. மீண்டும் மனதைத் திருத்தி வேறுபக்கம் நோக்க திகம்பர வனத்திற்கு வந்திருக்கும் ஒரு கோடிப் பூக்களின் வடிவநுட்பத்தில் உங்கள் பகல் துகள் துகளாய் சிதறி ஒவ்வொரு பூவின் புறவிதழின் சூழத்தில் சூலகமாகிவிடும் உயிர்" (பக். 436)

குறிப்புகள்

1. ஆண்ட்ரூ கோஹென் / மேற்கோள் - ஆதாரம் The Times of India, 29.07.2000.

2. நகுலன் / கோட் ஸ்டாண்ட் கவிதைகள் / ழ வெளியீடு, 1981.

3. பாணபட்டன் தன் வரலாறு / ஹஜாரி ப்ரசாத் த்விவேதி / சாதித்ய அக்காதமி, 1966 - பக், 55,56.

4. உப்புக்கத்தியில் மறையும் சிறுத்தை - முன்னுரை / கோணங்கி / நூல் - அகம், 1997 / பக்.11.

★★★★★★★★

வரைபடத்தில் விட்டுச் சென்ற சிறகு

கோடையெனச் சொல்லி பக்கக் கட்டைகள் நெகிழ்த்தி
என் மீன் கொத்திப் பறவையை விடுவிக்க
பறவை
அறைக்குள் இறங்கி காலாற நடந்தது.
அதன் அலகுக்கு ஒரு மீனை வரைய நான் மறந்துவிட்டேன்
கழுத்து வண்ணத்தில்
நான் இட்ட புள்ளிகளில்
சிலிர்த்து
தாளாத கம்பீரத்தில்
என் வாசல் விட்டிறங்கி திரும்பி பார்க்காமல்
அது பறந்தே விட்டது
காற்றில் மிதந்தலைந்து பசுமை தெரிய
அது இறங்கும் நீர்செறிவு
என் கால்களில் சில்லிடுகிறது.



- சங்கர ராமசுப்பிரமணியன்

சாம்பல் ராகம்

★நீலத்தின் ஒற்றைப் புல்லாங்குழல்
தனிமையில் ஒலிக்க
வெளியில் வந்தோம்
மரங்கள் அடர்ந்த வளாகத்தில்
நான் நாங்களாக
நாங்கள் நானாக
யாவும் சாம்பல் நிறமாய்
இருந்தோம்
எங்களை சூழும் நீல இசை
புல்லாங்குழலின் சக்கர வளையம்
திரவமுறும்
இத் தருணம் சாம்பல் படிகம்
சாம்பல் வானம்
சாம்பல் மரங்கள்
சாம்பல் முகங்கள்
சாம்பலிலிருந்து பூக்கிறவொரு பூ
பூவை சுற்றி சுற்றி
வருகிறது ஒரு நாய்க்குட்டி
நாய்க்குட்டிக்கு பாலூற்றுகிறான்
ஒருவன்
ஒருவன் ஒருவனோடு
கைகுலுக்கும் கைகள்
கைகளின் ஊடாக பாய்கிறது
மஞ்சள் நதி
நதியுள் புதைந்த கூழாங்கல் உலகம்
கூழாங்கல்லில் சிரிக்கிறது வினோத மலர்
சாம்பல் இதழுடைய நான் மலர்
இப் பொழுது என்னில்
எழுகிறது ஒற்றைப் புல்லாங்குழல்
நினைவின் பச்சையில்

●●●

சீன கவிஞன் பைஜுயிக்கு

- ஹவி

★போலந்து இயக்குநர் கிரிஸ்லோப் கீஸ் லோவ்ஸ்கியின் திரைப்படைப்பு - நீலம்

ஓவியர் வெங்கட் என்ற வெங்கடேசனுடைய கோடுகள் குறித்து :

நகரங்களில் அலைந்து கொண்டிருக்கும் கோடுகளிலிருந்து ஒரு விட்டில் பூச்சியின் உடல் வடிவத்தை நுண்ணிய புள்ளிகளை வைத்து தேவதையாக மாற்றும் ஓவியம் இவ்விதழில் இடம் பெற்றிருக்கிறது. அனாடமியை கலைத்து கலைத்து குகைவழி இயங்கும் மாற்று ஓவியத்திற்கான நவீன வெளி வெங்கட்டிடம் உருவாகி இருப்பது முன் அனுமானிக்கமுடியாத வாழ்வின் புதிர்களை கணிதவியலாக்கும் நூதன கலை வெங்கட்டுடைய கோடு. இவர் உடலுக்குள் புராதன எலும்புகளின் குகை குரங்கின் கபாலத்தோடு மின்னனுவாய் தெரிக்கும் நவீன காலத்தை நோக்கி பாய்ந்து வருகிறது. சமரசம் செய்து கொள்ளாத தீவிர கலைச் செயல்பாடு கொண்டவர் வெங்கடேசன்.

"லெமூரியா" என்று ஒரு கண்டம் இருந்ததாம். அது நேற்று.

தென் தமிழகம் என்று ஒன்று இருந்ததாம்....... அது நாளை வரலாறாகிவிடப்போகிறது காணாமல் போன பஃறுளி ஆறைப் போல்.........

வைகையும் தாமிர பரணியும் ஆகாமல் இருக்க...........

மேற்குமலையும் மன்னார் வளைகுடாவும் அகம்.

இதற்கு இடையில் இருப்பது புறம்.



நன்றி: **NI**

மேற்கு மலையின் உயிர் மூச்சான மரங்களின் படு கொலையைத் தடுக்காவிட்டால்....

அந்த மாபூதம் எந்த விநாடியும் தென்தமிழகத்தையும் கேரளாவின் தென் கோடியையும் அழித்துவிடும்.

கடந்த சில வருடங்களாக மேற்குமலையின் சிணுங்கலும் உராய்வுகளும், அதிர்வுகளும் அடங்கி சில மாதங்கள் ஆகின்றன.

மீண்டும் ஜூன் மாத அடைமழைக்குப் பிறகு மேற்கு மலையின் பல இடங்களில் பூமியிலிருந்து புகை வருகிறது. கட்டப்பனை, பத்தினம் திட்டா, இடுக்கிமாவட்டத்தில் விவசாய நிலம் பூமியில் புதைகிறது. அறிவியல் மேதைகளின் அரசியல் கூற்றுகளை மேற்குமலை செவிசாய்க்காது.

கோழிக்கோடு, மல்லபுரம், இடுக்கி, எர்ணாகுளம், பத்தனம் திட்டா போன்ற மாவட்டங்களில் இருக்கின்ற நூற்றுக்கணக்கான கிணறுகள் திடீரென்று இடிந்து விழுந்தன. கிணறு மாதிரியான தோற்றத்தோடு பல ஆழமான குழிகளும் புதிதாக தன்னிச்சையாகத் தோன்றியிருக்கிறது. இதுபோக பச்சை, சிவப்பு வண்ணத்தில் மழை.

சென்ற ஆண்டு குஜராத்தில் பூகம்பம். குஜராத் மேற்குமலையின் வடதிசை என்றால் தென்திசையில் திருவனந்தபுரம். இந்த நிலப்பகுதி முழுவதும் புவி அழுத்தம் (Tectonic Activity) அதிகமாக உள்ள பகுதி என்கின்றனர். இந்த ஓட்டத்தில் தொடர்ந்து மேற்குமலையானது கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு குணங்களைவெளிப்படுத்தி வருகிறது.

பல்வேறு காலங்களில் மேற்குமலை தன்மீது பதிவு செய்து கொண்டவை கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

மலையைக் கிள்ளி.......

மணல்மேடாக்குங்கள்!

இந்தியத் துணைக்கண்டம் ஆசியாவிற்குள் ஆக்கிரமிப்பு செய்ய ஆரம்பித்துள்ளது. ஆக்கிரமிப்பு ஐரோப்பியர், அமெரிக்கர் மாதிரி இல்லாமல் தனக்கே உரிய முறையில் செயல்படுகிறது. குறுக்கே / தடையாக உள்ள இமயமலையை முதலில் முட்டிமோதி, தன்னிலிருந்து இமயத்தைப் பிடுங்கி வானவீதியில் வீசி எறிய எத்தனிக்கிறது. இதனால் இமயம் ஆண்டிற்கு 7 செ.மீ அளவு உயர்ந்து கொண்டிருக்கிறது.

இயற்கையை முதலாளிய அறிவியல் - தொழில்நுட்பம், பொருளாதாரமாக, லாப நஷ்டக் கணக்காக (தனக்கு வெளியே இருப்பதாக) பார்க்க ஆரம்பித்தது. அந்தப் பார்வையால் இயற்கை வளம், கனிவளம், இன்ன பிற எனப்பிரித்து பூமியைச் சிதைப்பது, அழிப்பது என்பதை அறிவியல் என்கிறது.

ஆண்டு ஒன்றுக்கு 100 ஆயிரம் மெட்ரிக் டன் தாதுப்பொருட்கள் எடுக்கப்பட்டு வருகிறது.

லட்சக்கணக்கான ஆழ்கிணறுகள் ஆண்டுதோறும் பூமியை பல்வேறு ஆழங்களில் துளைபோடுகின்றன.

"கனிவளம்" என்ற இடங்களில் ஒரு சதுர கிலோமீட்டரில் 20 முதல் 25 ஆழ்கிணறு துளை பூமி மீது குத்தப்படுகிறது. இது பூமிப்பரப்பின் மீது இடைவிடாது நடந்து கொண்டே இருக்கிறது.

"மார்க்ஸ் வெபர்" கூற்றில் சொன்னால், "அறிவியல் இயற்கை மீது செயல்பட்டு அவற்றை ஒழுங்குபடுத்தி, கட்டுப்படுத்தி, அடக்கியாள்வதை நோக்கி இடைவிடாது செயல்படுத்தப்படுகிறது".

குமரிமுனையிலிருந்து பம்பாய் வரை நீண்டுள்ள மேற்குத் தொடர்ச்சி மலை, அதன் பக்கப்பகுதிகளிலும், தொடர்ச்சியாக நிலச்சரிவு, பூமி அதிர்வு, பூகம்பம் போன்றவற்றை பூமியின் உட்கூறு தோற்றுவித்துக் கொண்டே இருக்கிறது. இதுபோக பொருளாதார வளர்ச்சி, மின்சாரத்தேவை, இன்னபிற தேவைகளுக்காகவும் பல்வேறு செயல்பாடுகள் நடைபெறுகிறது. தன்னிச்சையாக அமைந்துள்ள ஏரிகள் போக மலை, மலைசார்ந்த (குறிஞ்சி?) பகுதிகளில் அணைகள் கட்டப்பட்டு தண்ணீர் தேக்கப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் முழுவதிலும் இம்மாதிரி தேக்கப்பட்ட தண்ணீரால் பூமிக்கு அதிகரிக்கும் சுமை (Stress) எவ்வளவு இருக்கும்?

ஆண்டொன்றுக்கு வெட்டப்படும் மரங்கள் / அரிக்கப்படும் மண்ணின் அளவு எத்தனை ஆயிரம் டன்கள்?

மனித இஷ்டத்திற்கு போடப்படும் ரோடுகளும், போக்குவரத்தால் ஏற்படும் அதிர்வுகளும் எவ்வளவு தூரத்திற்கு அந்த மலையின் இருப்பைத் தொந்தரவு பண்ணும்?

இதுபோக டீ விசயம். டீக்காக காடுகள் அழிக்கப்பட்டுவருவது ஒரு புறம், மண் அரிக்க வழிசெய்வது மறுபுறம்.

பூமியின் அதிர்விற்கும், பூகம்பத்திற்கும் மேற்கூறியவைகள் ஒருவகையில் தன்னளவில் ஒரு பங்களிப்பு செய்யத்தானே செய்யும்?

> இதற்கிடையில் 1970-ம் ஆண்டுகளில் இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய தமிழர்கள் நீலகிரி மலையில் குடியமர்த்தப் பட்டனர். அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தருவதற்காக தமிழ்நாடு தேயிலை நிறுவனம் (டேன்டீ) ஏற்படுத்தப்பட்டது. இந்த டேன்டீ நிறுவனம் சுமார் பத்தாயிரம் ஏக்கர் வனப்பகுதிகளை அழித்து தேயிலைத் தோட்டத்தை உருவாக்கியது. கூடலூரில் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பிலும், குன்னூரில் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பிலும் தேயிலைத் தோட்டங்கள் உருவாயின.
>
> தேயிலைச் செடிகள் நன்கு வளர்ந்து தரையை மூடியவாறு உருவாக சுமார் பத்து ஆண்டுகள் ஆகும்.
>
> *(பார்க்க. தினமணி சுடர் 18-12-93)*

"இயற்கையின் சீற்றம்" என்ற சொல்லாட்சியால் *அறிவியல், தொழில் நுட்ப, பொருளாதாரச் செயலால் ஏற்படுத்தப்படும் அழிவு மறக்கடிக்கப்படுகிறது.* இயற்கையின் அழிப்பை வளர்ச்சி, தேவை, வசதி போன்ற கவர்ச்சிகள் நியாயப்படுத்தும் வழிகளாக இருக்கின்றன.

இந்தக் கவர்ச்சிகளின் விளைவு உபயோகி, தூக்கி எறி (Use and Throw) (தூக்கிஎறியப்படுவது கனிவளம்) என்ற கலாச்சாரத்திற்கு மேற்கத்திய நாடுகள் அடிமைப்பட்டுக் கிடக்கின்றன. இவை மூன்றாம் உலக நாடுகளில் வந்துகொண்டிருக்கின்றன. இந்த சோம்பேறித்தனமான / பொறுப்பற்ற இயற்கை அழிப்புக் கலாச்சாரத்தால் மட்டும் எவ்வளவு கனிவளங்களும், இயற்கையும் பாழ்படும். இவைகள் அனைத்தும் மறைக்கப்பட்டு "நேர்த்தியான", "வசதியான வாழ்வு" என்ற போதைக்கு மக்கள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தான் நிற்கும் பூமியை ஒரு சிலரின் லாபத்திற்காக என்பதும் மறைக்கப்படுகிறது. கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொண்டே அழகு பற்றி பீத்தல் வேறு.

பொருளாதார அறிவியல், மக்களிடம் கொஞ்ச நஞ்சமிருந்த பகுத்தறிவையும் பிடுங்கி வளர்ச்சி, லாபம், வசதி என்ற ஒற்றைப் பரிமாணத்தை நோக்கிய பார்வையே பகுத்தறிவு என்று கூறி வருகிறது.

இந்த அறிவியல் தொழில் நுட்பம் பிற இசங்களை வேண்டுமானால் ஏமாற்றி விடலாம். ஆனால் பூமியை ஏமாற்ற முடியாமல் போய்விட்டது.

பூமியின் விளையாட்டு ஆரம்பித்திருக்கிறது போல் இருக்கிறது.

இந்த 10 ஆண்டுகளில் மட்டும் சிறிதும், பெரிதுமாக பூமி அதிர்வு நூற்றுக் கணக்கில்.

நிலச்சரிவு, கொடைக்கானல் / ஊட்டி போன்ற இடங்களில் ஆண்டு தவறாமல் வருகிறது. சாவு எண்ணிக்கை கூடினால் அது பத்திரிக்கைகளில் தொலைக்காட்சியில் இடம்பெறும்; முக்கிய பாதைகளில் நடந்தால் தேசிய முக்கியத்துவம் பெறும். முக்கியம் / முக்கியத்துவம் அல்லாதது என்ற ISI முத்திரையை அந்தந்த மாவட்ட அதிகாரிகளே வழங்குவர். ISI

முத்திரை பெற்றதை வெகுஜன தொடர்பு சாதனங்கள் பட்டாணியாக்கி மக்களுக்கு சுடச்சுட வழங்கும். அந்த மாதிரி வழங்கிய ஒன்று சமீபத்திய குன்னூர் அருகே நடந்த நிலச்சரிவு. உண்மையில் அது நிலச்சரிவாகவே தெரியவில்லை. வேறொரு இடமாகவே - அதாவது வரலாற்றில் இதுவரை அந்த இடத்தில் இல்லாத புதிய ஒன்றாக -(Topography) இருக்கிறது. ஒரு நூற்றாண்டாக ஒரு அருவி, தான் கொட்டிக்கொண்டிருந்த நீரை நிறுத்திவிட்டால் அந்த இடம் எப்படி இருக்குமோ அப்படி.

இரண்டு அல்லது மூன்று பேருந்துகள், ஒரு கார், அந்தப் பகுதியில் விட்டுவிட்டு இருந்த சுமார் 18 வீடுகள், அதன் மனிதர்கள் அனைவரும் ஒரு சில விநாடிகளில் காணாமல் போயினர். அக்கம் பக்கம் விசாரித்ததில் மனித உயிர்ச்சேதம் 200க்கு குறையாது என்கிறார்கள்.

(1978-ல் உதகையில் மந்தாடா என்னுமிடத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 234 பேர் உயிரிழந்தனர்)

- தினமணி சுடர் 18-12-93,

இப்போது அந்த இடம் சுற்றுலா பயணிகளின் இன்னுமொரு காட்சிக்கான இடமாகிவிட்டது. கார்களுக்கும், நடைபயணிகளுக்கும் பஞ்சமில்லை.

(ஆக நிலச்சரிவு என்றால் ஒரு காட்சிப்பொருள்).

கொடைக்கானல் அருகில் உள்ள பெருமாள்மலையில் தார் ரோடே 1/2 அடி அகலத்தில் 100 அடி ஆழத்தில் பிளவுண்டு சுமார் 3 கி.மீ. ஆரத்தில் (டார் டாராக கிழிந்து) மலை மடிப்புகளுக்குள் மறைந்துகிடக்கிறது.

ரோட்டின் இடுக்கில் மண்ணையும், கல்லையும் போட்டு பிளவுண்ட பகுதியை மேலாக மறைத்து போக்குவரத்து சீர் செய்யப்பட்டுவிட்டது. இதற்குப் பெயர் நிவாரணம்?

(இன்னும் ஒரு கடுமையான மழை வந்தால் பழனியோ அல்லது பெரியகுளமோ இருக்காது என்றார் ஒரு ஆய்வாளர்).

இந்தப் பெருமாள்மலைக்குக் கீழாகவும் பழனியிலிருந்து 15 கி.மீ மேலாகவும் உள்ள தேக்கந்தோட்டம் என்ற மலைப்பகுதியில் நடந்திருக்கும் மாற்றம் மிகக் கவனத்திற்குரியது.

திண்டுக்கல் கலெக்டரின் ISI முத்திரை பெறாததால் பத்திரிக்கைகளின் கவனத்திற்கு லாயக்கற்றதாயிருக்கிறது.

தேக்கந்தோட்டம்: இப்பகுதி மேலே குறிப்பிட்ட பெருமாள் மலைக்கு கீழே சுமார் 800 அடி உயரத்தில் உள்ளது.

பழனியிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது.

தேக்கந்தோட்டத்திலிருந்து விலகி இயற்கைக் காட்டினூடாக மேல்நோக்கி நடக்க ஆரம்பித்தால் பாலாறு. புரந்தலாறு அணையின் பின் பக்கத்தை அடையலாம்.

(இந்த ஒத்தையடிப்பாதை ஆங்கிலேயர் காலத்தில் பழனியிலிருந்து கொடைக்கானலுக்கான நடைபாதையாக இருந்து வந்திருக்கிறது. 1970-களின் கடைசிப் பகுதியில்தான் பழனி - கொடைக்கானல் ரோடுபோடப்பட்டுள்ளது. இன்னும் இந்தப்பாதை மலைவாழ் மக்களால் பயன்படுத்தப்படுகின்றது).

இங்கிருந்து 4 கி.மீ வனப்பகுதிக்குள் நடந்தால் 1942ல் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்ட சிறு அணையை (Weir) அடையலாம். 7 அங்குலம் குழாய் வழியாக முக்காத்துட்டு செலவில்லாமல் பழனிக்கு புவி ஈர்ப்பிலேயே குடிநீர் கொடுக்கப்படுகிறது. 1960-களின் கடைசிப்பகுதியில் அந்த 7 அங்குல குழாயை 15 அங்குலமாக குடிநீர்வாரியத்தினர் மாற்றியிருக்கின்றனர்.

இதை அடைவதற்குள் பல இடங்களில்;

1) ஆறு தன்பாதையை பல இடங்களில் மாற்றிக்கொண்டிருக்கிறது.

2) பல இடங்களில் ஏக்கர் கணக்கில் கானகம் மரங்களற்று வெறிச்சோடி, நகரத்தின் வீட்டு மனைக்கான விற்பனை இடம் போல் காட்சியளிக்கிறது.

(1975-76களில் பெய்த மழையைக் காட்டிலும் இப்போதைய மழைகுறைவு. இப்பகுதியில் நெடுங்காலமாக இருந்து வரும் பணியாளர்களும், வயதானவர்களும் இதை ஒத்துக் கொள்கின்றனர்).

நவம்பர் மழைக்குப் பின் பூமி இந்தப் பகுதியில் பல இடங்களில் தன் அடையாளத்தை மாற்றிக் கொண்டிருக்கிறது.

- மலைப்பகுதியில் கிழக்கு மேற்காக; மேற்கு கிழக்காக கிலோமீட்டர் கணக்கில் **20** அடி அகலத்திலும், **10** அடி ஆழத்திலும் கணவாயாக மாறியிருக்கிறது. (முன் அட்டைப்படம்)
- டன் கணக்கான எடையுள்ள பெரும் பாறைகள் உருண்டு வந்திருக்கின்றன. நீர்ப் போக்கு மட்டுமே வெகுதூரத்திலிருந்து இவ்வளவு கனமுள்ள பாறைகளை உருட்டி வர முடியாது.
- இந்தக் குடிநீர்நிலையின் (**Top weir**) மேல் பகுதியில் உள்ள மரப்பாலம் என்ற மலைப்பகுதியின் சில இடங்கள் வேரோடு பிடுங்கப்பட்டு அந்தப்பகுதி மக்களாலேயே அடையாளம் காணமுடியாமல் திகைத்துள்ளனர்.
- இப்பகுதி பல இடங்களில் தன் அடையாளத்தையே (Topography) மாற்றியிருக்கிறது. இவைகளெல்லாம் மனிதனின் கண்களில்பட்ட இடங்கள். மேற்குத் தொடர்ச்சி மலையின் மொத்த நீளத்திலும் அதன் அடுக்குகளிலும் எத்தனை மாற்றங்களோ? யாருக்குத் தெரியும்?

பெருமாள் மலையில் 4 அங்குல அகலம், 3கி.மீ. நீளம் நூற்றுக்கணக்கான அடி ஆழத்திற்கு மலையை பிளந்த சக்தி எதுவோ, அந்த சக்தியே தேக்கந்தோட்டப் பகுதியையும் பாதித்திருக்க வேண்டும்.

மழை ஒரு புறக்காரணியாக இருந்திருக்கலாம். அகக்காரணி?.

நில அதிர்வு................ இப்படியும் இருக்கலாமோ?

எப்படியோ துரத்தியடிக்கப்பட்ட அந்தக் குறிஞ்சி மக்களுக்கு அவர்கள் ராஜ்ஜியம் கிடைக்கப்போகிறது. அந்த அளவில் மகிழ்ச்சிதான்.

- போத்தி

நன்றி: புறப்பாடு.

(இதழ்-37. ஜன-மார், 94)

இந்த உரையாடல்கள் 2000 - ல் தென்தமிழக பகுதியின் மேற்குமலைமீதான அசைவை தனக்குரிய வகையில் எழுதிக் கொண்ட பொழுது எழுதப்பட்டவைகள். அவைகள் மேற்குமலையை மையமாகக் கொண்ட உரையாடல்கள். ஆகவேதான் இங்கு அவை இடம்பெற்றிருக்கிறது.

ஞான நெருப்பு

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மீண்டும் மீண்டும் நிலை நிறுத்த ராட்சத பகிரத முயற்சியை அணுவிஞ்ஞானிகள் தொடர்கின்றனர்.

கூடங்குளத்தில் வரப்போவதாகக் கூறப்படும் அணுஉலை, அதன் பிறந்தகமான ரஷ்யாவின் செர்னோபிளில் டிசம்பர் 2000 ல் மூடுவிழா நடத்தினர். நெஞ்சில் நிறுத்த வேண்டிய ஒன்று இது.

அக்டோபர் 2000 ல், ரஷ்யாவின் நீர்மூழ்கி கப்பல் ஒன்று மூழ்கிவிட்டது. பலர் ஜல சமாதிக்குள்ளாகினர்.

அந்த நீர்மூழ்கியை மீட்க நிறைய செலவாகும் என்பதால், ஆழ்கடலிலேயே அது இருக்கட்டும் என்று ரஷ்ய அரசு சொல்லிவிட்டது.

ஐரோப்பிய அரசுகள் உடனடியாக கூட்டாகச் சேர்ந்து பல நூறு கோடி டாலர் பணஉதவியை இலவசமாக வழங்குகிறோம், உடனடியாக *அந்த நீர் மூழ்கியை* கடலில் இருந்து எடுங்கள் என்று கூறிவிட்டனர். எடுப்பதற்கு வேறு உதவிகளையும் உறுதி செய்தனர்.

ஏன் ஐரோப்பிய நாடுகள் அச்சமுற்று பல நூறு கோடி டாலர் உதவினர்?

அந்த நீர்மூழ்கி, அணுஉலையால் இயங்குவது. (இந்தியர்போல் வீரமில்லாத ஐரோப்பியர், கோழைகள். ஆகவேதான் கதிர்வீச்சுக்கு அஞ்சுகின்றனர்.)

நீர் மூழ்கியுடன் இருக்கும் அந்த அணுஉலை பிரித்தெடுக்கப்படாவிட்டால்........ ஆயிரக்கணக்கான கி. மீட்டருக்கு கடலில் அணுக்கதிர்வீச்சு பரவும், பாதிக்கும், கடல்வாழ் உயிரினங்களை அழிக்கும். இன்னும் என்னென்னவோ நடக்கும். அதனால்தான் ஐரோப்பிய அரசுகள் அஞ்சி அந்த அணுஉலையை (நீர்மூழ்கி கப்பல்) மீட்கச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட காலக்கட்டத்தில்தான் டிசம்பர் 13-ல் மேற்கு மலைத்தொடர்ச்சியில் 8 தென் மத்திய மாவட்டங்கள் (கேரளா) அத்துடன் தமிழகத்தில் கோவில்பட்டி, விருதுநகர், தென்காசி, மதுரை, தேனி, கம்பம் சமவெளி, கோவை மாவட்டம் வரை மீண்டும் நிலநடுக்கம்.

இது லேசானதுதான் என்று வழக்கம்போல் விஞ்ஞானிகள் கூறிவிட்டனர்.

1995-ல் நெல்லை மாவட்டத்தில் அபிஷேகப் பட்டியில் (மனோன்மணியம் பல்கலைக்கழகம் அருகில்) பூமியின் அக இயக்கத்தால், அங்குள்ள பாறைகள் நீல நிறமாக மாறியது; ஒரு விளக்குக் கம்பம் முழுவதுமாக பூமிக்குள் மறைந்தது.

1994-ல் நெல்லை மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி பகுதியான களக்காடு "லேசான" நில அதிர்வு.

1996-ல் கூடங்குளம் அருகே உள்ள ராதாபுரத்தில் "லேசான" நில அதிர்வு.

இப்படி தொடர்ச்சியான இடைவெளியில் பூமியின் நடுக்கம் மேற்கு தொடர்ச்சி மலையில் தொடர்கிறது. தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அடையாளப்படுத்திக் கொள்கிறது.

மேற்குமலையே அதனின் புதிய நிலைப்பாட்டை அடையாளப்படுத்திக் கொண்டுவிட்டபோது அரசுவிஞ்ஞானிகள் அதை அடையாளம் காணாமல் அதன் அதிர்ச்சியை மட்டும் பால் கணக்கை வீட்டு மதில் சுவரில் கட்டைவிரல் தடத்தால் இழுகிவிடும் கிராமத்துப் பெண்ணாய் இருப்பது ஏனோ? புரிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் பொருளாதார நலனுடன் பிணைத்துக் கொண்டவர்கள். அவர்களின் சுதந்திரம் சில தப்படிகளே. அவர்கள் அப்படித்தான்.

பூமி நடுக்கம் என்பது பொருள் அல்ல, ரத்தம் சதையால் ஆனதல்ல, அது பசப்பில்லாதது, தன்னைப் பாதிக்கும் அனைத்தையும் உணரக்கூடியது, தன் கடமையை பிரபஞ்ச சக்தியுடன் இயைந்து விருப்பு, வெறுப்பற்று ஆற்றுவது, சிமிட்டும் நேரத்தில் சுய பிரதட்சணம் காட்டுகிறது.

இந்த ஐம்பெரும் மகா பூதங்களோடு இணைந்த மனிதனின் சுவை, ஒளி, ஊறு, ஓசை, மனம் ஆகிய நுண்பூதங்கள் இயைந்து வாழ்ந்து, உணர்ந்து அறிவதைவிட்டு, நுண்மத்தின் மூலம் மகா பூதங்களை அளந்து அடக்கிவிட முடியும் என்ற ஆணவமே, காட்சியை *லேசான நடுக்கம்* என்று விஞ்ஞானம் மொழியை உதிர்க்க வைக்கிறது.

அணுமின் உற்பத்தி என்பது மேற்குலகில் காலாவதி ஆகிவரும் பொழுது இந்திய அரசுவிஞ்ஞானத்திற்கோ அது ஒரு அடையாளச் சின்னமாக்கிக்கொள்கிறது. அவர்களிடமுள்ள "கோடீஸ்வர" முத்திரை உதவியுடன் தவறான இரண்டை அழித்துவிடு என்று ஆணையிட்டவுடன், கம்ப்யூட்டர்ஜி தவறை அழித்துவிடும் அப்படித்தானே!.

இந்தக் கணினி லாட்டரியை, போதையைத்தானே பகுத்தறிவிஞ்ஞானம் *வளர்ச்சி* என்று நியான் விளக்குப் போட்டுக் காட்டுகிறது; கொடுந்துன்பத்தை மனிதர்கள் மீது திணிக்கிறது.

வளர்ச்சி எனும் பெயரில் T.V. விளம்பரங்கள் பகட்டும் பொருட்களை வாங்கிக் குவிக்கும் கூடமாக வீட்டையும்; உடலை களமாகவும் முழுமையாக மாற்றிவிடத்தானே அந்த நுகர்வுப் பொருள்கலாச்சார விஞ்ஞானம் பறை அறிவிக்கிறது.

"அணுமின்சாரமின்றி வளர்ச்சி இல்லை" சொல்லைக் கேட்காதே ; சொல்பவனைப் பார்! அவன் எதன் சார்பாக இருக்கிறான் என்பதைப் பார்!

விஞ்ஞானத்தின் புத்தியில் ஒழுங்கில்லை, நேர்மையில்லை.

லாபநோக்கு, விஞ்ஞானத்தின் மையப்புள்ளி.

பூமிச் சொல்லாடலின் பொருள், நழுவிச் சென்று கொண்டே இருக்கிறது. அதன் மொத்தச் சங்கிலியுடன் இணைவில் அதன் உட்பொருள் இணைந்துள்ளது உணரும் வகையில்.

இயற்கையென்னும் மகா சக்தியின் ஒழுங்கும், சக்தியும், இயங்கு காலமும், காரணமற்ற

காரணத்தில், இயங்காமல் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த விஞ்ஞானமும், விஞ்ஞானிகளும் குறிப்பிட்ட அரசியல் பொருளாதாரத்திற்கு உட்பட்ட அதிகாரிகளும், அதிகாரமும் ஆவார்கள்.

அதன் அதிகாரம், பணம் ஆகியவையே விஞ்ஞானத்தின் திசையைத் தீர்மானிக்கிறது. அதன் சுதந்திரமோ வரையறுக்கப்பட்டது; அதுவும் எஜமானர்களுக்கு எதிரான திசையில் அல்ல.

கூடங்குளம் அணுஉலை பாதுகாப்பானது! மேற்குமலைத் தொடர்ச்சியில் வழமையாகி வரும் பூமியின் ஓங்காரம் / லேசானது / அபாயமற்றது!!.

அணுஉலை பாதுகாப்பானது, வெடிக்காது, கிழே ஒழுகாது என்கின்றனர். வெடிக்கப்பட்ட இடம் எல்லாம் துக்கம், துயரம்.

கதிர் வீச்சின் பாதிப்பு நீங்க இன்னும் எத்தனை நூற்றாண்டோ?

இதுதான் முற்போக்கு வளர்ச்சியோ! இதுதான் நிரந்தரமான விஞ்ஞான உண்மையோ!

இச்சா சுகத்தைத் தூண்டி, அதற்கான பொருள்களை உருவாக்கி, வளர்ச்சிப் பாதையை மறித்துப் படுத்திருக்கும் இதுகளின் தொழில்நுட்பம்தான் இந்த அணுமின் உலை.

கடைக்கோடி மனிதன் உட்பட அனைத்து மனிதர்களுக்கும் வளர்ச்சி வேண்டும் என்று எண்ணினால் ....

சூரிய சக்தியை ஒழுங்குபடுத்துங்கள் அப்போது குறையாத ஒளி கிட்டும்.

கண் சிமிட்டும் நேரத்தில் தோன்றி மறையும் அந்த மின்னலின் சக்தியை ஒழுங்குபடுத்துங்கள். மனித ஆயுளுக்கும் ஒளியும், சக்தியும் கிட்டும்.

உங்கள் மனதை ஒழுங்குபடுத்துங்கள். அகந்தை நீங்கி பின்னர் எல்லாம் புரியும்.

மெய்மை அறிவியலுக்கு வெளியே தன்னிச்சையாக !.

அறிவியலுக்காக மெய்மை ஒத்துப்போகாது. ஐம்பெரும் பூதங்களோடு, நுண்பூதங்கள் இயைந்து வாழ வழிவிடு.

இயற்கை காட்டும் மெய்மையை மேற்குதொடர்ச்சி மலைவாசிகள் உணராவிட்டால்........

மெய்மையோடு இணைந்துவாழ, போராடாமல் விட்டால்...........

காத்திருக்கலாம், நம் இறுதித்தீர்ப்பு நாளுக்காக!.

அமெரிக்க "வால்களும்" இந்தியச் "செல்லங்களும்"

டைம் பத்திரிக்கை சமீபத்தில் நடத்திய கருத்துக் கணிப்பில் இன்றைய அமெரிக்கக் குழந்தைகள் மிகவும் "கெடுக்கப்பட்டிருக்கிறார்கள்" (Spoilt) என்கிறது. இக்குழந்தைகள், முந்தைய தலைமுறைக் குழந்தைகளைவிட மிகுந்த செல்வாக்கு மிக்கவர்களாகவும், குடும்ப விவகாரங்களில், முடிவுகளில் மிக அதிகமான பங்கை வகிக்கின்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

பைபிள் இம்மாதிரியானதொரு எதிர்காலத்தை எதிர்பார்த்திருக்கிறது. அதில் சமாதான அல்லது அமைதித்தேவன் வரும்போது பூமியில், *"ஓநாய் ஆட்டுடன், வேங்கைப் புலி சிறுகுழந்தையுடன்..... ஒரு சிறுகுழந்தை இவர்களை தலைமை ஏற்றுச் செல்லும்"* என்கிறது.

முக்கால்வாசி அமெரிக்கப் பெற்றோர்கள் தங்களின் குழந்தைகள் மிகவும் அல்லது ஓரளவு கெடுக்கப்பட்டிருப்பதாக ஒப்புக் கொள்கின்றார்கள். இன்றைய குழந்தைகள் முன்பைவிட மிகக்குறைந்த அளவிலேயே வீட்டு வேலைகளில் ஈடுபடுகின்றனர். வீட்டில் பெரும்பாலான வாய்ச்சண்டைகள், குழந்தைகள் தங்களின் அறைகளைத் தூய்மையாக வைத்துக்கொள்வதில்லை என்ற காரணத்தினாலேயே ஏற்படுகிறது. தங்களின் காலத்தில் எந்தவித முணுமுணுப்பும் இல்லாமல்இந்த வேலையைச் செய்த பெற்றோர்கள் அதையே தங்களுடைய குழந்தைகளிடமிருந்து எதிர்பார்க்கின்றனர்.ஆனால் காலம் மாறிவிட்டது. ஆஸ்கர் ஒயில்டு, "குழந்தைகள் பெற்றோர்களை நேசிப்பதில் ஆரம்பிக்கின்றனர். பிறகு அவர்கள் குறித்த தீர்மானத்திற்கு வருகின்றார்கள். ஆனால் மிகவும் அரிதாகவே மன்னிக்கின்றார்கள்." என்கிறார். அதிகமாகி வரும் கேளிக்கைகள், பிடிவாதங்களுக்கு நீடித்த தொடர்ந்த சந்தைப் பொருளாதாரத் தாக்குதலே காரணம் என்கின்றனர்.

இந்த நிலைமையை சில வேறுபாடுகளுடன் உலகெங்கும் காண முடிகிறது. இந்தியா இதற்கு விதிவிலக்கல்ல. விளம்பரக்காரர்கள் குழந்தைகளை சிறுவயதிலேயே கவர்ந்து பிடித்துவிடுகின்றனர். தொலைக்காட்சி விளம்பரங்களில், சிறந்த பெற்றோர்கள் என்றாலே குழந்தைகளை மகிழ்விப்பவர்கள், அவர்களுடைய தேவைகளை, கோரிக்கைகளை நிறைவேற்றுபவர்கள் என்று மட்டுமே சித்தரிக்கப்படுகிறது. எதற்கெடுத்தாலும் வேண்டாம் என்று சொல்லும் அம்மா ஒரு குறிப்பிட்ட பிராண்ட் சாக்லேட்டிற்கு மட்டும் சரி என்கிறார். கணக்குப் பாடத்தில் மோசமான மதிப்பெண் வாங்கிய மகன், அப்பாவை ஒரு குறிப்பிட்ட பிராண்ட் காரை ஓட்டச் செய்வதன் மூலம், பாடத்திலிருந்து அவரின் கவனத்தை திசை திருப்புகிறான். இந்த விளம்பரங்களின் அடிநாதமான செய்தி, மகிழ்ச்சியும், சந்தோசமும் இருக்க வேண்டுமானால் குழந்தைகள் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுப்பதன் மூலம் மட்டுமே என்பதே. குழந்தைகளும் அதற்குப் பதிலாக கையூட்டுக் கொடுத்து பெற்றோரைத் திருப்தி செய்யும். முடிவாக, குடும்ப விசயங்களில், குழந்தைகள் பங்கு மிகப்பெரிய அளவில் ஆதிக்கம் செலுத்துதல் என்பதையே இந்த விளம்பரங்கள் செய்கின்றன. அதன் மூலம் தங்களுடைய பொருட்களை பெருமளவில் வாங்கச் செய்வதே அதன் நோக்கம். இந்த மாற்றத்தை பெரிய, நடுத்தரக் குடும்பங்களிலும் பார்க்கமுடிகிறது. *"இப்போதைய குழந்தைகள் ஞானக்குழந்தைகள்; ஆதிகாலக் குழந்தைகளைக் காட்டிலும்"* என்ற பைபிள் வாசகம் நமக்கு ஆறுதல் அளிக்கக்கூடும். ('டைம்ஸ் ஆப் இந்தியா' வில் வெளிவந்த "American Bratwagon" என்னும் செய்திக்குறிப்பின் மொழியாக்கம்).

"நீங்கிச் செல்ல வழிகள்
இரண்டு.......
ஒளியில் நீங்குபவன் மீண்டும்
வருவதில்லை"
"இருளில் நீங்குபவன் மீண்டும்,
மீண்டும் வருகிறான்"
கூடங்குளம் உலை என்று
பயன் நோக்கில் நியாயமாகி
நிமிர்ந்தால்...........
அங்கு இனியாவது
காரிருளே!
அதன் உட்பாதமே மேற்கில்.........
மேரு மீண்டும் உரும...ஆரம்பித்து விட்டது
கல்ப முடிவை
உனக்குத் தெரிவிக்கிறது.
நீ, இரண்டில் ஒன்றைத்
தேர்ந்தெடு.
மேரு மலைத்தொடர்ச்சியுடன்
உன் சந்ததியின் ஒளியா?
'மோகப் பயனின் ஒளி'
எனும் நிரந்தர காரிருளா?
எது வேண்டும்?
.......ம். எது வேண்டும்?
கல்பம் உன்னை
நெருங்க வேண்டுமா.........
கூடங்குளத்தை நாடு........
தோன்றா உருவில் புதைக்கப்பட்ட
அணுகுண்டே கூடங்குளம்.
அந்த
மேருவின் ஓங்காரம்
இந்தப் பனிக்காலக் குளிரை
விரட்டவா
12 ம் நாளின் அதிகாலைப்
பொழுதில் கேட்டது...?
இல்லை
அன்று
உன்னில் ஏற்படுத்திய நடுக்கம்
பயன் நுகர்வு மோகத்திரையை
கிழித்துக் கொள்ள விட்ட
இறுதி எச்சரிக்கைக்
கெடு
இனி உன் முடிவில்
சந்ததியின் ஒளியும்
இருளும் ■

ஆ கசெரா

நீ சிரஞ்சீவியா

நீ மரணத்தை வென்று சிரஞ்சீவியாக எண்ணுகிறாய்
நீ மட்டுமா மனித இனம் எல்லாம் சிரஞ்சீவி வாழ்வு ஏக்கம்

ஏக்கம் ஏன்
இன்பம் துய்க்க தொடர்ந்து இன்பலாகிரியில் மூழ்கிக்கிடக்க, லயிக்க.

ஆனால்
பஞ்ச மா பூதங்களே சிரஞ்சீவி இல்லையே !
அதுவும் நீரான இந்த பூ, பூமியின்றி வாழத்துடிக்கிறது.
அத்தோடு
குடி நீரெல்லாம் பூமியுள் அந்தர் முக பயணத்தையே விரும்ப ஆரம்பிக்கிறது.
ஆக, உன் இருப்பே கேள்வி யாயிருப்பது தெரியாமல்
நித்ய சிரஞ்சீவிக்கு ஆசைப்படுகிறாய்....

உன்மோக ஆசையே விருத்திகளை உருவாக்கி எண்ணிறந்த குப்பை -
- கூளங்களை உன்
தேவதையாக உன் அடையாளமாக......., மோஸ்தராக, அதை அடைந்ததும்
நீ இன்பம் துய்த்துவிட்டதாக, உன் அடையாளம் பூர்த்தியானதாக
மனம் கொள்கிறாய், பூரிப்பு சுயமாகிறாய்.

ஆக,
உன் மனத்தை
திருப்தி செய்யவே அனைத்தையும் செய்கிறாய்
மனத்தை திருப்தி படுத்திவிட்டாயா?
பண்ணிவிடுவாயா........

நீ

உன் திருப்திக்காக உருவாக்கிய வஸ்துகளும், அதன் செய்முறைகளும்
உன் இருப்பான நீரை உறிஞ்சி மாசுபடுத்தி, நஞ்சாக்கி
உன் நித்ய ஆசையில் மண்ணைப்போடுவது உனக்கு ஏன் உறுத்தவில்லை.
தாயின் உதிரத்தை உண்டு வளர்ந்த
உன் குழந்தைமீது உனக்கு கோபம்...........?
அதனால்தான்

உன் குழந்தைக்கு இனியாக வேண்டிய இந்த பூமியுள் நீரை நஞ்சாக்கி,
இல்லாமலாக்கி அந்த பிஞ்சுகளை கடலில் ஆழ்த்தப் பார்க்கிறாய்.

உன் கர்மம் தொலைக்க காசி கூட இல்லாமல் போகும் நாள் அருகேதான்....
மிக அருகேதான்....

உன் உடல் இன்பமோகத்தின் கூட்டு பஞ்ச மா பூதங்களையும்
உலுக்கிவிட்டது தவித்த வாய்க்கு...... ஒருவாய் நீருக்கு நீ அலையும் போது,

உன் போகப் பொருள்கள் உன்னை திருப்தி படுத்துமா,
உன் தாகத்தைத் தீர்க்குமா?

காத்திரு பார்ப்பாய். உணர்வாய்.

ஆ கசெரா
22.01.2001

ஜுலை 2001

ஜுலையில் மேற்குமலைத்தொடர்ச்சியில் அதன் கடலோரப்பகுதிகளில் கிணறுகள் திடீர்மறைவு, திடீரென புதிய கிணறுமாதிரியான குழிகள் தோன்றிவருகின்றன.

வண்ணமழைகள் (பச்சை, சிவப்பு), பாறைகள் வெடிப்பு போன்றவைகள் நடக்கின்றன. அரசு விஞ்ஞானத்தரப்பில் யூகங்களை விளக்கங்களாக கொடுத்துவருகின்றனர். ஆகஸ்ட் 4 ல் சிவப்பு மழைக்கு எரிநட்சத்திர சாம்பலின் விளைவு என்றனர். பின்பு நாங்கள் தவறாகக் கூறிவிட்டோம் மன்னிக்கவும் (Sorry We Were Wrong).

(Sorry We Were.....) பல கேள்விகளுக்கு இக்கருத்து விடையளிக்க முடியவில்லை.

சிவப்பு மழையில் உயிர்மப்பொருட்கள் (Organic Materials), ஜீவ அணுக்கள் (Pores) இருந்திருக்கிறது.

பிரிட்டன், கனடா நாடுகளில் ஏற்பட்ட பூகம்பங்களுக்கு (முன்அனுபவம்) முன்பு, சிவப்பு / கருப்பு மழை பெய்ததை சுட்டிக்காட்டுகின்றனர்.

"நீர்மட்டத்தில் ஏற்படும் திடீர் ஏற்ற இறக்கங்கள் நிலநடுக்கம் வரப்போவதை முன்கூட்டியே அறிவதற்கான நம்பகரமான காரணிகளுள் ஒன்றாகும்". என்று சீனர்கள் கருதுகின்றனர்.

கிணறுகள் இடிந்துவிழாமல் இருப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேற்குமலைகளில் உள்ள நீர்த்தேக்கங்களில் அணைகளின் உயரங்களைக் குறைப்பதற்கான யோசனை, முயற்சிகள் ஆரம்பமாகி இருக்கின்றன.

சென்ற ஆண்டு குஜராத் பூகம்பத்திலிருந்து எதையும் அதிகாரவர்க்கமும் சமூகமும் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. நிவாரணப்பொருட்கள் இன்னும் முறையாக போய்ச் சேர்ந்தபாடில்லை. வாழ்விடங்கள் எல்லோருக்கும் கிடைத்தபாடில்லை.

மேற்குமலைத்தொடர்ச்சி எட்டாயிரம் அடி உயரத்திலிருந்து அதற்குக் கிழக்கே மன்னார் வளைகுடா (வங்கக்கடல்) மேற்கே அரபிக் கடல். மற்றொன்று எண்ணற்ற அணைகள் அதற்குள்ளே, அதைச்சார்ந்து.

ஆகவே அதன் வாழ்வானது ஜீவராசிகளின் (மனிதர்கள் உட்பட) உயிர்களுக்கும் நாகரீகத்திற்கும் வரலாற்றிற்கும் காரணமாய் இருந்துவந்திருக்கிறது.

உறவுகள் ஒருவழிப்பாதையாகவே இதுவரை இருந்துவந்திருக்கிறது.

அங்கிருந்து கேட்கும் இடியோசையின் குமுறலும் உறவு என்பது, இருவழிகளில்தான் நடக்க வேண்டும் என்பதை, இருக்கவேண்டும் என்பதை புரிந்து. அதைக் காப்பதின் மூலமே நம்மையும் காத்துக்கொள்ளமுடியும் என்ற தன்னறிவிற்கு இனியும் வராவிட்டால்........ பாவம்.

அ.கசெரா

oooo

"மனக்"குகை மனிதர்களின் மரணம்

மனநலம் குன்றியதாக கூறப்பட்டவர்கள் அல்லது பைத்தியம் என்று சமூகமனத்தால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விலக்கி வைக்கப்பட்டார்கள் / படுகிறார்கள். மேற்கத்தியவுலகு மாதிரியில்லாமல் நம்ம ஊர் கிராமங்கள் இந்தப்பிறவிக் கோளாறையும், இடையில் உருவான, உருவாக்கிக்கொண்ட (போதைப்பொருளால்) இவர்களை தகவமைத்துக் கொண்டுதான் வாழ்ந்துவந்தது.

அன்றும் கூட வைத்தியத்தால் ஆகாதது இறைவனால் ஆகக்கூடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சில கோவில்கள், தர்ஹாக்களில் அவர்கள் விடப்பட்டனர்.

ஆனால், இன்று நகர்மயமாதலின் விரிவும், தனிக்குடித்தன கலாச்சாரப் பெருக்கமும் இவர்களை சபிக்கப்பட்டவர்களாக மாற்றிவிட்டது.

விளைவு, இந்த சமூகமும், அரசும், கோவில்களும், தர்ஹாக்களும் கைவிரித்துவிட்டதால், ஊரையடித்து உலையில்போட்டு காசு சம்பாதிக்கும் விழுமியம் பேய்பிடித்து, உடுக்கை சப்தத்துடன் வீடுகள், தெருக்கள், கல்விக்கூடங்கள், ஆலயங்கள் அத்தோடு அரசியலிலும் கொலுவீற்றிருப்பதால் இவர்கள் அனாதை ஆக்கப்படுகிறார்கள். அதையும் அறியமுடியா நிலையுடன். (இந்த விளிம்பு நிலையாக்கப்பட்டவர்களுக்கு இப்படியொரு நிலை ஏற்பட்டவுடன்தான் பேசப்படவேண்டிய பொருளாக ஆகியுள்ளனர்).

இவர்கள் என்னைப்போல், உன்னைப்போல் இந்த நாட்டின் குடிமகன் இல்லையா? அரசியல் சாசனத்தில் இவர்களுக்கு என்ன உரிமை வழங்கப்பட்டுள்ளது?.

அவர்களுக்கான குடியுரிமை வழங்கப்பட்டிருந்தால், அவர்கள் கரங்கள் இரும்புச்சங்கிலியால் பிணைக்கப்படாமல் (குறைந்தபட்சம் உயிருக்காக அஞ்சி ஓடும்போது அறுபடும் அளவிற்கான பொருளால் ஆனதாக இருந்திருந்தாலும் கூட) இருந்திருந்தால் மாட்டுக்கொட்டகைகளில் கூட ஓடித்தப்பிக்கும் இந்தப்பலி நடைபெற்றிருக்காதே.

குறைந்தபட்சம் இந்தமாதிரி கொட்டகைக்காரர்களின் "மனநோயாளிக் காப்பகங்கள்" மீது அரசின் ஏதோவொரு வடிவிலான கட்டுப்பாடுகளை விதித்திருந்தால், அவைகளை முறையாக கண்காணித்திருந்தால் இது நடந்திருக்குமா? (சட்டப்படி இவர்களுக்கு ஓட்டு உண்டா? ஏனென்றால் ஓட்டு இருந்திருந்தால் அரசாங்கவாதிகள் ஓட்டிற்காகவாவது ஐந்து ஆண்டிற்கு ஒருமுறை போய்ப் பார்த்திருப்பார்களே!).

WHO - வின், சமூக மேம்பாடு நடவடிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக மனநலம் கருதப்படவேண்டும். (Mental health must be regarded as an integral part of the social development equvation) என்ற அடிப்படையை இந்திய அரசு ஏற்றுள்ளதா? என்று தெரியவில்லை.

மனநோயாளிகளின் பிரச்சினை ஒரு பொது விசயமாக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும்.

உடனடியாக மனநலம் குன்றியவர்களுக்கான சட்டப்பாதுகாப்பு வேண்டும். அந்தஸ்து வேண்டும்.

மன நோயாளிகளை தண்டிக்கும் (சிகிச்சையின் பெயரால், ஒழுக்கத்தின் பெயரால்) உறவினர், தனியார், கோவில், தர்ஹா காப்பகங்கள் சட்டங்கள் மூலம் தடுக்கப்படவேண்டும். நவீன மருத்துவம் உட்பட பிறபிரிவினரின் சிகிச்சைமுறைகள் கண்காணிக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் எத்தனை மனநலக்காப்பகங்கள் உள்ளன?. (அரசு, தனியார், கோவில், தர்ஹா, கீத்துக்கொட்டகைகள்). அவைகளின் கட்டமைப்பு, வசதிகள், வசூலிக்கும் கட்டணங்கள் எவ்வளவு?.

நோயாளிகளின் வகைமாதிரி எண்ணிக்கை எவ்வளவு?

வருங்கால மனநோயாளிகளை தடுப்பதற்கான திட்டமென்ன?

கல்விக்கூடங்களில் மனநலம் குறித்தும், ஒருவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள மேற்கொள்ள வேண்டிய அடிப்படைகள் குறித்தும் பாடத்திட்டத்தில் இடம்பெற்றாலென்ன?.

உள்ளூரளவிலான மக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்படவேண்டும்.

அரசாங்கங்கள் தன் நிதிஒதுக்கீட்டில் மனநோயாளிகளுக்கென்று பணம் ஒதுக்கவேண்டும்.

மக்களின் பொதுவெளி இவர்களை ஒதுக்குகிறது. பொதுவிவாதத்தின் மூலம் அவர்கள் ஒன்றிணைக்கப்படவேண்டும்.

- *அக்நி*

oooo

நடந்தது..............

எல்லாம் சட்டப்படி!

"...........சுயநலம் அதிகரிக்குமளவு ஒரு மனிதன் துன்மார்க்கத்தில் ஈடுபடுபவன் ஆகிறான்....... அதே கோட்பாடு ஒரு ஜன சமூகத்திற்கும் உரியதாகிறது.

சுய நலம் ஒன்றிலேயே காலமெல்லாம் கண்ணும் கருத்துமாயிருக்கிற சமூகம் மிகக்கொடூரமானதாகவும் உலகுக்கு துரோகம் செய்யக் கூடியதாகவும் இருந்து வந்திருக்கிறது".

- அனுஷ்டான வேதாந்தம்

ஜூன் 30 -ம் தேதியன்று தமிழக மக்கள், கட்சிகள், அறிவாளிகள், பத்திரிக்கைகள், தொலைக்காட்சிகள் இன்னும் இதரரும் இரண்டு கட்சியாக கருத்துக்களை அரசியல், சட்டம், கலாச்சாரம் என பல்தளங்களில் பேச்சாக வெளியிட்டார்கள்.

பொதுவாக, தேர்தல் காலத்தில் நடைபெறும் வாதப் பிரதிவாத பேச்சுக்களை மிஞ்சியது இது. வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவோம் என்பவரும்; இந்த வாழ்வே நுகர்வுக்காக என்று வாழ்வோரும்; உடல்வழிபாடே சரணம் என்பவரும்; புறவய விழுமியங்களே பிரதானம், அகவயப்பட்ட மனிதநேயம், சமூக ஒழுக்கம், சமூக ஒழுங்கு, சமூகக் கடமை, சமூகநோக்கம் etc. அனைத்தும் ஒடுக்குமுறை சார்ந்தது என வாழ்பவரும்; பதவிமோகம், அதிகாரமோகம், புகழ்மோகம், நாற்காலிமோகம், அறிவு மோகம் கொண்டவர்களும் கூட இந்த உரையாடலில் சோகமாக, நகைச்சுவையாக, குரூர மகிழ்வுடன் பங்கேற்றனர்.

இனி, அந்த வெள்ளி இரவுக் காட்சிக்கு வரலாம். ஏற்கனவே, 'சன்', 'J' தொலைக்காட்சிகள் அத்தோடு Star News போன்றவை அதை மீண்டும் மீண்டும், மீண்டும், மீண்டும்.........

அதுவும் 'சன்' தன் அரசியல் நிலைப்பாட்டிற்கு ஏற்ப, மனச்சார்புக்கு ஏற்ப பலவாறாக எடிட் செய்து தமிழனின் பொதுப் புத்தியிலும், உணர்விலும், ஓலக்குரலை இனியாகும் அரசியலுக்கு வித்தாக்கி விட்டனர்.

கிரிமினல் என்று குற்றம் சாட்டப்பட்டவரை எந்த நேரத்திலும் கைது செய்யலாம்.

காலம் / வயது தடையல்ல என அதிகாரக் குரலும், அதன் சார்புக் குரலும் (பல்வேறு சொந்தக் காரணங்களும் சேர்ந்து) சொல்லுகின்றன.

பள்ளியறை என்ற தளமும், நடுநிசி என்ற காலமும் முதியவர் என்பதும், பண்பாடு, நாகரீகம் சம்பந்தப்பட்டது. மரபும் கூட.

சட்டம் இன்று உள்ளது, நாளை அது மாறலாம். மேற்குலக நாகரீகம் கூட. ஆன்மீகம் கூட. தமிழ் குடும்ப வரலாறு கூட இதை ஏற்றுத்தான் இருக்கிறது. நவீன நாகரீகம் - பிந்தைய - வேண்டுமானால் அந்தச்சட்டத்தை பிரதிபலிக்கலாம் உடலில் பேதமில்லை என்று. குற்றவியல் சட்டம் மேற்கண்டவாறு கூறுகிறது. குற்றவியல் சட்ட அரசியலை ஒழுகுபவர்களும் வயது, காலம் பார்க்கத் தேவையில்லை என்கின்றனர்.

இதுபற்றி அரசியல் சாசனம் என்ன கூறுகிறது.

அது தன் முதல் பாராவில் ".............மாண்பு காக்கப்பட வேண்டும்" என்கிறது.

மாண்பு என்பது என்ன? சொல்லகராதிக்கு உட்பட்டதா அல்லது சட்டம்தான் தீர்மானிக்க வேண்டுமா?

அந்த மாண்பில் வயது முதிர்ந்தவருக்கான பிரதிநிதித்துவப்படுத்துதல் (Representation) உண்டா, இல்லையா?

கிரிமினல் குற்றவாளி என்று போலீஸ் கூறியவுடனே குற்றம் சாட்டப்பட்டவர்களின் மாண்பை, தன்னிச்சையாக போலீஸ் கழற்றிவிட்டுவிட அதிகாரம் உள்ளதா?

குற்றம் சாட்டப்பட்டவர் வழக்கில் நிரபராதி என்று தீர்ப்பு வந்தால்...... அப்போது இழந்த மாண்பு திரும்பி விடுகிறதா?

உதாரணத்திற்கு இந்த வழக்கிற்கான சட்டரீதியான காரணகர்த்தா, C.B, C.I.D-யிடம் புகார் கொடுத்த சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ஆச்சார்யலு பற்றி தமிழ் தினசரியின் முக்கிய பத்திரிக்கையான தினமணி இப்படிக் கூறுகிறது.

ஜூலை 2, திங்கட்கிழமை தினசரியில் 4 பத்தி தலைப்பில்...

ஊழல் வழக்கில் சிறை சென்ற ஆச்சார்யலு

பதவியேற்ற 9 நாளில் புகார் தந்தார். கருணாநிதி, ஸ்டாலின் கைதுக்கு மூலகர்த்தா.

அவர் வழக்கில் தண்டனை அடைந்திருந்தால் மீண்டும் அதிகாரி ஆகியிருக்க முடியாது.

அப்படியிருக்க, இப்போதும் கூட காலத்தை ஏற்றி வைத்து அடைமொழி கொடுப்பது ஏன்?

அன்று இழந்த மாண்பு அவருக்கு வந்து விட்டதா? தொடருகிறதா?

பதில் சட்ட அறிவு உள்ள அறிவாளிகள் கூறவேண்டும்.

முதுமை கணக்கில் கொள்ள முடியாது; படுக்கை அறை, நடுநிசி போன்றவையும் கவனத்தில் வராது சட்டத்திற்கு, அப்படித்தானே.

ஆம்......... என்பதால் இன்னும் சற்று அருகே சென்று சட்டத்தைப் பார்க்கலாம்.

தமிழகத்தின் 20ம் நூற்றாண்டின் கடைசியில் கைதான ஜெ.க்கும், 21ம் நூற்றாண்டின் முதலில் கைது செய்யப்பட்ட மு.க.வுக்கும் இடையில் சட்ட ரீதியான ஒற்றுமையைப் பார்க்கலாம். தமிழக அரசு, பொதுச் சொத்து ஊழல், இரண்டு முதல்வர்கள்.

இனி கைது செய்த போலீஸ் அதிகாரிகளின் சட்ட நடவடிக்கைகளைப் பார்ப்போம்.

முன்னாள் முதல்வர்கள் கைது

அன்றும் - இன்றும்

அன்று 7 - 12 - 1996

1. உள்ளாட்சி மன்றங்களுக்கு வண்ணத்தொலைக்காட்சி பெட்டிகள் வாங்கியதில் 8 கோடிரூபாய் ஊழல் தொடர்பாக நீதிமன்ற உத்தரவின் பேரில் ஜெ. கைது செய்யப்பட்டார்.
2. போயஸ் கார்டன் பகுதியில் காலை 6 மணி முதலே போலீஸார் குவிக்கப்பட்டனர்.
3. மாநில குற்றப்புலனாய்வுத் துறையினர் காலை **7.55** மணிக்கு போயஸ் கார்டன் வந்தனர். ஜெயலலிதா பூஜை அறையில் இருப்பதாகவும் சிறிது நேரம் காத்திருக்கும்படியும் வழக்கறிஞர் P.H பாண்டியன் கூறினார்.
4. கிட்டத்தட்ட **1.45** மணிநேரம் கழித்து பூஜைமுடித்து வந்த ஜெயலலிதாவிடம் அவர் கைது செய்யப் பட்டிருப்பதைத் தெரிவித்தார் போலீஸ் அதிகாரி. **9.55** க்கு மறுப்பு எதுவும் இன்றி தேவையான துணிகளை சூட்கேஸில் எடுத்து, வாசல் அருகில் உள்ள வினாயகர் சிலை அருகில் சிறிது நேரம் நின்று உள்ளே கொண்டுவரப்பட்ட வேனில் உதவிக்கு வந்த பெண்போலீஸாரை மறுத்துவிட்டு தானே ஏறினார்.
5. **10.20** க்கு சென்னை மாநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்துக்கு கொண்டுவரப்பட்டு துணை ஆணையர் அறையில் உட்காரவைக்கப்பட்டார்.
6. 11 மணிக்கு செஷன்ஸ் நீதிபதி முன் ஆஜர் படுத்தப்பட்ட ஜெ.யிடம் உங்களை போலீஸார் தரக்குறைவாக நடத்தினார்களா? என்று கேட்டதற்கு அவர் 'இல்லை' என்று பதில் அளித்தார்.
7. நீங்கள் எதற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள் எனத் தெரியுமா? என நீதிபதி கேட்க தெரியும் என்று கூறினார்.
8. வழக்கு பற்றிய முதல் தகவல் அறிக்கை தரப்பட்டதா எனக் கேட்க இல்லை என ஜெ. கூறவும் நீதிபதி F.I.R கொடுக்க. ஜெ.தான் மூக்குக் கண்ணாடி எடுத்துவரவில்லை அதனால் படிக்க இயலாது என்று கூறினார்.
9. வெளியே வந்தவுடன் தொலைக்காட்சி நிருபர்களிடம் தி.மு.க.வுக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டது எனக் கூறினார்.
10. 11.50 க்கு மத்திய சிறையில் அடைக்கப் பட்டார்.
11. அதுவரை பெண்போலீஸார் வளையம் போல் நின்று பாதுகாப்பு கொடுத்தனர்.
12. 28 நாள் சிறைவாசத்துக்குப்பின் ஜனவரி 3ல் விடுதலையானார் (ஜாமீனில்)

இன்று 29-06-2001

1. நள்ளிரவு **1.15** க்கு சி.பி.சி.ஐ.டி போலீஸாரும் சென்னை மாநகரப் போலீஸாரும் கருணாநிதி இல்லம் சென்றனர்.
2. வீட்டை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற போலீஸார் மாடியில் தூங்கிக் கொண்டிருந்த கருணாநிதியை எழுப்பினர்.
3. கருணாநிதி வாரண்ட் எதுவும் இருக்கிறதா எனக் கேட்க உங்கள் மீது குற்றவழக்குப் பதிவு செய்யப்பட்டு இருப்பதால் வாரண்ட் எதுவும் தேவையில்லை எனக்கூறி கைது செய்ய முயன்றனர்.
4. 45 நிமிட வாக்குவாதத்திற்குப் பின் கலைஞரை அடித்து இழுத்துக்கொண்டு சென்று கைது செய்யவும் கருணாநிதி நிலைகுலைந்து போனார்.
5. செய்திகேட்டு மாறன்கள் வருகை. 1.30 - 1.45 வரை போலீஸாருடன் வாக்குவாதம்.
6. குடும்பத்தினர் அனைவரையும் தள்ளிவிட்டு 2 மணிக்கு கருணாநிதியை அடித்து இழுத்துச் சென்றனர்.
7. எழும்பூர் போலீஸ் கமிஷனர் அலுவலகத்துக்கு கொண்டு சென்றனர்.
8. **2.30** க்கு சி.பி.சி.ஐ.டி போலீஸ் அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டபின் அனைத்துக் கதவுகளும் மூடல்.

9. **5** மணிக்கு வேப்பேரி காவல் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

10. **5.15** க்கு செஷன்ஸ் நீதிபதி முன்பு ஆஜர் படுத்தப்பட்டார்.

11. நீதிபதி வழக்கு விவரம் கேட்டார் போலீஸ் அதிகாரிகளிடம்.

12. காவல் அதிகாரி மேம்பாலங்கள் கட்டியதில் 12 கோடி ஊழல் நடத்திருப்பதின் காரணமாக இவரை காவலில் வைக்க உத்தரவிட வேண்டும்.

13. நீதிபதி - ஆதாரம் இருக்கிறதா?

14. காவல் அதிகாரி - இனிமேல்தான் விசாரணை செய்து ஆதாரங்களைத் திரட்டவேண்டும்.

15. நீதிபதி - அதுவரை காவலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கும் வகையில் உரிய மனு இருக்கிறதா?

16. காவல் அதிகாரி - அதற்கான மனுவை வாங்கி வருகிறோம்.

17. நீதிபதி - கைது செய்ய வாரண்ட் உள்ளதா?

18. காவல் அதிகாரி - இல்லை கைது செய்து ஆஜர் படுத்தி உள்ளோம். காவலில் வைக்க உத்தரவிடவேண்டும்.

19. நீதிபதி கருணாநிதியை நோக்கி, "ஜுலை 10 வரை காவலில் வைக்க உத்தரவு இடுகிறேன்".

20. நீதிபதிவீட்டில் தண்ணீர் கேட்டு கருணாநிதி குடித்தார்.

(ஆதாரம்: தினமணி)

இரண்டு முதல்வர்கள் கைது செய்யப்பட்ட அட்டவணையில் இரு வேறான, எதிரும் புதிருமான, கைது செய்யும் செயல் முறையைப் பார்க்க முடிகிறது.

இரண்டிலுமே, போலீஸாரின் தலைமை அதிகாரிகள் பங்கேற்றிருக்கின்றனர்.

இரண்டிலும் சட்ட(ம்) ஒழுங்கின் பிரதிநிதிகள்தான் இருந்திருக்கிறார்கள். ஆனால் நடைமுறைகள் ஒரே வகையான குற்றத்திற்கு வேறுவேறாக இருக்கிறது. 'அதுவும் சட்டப்படிதான்".

சட்டப்படியான நடவடிக்கை (அதாவது நடந்த ஒரு செயல்பற்றிய கூற்று) கூறுபவர்யார்? போலீஸ் அதிகாரம். நடவடிக்கையை மேற்கொண்டது யார்? போலீஸ் அதிகாரம்.

எதில் சட்டம் குடிகொண்டுள்ளது. நடவடிக்கை மேற்கொள்ளும் யுக்தியிலா? அல்லது யுக்தியின் அடிப்படையிலான செயலிலா? அது இரண்டுமல்லாமல் மேற்கொண்ட செயலிலா?

யுக்தியில் சட்டமிருந்து செயலில் சட்டமில்லாமல் இருக்கலாம். ஏனெனில் செயல், காலம், இடம், சூழல், செயலை மேற்கொள்ளும் நபர்கள் போன்றவற்றால் கட்டுப்படுத்தப்படுவது. அப்பொழுதும் அந்த நடவடிக்கை சட்டப்படிதானா?

போலீஸார் தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கையை சட்டப்படி என்று கூறவேண்டிய சூழலில் உள்ளவர்கள். அது அவர்களின் அடையாளம் (Idendity).

நடத்தப்பட்ட செயல் சட்டப்படியாகலாம்; அல்லது சட்டப்படியாக ஒரு செயலை மேற்கொள்ளலாம்.

ஆக சட்டப்படியான நடவடிக்கை என்பதும், நடவடிக்கை சட்டப்படியர்க் என்பதும் ஒன்றாக இருக்கவேண்டியதில்லை.

ஒன்று சட்டத்திலிருந்து தோன்றி சட்டத்தை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்வது மற்றொன்று நடந்ததை சட்டப்படி என்று ஆக்குவது அல்லது கூறுவது.

சட்டப்படி என்று யார் கூறுவது? போலீஸ் அதிகாரம். யாரிடம்? பொதுவெளிக்கு. எதற்காக? தன் செயல் பற்றிய தன்னிலை விளக்கம்; அதன் மூலம் தன் செயலைக் கடமை என்றாக்க.

போலீசாரால் செய்யப்பட்ட ஒரு செயல் சட்டப்படியாக இருந்தால் அது கடமை ஆகிறது. அதே செயல் சட்டப்படி இல்லையென்றால் மீறல் என்றாகிறது.

கடமையைச் செய்வதும் போலீஸ் அதிகாரம்தான்; மீறலைச் செய்வதும் அதே அதிகாரத்தில்தான். நேற்றைய நடவடிக்கை, இன்று சட்டப்படி என்ற சொல்லாடலாக மாற்றப்படுகிறது.

நடவடிக்கை, சட்டப்படியான கடமை அல்லது மீறல். இங்கே, இப்போது கடமை என்பதும் *மீறல்* என்பதும் ஒரு மெல்லிய கோட்டால் பிரிக்கப்பட்டுள்ளது.

உளவியலில் ஒரு மனிதன் எந்தவகை நோயால் பாதிக்கப்பட்டவன் என்று தீர்மானிக்க முடியாத அளவிற்கு அவன் குணநலன் வெளிப்படும்போது அம்மனிதனை "Border Line" நோயாளி என்கிறார்கள்.

இங்கு சட்டப்படி என்பது ஒரு பிரதி. அந்தப் பிரதி *சட்டமீறலானதா?* அல்லது *கடமையிலான* பிரதியா என்பது பிரச்சினை. இரண்டுக்கும் இடையில் ஒரு மெல்லிய கோடே. அதுதான் சட்டம். அது மாறிமாறித் தெரிவது சகஜம். ஆனாலும் அதிகாரத்தின் கடமை (நீதியதிகாரம் அப்படிக் கூறிவிட்டாலும்) என்பதாலேயே அது சரியாகத்தான் இருக்கவேண்டிய அவசியமில்லை. (உ.ம்) ஹிரோஷிமா, நாகசாகி அமெரிக்க அதிகாரக்கடமை.

ஆகவே சட்டப்படி என்பது சட்ட அதிகாரத்தில் மட்டும் அடைபட்டுவிடுவதல்ல....

இனி, சட்டப்படி நடந்தேறிய காரியங்கள், அதன் விளைவுகளைப் பார்க்கலாம்.

போபால்: நினைவுக்கு வருகிறதா?.

போபால் விஷவாயுப் படுகொலை 80 களில் நடந்து இந்தியாவை உலுக்கியது. உலகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது என்பது மங்கலாகவாவது நினைவுகளில் இருக்கும். இதுபற்றி கட்டுரை ஆசிரியர் கூறும்போது "யூனியன் கார்பைடு கம்பெனி 1969 களில் உரிமம் கோரியது. அப்பொழுதே அந்த தொழிற்சாலை வரவுள்ள அந்தப் பகுதியில் ஐம்பது பங்களாக்கள் இருந்தன; போபால் வளர்ச்சி நிர்வாகத்தின் கீழ் வீட்டு மனைகள் உருவாகி வந்தன. போபால் இரயில்வேநிலையம் அதன் அருகிலேயே உள்ளது. அதே பகுதியில் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் சுறுசுறுப்பான வியாபாரப் பகுதியும் வர்த்தகப் பகுதியும் இருந்தன.

'யூனியன் கார்பைடு கம்பெனியானது' தனது உரிமத்தை மத்திய இராசயனம் மற்றும் உரத்துறை, தொழில் நுணுக்க வளர்ச்சி இயக்குநர், விவசாயம் மற்றும் மையப் பூச்சிக் கொல்லி நிர்வாகத்துறையின் அமைச்சகம் மற்றும் மத்தியப் பிரதேசத்தின் பல்வேறு துறைகளிடமிருந்தும் பெறவேண்டி இருந்தது.

இக்கட்டங்களில் எந்த ஒரு நிலையிலும் கம்பெனி நிறுவப்படும் இடத்தில் எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகள் பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை; விபத்து நேர்ந்து விட்டால் அதைக் கட்டுப்படுத்தும் நுணுக்கங்கள் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. சுற்றுச் சூழலுக்கு வரக்கூடிய பக்கவிளைவுகள் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை.

பாதுகாப்பு அம்சத்தில் குறைபாடுடைய அமைப்பை (டிசைன்) இந்தத் தொழிற்சாலை கொண்டிருந்ததால் கனடா நாட்டில் இதற்கு உரிமம் வழங்கப்படவில்லை. அதன் பிறகே அவர்கள் இந்தியாவுக்கு வருகிறார்கள். கனடாவில் உரிமம் மறுக்கப்பட்ட ஒரு கம்பெனிக்கு இந்திய அரசு அதிகாரத்தில் உள்ள அதிகாரிகள் உரிமம் கொடுக்கிறார்கள். இப்படி உரிமம் வழங்கியதற்குக் காரணம் நிர்வாக அதிகாரிகளின் அறியாமையா அல்லது மனித உடல்கள் இங்கு வெகு மலிவாக இருப்பதாலா? இன்றுவரை பதிலில்லை.

மேலும் இதே கம்பெனி அமெரிக்காவில் மேற்கு வர்ஜீனியா பகுதியில் நிறுவப்பட்டு உள்ளது. அங்கு பாதுகாப்பு அம்சம் கம்ப்யூட்டர்கள் மூலம் கண்காணிக்கப்படுகிறது. அதே விதமான முறைகளை இந்தியச் சூழலில் தொடர்ந்து பராமரிக்க முடியாது என்ற சாக்கில் கம்ப்யூட்டர் மூலமான பாதுகாப்பு முறை கைவிடப்பட்டது.

இந்தச் சூழல் அன்று, இன்று Software இந்தியர்கள் முதலிடத்தில் இருக்கிறார்கள் என்று சிறப்புகுழு குரல் எழுப்பலாம்.

மேலும், புதுவகைப்பட்ட பிரச்சினைக்குரிய இராசயனப் பொருள்களை ஆய்வு செய்வதற்கான கார்பைடு கம்பெனியின் திட்டத்திற்கு எதிராக வல்லுநர்கள் கண்காணிப்புக்குழு அபாய எச்சரிக்கை விடுத்தது. இதைத் தூக்கியெறிந்துவிட்டு அறிவியல் மற்றும் தொழில் நுணுக்க அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

விபத்தில் வெளியானது மீத்தைல் ஐசோ சயனைடு (MIC). இந்த விஷ வாயுவுக்கு விஷமுறிவு பற்றி அந்தத் தொழிற்சாலை மருத்துவருக்கோ அல்லது போபாலில் உள்ள மருத்துவர்களுக்கோ யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. விளைவு உயிர்ப்பலி. ஊனம், உடல் அவதிகள், ஒரு நிமிடத்திற்கு ஒரு நோயாளி என்ற வீதம் நோய்க்குறிகளை மட்டுமே வைத்துச் சிகிச்சை அளித்தனர். தன்னறிவற்ற நிலையில் அவசரத்தில் தற்குறித்தனமான சிகிச்சை அளித்து பயனென்ன வந்தது?" (Environmental Impact Assessment- Legal Dimensions. P. Leela krishnan)

இங்கே கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியது சட்டப்படிதான்; நடந்ததெல்லாம் சட்டப்படிதான். அதிகாரிகளும், அறிவியல் மற்றும் தொழில் நுணுக்க அமைச்சகமும்தான் அனுமதி அளித்துள்ளது. ஆனால் விளைவு என்னவோ நேர்மாறானது. மனித குலத்தை அழித்தது. அச்சுறுத்தியது. ஆக, சட்டப்படி என்பது நீதியாகி விடமுடியாது. அதை கேள்விக்கு உட்படுத்தித்தான் ஆக வேண்டும். விமர்சித்துத்தான், விமர்சிக்கப்பட்டுத்தான் ஆகவேண்டும். "சட்டப்படி" என்ற கூற்றை அப்படியே ஏற்று தனதாக்கிக் கொள்வது என்பது வருங்கால சமூகத்திற்கு சுடுகாட்டில் குழி தோண்டுவதற்கு ஒப்பானது. திருதராஷ்டிர தந்தைமார்கள் தங்கள் இளவரசர்களுக்கு முடிசூட்டிவிட்டு குருஷேத்திரப் படுகுழிக்கு வழிகாட்டுவது போன்றது.

கல்பாக்கம் அணுமின் நிலையம், கூடங்குளத்தில் வரவிருக்கும் அணுமின் நிலையம், இரண்டும் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையின் வடக்கில் ஒன்றும், தென்கோடியில் ஒன்றும் சட்டப்படிதான் நடந்தேறியிருக்கிறது. நடந்து கொண்டிருக்கிறது.

செர்னோபிள் விபத்துக்குப் பின்னரும் கூட சட்டப்படி என்றும் விஞ்ஞான அதிகாரம் என்னும் பெயரிலும்தான் கூடங்குளத்தில் சூளை ஆரம்பமாகிறது. என்ன செய்ய?

இந்த இரண்டு அணு உலைகளுக்கு இடையில்தான் மன்னார் வளைகுடாவும், அதை நம்பி வாழும் இலட்சகணக்கான குடும்பங்களும், கடல்வாழ் உயிரினங்களும், கடலும் இருக்கிறது. சட்டப்படி, அதிகார விஞ்ஞானிகள்படி, காலங்காலமாய் மீளமுடியாத அழிவை உட்கொண்ட அதனுள்ளே உட்பொதிந்துள்ள ஒன்றை கேவலம், இந்த 'சட்டப்படி' என்ற, 'விஞ்ஞானப்படி' என்ற (அதுவும் இங்கே சட்டம்தான்) கூற்றால், என்றைக்கு அது நடக்குமோ? என்ற அச்சத்தில், பீதியில் வைத்திருப்பது என்பதுதான் சட்டமா? சட்டப்படியா? வளர்ச்சியா?.

இனியாகும் சமூகத்தையும், சுற்றுச் சூழலையும் சிந்தனைச் சோம்பேறித்தனமும், உடல் ஆராதனைத்தனமும், சுயமோக வெறித்தனமும் கொண்ட இந்தத் தலைமுறைச் சொகுசுக்காக சட்டப்படி, விஞ்ஞானப்படி என்னும் பெயரில் அரசு அதிகாரத்திற்கு வருங்காலத்தை அடகு வைக்க இன்றைய சட்டத்திற்கு என்ன தார்மீக உரிமை உள்ளது?.

இந்த சோரத்தை சட்டப்படி என்று ஏற்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்ன?

ஆகவே, சட்டப்படி என்பதுவே மக்களுக்கான நீதியாகிவிட முடியாது. சட்டப்படி என்ற வியாக்கியானமே நீதி ஆகிவிடமுடியாது. அது காலத்தையும், பிரச்சினையையும் சார்ந்தது.

சட்டப்படியான நீதி பற்றி டெல்லி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும், சட்டவியல் பேராசிரியருமான திரு.உபேந்திரபக்ஷி (Upendra Baxi) ஒருமுறை,

"சட்டச் சொல்லாடலில், நீதி என்பது வெறுமனே, அதிகாரத்தின் ஒரு அம்சமே. சட்டத்தின்படி நீதி என்பது இதுவாகத்தான் உள்ளது. அரசதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டுள்ளவர்கள் அவசியமானது எனக் கருதுவது அல்லது வழங்குவதற்குரியது என்று கருதுகின்ற ஒன்றே நீதி எனப்படுவது". (**Celeberation of the State power**-Journal of Indian Law Institute Vol.35. Part 1)

இந்திய அரசியல் சாசனத்தை தலையில் வைத்துக் கொண்டாடுவோரும், அதன் எல்லைகள், ஜீவிதத்தை அடிக்கடி கவனிக்கத் தவறுகின்றனர். இதைப் பற்றி பக்ஷியின் வரிகளில்,

"அரசியல் சாசனப்படி கொத்தடிமை முறை தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் 1976 வரை சட்டப்படி நியாயமானதே! நீதியானதே! *(அதே நூல், அழுத்தம் கட்டுரை ஆசிரியர்)*

திரு. கருணாநிதியின் கைதுக்குப் பின் முதலில் ரிமாண்டிற்கு உத்தரவிட்ட நீதிபதி அசோக்குமார், பின் இரண்டு மைய அமைச்சர்கள், தமிழக மக்களையும், மைய அரசையும் நெம்பித்தூக்கி நிறுத்திய SUN T.V. அந்தக் காட்சிகள், சூழலில் நெகிழும் - பெரிய வீட்டின் இழவுச் செய்தி மாதிரியான ஒன்று - தமிழ் மனத்தின் பொதுப்புத்தி, மைய அரசின் தலையீடு, திரு. மு.க.விடுதலை, ஸ்டாலின், பொன்முடி ஆகியோருக்கு ஜாமீன் வழங்கல், நீதிபதியின் சட்டம் பற்றிய விசாரணை, விடுதலை, நீதிபதி ராமன் கமிஷன்.எல்லாம் சட்டப்படியே நடந்தேறியது.சட்டத்திற்கு புறம்பாக நடந்தது தமிழ் நாகரீகத்தின் மனஅதிர்வு மட்டுமே.

"..........அநீதியின் பிரச்சினையை அல்லது பிரச்சினையாகிவிட்ட அநீதியை (**Justice which has become a problem**) எதிர்க்காமல் இருப்பது அரசு அதிகாரத்திற்கு விலை அதிகம் கொடுத்ததாகி விடுகிறது. முழுமூச்சுடன் எதிர்ப்பதுகூட விலை உயர்வுதான். அரசு அதிகாரமானது இரண்டிற்கும் இடையிலான தொடுபாதையைத் தேர்வு செய்கிறது. இந்த நடுவழிப்பாதை முழுமையான நீதியின் அபிலாஷைகளின் பிணக்குவியலாய் உள்ளது; "நீதியான" தீர்வுகள் என்று அனுமானிக்கப்பட்டதின் சிதைவுகளால் நிரப்பப்பட்டுள்ளது" (அதே கட்டுரை).

அதாவது, கட்டமைப்பில் வெடிப்பு என்றவுடனே ஆங்காங்கே கட்டப்பஞ்சாயத்து சட்டப்படி என்ற பெயரில், ஒட்டுப்போடுதல் மூலம் திருப்திப்படுத்துகிறது சம்பந்தப்பட்டவர்களை.

உண்மைதான். மைய அரசும், மாநில அரசும் சம்பந்தப்பட்ட I.A.S., I.P.S போலீஸ் அதிகாரிகளும், அத்துடன் சாவின் விளிம்பைத் தொட்ட உணர்வுடன் மு.க.வும், இரு மந்திரிகளும், அனைவரும் ஏதோ ஒருவகையில் நலமே. நீதிப்படி எல்லாம் சரியாகிவிட்டது.

ஒரு சமநிலை உருவாக்கப்பட்டது. சட்டம் அல்லது அநீதிப்படி ஆளுங்கட்சிகளுக்கிடையிலான போராட்டம் என்று வைத்துக் கொண்டாலும், மக்களுக்கான, அதுவும் தங்களின் அடிப்படை ஜனநாயக உரிமைக்காகப் போராட எண்ணும் சாமானியனுக்கான உத்திரவாதம் அல்லது அதற்கான சட்ட நம்பகம் (Lawful trust) இன்னும் தரவில்லையே. பழைய கவர்னர் பீவிக்குக்கூட மைனாரிட்டி என்பதால் ஆதரவுக் குரல்கள் உண்டு இங்கே. ஆனால் போலீஸ் அதிகாரம் "நீதி எண்ணத்தின் பெயரால்" சட்டத்தைக் கையில் எடுப்பதும் சட்டப்படி கர்மம் நடந்தேறியது என்று கூறுவதையும் இந்த அரசியல் சாசனத்தாலும் சட்டத்தாலும் தடுக்க முடியாதவரை மனித நாகரீகத்தை சீர்குலைக்கும் 'சாத்தான்கள்' குரல் ஒலிக்கத்தான் செய்யும்.

சாத்தான் குரலானது, எல்லாம் சட்டப்படிதான் நடந்தது, அதிகாரிகள் பயப்படத் தேவையில்லை. காப்பாற்றப்படுவார்கள் என்று எதிரொலிக்கிறது.

பிரச்சினை மனிதர்கள் அல்ல. மனித நாகரீகம், சட்டமாண்பு, இருத்தலின் உணர்வு, பாதுகாப்பு உணர்வு.

"........அரசு அதிகாரம், நீதி அதிகாரமாக தன்னைத்தானே ஒழுங்கமைத்துக் கொள்ளும் போது, அரசு அதிகாரம் தன்னை எந்த வடிவத்தில் (**Form**) மாற்றி அமைத்துக் கொள்கிறது" (**Recast**) என்பதைப் புரிந்துகொண்டால் மேலே சொன்னதைச் சரியான வகையில் புரிந்து கொள்ளமுடியும் என்கிறார் பக்ஷி.

"..........முகமூடிகள் முகங்களாகட்டும் என்ற துவக்கம் ஒவ்வொரு தனிப்பட்ட குரலையும்; ஒரு நியாய பூர்வமான, நீதியான சமூகத்திற்கான ஒட்டுமொத்த குரலாக ஓங்கி ஒலிக்கச் செய்வதற்காக தனிநபர்கள் விருப்பம் கொள்ளாதவரை........ அடுத்த கட்டத்திற்கான வாய்ப்புகள் இல்லை என்கிறார்" பக்ஷி.

(அதேநூல் உபேந்திர பக்ஷி. டெல்லி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், சட்டப் பேராசிரியர்)

"தனது நாடு மரணப் படுகுழியை நோக்கிச் செல்லும்போதுகூட, தன் எதிர்ப்புக் குரலை உயர்த்த, அதன் கழிவுகளை மட்டுமே புகழ்ந்து கொள்கிற - அதன் தலை கொலைக்களத்தில் கத்தியின் கீழ் வைக்கப்படும்போதுகூட கலகம் செய்யத் துணியாத நாட்டிற்காகப் பரிதாபப்படுங்கள்"

ஞானிகள் தோட்டம் - கலீல் ஜிப்ரான்.

துண்டிக்கப்பட்ட தலையும் செல்போனும்

"புதிய ஆட்சியாளனை குழலூதி முழங்கி வரவேற்று, அவன் கொள்ளையடித்துச் செல்லும்போது வழியனுப்பி உபசரித்து, இன்னொரு ஆட்சியாளனுக்காக வாசித்து முழங்கி வரவேற்க காத்திருக்கும் ஒரு நாட்டிற்காகப் பரிதாபப்படுங்கள்"

ஞானிகள் தோட்டம் - கலீல் ஜிப்ரான்.

குமுதம் ரிப்போர்ட்டர் இதழ் - 28 ல் 'மிட்நைட் அரெஸ்ட் - உதை வாங்கும் போலீஸ்...........!' என்ற கட்டுரையில் ஒரு வேதனையான, இப்படியுமா? என்ற கேள்வியுடன் நம்புவதற்குச் சிரமமான ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.

செய்தியில் "ஆலிவர் ரோட்டிற்குச் சென்ற அந்த இணைக் கமிஷனர் கலைஞர் கைது செய்யப்பட்ட அன்று நள்ளிரவில், அதிகாரிகளுடன் கலைஞர் வீட்டில் இருந்துகொண்டு தனது செல்போனில் ஜெ.யின் செல்போன் நம்பரைச் சுழற்றி, பேசாமல் ஆனில் வைத்துக் கொண்டார். போலீசார் கைது செய்யச் சென்றபோது அங்கு நடந்த கலைஞரின் உரையாடல்களை செல்போனில் ஜெ. கேட்டு இரசித்தார். இது முன்னேற்பாடாகச் செய்யப் பட்டுள்ளது. இந்த வகையில் ஜெ.க்கும், கலைஞர் கைது நிகழ்ச்சிகளுக்கும் கம்யூனிகேஷன் பாலமாக அந்த இணைக் கமிஷனர் இருந்தார். இதற்காக இவருக்கு போயஸ் தோட்டத்தில் பாராட்டுக்கள் குவிந்தன. இவருக்கு ஜெ. வைத்துள்ள செல்லப் பெயர் - "ப்ளூ ஐடு பாய் !"

நன்றி: குமுதம் ரிப்போர்ட்டர்

இது உண்மையாக இருக்கக் கூடாது என்று ஆசை சொல்கிறது. ஏனெனில் ஐந்துகோடி மக்களை ஆளும் ஒரு அரசாங்கத்தின் முதல்மந்திரி, இப்படிப்

பட்டவருக்கு விபரீத ஆசைகள் இருப்பது உண்மையெனில் அது ஜனநாயக விழுமியங்களின் ஆரோக்கியத்திற்கான அறிகுறி அல்ல. அது ஒரு நோய்க்குறி.

செல்போன் இல்லாமலிருந்திருந்தால், அதாவது உபயோகத்திற்கு வராமல் இருந்திருந்தால் இந்த ஆசைகள், அதை நிறைவேற்றுபவர்கள், அதற்கான கருவிகள் பற்றி......... எப்படி இருந்திருக்கும்..........?

இப்படியொரு எண்ணம் காலப்பெட்டகத்தின் வழியாக சில நூற்றாண்டுகளைக் கடந்து பார்த்தால், இம்மாதிரியான மனப்போக்கிற்கு, செயல்களுக்கு, சில வரலாற்று அத்தாட்சிகள், இலக்கிய அத்தாட்சிகள் கிடைக்கத்தான் செய்கின்றது.

வரலாற்றில் 'செல்போன்கள்' தலைகளாக இருந்திருக்கின்றது. ஓலங்கள், சப்தங்கள் எடுத்துச் செல்லப்பட முடியாததால் அதற்கான கருவிகள் இல்லாததால், ஜடரூபத்தை எடுத்துச் செல்வது சாட்சியாகக் காட்டுவது, மகிழ்விப்பது என்று நடந்தேறியிருக்கிறது.

இம்மாதிரியான மனப்போக்கிற்கு / களிப்பு நுகர்வுக்கான பொருளாக அன்று துண்டிக்கப்பட்ட தலைகளும், இன்று 'ஆன்' பண்ணப்பட்ட செல்போன் வழியாக ஓலங்களும், அவலங்களும் ஓசையில்லாமல் யாரும் அறியாமல் நகர்ந்து நகர்ந்து மனவெளிப் பிரதேசத்தின் தூண்டல்களுக்கு விருந்தாகி திருப்தியைத் தருகிறதா?

மத்திய காலத்து இத்தாலியில் நடந்த ஒரு வரலாற்றுச் சம்பவத்தை "டிட்டியான்" என்ற ஓவியர் ஓவியமாக்கியிருக்கிறார். அந்த ஓவியத்திற்கான மன அதிர்வைக் கொடுத்த சம்பவத்தை இனிப்பார்க்கலாம்.

மேற்கூறிய சம்பவச் சூழல் சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது.

துருக்கி, வெனிஸ் நாடுகளுக் கிடையில் நீண்ட நெடுங்காலப் பகைமை. இரு நாடுகளும் பல முறை யுத்தகளத்தில் மோதிக் கொண்டன.

1570 - ல் துருக்கியப் படை லாலா முஸ்தபா பாட்ஷாவின் (Lala Mustafa Pasha) தலைமையின் கீழ் இறுதி வெற்றி என்கிற தீர்மானத்துடன் வெனிஸ் நகர் நோக்கி சீறிப்பாய்ந்தது.

1570 - செப்டம்பர்: வெனிஸ் நகரம் துருக்கியப்படையின் கையில். வெனிஸ் நகரத்தின் பாமகஸ்டா பகுதி முற்றுகைக்குட்பட்டது.

1571 - ஆகஸ்ட் 1ல் பாமகஸ்டா வீழ்ந்தது!

வெனிஸ் நகரின் சார்பில் சரணாகதி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது படைத்தளபதி மார்கன்டோனியோ பிராகடின் (Marcantonio Bragadin)

ஆகஸ்ட் - 5 ல் பாமகஸ்டா நகரின் சாவியை துருக்கியப் படைத்தளபதி முஸ்தபா பாட்ஷாவிடம் சம்பிரதாய முறையில் ஒப்படைக்க மார்க்கன்டோனியோ பிராகடின் ராணுவ சன்னத்துகளுடன் சென்றார்.

ஆரம்பம் சுமூகமாகவே இருந்தது. ஆனால் அடுத்த நொடிகளில் நிலைமை தலைகீழாகியது.

எஜமானர்களை மகிழ்விக்க அல்லது எஜமானர்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய வரலாற்றில் சில தளகர்த்தர்கள் மனித நாகரீகத்தைத் துச்சமென பிடுங்கியெறிந்துவிட்டு அநாகரீகத்தின் உச்சிக்கே சென்று விடுகின்றார்கள்.

மாறிய நிலைமை குறித்து இக்கட்டுரையாளர் வரலாற்றுக் குறிப்பாக, வெனிஸின் வரலாற்று ஆசிரியர் ஜான் ஜூலியஸ் நார்வி (John Julius Norwich) யின் நூலிலிருந்து கீழ்க்கண்டவற்றைக் கொடுக்கிறார்.

"முஸ்தபா பாட்ஷா, பிராகடினை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார். ஆனால் அடுத்த நொடியில் பாட்ஷாவின் முகம் இறுகியது; கோபத்தால் கொந்தளித்தது.

அடிப்படை முகாந்திரங்கள் ஏதுமற்ற குற்றச்சாட்டுகளை அள்ளி வீச ஆரம்பித்தார்.

சிறைப் பிடிக்கப்பட்ட துருக்கியர்களை வெனிஸ் நகரக் கிறித்தவர்கள் கொன்று விட்டதாகவும் சரணடைவு ஒப்பந்தத்தை மீறி படைக்கலங்களையும் கொள்கலங்களையும் (Munitions) மறைத்து விட்டதாகவும் குற்றச்சாட்டு.

அடுத்த நொடியில் தன் கட்டாரியை உருவிய பாட்ஷா, பிராகடினின் வலது காதைத் துண்டித்தெடுத்து விட்டான். இடது காதையும் அறுத்தெறிய உத்தரவிட்டான்.

பிராகடினினுடன் வந்துள்ள அனைவரையும் கொன்று குவிக்குமாறு உத்திரவு பிறப்பித்தான்.

முஸ்தபா பாட்ஷாவின் காலடியில் 350 தலைகள் குவிக்கப்பட்டன.

கொலைச் செயல் துவக்கப்பட்டுவிட்டது. இனி அதன் போக்கை யாரால் தடுக்க முடியும்.

ரத்த வெறிபிடித்த துருக்கியப் படைவீரர்கள் பாமகஸ்டா நகருக்குள் வேட்டை நாயெனப் பாய்ந்தனர். கண்ணில் பட்ட அனைவரையும் கொன்று குவித்தனர். வீடுகள் தீக்கிரையாயின. பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

தளபதி மார்கன்டோனியோ பிராகடின் 14 நாட்கள் சிறைவைக்கப்பட்டார். காதறுக்கப்பட்டதால் ஏற்பட்ட புண்களுக்கு மருந்திடப்படாததால் அழுகி நாற்றம் எடுத்தது; பிராகடினின் உடல்நிலை படுமோசமாகியது.

பிராகடினின் முதுகில் மணல், கல் மூட்டையைக் கட்டி சிறைச்சாலைச் சுவர்களில் உடல் படுமாறு தரதரவென இழுத்துச் சென்றனர்.

கொலைக் களத்திற்கு உடலில் துணிகள் ஏதுமின்றி நீண்ட மரக்கம்பில் கட்டித் தூக்கிச் சென்றனர்.

உயிருடன் அவரைத் தோலுரித்தனர்.

பாட்ஷாவின் மிருகமனமானது, இவ்வளவு சித்திரவதைகளையும் தாங்கிக் கொண்ட பிராகடினின் தலை துண்டிக்கப்பட்ட பின்பே ஓய்ந்தது. பிராகடினின் உடல் கண்டதுண்டங்களாக கூறு போடப்பட்டது.

உரிக்கப்பட்ட தோலுக்குள் வைக்கோல், பஞ்சு திணித்து, பசுவொன்றின்மேல் ஏற்றி வீதிகளில் காட்சிப்பொருளாக்கினர்.

செப். 22ல் முஸ்தபா பாட்ஷா கப்பலில் நாடுதிரும்பினான்.

மார்க்கன்டோனியோ பிராகடினின் தோலையும் வெட்டியெடுக்கப்பட்ட தலைகளையும் துருக்கி சுல்தானின் காலடியில் வெற்றிப்பொருட்களாக பெருமையுடன் சமர்ப்பித்தான் பாட்ஷா"

ஆதாரம்: *FMR / No.4 -Sep.1984.*

(மொழியாக்கம் A.பிச்சுமணி)

இந்த வரலாற்றுச் சம்பவத்தால் உந்தப்பட்ட வெனிஸ் நகரக் கலைஞன் டிட்டியானின் மன அதிர்வு ஓவிய உலகிலும், அதன் மூலம் வரலாற்றில் அந்தத் தளகர்த்தருக்கு அழியாப் புகழையும் யுத்த விதிகளுக்குப் புறம்பாக, சரணடைந்த வெனிஸ் தளபதியின் கோழைத்தனமான படுகொலையானது கொடுங்கோல் மனச் செயல்களின் வரலாற்றில் இடம்பெற்றிருக்கிறது.

எஜமானர்களை மகிழ்விக்க அல்லது எஜமானர்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய வரலாற்றில் சில தளகர்த்தர்கள் மனித நாகரீகத்தைத் துச்சமென பிடுங்கியெறிந்துவிட்டு அநாகரீகத்தின் உச்சிக்கே சென்று விடுகின்றார்கள்.

மன வெளிப் பரப்பில் நவீன அரசு, அறிவியல், பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, நவீனச் செய்தித் தொடர்புகள் சாதித்தது என்ன? சாதிப்பது என்ன? என்ற கேள்வியே மிஞ்சுகிறது.

அந்தர் முகத்தேடலுக்கு மனிதனை ஆட்படுத்த உதவாத எதுவும் நுகர்ந்து தூக்கியெறியத் தக்க பொருள் அதிகார அரசியலுக்கு மேற்கூறியவைகள் எல்லாம் உதவியாக இருக்கலாம்; மனித தர்மத்திற்கு அது ஒருபோதும் உதவிகரமாக இருக்கப் போவதில்லையோ? என்று தோன்றுகிறது.

ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்

"சட்டங்கள் வகுப்பதில் நீங்கள் மகிழ்ச்சி அடைகிறீர்கள்".
"அவற்றை உடைப்பதில் அதைவிட மகிழ்ச்சி அடைகிறீர்கள்"

தீர்க்கதரிசி. கலீல் ஜிப்ரான்.

J.T.V க்கு முதல்வர் J. அளித்த பேட்டியிலிருந்து, காவல்துறை பற்றிய அவரின் பேச்சு கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

முதல்வர் J: "ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். காவல்துறையினர் ஏதாவது தவறு செய்திருந்தால் அதனை தவறு என்று நானே ஒப்புக் கொள்வேன். காவல்துறையினர் செய்த தவறை நியாயப்படுத்த நான் முயற்சிக்கவில்லை. இந்த சம்பவத்தில் காவல்துறையினர் எந்தத் தவறும் செய்யவில்லை. அவர்கள் மீது அபாண்டமாக பழிசுமத்தப்பட்டுள்ளது.

காவல்துறையினரின் Morale அதாவது மன உறுதி, மன உற்சாகம் இவற்றைப் பாதுகாப்பது மிகமிக முக்கியம். காவல்துறையினரின் பணி எல்லோராலும் புரிந்து கொள்ளப்படுவதில்லை. அதை போதுமான அளவிற்கு யாரும் பாராட்டுவதில்லை. போதுமான அளவிற்கு என்று சொல்வது கூட தவறு, யாரும் பாராட்டுவதே இல்லை. காவல்துறையினரின் பணி குற்றவாளிகளை கைதுசெய்வதோடும் அவர்களை சிறையில் அடைப்பதோடும் முடிந்துவிடுவதில்லை. எல்லாவற்றிலும் நம் அன்றாட வாழ்க்கையில் காவல்துறையினரின் பணி, பங்கு இருக்கிறது. இயற்கையின் சீற்றத்தினால் சிலதுன்பங்கள் நேரும்போது காவல்துறையினரைத்தான் அழைக்கின்றோம். புயல் அடித்தால், வெள்ளம் வந்தால், அங்குள்ள மக்களைக் காப்பாற்றவும் அப்புறப்படுத்தவும் காவல்துறையினரைத்தான் அழைக்கின்றோம். உணவுப் பொட்டலங்களை விநியோகிப்பதற்கு காவல்துறையைத்தான் அழைக்கின்றோம். தீ விபத்து ஏற்பட்டால் அங்கெல்லாம் காவல்துறையினர்தான் ஓடிவருகின்றார்கள். சாலைவிபத்தில் சில பேர் இறந்து விட்டால் அங்கே சடலங்களை அப்புறப்படுத்துவதற்குகூட காவல்துறையினர்தான் வருகின்றார்கள். சிலசமயம் ஈமச்சடங்குகளை நடத்துவதற்குக் கூட, இறுதிக்காரியங்களை நடத்துவதற்குக் கூட காவல்துறையினர்தான் வருகின்றார்கள்.

அதுமட்டுமின்றி நமது சமுதாயம் நாகரீகமான முறையில் நடைபெறவேண்டும் என்றால், நம் சமுதாயத்தில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படவேண்டும் என்றால் காவல்துறையினரின்றி நாம் அதை நிறைவேற்ற முடியாது. நமது அன்றாட வாழ்க்கை அமைதியான முறையில் சட்டத்திற்குட்பட்டு நடைபெற வேண்டும் என்றால் அவரவர் பணியை அவரவர் செவ்வனே செய்து கொண்டு நல்லமுறையில் வாழ்க்கையை நடத்திக் கொண்டு போகவேண்டுமானால், அதற்கு காவல்துறையினரின் பணியின்றி எதுவுமே செய்ய முடியாது, என்பதுதான் உண்மை. எனவே இத்தகைய காவல்துறையினர் சோர்ந்துவிட்டால், எப்போதும் அவர்களை விமர்சித்துக் கொண்டே இருந்தால், அவர்கள் மன உற்சாகத்தை இழந்து விட்டால், பணியில் சோர்வு ஏற்பட்டுவிட்டால் இந்த சமுதாயமே சீரழிந்து விடும்.

காவல்துறையினர் செய்யும் பணியினை யாருமே பாராட்டுவதில்லை. அரசாங்கமும் அவர்களிடம் மிகுந்த கண்டிப்போடு நடந்துகொள்கிறது. பொதுமக்களும் அவர்களை விமர்சிக்கிறார்கள். பத்திரிக்கையாளர்கள் - குறிப்பாக பத்திரிக்கையாளர்கள் - எப்போதுமே காவல்துறையினரை சாடுகின்றார்கள். அவர்கள் மீது அபாண்டமான பழிகளை சுமத்துகின்றார்கள்.

இப்படி எல்லோருமே காவல்துறையினரைக் குறைகூறிக் கொண்டிருந்தால் அவர்களுக்கு ஏதோவொரு கட்டத்தில் மனச்சோர்வு ஏற்பட்டு நமக்கென்ன நாம் ஏன் கஷ்டப்பட வேண்டும், நாம் ஏன் இவ்வளவு பழிகளை சுமக்க வேண்டும் என்று ஒரு முடிவிற்கு அவர்கள் வந்து, தாங்கள் செய்யும் பணியை நிறுத்திவிட்டால், அல்லது பணியில் சுணக்கம் காட்டினால் இந்த சமுதாயம் என்ன ஆகும்? சட்டம் ஒழுங்கை யார் பராமரிப்பார்கள்? குற்றவாளிகளை யார் கட்டுப்படுத்துவார்கள்? குற்றங்கள் நிகழாமல் யார் தடுப்பார்கள்? பலர் இதை உணராமல் கண்மூடித்தனமாக காவல்துறையினரை விமர்சிக்கும்போது எனக்கு வருத்தமாக இருக்கிறது. ஆகவே காவல்துறையினரின் பணிஆர்வத்தை ஊக்கப்படுத்தி, அவர்களுக்கு மனச்சோர்வு ஏற்படாமல் பாதுகாக்கவேண்டியது என் கடமை என்று நான் கருதுகின்றேன். சமுதாய நலன் கருதி இந்தப் பணியை நான் செய்து கொண்டிருக்கிறேன்".

"............ஆனால் எவர்கள் என்னை பக்தியுடன் வழிபடுகிறார்களோ, அவர்கள் என்னிடத்தில் இருக்கின்றனர். நான் அவர்களிடத்தில் இருக்கின்றேன்".

(கீதை, 10.29)

(கீதையின் இந்தக் கூற்று கிருஷ்ணனின் மனச்சார்பைக் குறிப்பதற்கல்ல. "நான்", "நீ" என்பது பரஸ்பர மாற்றத்திற்கு உரியது, ஒரு குறிப்பிட்ட சூழலில்)

இங்கே கீதை இடம்பெற்றது ஒரு தன்னிலை, படர்க்கை பற்றிய இயங்கியல் உறவிற்கு உதாரணம். அவ்வளவே.

மன அலசல் முறையில் "தன்னிலை" பற்றி அறிய முற்படும்பொழுது, தன்னிலை (I) என்பது வெறும் I மட்டுமல்ல. குறிப்பிட்ட சூழலில் தன்னிலையானது மற்றமை (Others) ஆகவும் - ஒருவர் மற்றொருவராக - வெளிப்படும், படுகிறது. வேறுவிதமாக சற்றுச் சுருக்கினால், தன்னிலை படர்க்கையாகவும், படர்க்கை தன்னிலையாகவும் இடம்மாறக் கூடும். இது நனவிலியின் தன்னிலை இயக்கம் பற்றிய ஒரு விதி.

ஜூன் 29-ம் தேதி நள்ளிரவு நிகழ்வின் எதிர்வினையாக மக்களின் மனத்தில் ஏற்பட்ட (அவலம் / பரிதாபம் / வெறுப்பு) ஒன்றானது முதல்வர் 'ஜெ'யால் ஜீரணிக்க முடியாத ஒன்றாகி விட்டது.

முதல்வர் 'ஜெ' யின் அகங்காரத்திற்கு ஒரு அசௌகரியத்தை இந்தச் சூழல் ஏற்படுத்தி விட்டது.

மக்களை அவர் நேசிப்பவராகக் கூட இருக்கலாம். ஆனால் மக்களின் பிம்பமாக

காட்சியளிக்கும் அந்த 29-ம் தேதி நள்ளிரவின் பாதிப்பால் ஏற்பட்ட மக்களின் பரிதாபம், கண்டனம், போலீஸ் அதிகாரிகளின் பலாத்காரத்திற்கு எதிரானதாகப் போய்விட்டது.

இந்தச் சூழலானது முதல்வர் 'ஜெ'யின் தன்னிலைக்கு ஒரு அசௌகரியத்தை, ஒரு எதிர்பாராத வலியைக் கொடுத்துவிட்டது.

உளவியல் அடிப்படையில் தன்னிலை (Ego) பற்றிக் கூறினால், "தன்னிலை என்ற உணர்வில் சூழலின் ஏற்றுக் கொள்ளத்தக்க பகுதி அடங்கி உள்ளது; ஏற்றுக்கொள்ளத் தகாத பகுதி 'மற்றமை' (Others) ஆகிவிடுகிறது; அதனால் தூண்டப்பட்ட வலியுடன் சேர்ந்து நடைபெறுகிறது".

இந்த 'மற்றமை' யாகிவிட்ட பகுதியின் வலியும் மக்கள் கொடுத்த எதிர்பாராத கொடை ! ?

தன் அதிகாரம், நடவடிக்கை கேள்விக்குள்ளானதை தன்னிலையானது சரிக்கட்ட முயற்சிக்கிறது.

மேலும், அவருடைய கருத்து மிகப் பொதுமைப் படுத்தப்பட்டு எல்லாக் காலத்திற்குமான உண்மை போன்று ஒரு நிரந்தரத்தை போலீஸ் மேலதிகாரிகளிடமும் அத்துறை பற்றி பொதுவான ஒரு கருத்துருவத்தை முன்னிறுத்தி வைக்கிறார். ஒரு மாநிலத்தின் முதல்வரே இப்படிக் கூறும் போது அவர்களுக்கு என்னவிதமான உணர்வை ஏற்படுத்த, தூண்ட இந்தச் சொல்லாடல்கள் உதவும்.

சமூகத்திற்கும் போலீஸ்துறைக்கும் உள்ள உறவில் அவரின் மனச்சார்பும் கருத்துச் சார்பும் ஒரு சுருக்கிப் பார்ப்பவராகவே (Reductionist) காட்டுகிறது.

அதுபோல "அரசு" என்ற நிர்வாக இயந்திரத்தில், போலீஸ் என்பது ஓர் அங்கம். அவ்வளவே. அதற்கான எல்லைகள் உண்டு. அதற்கான சுதந்திரம் வானளாவிய ஒன்றா?

'பகுதி; முழுமை' என்ற உறவில் 'பகுதி' என்பது முழுமையை விடப் பெரியது, தீர்மானகரமானது என்ற குறுகிய கருத்தை ஏன் முன்னிறுத்துகிறார் அவர்?.

முன்னிறுத்தல் (Foreclosure) சட்டப்படி, சமூகவியல்படி சரியா?

.............பணிகளை நிறுத்தி விட்டால்?

பணிகளில் சுணக்கம் காட்டினால்?

சமுதாயம் என்னவாகும்?

சட்டம் ஒழுங்கை யார் பராமரிப்பர்?

குற்றவாளிகளை யார் கட்டுப்படுத்துவார்கள்?

அரசு உருவாக்கத்தில் ஒரு அங்கம் தன் கடமைகளை நிறைவேற்றாவிட்டால் / சுணக்கம் காட்டினால் அதற்குண்டான தண்டனைச் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள்.

காவலர்களுக்கான தொழிற்சங்க உரிமைபெற எண்பதுகளில் போராடிய காவலர், அதிகாரிகளை காவல்துறை மாலை போட்டு விருந்தா வைத்தது? கைது செய்யப்பட்டார்கள்; இடைநீக்கம் செய்யப்பட்டார்கள்; ஜெயிலுக்கு அனுப்பப்பட்டனர். பலர் வேலையும் இழந்தனர். இன்னும் ஸ்ட்ரைக் நீடித்திருந்தால் துணை ராணுவம், ராணுவம் வந்திருக்கும். தமிழ் நாட்டு முதல் மந்திரியும் சேர்ந்து மத்திய அரசின் உள்துறை (Home Ministry) யின் கீழ் கைகட்டிச் சேவகம் செய்யவேண்டி இருந்திருக்கும். எல்லாம் நிஜமான சட்டப்படி.

முதல்வர் ஜெ.யின் குறுக்கிய இந்தக் கண்ணோட்டத்தை அரசியல் சாஸனம் ஏற்குமா? நீதி நிர்வாகம் ஏற்குமா?

அவருக்குத் தெரியும். இவைகள் மதிப்பற்றவை, அங்கு செலாவணி ஆகாது என்று.

இரண்டு ரூபாய்த்தாள் 8 ஒட்டுப் போட்டு 1/2 குயர் நோட்டின் கனத்தில் இருக்கும்போது கூட, கூச்சம் வெட்கமில்லாமல் சந்தையில் செலாவணி ஆகும். இந்த ஜனக்கூட்டத்தில் (ஓட்டுப் போட்டவர், ஓட்டுப்போடுவது அநாகரீகம் என்று கருதுபவர்) விலைபோகும், போகவேண்டும் என்பதற்காகவே......., இந்த முன்னிறுத்தல் நடைபெற்றிருக்கிறது.

இந்தியக் காவல் துறையின் துவக்கம் ஆங்கில ஏகாதிபத்தியத்தில் உருவாக்கப்பட்டது. இந்த உருவாக்கமுறை, உருவாக்கப்பட்ட முறை பின்னர் சுதந்திர இந்தியாவில் நடைபெற்ற மாற்றங்கள் (அரைக்கால், முழுக்கால் ஆனது; காட்டன் டெரிகாட்டன் ஆனது; கனமான பூட்சுகள் நளினமாக மாறியது உட்பட) எல்லாம் அடிப்படையில் ஆங்கிலச் சட்டம் நீடித்துக்கொண்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒட்டுப்போட்டது மட்டும்தான்.

அன்று ஒரு மாவட்டத்திற்கு எத்தனை காவல் நிலையங்கள்? S.P. எத்தனை பேர்? இன்று 7 காவல்நிலையங்களுக்கு ஒரு I.G; (திரு. அலெக்ஸாண்டர். திருநெல்வேலி). பின்பு அதே இடத்திற்கு ஒரு D.I.G. இம்மாதிரியான மாற்றங்களும் கூட சட்டபூர்வமாக காவலரின் நலனை முன்னிட்டுத்தான் நடந்தேறின, அப்படித்தானே?.

சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு மட்டும்தான் போலீஸ். போலீஸின் கடமைகள் வரையறுக்கப்பட்ட பிற துறைகளைப் போலவே இருக்கிறது.

இப்படி, அமைப்பு உருவாக்கத்தின் கடமைகளைச் செய்வது, செய்வதற்குத்தான் அதிகாரமும், சம்பளமும். அதை ஏதோ மக்களுக்காக, மக்களுக்கான மோட்சத்தைக்காட்ட பிறந்து வந்த கன்னிமேரியின் புதல்வர்களாக போலீஸ் துறையைச் சித்தரிப்பது ஏன்?.

எங்கெல்லாம் போலீஸ் அத்துமீறல்கள் நடந்தனவோ (வாச்சாத்தி, சிதம்பரம் பத்மினி, தார்குண்டே, தாமிரபரணிப் படுகொலை) அங்கெல்லாம் போலீஸ்துறை பற்றி விமர்சனங்களும், வயித்தெரிச்சலால் வசவுகளும், ஓரிரண்டு காத்திரமான, சோகையான போராட்டங்களும், எதிர்ப்புகளும் இருந்தன;

இந்த மீறல்களும் அரசியல் தளத்திற்கு வந்ததற்கான காரணிகளாக மக்கள் உரிமைக் கழகங்கள், PUCL, பத்திரிக்கைகள்; சில நேரங்களில் சில வழக்குகளில் தலையிட்ட நீதிமன்றங்கள்; இதை மூலதனமாக்கிக் கொள்ள அவ்வப்போது ஏறி இறங்கும் கட்சிகள், இப்படி நடந்தேறியிருக்கின்றன.

சிறந்த முறையிலும் நேர்மையாகவும் பாரபட்சம் இன்றியும் நடந்த அதிகாரிகளும் காவலர்களும் பாராட்டப்பட்டிருக்கிறார்கள் அந்தந்தப் பகுதி மக்களால்; பாராட்டப்பட்டும் வருகிறார்கள் அந்தந்தப் பகுதி மக்களால். அப்படிப் பாராட்டுப்

பெற்ற ஓய்வு பெற்ற அதிகாரிகள் சமீபகாலங்களில் தொலைக்காட்சிகளில் நேர்காணல், காலை வணக்கம் போன்றவற்றில் தங்களது அனுபவத்தைக் கூறும்போது மனம் நெகிழ்ந்து அவர்கள் கூறுவதை, கேட்கவும் பார்க்கவும் முடிகிறது.

சைக்கிளைத் தொலைக்கக் கொடுத்தவன் காணாமல் போய்விட்டது என்று புகார் கொடுத்து அதை மீண்டும் பெற ஆறுமாதமோ அல்லது ஒரு வருடமோ.........? அதற்குள் சில்லறை சில்லறையாக ஒரு இருசக்கர மோட்டார் வாகனத்திற்கான காசை அன்பளிப்பாக அந்தக் குறிப்பிட்ட காவல் நிலையத்திற்கு வழங்கி விட்டு வரும்போது அவன் வாழ்த்தவும் பாராட்டவும் வேண்டுமா என்ன?

— ஆள்பவர்களுக்கு பருந்துப் பார்வை மட்டும் போதாது. கிட்ட நெருங்கி அந்த நிகழ்வோடு ஒன்றிணைந்து உணர்தல் மூலம் அறியவும் வேண்டும். அதுதான் மக்கள் ஜனநாயகத்தின் சொரூபலட்சணம். மனச் சார்புடன் பகுதியை முழுமையாக்கி பயமுறுத்துவது ஆரோக்கியமான ஜனநாயகமல்ல.

“..............*எல்லாவற்றிலும், அன்றாட வாழ்வில் காவல்துறையின் பணி, பங்கு இருக்கிறது*”. “........*சில சமயம் ஈமச்சடங்குகளைச் செய்வதற்குக்கூட, இறுதிக்காரியங்கள் செய்வதற்குக் கூட காவல் துறையினர்தான் வருகிறார்கள்*” என்கிறார் முதல்வர்.

எது, எதெல்லாம், எல்லாவற்றிலும் சேருகிறது என்று தெரியவில்லை.

போலீசார் அதிகாரத்தோடு சம்பளமும், ஒரு சிறு பகுதி கிம்பளமும் பெற்றுக் கொள்வதற்கான சட்டப் பூர்வமான, அதிகாரச் செல்வாக்கால் இதையெல்லாம் செய்கிறார்கள். உண்மை.

இதன் மற்றொரு பக்கத்தையும் பார்க்கலாம்.

காலங்காலமாக அருந்ததியரும், பறையரும், நாவிதரும் கிராமப்புறங்களில் எந்தவித நிர்வாக அதிகாரமும் இன்றி மிகக் குறைந்த கூலிக்கும், ஓரிருவேளைச் சாப்பாட்டிற்குமாக பிற சாதியினரால் செய்ய அனுமதிக்காத, தீண்டத்தகாததாக உள்ள வேலைகளை சில நேரங்களில் அடி உதையையும் வாங்கிக் கொண்டு அந்தக் கிராமங்களோடு இணைந்தும் விலக்கப்பட்டும் இழவு முதல் திருவிழா வரை அவர்களுடைய பங்கேற்பு இன்றுவரை நடந்துவருவது முதல்வருக்கு வெகுதூரத்திலிருந்து கேட்கும் அவலக் குரலின் கசிவுகளாக ஒருக்கால் தெரிந்திருக்கலாம்.

ஆனால், அதோடு, மண்ணோடு, அந்த வேர்களோடு, மண்ணின் மணத்தோடு இருப்பவர்களுக்கு இந்த வெட்கக் கேடான, அவமானகரமான, மனித நாகரீகமற்ற, அதிகார பயங்கரத்தின் (ஜாதியத்தின்) சாட்டையடியாய் வரும் உதிரத்தோடுகூடிய வலியை உணர்ந்தவர்கள் ஒரு போதும் கிஞ்சித்தும் போலீஸ் அதிகாரிகளை / அதிகாரத்தை தலையில் தூக்கிவைத்துக் கொண்டு ஆடமாட்டார்கள்.

இது மக்கள் ஜனநாயகத்தின் நோய்க்குறி என்றே தோன்றுகிறது.

நிர்வாகப் பணி என்பது வேறு, ஜாதியத்திற்கு ஊழியம் செய்வது வேறு.

ஜனநாயக மாண்பு ஒருபோதும் ஜாதியத்திற்கு துணைபோகாது.

உண்மையில் மனுநீதிமுன் இன்றுவரை அரசியல் சாசனம் தோற்று வெட்கமற்று தனிமனித சுதந்திரம் என்ற வாய்மொழிச் சேவை செய்து வருகிறது என்பதை நினைவு கூறுவது இந்த இடத்தில் நல்லது. மனுநீதி மீற முடியாதது. மீறினால் தண்டனை, நீதி, போலீஸ் இல்லாமலே.

நிரந்தரப்பணியல்ல; ஆனால் நிரந்தரச் சட்டம் பிறப்பால். நிரந்தர ஊதியமல்ல; ஆனால் நிரந்தரக் கடமை. கிட்டத்தட்ட பணி ஓய்வில்லாமல். T.A; D.A இல்லாமல், பதவி உயர்வு இல்லாமல்.

இந்த மக்கள் முன்னால் அரசியல் சாசனமே கண்ணீர் விடவேண்டும்.

ஆனால், முதல்வரோ போலீஸ் அதிகாரிகளையும் அதன் அதிகாரத்தையும் கொண்டாட வேண்டும் என்கிறார்.

போலீஸ் அசையாவிட்டால் காற்று கூட அசையாது என்கிற அளவுக்கு.

முதல்வர் ஜெ. யின் சொல்லாடல்களை சற்று கூர்ந்து கவனித்தால் ‘காலம்’ (Time) பற்றிய பிரச்சினையும் வருகிறது.

“.......காவல்துறையினரின் பணி, எல்லோராலும் புரிந்து கொள்ளப்படுவதில்லை. அதை போதுமான அளவிற்கு யாரும் பாராட்டுவதில்லை. போதுமான அளவிற்கு என்று சொல்வது கூட தவறு, யாரும் பாராட்டுவதே இல்லை”.

காலம் பற்றிய கருத்தில் கடந்த காலத்தைக் கணக்கில் கொண்டு, எதிர்காலத்திற்காக, நிகழ்காலத்திற்காக ஜெ.யின் உரையாடல் தொடர்வது போல் இருந்தாலும், அதில் உள்ள முரண்பாட்டை உரையாடல் மறைக்க முடியவில்லை.

முதலில் குறிப்பான விசயம் பற்றிப் பேச ஆரம்பித்து பொதுமைக்குள் தன் வசதிக்காகச் செல்கிறது.

ஜெ.யின் மேற்கூறிய நிலைப்பாடானது, ‘கடந்த காலமானது கடந்து போனதல்ல’ என்கிற அடிப்படையில் காவல்துறைக்கும், இச்சமூகத்திற்குமுள்ள உறவின் வரலாற்றையும் ள் கணக்கில் எடுத்து தீர்ப்பீடு செய்கிறது.

அவர் வழங்கியுள்ள தீர்ப்பில் நினைவு கூறலாகவே கருத்து வருகிறது.

நினைவு கூறல் பற்றி ஓர் அறிஞர் கூறுகிறார்.

“.......நினைவு கூறுகின்ற செயலில் தொடர்ச்சியும் இசைவும் [Continuity and Coherance] இல்லாமல் போய்விடலாம் என்கிற *அபாயமும்* உள்ளது. *(அழுத்தம் - கட்டுரை ஆசிரியர்)*

இந்த அபாயம் நடந்திருக்கிறது. ஏன் நடக்கிறது? என்பதற்கான விளக்கத்தை அந்த ஆசிரியரே தருகிறார்.

“.........தேவை, விருப்பத்தைப் பொறுத்து ஒரு அனுபவத்தின் உள்ளடக்கத்தில் மாறுதல்களையும் ஒருவர் செய்து கொள்கிறார்.

மேலும் நினைவு கூறுகின்ற ஒருவர் கடந்தகால அனுபவத்தில் ஒருவகையான தொடர்ச்சியின்மையையும் இசைவற்ற தன்மையையும் ஏற்படுத்திக் கொண்டுவிட இயலும்”. [ஆதாரம்: The past is not past - Eugen Kahn M.D]

ஜெ.யின் கடந்த காலத்தில் முதல்வர் செயல்பாட்டின் பொழுது, உயர் போலீஸ் அதிகாரிகள் எப்படி நடத்தப்பட்டார்கள்? தன்வீட்டுத் திருமணத்தில் உயர் போலீஸ் அதிகாரி குடைபிடிக்க, ஜானவாஸம்

நடைபெறவில்லையா? அதிகாரி விருப்பம் இங்கு முக்கியமில்லை. அந்தப் பதவி ஒரு Symbol. Symbol க்கான செயல்கள் மட்டுமே Real. (இங்கு நிஜமனித விருப்பம் கணக்கிற்குரியதல்ல); மேலும் அவருக்காக எத்தனை மணிநேரம் போக்குவரத்து அதிகாரிகள் காத்திருக்க நேரிட்டது? என்ன பந்தா? நினைவு கூறுபவர்கள் தங்களைத் தாங்களே போர்த்திக் கொண்டுள்ளார்களா? போர்வையை விலக்கிப் பார்ப்பதன் மூலமே நினைவு கூறுதலின் நியாயம் புரியும்.

மக்களிடம் எழுந்த குறிப்பான கேள்விகள், சந்தேகங்கள்; எதிர்க்கட்சிகள், தோழமைக்கட்சிகள் வெகுஜன தொடர்புச் சாதனங்கள் போன்றவற்றிற்கும், அத்தோடு குறிப்பிட்ட வழக்கின் அடித்தளத்தை சந்தேகிக்கும் நீதி அதிகாரி (திரு. அசோக் குமார்)யின் கேள்விகளுக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்ட முதன் மந்திரி சம்பவம் நடந்த 10 நாட்களுக்குப் பிறகு "தனக்குத்தானே 10 கேள்வியும் பதிலும்" என்றால் இதுதான் ஜனநாயக மாண்பா? பின்பு அடுத்த நாளில் தன் சொந்த T.V யில் தயாரித்து வைக்கப்பட்ட கேள்வி பதிலை வாசிப்பதும் அதில் குறிப்பிட்ட குற்றச் சாட்டிற்கும் போலீஸின் சட்ட நடவடிக்கைமுறை பற்றி கேள்வி எழுப்பிக் கொண்டு, ஒரு வரியில் அவர்கள் குற்றம் செய்யவில்லை என்று கூறிவிட்டுப் பின் காவல் துறையின் மாண்பு காக்கப்படுவதில்லை அத்தோடு etc,.

காலத்தின் நினைவு கூறல் இங்கே எப்படி எதற்காக நடைபெறுகிறது?

"..........உறுத்தலாக இருந்த ஒரு விசயத்தை ஒரு ஓரமாக திசை திருப்பிவிடுவதின் மூலம், அந்த சம்பவத்திற்கு புதிய அர்த்தத்தைக் கற்பிப்பதன் மூலம், அந்த நிகழ்ச்சிக்கு முந்தைய, பிந்தைய நிகழ்ச்சிகளோடு அதற்குள்ள உறவை வேறுவகையில் பொருத்திப் பார்ப்பதன் மூலம் இது சாத்தியமாகிறது".

பகுதிக்கும் முழுமைக்குமிடையிலான உறவை பகுதியை முழுமையாக்கிய முதல்வரின் சொல்லாடல்களில் 'காலம்' மாற்றப்படுவதன் நோக்கம் இதுவாகத் தோன்றுகிறது.

காவல்துறை பற்றிய முதல்வர் ஜெ.யின் உரையாடலில் இடம்பெற்ற காலம் தன் வயமான காலமாகவே தோன்றுகிறது. அவரின் சொந்த அனுபவிப்பு (Experiencing) என்பதாக இருக்கிறதோ?.

இந்தக் கட்டுரை ஆசிரியர் சுவாரஸ்யமாக சிலவற்றைக் கூறுகிறார்.

"நான் (Self) எந்த விசயத்துடன் / காரியத்துடன் எங்கு, எப்பொழுது செயல்படுகிறேனோ, அந்த விசயத்திற்கும் எனக்குமிடையில் ஒரு உறவு ஏற்படுகிறது; அந்த விசயத்துடன் ஒரு உறவு என்னால் கட்டப்படுகிறது. இந்த உண்மையை நாம் பார்ப்பதில்லை. அந்தச் சம்பவம் முற்றிலும் புறவயமாக நடந்த போதிலும், அகவயமான அம்சமும் அங்கு உள்ளது.

எனக்கும் சம்பவத்திற்கும் இடையிலான அகவயமான உறவில் அது, *என்னுடைய அனுபவமாக ஆகிவிடுகிறது*" [ஆதாரம்: The past is not past - Eugen Kahn M.D]

இனி, இதை வேறோரு கோணத்தில் பார்க்கலாம். முதல்வர் ஜெ.யின் காவல் துறையினர் பற்றிய, மக்கள், செய்தித்தொடர்பு சாதனங்கள் (Media) பற்றிய கருத்தையும் அத்துறையின் அனைத்துமான செயல்கள் என்று அவர் கூறும் கருத்தையும் ஒருவர் விரும்பினால் அவைகளை COMIE ART (சித்திரக்கதை) ஆக்கலாம்.

முதலில் போலீஸ் துறையை ஒரு ('Icon') பேரகன் ஆக்குகிறார்.

போலீஸ்துறை பற்றிய ஒரு பிம்பத்தை (Image) காவலனாக, கடமை தவறாதவனாக, தோட்டியாக, ஜனநாயகக் காவலனாக, ஜனநாயகமாக மாற்றுகிறார். அதாவது பிரதிநிதித்துவப் படுத்துகிறார்.

அதாவது அவரின் கூற்றை ஒரு படங்களற்ற பேரகன் (Non - Pictorial Icons) என்று கூறலாம்.

காவல்துறையின் அர்த்தம் / பொருள் என்பது நிலையான (Fixed) ஒன்றாக / குறிப்பீடாக (Signified) / முழுமையான (Absolute) ஒன்றாக சித்தரிக்கப்படுகிறது.

நடத்தைகள் அத்துறையின் அர்த்தத்தைப் பாதிப்பதில்லை. காவல்துறை என்ற பௌதீக இயக்கத்தை / பொருளை (Inanimate Objects) ஆழமான / விரும்பத்தக்க / ரசிக்கத்தக்க ஒன்றாக அந்த பிம்பங்கள் உயிரூட்டப் பட்டிருக்கின்றது (Animate).

பொதுவாக ரசிகர்கள் வலுவான கதாபாத்திரங்களுடன் (Strong Character) தங்களை எளிதாக அடையாளப்படுத்திக் கொள்வார்களாம். ஆகவே, எழுத்து, காட்சியாக, படமாக மாற்றப்படும் போது ரசிகன் வெகுவாக, எளிதாக கவரப்படுவான்.

எழுத்து என்பது Perceived (மனதால் உணர்தல்) காட்சி என்பது Received (பெற்றுக்கொள்ளுதல்) (இதற்குள் மூழ்க விரிவு இடம் கொடுக்காது)

வேண்டுவோர் இதைக் கார்ட்டூனாக்கிப் பார்த்தால் ஒரு உபயோகமான பொழுது போக்காகவும், படைப்பாற்றல் (Creativity) ஆகவும் இருக்கும்.

நம்மின் கலாச்சாரத்தின் ஒரு அங்கமாகவும், அரசியலின் முக்கிய அங்கமாகவும், அதிகார மையமாகவும், சினிமா விளங்குவதின் புதிர் என்ன? தெரியவில்லை.

குறியீடாக்கப்பட்ட யதார்த்தத்தை (Signified Reality) ஏன் சமூகமனம் விரும்புகிறது? தெரியவில்லையே.

சினிமா / மெகா தொடர்கள் / செய்தி என்ற பெயரில் மீண்டும் மீண்டும் காட்டப்படும் காட்சியும் ஒலமும் எதைத் தூண்டுகிறது. ஒன்றை பலமடங்கு பெருக்கிக் காட்டுதல்? (Amplifi?). ஆசை. அதாவது ஆசையின் ஆசை. பொருளால் திருப்தி அடைவது என்பது ஆசையல்ல, அது விருப்பம். ஆசையின் ஆசை என்பது நனவிலி (Unconscious) சமாச்சாரம். நமக்குப் புரிவதில்லை. இந்திய மருத்துவத்துறை இன்னும் இதை பிரசவிக்கவேயில்லை. இதைத்தூண்டுவது, தூண்டல் புரிந்து கொள்வதற்கு சிக்கலாக இருந்தால் ஆசை பலமடங்காக பெருகாது.

'ஜெ' டி.வி. யில் இடம் பெற்ற முதல்வர் 'ஜெ' யின் அந்த செய்திப்படம் தினம் 6 தடவை கேபிள் டி.வியில் இடம் பெறும். (இதை எழுதும்வரை இந்த இடத்தில் கேபிளில் இடம்பெறவில்லை.)

இறுதியாக ஒன்று கூறி கார்ட்டூனை முடிக்கலாம்; *பார்க்கும் காட்சியை நாம் அறியாவிட்டால் அதன் பகுதியாக 'நாம்' ஆகிவிடுகிறது.*

இந்தக் குறிப்பிட்ட விசயத்தில் இன்னும் ஒன்றையும் பார்த்து விடலாம்.

பொதுவாக, அதிகாரம் என்பது ஆண்தன்மையாக (பலாத்காரம் / அழிவு) வும்; அன்பு, நேசிப்பு,

அரவணைப்பு, பொறுத்துக் கொள்ளல் போன்றவைகள் பெண் தன்மையாகவும் ஒரு கருதுகோளாகச் சொல்லப் படுவதுண்டு.

முதல்வர் என்பது ஆண் / பெண் அற்றது. அது இயங்கும் தன்மையாலேயே அதன் தன்மை வெளிப்படும். அதுபோலவே காவல்துறை கடமையைச் செய்யும் பொழுது அது சேவை, சட்டபூர்வமானது. மீறும் பொழுது பலாத்காரம் என்றாகிறது.

மகாபாரதத்தில் சமாதானத்திற்கான கண்ணனின் இறுதி முயற்சி தோல்வியுறும் கட்டம்.

துரியோதனன், தந்தையான திருதராஷ்டிரன் / பிதாமகன் பேச்சையும் மீறி சமாதானத்தைப் புறந்தள்ளி பலாத்காரத்தை / யுத்தத்தை விரும்பும் பொழுது.........

துரியோதனனின் தாயும், மகாராணியுமான காந்தாரி அழைக்கப்பட்டாள்.

காந்தாரி திருதராஷ்டிரனைப் பார்த்து சொன்னாள், "தர்மத்தின் வழியில் செல்ல மறுக்கின்ற துரியோதனனால் ராஜ்ஜியத்தை அடைய முடியும் என்று நான் நம்பவில்லை. என்னைக் கேட்டால் அவனுடைய நடத்தைக்கு நீங்கள்தான் காரணம் என்று சொல்வேன். துரியோதனன் மீது உமக்குள்ள பாசம் காரணமாக உமது அறிவு மழுங்கி விட்டது. அவன் செல்லுகின்ற வழி தவறானது என்று தெரிந்தும் கூட, நீர் அதைத் தடுக்காமல் விட்டு விட்டீர்........."

(மகாபாரதம் பேசுகிறது - "சோ." முதல் பாகம் பக்கம் 439.)

துரியோதனன் என்ற சர்வாதிகாரம் தந்தை திருதராஷ்டிரனுக்கும் தாய் காந்தாரிக்கும் வேறு வேறாகப் பட்டது.

தாய் காந்தாரியின் நிலைப்பாடே சத்தியமாயிற்று.

இது மகா வரலாறு.

★★★★

குறிப்பு: கார்ட்டூன் பக்கம் இருந்தால் என்ன? ஒரு பரிசோதனைதான். அதன் விளைவாகவே இந்தக் கார்ட்டூன்.

(ஆசிரியர்)





தேவை....

ஒரு பிணம் அடிக்கும் சுடுகாட்டுத் தடி

"சட்டப்படி" என்ற சொல்லாட்சியில் ஒரு இருத்தலும் (Entity) உள்ளது, எந்த வகையில் சட்டத்தை கர்மாவாக - சட்டப்படியாக - மாற்றும் சுயேட்சை அதிகாரத்தை (Discretion) வேறு ஒரு கோணத்தில் பார்க்க முயற்சிக்கலாம்,

இந்திய நீதிமன்றத்தில் நடைபெறும் சத்தியபிரமாணத்திற்கு அடியில் இருப்பது கீதை.

இந்தக் கீதையில் மனிதன் பொதுவாக முக்குணங்களால் ஆட்படுத்தப்படுகிறான். அந்தக் குணங்கள் மனிதனைப் பந்தப்படுத்துகின்றன என்கிறது கீதை. அதாவது குணம் தனி, குணத்தையுடையவன் தனி என்பதன்று.

கீதை காட்டும் முக்குணங்களாக சத்வம், ரஜஸ், தமஸ்.

இம்முக்குணங்கள் பற்றி பல இடங்களில் பேசப்படுகிறது. ஆனாலும், இங்கு சுருக்கமான சுலோகம் உதாரணமாகத் தரப்படுகிறது.

அத்தியாயம் 14:17

"சத்துவத்தினின்று ஞானம் பிறக்கின்றது. ரஜோ குணத்தினின்று அவா பிறக்கின்றது. தமோ குணத்தினின்று தவறுதலும், மயக்கமும், அஞ்ஞானமும் பிறக்கின்றன".

மனிதனின் இம் முக்குணங்களில் எந்த ஒன்று மேலாண்மை செலுத்துகிறதோ அதற்கிசைவாக மனிதன் கர்மத்தில் ஈடுபடுகிறான்.

சுயேட்சை அதிகாரம் ஒருபுறம்; அதைத் தேர்வு செய்யும் அதிகாரி (மனிதன்) மற்றொருபுறம்.

அவனின் தேர்வு அப்போதைய சத்விக், ரஜஸிக், தமஸிக் மனப்போக்கிற்கு உகந்ததாகத்தானே இருக்கும்.

அதுவும் ரஜஸிக் அல்லது தமோவிலிருந்து அதிகாரிகளின் சுயேட்சை அதிகாரம் செயல்பட்டால் - அந்த "கர்மம்" எத்தகையதாக இருக்கும்.

ஏனெனில் சட்டத்தில் சுயேட்சை உரிமைதான் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றபடி அகர்த்தாவாக இரு என்றோ அல்லது சாத்வீக குண அடிப்படையில்தான் கர்மத்தேர்வு நிலைகொண்டிருக்க வேண்டும் என்றோ கூறவில்லை. அது ரஜஸிக்காகவும், அதைவிட கேவலமான மிருகத்தனமான "தமோவர்"கக் கூட இருக்கலாம்.

ஆக, சட்டப்படியில் அமைந்துள்ள அதிகாரிகளின் சுயேட்சை அதிகாரம் பற்றி சட்டத்துறையிலும், அரசியல் துறையிலும் விவாதிக்கப்பட்டு அந்த அதிகாரத்திற்கு ஒரு நான்குமால் வைக்க வேண்டிய அவசியம் உள்ளது.

பொது மனத்தில், 'தான்', 'தன்னுடைய' என்பதை வழிமுறை, நெறிமுறை - சமூக விழுமியமும் இல்லாமல் பெற்றுவிட, அதற்கான நியாயங்களை அண்டை அயலானிடமிருந்தோ அல்லது மேலிருந்தோ எடுத்துக் காட்டாக்கிக் கொண்டு அதன்மூலம் தன்னைத்தானே நியாயவாதியாக உணர்த்திக் கொண்டும், அடையாளப்படுத்திக் கொண்டும் உள்ள அங்கலட்சணத்தை பொதுப்புத்தி கைவசப் படுத்தியதோடு, அதை பிரதான சொல்லாடலாகவும் தன் களத்தில் வைத்துள்ளது.

ஜூன் 30 ன் விடியல், சமூகக்களத்தில், ஏன் இதை எழுதுகிற நேரம் வரையில்கூட ஓய்வு ஒழிச்சல் இன்றி சிறிதும் பெரிதுமாகவும், கரையைத் தொட்டும் கரையைக் கடந்தும் அலைகள் அடித்துக்கொண்டு இருக்கின்றது.

இந்த நிகழ்வை, 'காரணம்', 'காரியம்' என்ற வரையறைக்குள் வைத்துத் தீர்மானிக்க தனிமனிதன் நிர்ப்பந்திக்கப்படுகிறான். இந்தத் தீர்மானப்போக்கு இருசாரராக இருக்கிறது. சட்டம் Vs சட்டத்திற்குப் புறம்பான; ஆளுங்கட்சி Vs எதிர்க்கட்சி; அங்கொன்றும் இங்கொன்றுமாக, 'மனிதாபிமானம்' 'முதுமை' போன்ற க்ஷீணக் குரல்கள்; இந்த நிகழ்வின் ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட, 'உச்', 'உச்' என்ற பரிதாபம்.

இவைகளைத் தாண்டி வேறொன்றும் இல்லையா? இது ஒரு தனித்த நிகழ்வா? தனித்த நிகழ்வுதான். ஆனால் மிகக்கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகத் தோன்றுகிறது. ஆளும் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுதான் என்பதோடு நின்றுவிடமுடியுமா?

மேற்கூறியவற்றை ஏற்க முடியாத மனம் தன்னறிவைச் சார்ந்து விட்டது.

இது ஏன் ஒரு சமகால வரலாற்றின், வரலாற்றுத்திசையின் ஒரு போக்காக, ஒரு படியாக இருக்கக்கூடாது? என்ற கேள்வியானது தன்னறிதலுக்கான முயற்சியாக மாறிவிட்டது. அவ்வளவுதான்.

'சமகால வரலாறு' என்னும்போதே 'பின்னைய நவீனத்துவம்' குறிப்பாக 'ஃபூக்கோ', 'கோரான் தெர்பான்', 'ஆர்தரா எஸ்கோபர்' etc., இவர்களின்

கருத்தியல் அடிப்படைகள், ஆய்வுமுறைகள் முன்னணிக்கு வருவது இயல்பான ஒன்றாக இருக்கிறது.

சமகால வரலாறு என்னும்போதே குறிப்பிட்ட சம்பவம், எந்தச் சூழலில்? என்பது முதன்மை பெற்று விடுகிறது.

2001 ம் ஆண்டின் தமிழகத்தின் தேர்தலுக்கு முன் இச்சூழல் துவங்குகிறது என்று பொதுவாகக் கூறலாம்.

இன்றைய முதல்வர் 'ஜெ'யின் வேட்புமனு தேர்தல் கமிஷனால் நிராகரிக்கப்படுகிறது. கிரிமினல் குற்றவாளியாக 3 ஆண்டுகள் தண்டனை பெற்றுள்ளவர் என்பதால் இது நடந்தேறியது.

1. தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்ற கட்சித் தலைவராக 'ஜெ' புதிய அந்தஸ்தைப் பெறுகிறார்.
2. தேர்தல் கமிஷனால் சட்டசபைக்கான தேர்தல் மனுதாக்கல் செய்ய தடை விதிக்கப்பட்ட ஒருவர், சட்டசபை உறுப்பினர்களுக்கும், தமிழ்மாநிலத்திற்குமான முதல்வராக அன்றைய கவர்னரால் 'பதவிப்பிரமாணம்' செய்து வைக்கப்படுகிறார்.
3. இது சட்டப் பிரச்சினையாகி வாதப்பிரதிவாதங்களாக, அரசியல் களத்தில் இன்றுவரை உருட்டப்பட்டு வருகிறது.

மே. 14 : ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்பு

மே. 17 : தி.மு.க. எம்.எல்.ஏ. பரிதி இளம் வழுதி கைது. தேர்தலின்போது ஜான் பாண்டியனின் தேர்தல் முகவரை கொல்ல முயற்சி செய்ததாக வழக்கு.

மே. 26 : உழவர்சந்தைகளை மூட முயற்சி.

மே. 28 : முன்னாள் தி.மு.க. எம்.பி. பரசுராமன் கைது. மகாபலிபுரம் சாலை ஒப்பந்தக்காரரிடம் 1 கோடி ரூபாய் லஞ்சம் கேட்டு மிரட்டியதாக வழக்கு.

மே. 30 : த.மா.கா. ஜனநாயகப் பேரவை (சிதம்பரம்)யின் புரசைவாக்கம் எம்.எல்.ஏ. ரெங்கநாதன் கைது. உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி சதாசிவத்தின் மகனிடம் தேர்தல் நிதி கேட்டு மிரட்டியதாக வழக்கு.

மே. 31 : ஆசிரியர்களுக்கான பணியிட மாறுதல்கள் ஒற்றைச் சாளர முறையில் (கவுன்சலிங்) நடைபெறும் என அறிவிப்பு.

ஜூன் 1 : தி.மு.க. ஆட்சியில் நியமிக்கப்பட்ட 13,500 மக்கள் நலப்பணியாளர்கள் நீக்கம். பஞ்சாயத்து யூனியன்களிலும், பஞ்சாயத்துக்களிலும் போதுமான பணியாளர்கள் உள்ளதால் மக்கள் நலப் பணியாளர்கள் என்ற பதவி தேவைப்படவில்லை என அறிவிப்பு.

ஜூன் 2 : முன்னாள் எம்.எல்.ஏ. தாமரைக்கனி கைது. அ.தி.மு.க. வினருக்கு கொலைமிரட்டல் விடுத்ததாக வழக்கு.

மே 26, ஜூன் 3: அதிகாரிகள் பெருமளவில் அதிரடியாக இட, பணி மாற்றம். கூடுதல் டி.ஜி.பி. அலெக்சாந்தர் மண்டபம் அகதிகள் முகாமுக்கு மாற்றம். ஐ.ஜி. சேகர். 7 காவல் நிலையங்களைக் கண்காணிக்க நெல்லைக்கு மாற்றம். பலர் காத்திருப்போர் பட்டியலில்.

ஜூன் 9 : மூன்று அமைச்சர்கள் நீக்கம். அமைச்சரவையில் புதிதாக மூவர் சேர்ப்பு.

ஜூன் 13 : ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரன், சுதாகரனின் நண்பர் தோட்டம் பாஸ்கரன் கைது. சுதாகரன் வீட்டில் 16கிராம் ஹெராயின், தோட்டம் பாஸ்கரன் வீட்டில் 72கிராம் ஹெராயின் போதைப் பொருள் வைத்திருந்ததாக வழக்கு.

ஜூன் 13 : சிறையில் 300 முஸ்லீம்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் வழக்கில் கருணாநிதி, முன்னாள் டி.ஜி.பி.சர்மா; உள்துறைச் செயலாளர், சிறைத்துறை ஐ.ஜி. மீது வழக்கு.

ஜூன் 20 : திரு. ஆச்சார்யலு ஐ.ஏ.எஸ். சென்னை மாநகர கமிஷனராகப் பொறுப்பேற்பு.

ஜூன், 28, 29 ல் சென்னையில் மேம்பாலங்கள் கட்டப்பட்ட ஆவணங்களைத் திரட்டி புகார் தயார் செய்தார். வழக்கறிஞர்கள் உதவியை நாடவில்லை. தனக்கு மேலதிகாரியாகிய குடிநீர் வழங்கல் துறைச் செயலரிடம் அனுமதிபெறாமல் நேரடியாக சி.பி.சி.ஐ. டி.ஐ.ஜிக்கு புகார் மனுவை அனுப்பினார்.

ஜூன் 26 : முன்னாள் அமைச்சர் பொன்முடிகைது. உணவுக் கிட்டங்கிக்குள் அத்துமீறி நுழைந்ததாக வழக்கு.

சன் டி.வி. நிருபர் சுரேஷ் கைது.

ஜூன் 28 : சன் டி.வி. நிருபர் சுரேஷின் விடுதலை கோரி கோட்டையில் முதல்வரிடம் மனுக்கொடுக்கச் சென்ற பத்திரிக்கையாளர்கள் கைது.

ஜூன் 29 : நள்ளிரவில் மு.கருணாநிதி சென்னை மேம்பால வழக்கில் கைது.

ஜூன் 30 : சென்னை மேயர் மு.க ஸ்டாலின் போலீசில் சரண். கைது.

ஜூலை 1 : ஆளுநர் பாத்திமாபீவி நீக்கம். குடியரசுத்தலைவர் ஆணை. (ஆளுநர் பதவி விலகல்)

ஜூலை 6 : ஜெயலலிதாவின் வேட்பு மனுக்களை தேர்தல் கமிஷன் விதிப்படி தள்ளுபடி செய்த ஜெயா (ஆண்டிபட்டி). இ.கந்தசாமி புதுக்கோட்டை. இடமாற்றம். புதிய இடம் ஒதுக்கப்படாமல் காத்திருப்போர் பட்டியலில் சேர்ப்பு.

ஜூலை 20 : சென்னை மாநகர முன்னாள் கமிஷனர் காளிமுத்து மீண்டும் மாறுதல்; காத்திருப்போர் பட்டியலில் சேர்ப்பு.

ஆதாரம்: தினமணி.

மேற்கூறிய நிகழ்வுகள் அனைத்தும் தனித்தனியே பல்வேறு தேதிகளில் பல்வகையாக நடந்திருக்கிறது. இந்தச் சிதறிக் கிடக்கின்ற நிகழ்வுகளும் சம்பவங்களும் 'முதல்வர் அதிகாரம்' என்ற சரட்டில் கோர்க்கப்படும்போது அவைகள் பல்வேறு கண்ணிகளாலான ஒரு சங்கிலியாக மாறிவிடுகிறது என்பதைப் பார்க்க முடிகிறது.

சங்கிலிக்கும் அதன் கண்ணிகளுக்குமிடையிலான தொடர்புகளைப் பார்க்கலாம்.

'பிள்ளையார் சுழியாக' பழைய கவர்னர் இருக்கிறார். கிரிமினல் குற்றவாளி ஒருவர் - 3 ஆண்டு தண்டனை - தேர்தலில் நிற்கமுடியாது என விதிகள் கூறி நிராகரிக்கப்பட்ட ஒருவர், பின்பு முதல்வராகும் உரிமையை கவர்னர் வழங்குகிறார்.

நிராகரிக்கப்பட்டதும் சட்டம்.

முதல்வராக்கியதும் சட்டம் என்றால் இதன் பொருள் என்ன?

கவர்னரின், 'நியமித்தல்' என்பதுவே சட்டம் என்றால், காரியத்திற்கான காரணமாக கவர்னர் அதிகாரத்தைக் காட்டுவது என்பது எந்தவகைச் சட்டம்? எந்தவகை ஜனநாயகம்? கவர்னர் அதிகாரமே 'ஜனநாயகம்' என்றால் இச்சமூகம் வாழ்வது 18ம் நூற்றாண்டிலா? விக்டோரியா மகாராணியின் காலத்திலா? ஆட்சியிலா?

சட்டத்தால் நிராகரிக்கப்பட்ட ஒருவரை முதல்வராக்க வழிகொடுத்த சட்டமுறைமையை தெளிவுபடுத்தாமல் - கவர்னர் அதிகாரம் என்பது ஜனநாயக மாண்பு ஆகாது.

அப்படி நடந்த ஒரு நிகழ்வை வரலாற்றின் சட்டபூர்வ நிகழ்வாக ஏற்கமுடியுமா? ஒரு கரும்புள்ளி / இருண்ட அத்தியாயமாகத்தானே கருத இடம் கொடுக்கிறது.

ஜெ. முதல்வர் ஆனதற்கான இயங்குபாதையே பூடகமாக / இருண்மையாக, மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்ற நன்னெறி அற்றதாக பதவி என்னும் ராஜபாட்டை மீது பைபாஸ் ரைடர் ஆகச் செல்கிறது கவர்னர் அதிகாரம். இன்றைய முதல்வரின் தேர்தல் மனு நிராகரிப்பு என்பது அன்று ஒரு இறக்கம் / ஒரு நிகழ்வு சட்டப்படி. கவர்னரின் அதிகாரத்தில் ஜெ. முதல்வரானது ஒரு ஏற்றம். ஒரு சாதாரண நிகழ்வல்ல. இமாலயம் இது. இவ்வளவு பாரதூரமான விளைவுகளை கவர்னர் / அதிகாரம் அல்லது இரண்டும் சேர்ந்து விளைவிக்கும் அதிகாரம் கொண்டதானால், அதை இன்றுவரை மக்களின் முன் நேர்மையாக - வெளிப்படையாக - சட்ட அதிகாரம், பேசாமல் இருப்பது என்பது மக்கள் மீதான மரியாதையைக் காட்டுகிறது. 4 வது தூண் தன் புலன்விசாரணைக்கான தளமாக அதைக் கொள்ளாதது ஏன்?

இங்கு பிரச்சினை ஜெ. அல்ல. மாறாக கவர்னர் என்ற அதிகாரம். அவர் இயங்கிய விதம் சட்டபூர்வமானதா? இல்லையா? இதை விவாதிப்பது யார்? விளக்குவது யார்? நீதி சொல்பவர் யார்? ஒருவேளை, 'கவர்னர் அதிகாரம்' என்பது 'பரம்பொருளா'?

முதல்வர் ஜெ. பழைய முதல்வர் மு.க. என்பதாக, அரசியல் வரலாற்றை, பகுத்தறிவு அரசியல் வரலாறாக்க முயற்சிப்பது மாதிரியானதொரு வெட்கக் கேடான ஜனநாயக மூடத்தனம் வேறில்லை.

கேள்வி, ஆளுநரிடம் இவ்வளவு அதிகாரம் இன்னும் நிலவுமானால் அது ஆரோக்கியமானதல்ல. காலம் விக்டோரியா காலமும் அல்ல. இந்த விஷயத்தின் குறி முதல்வர் ஜெ. அல்ல.

காலனி அதிகார மேலாண்மை மனோபாவத்தின் / அதிகார வரம்பை, ஆளுமையை பூமியில் காலடி படுமாறு செய்வதே ஜனநாயகத்திற்கு / மனித உரிமைகளுக்கு பாதுகாப்பு. ஆக சமகால வரலாறானது இருட்டாக்கப்பட்ட -கவர்னர் அதிகாரம் - அத்தியாயத்தில் தொடங்குகிறது.

சட்டசபை உறுப்பினர்கள், மாஜி உறுப்பினர்கள் மீது கிரிமினல் வழக்குகள் போடப்படுகின்றன.

தி.மு.க. ஆட்சியில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட "உழவர் சந்தை" போன்றவற்றை மூட முயற்சி.

சட்டசபைத் தேர்தலே ஒரு அதிகாரத்திற்கான இசை நாற்காலிப் (**Musical Chair**) போட்டியாக உள்ளது என்றாலும் காழ்ப்பு இவ்வளவு தூரம் செல்வதும் அதுவும் அரசு அதிகாரமாகச் செல்வதும் எதைக் காட்டுகிறது?.

இனி தனது பழைய வளர்ப்பு மகன், தனது பழைய காரியதரிசி தோட்டம் பாஸ்கர்மீதான போதைப் பொருள் கைது போன்றவைகள் (போதைப் பழக்கம் இருந்திருக்கலாம், போதைப் பொருள்கூட இருந்திருக்கலாம். ஆனால், குறிவைத்துத் தாக்கும் காரியம், அதற்கான உள்நோக்கம், பின்னணி இவற்றைப் பற்றி சந்தேகிக்க அனுமதிக்கும் இன்றைய முதல்வருக்கும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குமான பழைய உறவு, முறிவு போன்றவைகளையும் கவனத்தில் கொள்ளத்தானே வேண்டும்). எந்தத்திசையைக் காட்டுகிறது?

இனி அதிகாரிகளின் மாற்றம். எல்லா ஆட்சியிலும் இது நடைபெறுகிறது. [ஏன் நடைபெறவேண்டும்? அரசாங்கத்தின் அரசியல் கொள்கைகளுக்காகவா? அல்லது முதல்வர்களின் சார்புக்குத் தக்கவா? இத்தகைய அதிகாரமே, அதிகாரிகளுக்கு நிலப்பிரபுத்துவ / சாதிய ஊழியம் பார்த்தல் என்ற மனப்போக்கு, (மனச் செயலானது) பகுத்தறிவு / தன்னறிவு போன்றவற்றை அடகு வைத்துவிட்டு, மூடத்தனமான சுய ஆய்வற்ற காரியங்களில் இறங்க வைக்கிறது. இவைகளுக்கு ஒரு வரைமுறை வேண்டாமா?].

நிர்வாகத்துறை நிரந்தரமானது. சட்டத்திற்கு உட்பட்டது. செயல்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதி / கவர்னரில் தொடங்கி கடைசி யூனிட்டான பஞ்சாயத்து போர்டு அலுவலர்வரை உள்ளது.

அதை இயக்கும் அதிகாரமான அரசாங்கம் - சட்டசபை / பாராளுமன்றம் - அதன் தலைவரான முதல்வர் என்ற அதிகார மையத்திற்கு இணங்க மாற்றல்கள் நடப்பது வழமையாக இருந்தாலும், இந்த ஆட்சியில் நடந்தது மாதிரி வேறு எந்த ஆட்சியிலும் நடைபெறவில்லை.

இந்தப் பந்தாட்டம் அம்மாவின் நிர்வாக வசதிக்கானது மட்டும்தானா?

மாற்றல், காத்திருப்போர் பட்டியல், பதவியிறக்கம், மூலைமுடுக்கில் சும்மா பெயரளவிற்கான பதவி; அனுபவங்கள், பணிமூப்புகள் குப்பைகூளங்களுக்கு.

இவை அனைத்தும் எந்தவிதமான சிக்னலை நிர்வாக இயந்திரத்திற்குச் சுட்டிக்காட்டுகிறது?.

நிர்வாக இயந்திரத்தை இயக்கும் அதிகாரிகள் மனிதர்கள் (சுப்ரீமோ என்ற எண்ணம் கொண்டவர்கள்கூட) என்பதால் பதட்டம், அச்சம் வராதா?

அப்படி ஒரு மனச்சிக்கல் நிர்வாக மனிதர்களிடம் ஏற்படுவது / ஏற்படுத்துவது எதற்காக?

இதற்கிடையில் ஆசிரியர் பணிமாற்றத்திற்கான ஒற்றைச் சாளரமுறை போன்ற நிர்வாகச் சீர்திருத்தம் போன்றவைகளும் (பாராட்டுகள்!!), தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக இலவச சைக்கிள் போன்றவைகளும் நடந்தேறின.

இதற்கு மாறாக சமூகப்பணியாளராக நியமிக்கப்பட்டிருந்த 15,000 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் சட்டபூர்வமாக.

தி.மு.க. ஆட்சியில் பணியில் அமர்த்தப் பட்டவர்கள் இவர்கள். இவர்கள் ஒரு பத்தாண்டுகளாக பந்தாடப்பட்டு வருகிறார்கள். 89-91 களில் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசால் பஞ்சாயத்து அலுவலகங்களுக்கு ஆண் / பெண் என்ற விகிதத்தில் தமிழகம் முழுவதும் நியமிக்கப்பட்டார்கள். 91 முதல் ஜெ.யால் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

96ல் மீண்டும் தி.மு.க. ஆட்சியில் நியமனம். இன்று மீண்டும் பதவி பறிப்பு. விடிவு........?

(இருமையில்தான் சொல்லின் பொருள் விளங்குகிறது என்கிறார்கள்.

ஆனால், தமிழகமே, தி.மு.க; அ.தி.மு.க என்ற இருமையில்தான் கடந்த சில பத்தாண்டுகளாக உள்ளது. ஆனாலும் பொருள் விளங்கியபாடில்லை. ஒப்புநோக்கில் வித்தியாசம் சிலவற்றில் நிச்சயமாகக் காணப்படுகிறது. ஆனால், மனித மாண்பு, பரந்துபட்ட மக்களின் வாழ்வு, தனிமனிதனுக்கும் பொதுவுக்குமுள்ள உறவில் ஆரோக்கியமான மனஓட்டம், வழிமுறை, நுகர்வுக் கலாச்சாரத்தைத் தவிர, மற்றவையெல்லாம் அழிந்துபோய், எழுத்து மொழிகளாக மட்டும் ஓரங்கட்டப்பட்டுப் போனதற்கு, இவையும் பிற அதிகாரங்களும், மேற்கொண்ட அரசியல் பொருளாதாரமும், பொது வாழ்வில் உருவாக்கிய 'குறி'களுக்கும் இவர்கள் பொறுப்பில்லையா?).

பதவிகளில் உள்ள அரசியல்வாதிகளின் கிரிமினல் குற்றங்களுக்குக் கைது; பழைய வளர்ப்பு மகனுக்கு கோடான கோடி செலவு செய்து செய்துவைத்த திருமணம், பழைய சேவகன் தோட்டம் பாஸ்கரன் போன்ற பாசப்பிணைப்பு எல்லாவற்றையும் அறுத்துவிட்டு சட்டப்படி நடவடிக்கை. அதிகாரிகளை நிர்வாக வசதிக்காக பந்தாட்டம் ஆடி முடித்தாயிற்று. நிர்வாகத்தில் உள்ள கல்வித்துறையின் பணியிடங்களுக்கான சேவையும் செய்தாயிற்று.

பழைய ஜெ.அல்ல இப்போதுள்ள முதல்வர் ஜெ. (அதாவது ஜெ. தோழி சசிகலா உறவினர்) வல்லவர். கோட்டையை தினமும் நிர்வகிப்பவர் என்ற கருப்பு / வெள்ளை துந்துபிகள் ஒலிக்கலாயிற்று.

உறைபனி உருகுதலுக்கான வசந்தம் காலத்திற்கு முன் புழுத்த அரிசி வடிவில் வர சன் போட்டோகிராபர் கைது. அதைத் தொடர்ந்து தமிழகத்தின் பொறுப்புள்ள "4 வது தூண்" அதிர்ந்தது. அந்த நீடிப்பு இந்திய செய்தியானது. வெள்ளப் பெருக்கின் இந்தச் சூழலுக்கு முற்றுப்புள்ளியாக அமைந்தது தி.மு.க. தலைவர் கைது.

போலீசால் கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டவர்; சட்டத்தால் இனிமேல் விசாரிக்கப்படப்போகிறவர் அவரைக் கிரிமினலாகவே சட்டப்படி நடத்தினர் காவல்துறை அதிகாரிகள்.

சன் டி.வி எழுப்பிய ஓலக்குரல் தமிழகத்தை சற்று அதிரவைத்துவிட்டது. இந்தியா முழுவதும் நிஜம் நிழலாகி (டி.வி) அச்சுறுத்தியது.

லாவணிபாட ஆரம்பித்தது சட்டம் அறிந்த அறிவுலகம். தமிழகத்தின் பொது வெளியில் சட்டப்படிதான் எல்லாம் நடந்தது. போலீஸ் அராஜகம், மனித உரிமை மீறல் என்ற குரல்கள் உச்சஸ்தாயிக்குச் சென்றது.

இந்த இடத்தில் மீண்டும் தொடங்கிய இடத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது.

ஜெ. முதல்வர் என்று அறிவித்த கவர்னர் அதிகாரம் தொடங்கி பல கிரிமினல் வழக்குகள் அரசியல்வாதிகள் மீது போடப்பட்டு ஜாமீனில் வரமுடியாதபடி இழுத்தடிப்புச் சம்பவங்கள் உட்பட, பழைய சட்டபூர்வ மகன், தோட்டம் பாஸ்கரன் போன்ற (ஜெ.யின் சொந்த நிழல்சார்ந்த) கைதுகள், போட்டோகிராபர் கைது, மறுநாள் 4வது தூண்மீது சட்டப் பாய்ச்சல் போன்ற தனித்தனிச் சம்பவங்கள் ஏன் பொதுவெளியில் அவ்வளவாகக் கண்டுகொள்ளப் படவில்லை.

கவர்னர்அதிகாரத்தைக் கண்டித்ததோடு முடிந்தது எதனால்? அதிகாரிகள் பந்தாகும் அதிகாரத்தை ஜெ.பயன்படுத்தினர். அது ஜெ. மீதான குற்றச்சாட்டாக மட்டுமே பார்க்கப்பட்டது. இப்படியான அதிகாரம் மாநில முதல்வர் நாற்காலிக்கு இருக்கிறதா? / வரம்பற்ற அதிகாரமா?

சட்டப்படி இருந்தால் அது இன்னும் நீடித்திருக்க வேண்டுமா? எந்தெந்த தளத்தில் இந்தச் சொல்லாடல்கள் நடந்தன?

இந்த தனித்தனி நிகழ்வுகளுக்கு அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அதன் சட்டதிட்டம், அதிகாரம் கேள்விக்குட்படுத்தப்படாமல் தனிநபராக மட்டுமே விமர்சிப்பது ஆட்சி மாற்றத்திற்கான அரசியல் மட்டும்தான் அது. சட்டம் பற்றிய / அதிகாரம் பற்றிய கேள்வியை பொதுத்தளத்தில், பொதுப்புத்திக்கு உறைக்க வைக்கும் போதே ஜனநாயகத்திற்கான துவக்கப்புள்ளியாகும் அது.

தமிழகத்தின் அரசு இயலே தி.மு.க; அ.தி.மு.க. களின் செயல்பாடு பற்றியது மட்டும்தான் என்று பொதுவெளியில் அரசியல் கட்சிகளும், குறிப்பாக 4வது தூணும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

சட்டம், சட்டப்படி என்ற நிபுணத்துவ கேள்வி இந்தியாவிற்கு புதிதல்ல. கணிணித் தலைமுறைக்கு வேண்டுமானால் புதிதாக இருக்கலாம்.

பாஞ்சாலியை, சூதாட்டத்தில் பணயமாக வைத்தது சட்டப்படி (உரிமைப்படி) சரியா? அதாவது தர்மராஜன் தன்னைப் பணயமாகத் தோற்றபின் மனைவிமீது அவனுக்கு உரிமை இருக்கிறதா?

பாஞ்சாலி எழுப்பியது சட்டப்பிரச்சினை.

மன்னன் திருதராஷ்டிரனும், பீஷ்மனும் துரோணாச்சாரியாரும் பதில் கூறாதிருக்க,

கொடைவள்ளலும், ஒழுக்க சீலனுமான கர்ணன் பாஞ்சாலியைத் துகிலுரியக் கட்டளையிட்டான்; துரியோதனன் துடைகாட்டி, உட்கார பாஞ்சாலியை அழைத்தான்.

துச்சாதனன் துகிலுரிய முற்பட்டான்.
அங்கு நீதி துகிலுரியப்பட்டது.
அநீதி சட்டப்படிதான் நடந்தது.

(இன்றைய வக்கீல்கள், அரசியல் வக்கீல்கள், மகாபாரதத்திற்கும் கட்டப்பஞ்சாயத்து செய்ய வந்துவிட்டார்கள். அது வேறு).

சம்பவங்களுக்குரிய முக்கியத்துவமானது அதுசார்ந்த பல்வேறு தளங்களிலும் பலகோணங்களிலும் ஆய்வுசெய்யப்படுவதே ஆரோக்கியமான வரலாற்றிற்கான குறியாகும்.

பழைய கவர்னர் பதவி பறிக்கப்பட்டது. (பதவி விலகல்). ஆனால் வானளாவிய அதிகாரம் அந்த நாற்காலியினுள் "ஜீபூம்பா" வாக புதையுண்டிருக்கிறதா? இல்லையா? இருந்தால் மகாராணி விக்டோரியா காலத்திய ஜனநாயகம் என்றுதானே பொருள்.

நபர், அரசியல், பின்னணி, மனச்சார்புக்கு மேலாக அதிகாரம் பற்றிய கேள்வியானது ஒவ்வொரு நிகழ்விலும் அடையாளம் காணப்படுவதும் பொதுவெளிக்கு அதன் அங்கலட்சணங்களை காட்சியாக்குவதுமே ஜனநாயகத்திற்கான ஒரு பாதுகாப்பாக முடியும்.

இறுதியாக தி.மு.க. தலைவர் கைது பற்றி விவாதித்துத்தான் ஆகவேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே ஒன்றைக் கூறிவிடுவது நல்லது என்று தோன்றுகிறது.

சட்டத்திற்கு வயது இல்லை என்று சட்டம் பேசினால்,

வாழும் ஒரு மனிதன் முதலில் பாசம், பின்பு கலாச்சாரத்தை பழக்க வழக்கத்தால், மொழியால் அறிகிறான். கல்வியாலும், வேலை, சொத்து, உரிமை, அரசியல் மூலம் சட்டத்தை அறிகிறான்.

மனிதன் சட்டத்தால்தான் கட்டுண்டு கிடக்கிறான் என்று யாராவது நினைத்தால்..... பாவம் அவர்கள். அது கலாச்சாரச் சார்பும், தன்னிலையின் அடையாளமாகவும் உள்ளது.

சட்டமும் ஒரு மனிதனின் கட்டுதான்; அடையாளமும்தான். ஆனால், மனிதனின் பிற அடையாளங்களையெல்லாம் அழித்துவிட்டு சட்டப்படி என்ற ஒற்றைப் பரிமாணத்தை இதுதான் உன் அடையாளம், தலைவணங்கு என்று நீட்டும் போது....... அதை **Sorry** என்று சொல்லாமலேயே நிராகரிக்கவும் / வேண்டுமானால் தட்டிவிடவும் அந்த மனிதனின் பிற அகங்கள் கட்டளையிடத்தான் செய்யும்; அது சரி அவனுக்கு.

முதல்வர் மு.க. ஜனநாயகப் படுகொலைக்கு துணைபோனவர்தான். திருச்சி கிளைவ் ஹாஸ்டல் சம்பவங்கள் தழும்புகளாகவும் அதை நிறைவேற்றிய அதிகாரச் சட்டம் இன்றும் உயிரோடுதான் இருக்கிறது. அதுபோலவே தி.மு.க. ஆட்சிக்கட்டிலில் ஏறியதும் நடைபெற்ற சிம்சன் குரூப் தொழிலாளர்கள், அதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் போராட்டம் சட்டத்தின் பெயரால் ஒடுக்கப்பட்டதும் வரலாற்றில் பதிவாகியிருக்கிறது.

தி.மு.க அன்று காங்கிரஸ் என்ற ஆளுங்கட்சிக்கு எதிராக எழுந்தது.

இன்று தி.மு.க. தன் கிளைக்கழகமான அ.தி.மு.க. விற்கு எதிராக தனது பிரதானமான அரசியல் கடமையைக் கொண்டுள்ளது. இடையிடையே ஏற்பட்டதெல்லாம் சில சட்டச் சீர்திருத்தங்கள். ஆனால் கலாச்சாரத் தளத்தில்?. ("உடல்" ஆராதனைக்காரர்கள் என்றும் அவர்பக்கம் இருப்பர் நன்றியாக)

அன்றைய அரசியலின் போக்கிலேயே உடைபட்ட சில விழுமியங்கள், பழக்க வழக்கங்கள், சமூக நியதிகள், பிரக்ஞைபூர்வமாக வேறு கட்டப்படாததால் உடல் ஆராதனைகளும் நுகர்வுக் கலாச்சாரமும் பகுத்தறிவுக் கருப்புத்துண்டாய் காட்சியளிக்கிறது.

இது வரலாற்று ஆய்வு அல்ல. சில சம்பவங்கள் சற்றுக் கூடி, குறைந்தும் இருக்கலாம். ஆனால் நடந்தது / நிகழ்ந்தது / தொடங்கியது.

ஆனால் என்ன? அதற்காக சட்டத்தின் பெயரால் ஒரு முதியவரை இரவில், படுக்கை அறையில் கைது என்பது (மாறன் வருவதற்கு முன்) சட்டத்தின் தேவையா? அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவரின் தேவையா?

இதை எங்கே எழுப்புவது? நீதித்துறை இதற்கு இடங்கொடுக்குமா? தெரியவில்லை. பின் எங்கு?

எந்தத் தளத்தில் இந்த நிகழ்வை எதிர்கொள்வது சட்டம் / சட்டப்படி / சட்டப்புறம்பாக;

மனித நாகரீகம். இதுவும் ஒரு கருத்துதானே! என்று கேள்வி வருமானால்...........

பதில், நீ என்பது கூட ஒரு சொல்தான். மொழியால் கட்டப்பட்ட ஒரு கருத்துதான். அப்படியானால் நேரிடையாக வனவிலங்குச் சட்டங்களை ஏற்றுக்கொள்ளலாமே! பிறகு எதற்காக அரசியல் சாசனம்? தனிமனித மாண்பு காப்பு என்பது என்ன? எப்படி? அரசியல் சாசனம் செப்பிடு வித்தை காட்டுகிறது. வெளிப்படையாகச் சொல்லிவிட வேண்டியதுதான். அதன் நிர்வாக / அதிகார இயந்திரங்கள் இயக்குவதுதான் சட்டம் என்று.

கடந்துபோன சம்பவங்கள் பல. அதன் தொடர்ச்சி எவ்வளவு காலத்திற்கு? இந்தச் சம்பவங்களின் இயக்கு சக்திகள் வரையறுக்கப்படவேண்டும்.

இனி சமகால வரலாற்றில்:

மிகப் பெரும்பான்மை பெற்ற அ.தி.மு.க. வானது தனிமனித அடித்தளத்தில் மட்டுமே நிற்பதால் ஜெ. வழிபாட்டு - அதிகார, அதிகாரத்திற்கான - தளமாகவே நிற்கிறார்.

இவரைத் தவிர பிற எவரையும் அக்கட்சியின் சார்பாக முதல்வராக இருக்கவிட மாட்டார். பிறரும் துணிச்சலோடு எண்ணமாட்டார்கள்.

பெரும்பான்மை பலமிருக்கிறது அ.தி.மு.க.விற்கு. ஆனால் அது தனிமனித பலம். இங்கே பெரும்பான்மை என்பது சிறுமைப்பட்டுக்கிடக்கிறது. இந்த நிலை, கலாச்சாரமே "ஜனநாயக மாண்புகள்" என்று கூறிக்கொண்டுள்ள அனைத்தும் ஒற்றைப் பரிமாணத்திற்குள் - தனிமனிதக் கவர்ச்சி - அடங்கிவிட்டிருக்கிறது.

அக்கட்சியின் ஒரு தன்னிலையானது சுதந்திரத்தை உணராது அல்லது அதனைக் கனவாகக்கூட விரும்பாத பொழுதும், அதே நேரத்தில் பதவி, அதிகாரம், பணம் என்கிற தேவை, ஆசையை மட்டுமே

பிரதானமாகக் கொண்டுள்ளபோது, அதற்கான தலைமை அஹங்கார அதிகாரமானது தன் மனதிற்கு தடங்கலாக வரும் அனைத்தையும் உடைக்கவல்லதாகிவிடுகிறது. கட்சி, சமூகம் எல்லாம் இரண்டாம்பட்சம்.

முதல்வர் அதிகாரமானது, அதற்கான தனிமனித இருப்பு சந்தேகத்திற்குரியதாக (அதிகார நாற்காலியில்) இருக்கிற சூழலில் சட்டமன்ற ஜனநாயக வழிமுறையை நாடாமல் நிர்வாக, காவல் துறைகளில் தனக்கான அதிகார மையத்தை **(Power Block)** உருவாக்கி அதன் மூலம் தன்னை அதிகாரத்தில் நிறுத்திக்கொள்ளும் முயற்சி இது.

■ இந்த அதிகார மையத்தை - குறிப்பாக காவல்துறையில் உள்ள அதிகார மையத்தை - மொத்த காவல்துறையாக்கி, அதை பிற துறைகளுக்கெல்லாம் மேலானது, சுதந்திரமானது, மேலும் சேவைக்கானது என்ற கருத்துருவத்தை சமூக அரசியல் துறையில் பரப்பிவருகிறது.

■ இந்த கருத்துருவச் சொல்லாடல்கள் நிர்வாகத்துறையின் அனைத்து அத்துமீறல்களையும் சட்டப்படி என்ற வியாக்கியானத்திற்கு உட்படுத்தி, அத்துமீறல் என்ற உணர்வை, 'சட்டப்படி' என்பது ஏற்கனவே மனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நியாயம் என்று வரையப்பட்ட பிரதேசத்தால் அடையாளப்படுத்தப்பட்டு, நியாயம்தான் என்ற ஏற்பை உருவாக்கம் செய்துவிடுகிறது.

■ ஆளும் கட்சியோடு அதன் கூட்டணிக் கட்சிகளும் முதல்வர் ஜெ.யின் நண்பர்களும் அரசியல் விமர்சகர்களும் இந்தக் கருத்துருவச் செயல்பாட்டில் பங்கேற்கின்றனர் (சோ. ராமஸ்வாமி; கி. வீரமணி).

(தி.மு.க. எதிர்ப்பு யாருக்கும் வரலாம். அதற்குக் காரணம்கூடத் தேவையில்லை. தனிமனிதனின் விருப்பு / வெறுப்பு, அரசியலில் / ஓட்டுப்போடுவதில் இருப்பது வேறு; அதிகாரம் குவிமையமாக்கப்படுவது, அதிகாரமையத்தை (Power Block) உருவாக்குவது என்பது வேறு. சட்டப்படி என்பதை இந்திரனின் வஜ்ராயுதமாக்குவது என்ற எண்ணப்போக்கிற்கு, நடத்தைக்கு உதவுவது........ அது வேறு).

முதல்வர் அதிகாரம் என்பது அவரால் உருவாக்கப்பட்ட "அதிகார மையம்" (Power Block) என்றாகியுள்ளது. (இந்த அதிகார மையச் சங்கிலியின் முதல் கரணையைத் துவக்கியவர் ஆச்சார்யலு. I.A.S. இதைத்தான் நீதிபதி அசோக்குமார் சுட்டிக்காட்டுகிறார்).

ஜுலை 4ல் முதன்மை செசன்சு நீதிபதி அசோக்குமார் கமிஷனர் ஆச்சார்யலுவிடம் கேட்ட கேள்வியும், ஆச்சார்யலு அளித்த பதில்களும்.

கேள்வி : உங்கள் உயர் அதிகாரி யார்?

பதில் : நகராட்சி நிர்வாகச் செயலாளர்.

கேள்வி : புகாரை உங்கள் உயரதிகாரிக்கு அனுப்பினீர்களா?

பதில் : உயரதிகாரிக்கு அனுப்பத் தேவையில்லை என்று நான் நினைத்தேன்.

கேள்வி : லஞ்ச ஒழிப்பு போலீஸ்துறை என்று இருக்கிறதே அதற்கு புகாரை அனுப்பினீர்களா?.

பதில் : இல்லை.

கேள்வி : புகாரை எங்கே அனுப்பினீர்கள்?.

பதில் : சி.பி.சி.ஐ.டி. ஐ.ஜி க்கு அனுப்பினேன்.

கேள்வி : அதற்கு ஏதாவது முக்கிய காரணம் இருக்கிறதா?

பதில் : இல்லை.

கேள்வி : உங்கள்மீது வழக்கு உள்ளதே! ஊழல் வழக்கை லஞ்சஒழிப்பு போலீசாருக்கு அனுப்பவேண்டும் என்று உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். உங்கள் மீது கூட லஞ்சஒழிப்பு போலீஸில் இரண்டு வழக்கு உள்ளதே!

பதில் : மவுனம். (அப்போது நீதிமன்றத்தில் உள்ள வக்கீல்கள் சிரித்தனர்.)

ஆதாரம்: தினமலர். ஜுலை 4, 2001 (பக்.1)

இதேமாதிரி புலன் விசாரனை அதிகாரி பத்மநாபனிடம் கேட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும்.

கேள்வி : ஆச்சாரியலுவின் புகாரை எப்போது பெற்றீர்கள்?

பதில் : ஜுன் 29 ம் தேதி மதியம் 2 மணிக்குப் பெற்றேன்.

கேள்வி : எப்போது வழக்குப் பதிவுசெய்தீர்கள்?

பதில் : புகாரைப்பெற்ற அடுத்த அரைமணி நேரத்தில் புகாரைப் பதிவுசெய்தேன்.

கேள்வி : ....இவ்வழக்குத் தொடர்பான எப்.ஐ.ஆர்.யை நீதிமன்றத்திற்கு எப்போது அனுப்பினீர்கள்?

பதில் : ஜுன் 30 ம் தேதி காலை 5.15 மணிக்கு அனுப்பினேன்.

கேள்வி : எப்.ஐ.ஆர். பதிவுசெய்தவுடனேயே ஏன் அனுப்பவில்லை? 29ம் தேதி வேலை நாள்தானே? மறுநாள் வாரண்டுக்காக வீட்டுக்கதவைத் தட்டினீர்களே?

பதில் : மவுனம்.

கேள்வி : சரி. எப்போது எப்.ஐ.ஆர். பதிவு செய்தீர்கள் என்று நேரம் குறிப்பிட்டுள்ளீர்களா?

பதில் : (கேஸ் டைரியைக் கேட்டு வாங்கிப் பார்த்துவிட்டு) இல்லை.

கேள்வி : எப்.ஐ.ஆர். பதிவுசெய்த நேரம் குறிப்பிடாமல் இருந்ததற்கு ஏதேனும் சிறப்புக் காரணங்கள் உள்ளதா?

பதில் : இல்லை. நேரம் குறிப்பிடத் தவறிவிட்டேன்.

கேள்வி : (அரசுதரப்பு வக்கீலை நோக்கி) எதற்காக இவ்வளவு கேள்விகள் கேட்டேன் என்பது இப்போது தெரிகிறதா?

ஆதாரம்: தினமலர். ஜுலை 4, 2001 (பக். 6)

நீதிபதி அசோக்குமாருடைய கேள்விகள் எத்திசையில் சென்றுள்ளது என்பதைக் கவனித்தால். அதிகாரிகளின் தேர்வு, அதிகாரிகளின் சுயேட்சை அதிகாரம் போன்றவைகள் எதைநோக்கி என்று புலப்படுகிறது. இந்த அதிகார மையத்திற்கான (Power Block) செயல் கருவியாக "சட்டப்படி" என்பதில் உள்ள அதிகாரிகளின் சுயேச்சை அதிகாரமே (Discretion) பயன்பட்டிருக்கிறது.

■ சட்டப்படி என்பதே கேள்விக்குரியதாகவும், கேலிக்குறியாகவும் ஆக்கப்பட்டுவருகிறது. முதல்வராவதற்கு முன் ஜெ. அவர்கள் வழக்கில் ஆஜராகாமல்

வாய்தாவாங்கிய நாள் எத்தனை? இதற்குச் சட்டப்படி வரம்பே[illegible] இல்லையா? அதேபோல் திரு. கருணாநிதி நிகழ்ச்சிக்குப்பின் கோர்ட்டில் தினம் ஒரு வழக்கறிஞர்; சில வழக்குகளுக்கு அதுவும் கிடையாது. சட்டத்தில் உள்ள அனைத்து ஓட்டைகளையும் யாரும் பயன்படுத்தலாம். ஆனால் அதிகாரத்தில் உள்ளவர்கள் பயன்படுத்தினால் அதற்கு பெயர் என்ன சொல்வது..........?

■ சட்டப்படி என்பது நிலப்பிரபுத்துவச் சட்டமான "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்றாகிவிடுகிறது.

■ எதிர்க்கட்சிகள் முதல்வர் ஜெ.யின், ஆட்சியுரிமையை "குறியாக" (Target) வைத்து அரசியல் நடத்துகிறார்கள்.

■ தமிழகத்தில் உள்ள செய்தித் தொடர்பு சாதனங்கள் (Media) கிட்டத்தட்ட ஆளும் கட்சி ஆதரவு அல்லது எதிர்க்கட்சி ஆதரவு என்ற நிலைப்பாட்டில் உள்ளது மாதிரி தெரிகிறது. அந்தந்த துறை தாக்கப்படும்போது உரிமைக்குரல்; அதுவும் அத்துமீறிய போலீஸ் அதிகாரிகள் மட்டுமே குறிப்பொருளாக்கப் படுகின்றனர்.

அந்த அதிகாரத்தை, அதன் பிறப்பிடத்தை கேள்விக்குள்ளாக்குவதில்லை; அதை ஒரு நாகரீகமான - வெளிப்படையான - சமூகத்திற்கான ஒன்றாக மாற்றுவதற்கான கருத்துருவாக்கச் செயல்களில் வீரியமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

எது செய்தி என்பது தனிப்பட்ட சுதந்திரம். ஆனால் சமூகக் கண்ணோட்டத்தில்..........? விவாதிக்கப்படவேண்டிய ஒன்றாக உள்ளது.

■ தொழிற்சங்கங்கள் மிகவும் வலுவிழந்து போயுள்ளன. - பொருளாதாரப் போராட்டங்கள் கூட - ஜனநாயக மீறல் என்பது அவர்கள் சம்பந்தப்படாத ஒன்றாக உள்ளது.

■ மாணவர் கூட்டம் என்பது தெரிகிறது. அது ஒரு சமூகம் என்பதற்கான அடையாளம் எதுவும் தெரியவில்லை.

இளமை சினிமாவிலும், இனியாகும் பொருளாதாரத்திலும் கடைக்கோடி ஊதாரித்தனத்திலும் உள்ளது போன்றுள்ளது.

■ மிஞ்சியது. தமிழ்நாட்டின் வருமானத்தில் 96 விழுக்காடுகளை தின்று தீர்க்கும் குட்டி முதலாளிய வர்க்கமான அரசு ஊழிய உடம்புகள் மிச்சமிருக்கும் 4 விழுக்காட்டை எப்படிப் பெறுவது என்பதில் உள்ளது. இங்கு இந்த வர்க்கத்தினரைப் பற்றிய பிரெஞ்ச் மார்க்சிய சிந்தனையாளர் பௌலான்ட்ஸ் கூறிய கருத்து கவனத்திற்குரியதாக உள்ளது.

"இந்த வர்க்கத்தினர் அரசு எந்திரத்தை மாபெரும் எண்ணிக்கை கொண்டதாக, 'அமானுஷ்யமானதாக', ஒட்டுண்ணித் தன்மை கொண்டதாக ஊதிப் பெருக்குகின்றனர். அத்தோடு அரசு எந்திரத்தின் உள்ளார்ந்த கருத்தியலின் மீது தீவிரமான ஆதிக்கத்தையும் / தாக்கத்தையும் செலுத்துகின்றனர்".

■ ஆக, ஜெ.அதிகாரமானது, அதிகார மையத்தை (Power Block) சட்டப்படியே உருவாக்கியுள்ளது. பிற அதிகாரங்களுக்கு மேலாக.

ஒரு நேர்மையான ஜனநாயகத்திற்கான போராட்டம் எதிர்க்கட்சிகளிடமிருந்து அல்லது நீதித்துறை போன்றவற்றிலிருந்து கிடைக்கப்போவதில்லை. மாறாக அவர்களின் நிர்வாக சீர்திருத்தமே.

_ கசெரா

"ஆட்சியாளர்கள் நரிகளாகவும், தத்துவ ஞானிகள் செப்பிடு வித்தைக்காரர்களாகவும் உள்ள ஒரு நாட்டிற்காக, கலை என்பது வெறும் ஒட்டுப்போடலாகவும், போலியாகவும் உள்ள ஒரு நாட்டிற்காகப் பரிதாபப்படுங்கள்"

ஞானிகள் தோட்டம் - கலீல் ஜிப்ரான்.


ஆதி மூலம்
பழிமனம் சாந்தி பெற யாகம்! தேவை யாகம்!
ஆகுதி? கலைஞர் ஸ்டாலின்
தேர்தல் தகுதியை பறிக்கணும்
அசரீரி
எதையும் செய்! சட்டப்படி எனும் ஆயுதத்தால்.......
சட்டத்தில் இடமில்லையா.......?....ம்
சட்டத்தை செலுத்தும் சுயேட்சை அதிகாரம் (Discretion) உள்ளதே!
Fantastic! நமது வேள்விக்கான அந்த அதிகாரத்தைச் செலுத்து.
தயாராகட்டும். வஜ்ராயுதம்! I.A.S, I.P.S.
Episode Director அனுபவசாலி, நல்ல கதை வசன கர்த்தா ஆச்சார்யலு I.A.S பொறுப்பேற்கட்டும்.
ஒரே கல் இரண்டுமாங்காய் ஆகுதிகள் கட்டிய பாலங்கள் அவர்களை ஒன்றிணைக்கின்றன.
அதிகாரத்தின் சுயேட்சை அதிகாரம்
சட்டம்
களப்பணியை மாநகராட்சியிலிருந்து துவக்குங்கள்.
யுரேகா! புதையல்! புதையுண்ட பாலத்தை!
9 நாளில் முடித்தேன் என் ஆராய்ச்சியை. என் மனம் சாந்தி! சாந்தி!
வஜ்ராயுதம் ஏந்த மாட்டாத லஞ்ச ஒழிப்புத்துறை வேண்டாம்.
சபாஷ்!
C.B.C.I.D க்கு அனுப்பு
என் அனுபவம் அதைத்தான் கூறுகிறது C.B.C.I.D. யினர் சண்டைக்காட்சியை எடுப்பதிலும், நடிப்பதிலும் 'வல்லவர்'.
கமாண்டோஸ்! ரெடி!
15 கார்கள், செல்போன், டிவி. கேமரா, 20 பேர் ஆண்கள் / பெண்கள், கமாண்டோஸ் 5 பேர்; நேரம் 2 A.M. Operation போது செல்போன் on-ல்...... மறக்கக்கூடாது!
தயாரிப்பாளர் உரிமையில்லாமல் சன் டி.வி.யின் ஒளிபரப்பு
மனிதஉரிமை மீறல்
தமிழுக்கு நேர்ந்த அவமானம்
மு.க. கைது கொசுறாக 2 விலாங்கு
வயதானவரை இப்படியா!!!
பாவம்!
64 பேர் உயிர்மாய்ப்பு
அதிகாரிகள் தங்கள் கடமையைச் செய்தனர் சுபம்
படவிமர்சனம் :
தயாரிப்பில் அலட்சியம், அவசரம், ஆனால்
'எல்லாம் சட்டப்படி'
விமர்சகர். துக்ளக் சோ. ராமஸ்வாமி.

ஓவியம் - திருநாராயணன்

ஓவியம் - பாபு

முன் அட்டை ஓவியம்

PAUL KLEE

HALLMARKED GOLD
GOLD YOU CAN TRUST
தங்கம் வாங்க..
தங்கமயிலுக்கு
வாங்க..!
BIS
HALL MARK
தங்கத்தின் தரத்தை
உடனுக்குடன்
அறிந்துகொள்ள
காரட் மீட்டர் வசதியுடன்.
TMJ
தங்க மயில்
ஜீவல்லரி பி,லிட்.,
SASI/MDU/01
124, நேதாஜி ரோடு, மதுரை - 1. போன் : 745553.
காதலை சொல்லிடும் வழி - தங்கம்